தமிழக வேளிர்

வரலாறும் ஆய்வும்

- நெல்லை நெடுமாறன்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

13286

தமிழக வேளிர்
வரலாறும் ஆய்வும்

நெல்லை நெடுமாறன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
சொற்பொழிவு வரிசை எண் 27 நாள் 14.2.2014
அறக்கட்டளை நிறுவியவர்: டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்

நூல்விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	**தமிழக வேளிர் : வரலாறும் ஆய்வும்**
ஆசிரியர்	:	**நெல்லை நெடுமாறன்** தொல்லியல் அறிஞர், நாலுமாவடி தூத்துக்குடி மாவட்டம்
பொதுப்பதிப்பாசிரியர்	:	**முனைவர் கோ. விசயராகவன்** இயக்குநர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தரமணி, சென்னை 600 113 **முனைவர் ஆ. தசரதன்** பதிப்புத்துறைத் தலைவர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்		உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை 600 113 தொலைபேசி எண் 044/22542992
வெளியீட்டு எண்	:	943
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற்பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2016
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டெம்மி
எழுத்தின் அளவு	:	10 புள்ளி
பக்க எண்ணிக்கை	:	viii + 256
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ. 140/- (ரூபாய் நூற்றுநாற்பது மட்டும்)
அச்சகம்	:	ஸ்ரீ சரவணா அச்சகம் எண்.64/30, குப்புமுத்து தெரு, திருவல்லிகேனி, சென்னை - 05. தொலைபேசி : 9003545197
பொருண்மை	:	தமிழக வரலாறு

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY Acc No. Date

முனைவர் கோ. விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600113

அணிந்துரை

தமிழக வீரயுகத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வு எல்லையை வேந்தர்களுடன் வரையறுத்துக் கொண்டனர். வீரயுகத்தில் வேந்தர்களுக்கு முன்பாகவே ஆட்சியில் இருந்த வேளிரின் வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்குப் போதிய ஆய்வுத் தரவுகள் அவ்வாய்வுகளிலிருந்து கிடைக்கவில்லை.

வேந்தர்களுக்கு முன்பும் சமகாலத்திலும் வேந்தர்கள் ஆட்சிகளை இழந்த பின்னரும் பிற்காலத்திலும் ஆட்சிக் குடிகளாயிருந்தவர்கள்தாம் வேளிர் என்பதற்கான ஆய்வுத் தரவுகள் தற்காலத்தில் கிடைத்துள்ளன. வேந்தர்கள் போல் வேளிரும் முரசு, செங்கோல், வெண்கொற்றக்குடை, அவை, நால்வகைப் படைகள், கலைஞர்களை வாழ்வித்தல் போன்றவற்றைக் கொண்டிருந்தனர். இவற்றைச் சங்க இலக்கியங்களில் காணலாம்.

சங்க இலக்கியங்களை மையமாக வைத்து வேளிர் வரலாற்றை ஆராய்ந்த தமிழறிஞர்கள் சிலர் வேளிரைக் குறிக்கும் சில சொற்களில் உள்ள ஒலி ஒற்றுமைகளின் அடிப்படையில் அவர்கள் வேளாளராக இருக்கலாம் என்று எழுதிவிட்டனர்.

வேந்தர்களோடும் வேளிரோடும் நெருக்கமாயிருந்த கபிலர், பரணர், ஔவையார் போன்றோரில் கபிலர் தெளிவாக வேளிரின் விழுக்குடிப் பிறப்பையும் சிறப்பையும் வீரயுகத்துக்கும் முன்பாகக் கொண்டுசென்றிருக்கிறார். அதன் அடிப்படையில் அமையும் ஆய்வுகள் வேளிரின் வரலாற்றைச் சிந்துவெளி நாகரிகத்துக்கும் இட்டுச் செல்லும் எதிர்கால ஆய்வுகளுக்கு வழி வகுக்கும். இதற்கு உரையாசிரியர்களும் வழிவகை செய்துள்ளனர். வேளிரின் விழுக்குடிப் பிறப்பையும் சிறப்பையும் வேந்தர்களோடு அவர்கள் மணவுறவுகளை ஏற்படுத்திக் கொண்டதையும் **பதிற்றுப்பத்தின்** பதிகங்கள் தெளிவாகப் பதிவுசெய்து வைத்துள்ளன. அவை போன்றே கல்வெட்டுகளும் பதிவு செய்துள்ளன.

இத்தகு தொல்லியல் சான்றுகளோடு வேளிரின் வரலாற்றை ஆராயத்தொடங்கிய தொல்லியல் அறிஞர்கள் வேளிரின் வரலாற்றில் தடுமாறியுள்ளதைக் காணமுடிகிறது. இவர்களின் ஆய்வு ஒருவகையான சார்பு ஆய்வாக அமைவதால் தமிழகத்தின் தொன்மையான இனக்குழுச் சமூகத்தின் உண்மையான வரலாற்றை இத்தகு தொல்லியல் அறிஞர்களின் ஆய்வுகளிலிருந்து அறிந்து கொள்ளக் கடினமாகவே உள்ளது.

இந்நிலையில், வீரயுகக் காலக்கட்டத்தில் தொடங்கி, தொடக்ககாலத் தமிழ்-பிராமிக் கல்வெட்டுகளிலிருந்தும் அவற்றின் தொடர்ச்சியாக அமைந்த கல்வெட்டுகளிலிருந்தும் **தொல்காப்பியம்**, சங்க இலக்கியங்கள் போன்றவற்றிலிருந்தும் பிற்காலத் தமிழ் நூல்களிலிருந்தும் வேளிர் தொடர்பான தரவுகளையும் அவர்கள் வேந்தர்களோடு தொடர்புபடுவதையும் வேளாளர்களோடு இவ்விரு சாராரும் வேறுபடுவதையும் வேந்தர்கள் வேளிர் ஆவதையும் வேளிர் வேந்தராவதையும் தெளிவாக, வரலாற்றாய்வு முறையில் இந்நூலில் தொல்லியல் அறிஞர் நெல்லை நெடுமாறன் அவர்கள் திரட்டித் தந்திருப்பது எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பெரும் பயனை விளைவிக்கும் என நம்புகிறோம். இத்தகு சீரிய பணியைச் செய்த இந்நூலாசிரியர் மிகுந்த பாராட்டுக்குரியவர். இந்நிறுவனத்தில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை அமைவதற்குக் காரணமாயிருந்தும் நிறுவன ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தும் வரும் திரு. நெல்லை நெடுமாறன் அவர்களைப் பாராட்டுகிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

தமிழ் வளர்ச்சிக்கும் இந்நிறுவன வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவருமாகிய மாண்புமிகு கே.சி. வீரமணி** அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சியில் எங்களை வழிநடத்திவரும் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம்** இ.ஆ.ப. அவர்களுக்கும் எம் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம். இந்த அரிய வரலாற்று நூலை முறைப்படுத்திப் பதிப்பித்து மெய்ப்புத் திருத்தமும் செய்த முனைவர் ஆ.தசரதன் அவர்களுக்கும் இந்த நூலின் கணியச்சுப் படியை வடிவமைத்துச் சீராக்கித் தந்துள்ள நிறுவனக் கணிப்பொறியாளர்கள் திருமதி எ.ம. லட்சுமி, செல்வி ஆ. இராசேசுவரி, திரு ஆ.விமலாதித்தன் அவர்களுக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் பற்றி...

தென்பாண்டி நாட்டுத் திருச்செந்தூர்ப் பகுதித் தென்பொறையூர் நாடாள்வார் வமிசத்துப் பொன் நாடார் கூட்டத்தார் போன்ற நிலமைக்காரர்கள் வாழும் ஊர்களில் நாலுமாவடியில் பொன் திராவியம் நாடார், அண்ணாமலைக்கனி அம்மாள் தம்பதியரின் பதினொரு புதல்வியருக்குப்பின் 12வதாகத் தோன்றிய ஒரே புதல்வராக 1939ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 9ஆம் நாளில் பிறந்தவர் நெல்லை நெடுமாறன்.

இளவயது முதல் தாய்மொழியின் மீதும் தாய்நாட்டின் மீதும் பற்றுக் கொண்டதாலும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடன் திராவிட இயக்கத்தின் மீதும் ஏற்பட்ட பற்றுதல் காரணமாகவும் பெற்றோர் சூட்டிய நாராயணன் எனும் பெயரை விடுத்து, நெடுமாறன் என்ற பெயரை மாணவப் பருவத்திலேயே மாற்றிக் கொண்டார்.

உள்ளூரில் தொடக்கக் கல்வியை முடித்து, நாசரேத் புனித மர்காஸிஸ் உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் பேச்சாற்றலில் ஆசிரியர்களுக்கு மிஞ்சியவராகவும் மாணவர்களுக்குத் தலைவராகவும் விளங்கியதிலிருந்து இவருடைய ஆளுமை வெளிப்பட்டு நிற்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புக்குப் பின்னர்தான் திராவிட இயக்கத்தின்மீது இளைஞர்களுக்குப் பற்றுதல் ஏற்பட்டது. இவருக்கும்தான். இவருடைய மேடைப் பேச்சுகளில் கொட்டும் அருவியெனத் தமிழ் பொழிந்தது; அதனால் தமிழகத்தின் பல்வேறு மேடைகளில் இவரது முழக்கம் கேட்டது. அது இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. தமிழ்ப் பண்பாடு இவரது பேச்சில் மிளிர்ந்தது. தமிழ் வரலாறு படம்பிடித்துக் காட்டப் பெற்றது. தமிழும் திராவிடமும் தனி இடம்பெற்று இவருடைய மேடைப் பேச்சில் சிறந்தன. கி.பி. 1965இல் சங்கரன் கோவில் நகரத் தி.மு.க அமைப்பு இவருக்கு இலக்கிய மேதை என்ற பட்டத்தை நல்கியது.

தாய்மொழி மீது அளவற்ற பற்றுக் கொண்ட நெல்லை நெடுமாறன் தமிழ்மொழியைக் காக்கும் நோக்கில் சிறை சென்றவர். இந்தி எதிர்ப்பு இளைஞர்களிடையேயும் மாணவர்களிடையேயும் மேலோங்கியிருந்த நிலையில் நெல்லை நெடுமாறன் 1965ஆம் ஆண்டு, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாகக் கலந்துகொண்டார். அதனால் கைது செய்யப்பட்டு, திருவைகுண்டம் சிறையில் அடைக்கப்பட்டார்.

தமிழ்நாடு ஒன்றியத் துணைத் தலைவர் (Deputy Chairman of Tamil Nadu Unions) போன்ற பதவிகளை வகித்தார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் செனட் உறுப்பினராக 3 ஆண்டுகள் (1972-75), தமிழ்நாடு சாலைப் போக்குவரத்து ஆலோசனைக் குழு உறுப்பினர் போன்ற 21 பதவிகளிலும் அமைப்புகளிலும் இளம் வயதிலேயே பணியாற்றும் வாய்ப்புகளைப் பெற்றமைக்குப் பல்துறைகளிலும் இவர் பெற்றிருந்த நூலறிவும் பட்டறிவுமே காரணங்களாகும்.

1975ஆம் ஆண்டு நாட்டில் அவசரநிலை அறிவிக்கப் பட்டது. மிசா சட்டத்தில் நெல்லை நெடுமாறனும் கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேல் சிறையிலிருந்தார். தமிழக வரலாற்று ஆய்வும் படிப்பும் இவரைத் தீவிர அரசியலிலிருந்து விலகச் செய்தன. இவரது அரசியல் துறவறம் தமிழக வரலாற்றாய்வுத் துறைக்குப் பெரும்பேறாக அமைந்து விட்டதெனில், அது மிகையாகாது.

அதனைத் தொடர்ந்து இவரது கவனம் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள், தொல்லியல் சான்றுகள், நாணயங்கள் என எல்லாத் திசைகளிலும் சென்றது. படிக்கப்பட்டிராத ஒரு கல்வெட்டோ, ஓலைச்சுவடியோ இருப்பதாகக் கேள்விப்பட்டால், அது எத்தனைத் தொலைவில் இருந்தாலும் காலத்தையும், பொருட்செலவையும் பொருட்படுத்தாது, உடனே சென்று பார்த்துவிடுவார். அதைப் போன்றே வரலாறு, தொல்லியல் தொடர்பான கருத்தரங்குகள், மாநாடுகள் நடைபெற்றால் அங்கெல்லாம் இவரைத் தவறாமல் பார்க்க முடியும்.

இவருடைய தொடக்ககால ஆய்வுகளில் சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடைய வேந்தர்களில் வமிசாவளியினர் தற்போது யாராக உள்ளனர் என்ற தேடுதலே விஞ்சியிருந்தது. அதன் விளைவாகத் தொல்லியல் அறிஞர் எஸ். இராமச்சந்திரன் அவர்களின் தொடர்பு கிடைத்தது. இவருடைய தேடலுக்கு விடையும் கிடைக்கத் தொடங்கியது. அது முதல் இவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் பலப்பல. சான்றோர் காடும் சான்றோர் நாடும், சான்றோர் காசு, நாட்டார் மாடை, முந்நூற்றுவர், எழுநூற்றுவர் போன்ற தொடக்கக் காலக் கட்டுரைகள் இவருடைய தனிப்பட்ட தேடுதல் முயற்சியால் எழுதப்பட்டன. தொல்லியல் துறை அறிஞர்கள் பலரின் தொடர்பும் கிடைத்த பின் இவரது கட்டுரைகள் பெருமளவில் வரவேற்பைப் பெற்று ஏடுகளிலும் இடம்பெற்று வருகின்றன.

Studies in South Indian Coins என்ற நூலின் நான்காம் தொகுதியில் Sanar Kasu எனும் தலைப்பில் நெல்லை நெடுமாறன் அவர்கள் சான்றார் காசு பற்றி மேற்கொண்ட ஆய்வு பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளது. திரு. நடன. காசிநாதன் தாம் எழுதிய "தமிழர் காசு இயல்" என்ற நூலில் A Note on Sanar Kasu எனும் கட்டுரை தமிழறிஞர் ம.பொ. சிவஞானம் பெயரில் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப் பெற்றுள்ள அறக்கட்டளையின்

ஆறாம் சொற்பொழிவாக உரையாற்றியதன் அச்சு வடிவமாகும். இது 1995ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றது.

நெல்லை நெடுமாறன் திரு. சி. இராமச்சந்திரனுடன் இணைந்து எழுதிய வேளிர், வெள்ளை நாடார் போன்ற ஆங்கிலக் கட்டுரைகள் வரலாற்று முக்கியத்துவம் பெற்றவை.

இவர் எழுதிய பிற எழுத்துருக்களாவன :

உய்யக்கொண்டார்
அரையர்களான நாடாள்வார்
களப்பிரர் அன்றும் இன்றும்

போன்றவை வெளிவரும் நிலையில் உள்ளன.

நெல்லை நெடுமாறன் வரலாறு, கல்வெட்டு போன்ற ஆய்வுகளில் உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சி பண்பாட்டின் கீழ் உள்ள இந்து சமய அறநிலையத் துறையின் 'கல்வெட்டு உறுப்பினர்' எனும் பதவியை 1996 ஆம் ஆண்டு முதல் இவர் பெற்றார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் "தமிழில் ஆவணங்கள்" என்ற தலைப்பில் ஒரு தேசியக் கருத்தரங்கம் 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17, 18, 19 ஆகிய நாள்களில் நடந்தது. அதன் முத்தாய்ப்பாகத் தமிழ் ஆவணங்கள் மற்றும் கல்வெட்டு இயல்களில் பன்னெடுங்காலம் தொண்டாற்றிய அறிஞர்களுக்குப் பாராட்டுகள் நடந்தன. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மேனாள் இயக்குநர் முனைவர் இரா. நாகசாமி, புலவர் கோவிந்தராசனார், திரு. நடன. காசிநாதன், திரு. நெல்லை நெடுமாறன் ஆகியோருக்குச் சிறப்புகள் செய்யப்பட்டன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நெல்லை நெடுமாறனுக்குத் "தொல்லியல் அறிஞர்" எனும் பட்டத்தை அளித்தது இவர் மேற்கொண்டு வரும் ஆய்வுக்குக் கிடைத்த அங்கீகாரம் எனில் மிகையாகாது.

அண்மையில் இவர் எழுதிய கட்டுரைகளில் மிகச் சிறப்பாக அமைந்தவை: மருமக்கள் தாயம், நாட்டார், தமிழக ஒளியார் என்பன. ஆய்வுசெய்வதில் ஓய்வின்றி உழைத்துத் தோய்ந்து வரும் இந்நூலாசிரியர் எழுதிய பல நூல்கள் ஒவ்வொன்றாக வெளிப்படும் என்பது உறுதி.

அடுத்ததாக, பெருந்தனம் சிறுதனம் என்போர் இதுவரை அரசு அதிகாரிகள் எனத் தொல்லியல் துறையினர் அடையாளம் காட்டினர். அதை மறுத்து, அக்குழுவினர் கோயில் குடிகள் என்றும் தெய்வமகள் மரபிலே வந்தவர் என்றும் பல சான்றாதாரங்களின் மூலம் நிறுவியுள்ளார்.

உள்ளடக்கம்

		பக்கம்
	முன்னுரை	1
1.	வேளிரின் தோற்றம்	9
2.	வேளிர் வேளாளர் வேறுபாடுகள்	31
3.	தமிழ்–பிராமி மற்றும் பிற கல்வெட்டுகளில் வேளிர்	43
4.	வேந்தரும் வேளிரும் நாடுகிழவோரே	56
5.	வேளிரே ஒளியர்	72
6.	வேளிரான உரவோர்	92
7.	வேளிரின் விழுக்குடிப் பிறப்பும் சிறப்பும்	102
8.	நாடாள்வார் வேளான்கள்	168
9.	மூவேந்தருக்கும் வேளிர்க்கும் ஒற்றுமையும் அவர்கள் வேளாளரிடமிருந்து வேறுபடுதலும்	177

முன்னுரை

சங்க இலக்கியங்களில் இடம்பெறுகின்ற வேளிர் ஓர் அரச குலத்தினர் ஆவர். அவர்கள் மிக முற்காலத்திலிருந்தே தமிழகத்தின் சில பகுதிகளை ஆண்டுவந்துள்ளதாகத் தெரிகிறது. உண்மையில், இவர்களே பேரரசர்களான அதாவது சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களாக மாற்றம் பெற்றார்கள் எனவும் மூவேந்தர்கள் தமிழ் மண்ணின் ஆட்சியாளர்களாகத் தம்மை நிலைநிறுத்திக் கொண்ட பின் வேளிர்குலப்பெண்களை மணம் புரிந்துகொண்டதுடன் வேளிருக்குப்[1] பல உரிமைகளையும் தகுதிகளையும் வழங்கினர் என்றும் சிலர் கருதுகின்றனர். அது தவறு. வேளிர்தாம் தொன்மை ஆட்சியாளர்கள். அவர்களில் சிலரும் வேந்தரின் மகள்களை மணம் புரிந்துள்ளதாகச் சில கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. வேளிர் சிலர் வேந்தர்களாகவும் வேந்தர் சிலர் வேளிராகவும் ஆகியிருக்கிறார்கள்.

இவ்விரு கூட்டத்தாரையன்றி வேறுபிற புதிய ஆட்சியாளர்களும் பழந்தமிழகத்தில் இருந்ததாகத் தெரிகிறது. இவர்கள் வம்ப வேந்தர் எனப்பட்டனர்.[2]

---

1. பதிற்றுப்பத்து. உதியஞ் சேரற்கு வெளியன் வேண்மாணல்லினி யீன்றமகன்... இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன் (2ஆம் பத்தின் பதிகம்).

பல்யானைச்செல்கெழு குட்டுவன் இமைய வரம்பனின் தம்பி ஆவான்.

வேளாவிக்கோமான் பதுமன்றேவியீன்ற மகன்-களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல்- (4ஆம் பத்தின் பதிகம்).

குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு வேளள் ஆவிக் கோமான் றேவியீன்றமகன்.. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் (6ஆம் பதிகம்).

"செல்வக் கடுங்கோவுக்கு வேளாவிக் கோமான் பதுமன் றேவியீன்ற மகன்..... பெருஞ்சேர லிரும்பொறை" (8ஆம் பத்தின் பதிகம்).

"குட்டுவ னிரும்பொறைக்கு மையூர் கிழாஅன் வேண்மா ளந்துவஞ் செள்ளை யீன்றமகன் இளஞ்சேர லிரும்பொறை" (9ஆம் பத்தின் பதிகம்).

சிலப்பதிகாரத்தில் வருகின்ற 'வேள்விக்கிழத்தி' என்ற சொல்லும் குறிப்பிடத்தக்கது.

2. புறநானூறு. 345:7. "வந்தோர் பலரே வம்ப வேந்தர்".

வேளிரும் வேந்தரும் இணைந்திருத்தல்

வேளிர் குலத்தவர் அரசர் என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் "நாடு கிழவோர்" "கோ" என அழைக்கப்பட்டுள்ளனர். 'வேந்தரும் வேளிரும்' என்று அழைக்கப்படும் வழக்கு அரசரும் அரச குலத்தவரும் என்று பொருள்படக்கூடும். ஆயினும் 'வேள் அரசு' என்று உரிமையுடையவர் வேளிர் குலத்தவரே.

பணைகெழு வேந்தரும் வேளிரும் ஒன்று மொழிந்து[3]

வேந்தரும் வேளிரும் பின் வந்து பணிய[4]

இருபெரு வேந்தரொடு வேளிர்[5]

என்பன வேளிரும் வேந்தரும் இணைந்து செயல்பட்டனர் என்பதைத் தெரிவிப்பன.

சங்க காலத்தில் அரசகுடியின் அடையாளமாக மிளிர்ந்த வேளிர் பிற குடிகளின் எழுச்சி, ஏற்றத்தால் வீழ்ச்சி அடைந்தனர். அரசர்களும் தம் குடியைப் பேணுவதுபோல் பிற குடியினரைப் பேணத்தொடங்கிய காலநிலையில் வேளிர் பின்னடைவு பெற்றனர். காலப்போக்கில் வேளிர் குலத்தினர் தங்களின் தனி அடையாளத்தை இழந்து, தமிழ் ஆட்சியாளர்களில், அதாவது தமிழகச் சத்திரியர்களில் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டு விட்டனர்.

காலப்போக்கில் வேளிர் அல்லாத பிறரும் அரசுகளாகத் தோற்றம் பெற்றார்கள். இவர்கள் "உரிமை எய்தினோர்" என்று அழைக்கப்பட்டு நாலாம் குலத்திற்கு உரிமை கோரினார்கள்.[6] "உரிமை உடையவர்" என்பவர்க்கும் "உரிமை எய்தினோர்" என்பவர்க்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. இது பற்றி இதுவரை ஆராயப்படவில்லை.

---

3. *பதிற்றுப்பத்து 30:30.*
4. *பதிற்றுப்பத்து 88:13.*
5. *மதுரைக்காஞ்சி.*
6. உரிமை எய்தினோர் - பார்க்க: நச்சினார்க்கினியர் உரை - ***தொல்காப்பியம்,*** அகத்திணையியல் நூற்பா 30இன் உரை.

தமிழர்களின் வீரயுகம்

கி.மு. 3 முதல் கி.பி. 4ஆம் நூற்றாண்டுகளின் காலப்பகுதிக்குரிய சங்க இலக்கியங்கள் அவற்றுக்கும் முந்தைய ஒரு காலக்கட்டத்தை வெளிப்படுத்துகின்றன. அக்காலத்தில் போரில் தலைவனாயிருப்பதும் பொதுவாழ்க்கையில் வீரத்துடனிருப்பதும் புகழ்ந்து போற்றப்பட்டன. வீரயுகத்தில், தமிழ்ச் சமூக அரசு அதன் உருவாக்க நிலையில் இருந்தது. இந்தச் செயல்முறை சங்க இலக்கியப் புலவர்களின் பாடல்களில் பதிவாகியுள்ளது.

தொல்லியல்சார் சொற்களில் சங்க காலத்தின் முற்காலத்தைப் பெருங்கற்படை (இரும்பு) நாகரிகக் காலம் என்று சொல்லலாம். அந் நாகரிகத்தின் முன்னோடிகள் இரும்பு உருக்குவதில் தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்கள் இந்தியாவின் வேறு பகுதிகளிலிருந்து கருநாடகம் வழியே தமிழகத்தினுள் குடியேறியுள்ளதாகத் தெரிகிறது. பெருங்கற்படை மக்களின் மேல் அடுக்கினரான வேந்தர்களுக்கு முன்பாகவே வேளிர் தமிழகத்தில் குடியேறியதாகவும் தெரிகிறது. வேந்தர்களின் தொழில்நுட்ப முன்னேற்றம் வேளிர் உள்ளிட்ட தமிழகத்தின் முற்பட்ட பிற குடிகளை மேலாண்மை செய்வதற்கு இட்டுச் சென்றது. இந்தச் செயல்முறை திடும் என்று நிகழ்ந்ததன்று. மாறாக, கிறித்து காலக்கட்டத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்னர்த் தொடங்கி அதன் பின்னரும் நீடித்துள்ளது. முற்பட்ட கால எல்லையாகக் கி.மு. 8ஆம் நூற்றாண்டையும் பிற்பட்ட கால எல்லையாகக் கி.பி. 4ஆம் நூற்றாண்டையும் வைத்துக் கொள்ளலாம்.

இமயத்திலிருந்து வேளிர் தென்புலம் பெயர்ந்து வந்தனர் என்று சங்ககாலப் புலவர் கபிலரின் புறப்பாட்டு[7] குறித்திருப்பது கவனத்திற்குரியது. சிந்துவெளி நாகரிகம் தமிழர் தொடர்புடையது என்பது வேளிரின் வருகையை வலுப்படுத்தும். தொன் முதிர் வேளிர் (அகம். 258, புறம். 24) எனச் சங்க இலக்கியங்கள் குறிப்பது வேந்தருக்கும் முன்பானவர் வேளிர் என உணர்த்தும். ஐம்பெரும் வேளிர் என்றும் அதன் பின்னர் ஐம்பெரும் அரசர் என்றும் அடையாளப்படுத்தும் ஆவணச் சான்றுகள் இருவரும் ஒரு மரத்தின் இருகிளைகள் என்பதை உணர்த்துகின்றன.

---

7. *புறநானூறு 201.*

வேளிர் வருகை

கபிலரைத் தொடர்ந்து, வேறு சில தமிழிலக்கிய ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் வேளிரின் வருகையைக் குறிப்பிட்டுள்ளனர். இவ்வுரையாசிரியர்களில் நச்சினார்க்கினியர் குறிப்பிடத்தக்கவர்.

வேளிரின் குடிப்பெயர்வு பற்றி உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் கூறுவதாவது:

> அவரும் (அகத்தியர்) தென்றிசைக்கட் போதுகின்றவர்..... துவராபதிப்போந்து, நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டுபோந்து காடுகெடுத்து நாடாக்கி..... பொதியிலின்கணிருந்தனர்.

மேலும் 'வேந்துவினையியற்கை' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தின் உரையில் நச்சினார்க்கினியர்,[8]

> இது, மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்க்கும் வேந்தன் தொழில் உரித்தென்கின்றது.

தொடர்ந்து இடைக்கால ஆட்சியாளர்களில், குறிப்பாகப் பிற்காலச் சோழர்களும் பிறரும் தம்மை வேளிரோடு தொடர்புபடுத்தி எழுதிய வரலாறுகளுக்குக் கல்வெட்டுச் சான்றுகளும் கண்டறியப்பெற்றுள்ளன. இவை போன்ற ஆவணங்கள் களப்பிரர் தமிழகத்தில் ஆட்சியை இழக்கத் தொடங்கிய காலமுதல் ஏற்பட்டாலும் கி.பி. 9ஆம் நூற்றாண்டிலிருந்து பெருமளவில் ஏற்பட்டுள்ளன. கி.பி.16ஆம் நூற்றாண்டு வரை, அதாவது 'சீவலவேள்' வரையும் அதன் பின்னரும் அமைந்தன.

வேளிர் வரலாற்றாய்வுக்கு இக்கல்வெட்டுகள் முழுமையாக இதுவரை எடுத்தாளப்படவில்லை.

தொல்குடிவேளிர்

வேள்விச் சடங்கின்வழி திருமணம் கொண்ட சேரன் செங்குட்டுவனின் பட்டத்தரசி என்ற அரசமாது வேள்குடி மகள்;

8. தொல். பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா 32.

வேண்மாள் எனப்பட்டாள். இவளைப் பற்றிச் சிலம்பு, "வதுவை வேண்மாள்", "வேள்விக் கிழத்தி" என்று குறிப்பிட்டிருப்பது பண்டு நிகழ்ந்த வேள்வித் திருமணத்தில் தலைமகனும் தலைமகளும் கொண்ட மணவுறவு என்பதினாலேயே.

வேளிர் தொல்குடி என்பதற்குத் தக்க சான்றுகள் தமிழ் - பிராமி எழுத்துகளில் கிடைத்துள்ளன. பழங்குடி என்ற சொல்லோடு வேள் மக்கள் இலக்கியங்களில் தொன்றுதொட்டு விளங்கிய குடியென அறியப்படுகிறது.

தமிழகத்தின் தொல்குடிப் பெருமையின் சான்றாகச் சங்க காலத்திற்கும் முன் கி.மு. நான்காம் நூற்றாண்டுகளில் பழமையான தமிழியான தமிழ்-பிராமி எழுத்துகள்அமைந்த கல்வெட்டு புலிமான் கோம்பை என்ற ஊரிலிருந்து 'வேள் ஊர்' என்று அறியப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் தொன்மை மிக்க குடியாக வேளிர் இருந்தமையாலே சங்ககாலத்திற்கும் முற்பட்ட காலத்திலிருந்த வேளிர் ஊர் அறியப்பட்டுள்ளது.

பழந்தமிழ்ப் புலவர்களில் பரணர் பாடிய பாடல்களில் தொல்குடி வேளிர் ஊர்கள் பற்றியும் இவ்வூரார் வாழ்வியலில் சிறந்த பெருமையுடையவராக வாழ்ந்த நிலையும் பெறப்படும்.

பாழி ஆங்கண்
வேள்முது மாக்கள் வியல்நகர் கரந்த
அருங்கலம் *(அகம். 372, பரணர்)*

நன்னன் உதியன் அருங்கடிப் பாழித்
தொன்முது வேளிர் ஓம்பினர் வைத்த
பொன்னினும் *(அகம். 258, குறிஞ்சி, பரணர்)*

தொன்முதிர் வேளிர் குன்றூர் அன்ன
(நற்றிணை 280, பரணர்)

தொன்முதிர் வேளிர் குன்றூர்
(குறுந்தொகை 164, மாங்குடி மருதனார்)

இவைகளிலிருந்து மிகப் பழமையான அறிவுடையோர் குடி என அடையாளம் சொல்லப்பட்ட உலோக நாகரிக மக்கள் நம் வேளிர் குல அரசர் எனில் மிகையாகாது. போர்க்குடியாகச் சித்திரிக்கப்பட்ட பண்பட்ட தமிழ் உலகில் ஒழுக்கத்தைப் பிறப்பித்த வேள்குல அரசகுடியின் பழமை சங்க காலத்திலேயே 49 தலைமுறைகள் என்பதற்கு முற்பட்ட காலத்திலேயே இரும்பு

ஆயுதங்களை உலகில் பயன்படுத்தியர் வேளிர் ஆவர். இவரே சங்ககாலத் தொல்குடி மன்னர் ஆவார். (புறம். 353)

சங்க கால வேந்தர், வேளிர் பட்டங்கள்

தமிழரசர்களான மூவேந்தரும் அவர் குடியினரான வேளிர்களும் நாடுகிழவோர், நாடன் என்று சிறப்புடன் அழைக்கப்பட்டனர். மூவேந்தர்கள் சூடிய நாடன் பட்டத்தை அவர் குலத்தவரான வேளிர்களும் சூடினார்கள். குறிஞ்சி நிலமுடைய தலைமகனைக் குறிஞ்சி நாடன் என்றனர். இவனுக்கு மலைநாடன் என்ற பெயரும் உண்டு. முல்லை நிலத் தலைவனைக் குறும்பொறை நாடன் என்றும் அழைத்தனர்.

பாரிவேள் (புறம். 105) என்ற தலைவனைப் புறம். 263இல் "மலைகெழு நாட மாவண் பாரி" என்று கபிலரே பாடியுள்ளார்.

முடமோசியார் என்ற புலவர் ஆய் அண்டிரனை,

> தீஞ்சுனைப் பலவின் மாமலைக் கிழவன்
> ஆஅ யண்டிர னடுபோ ரண்ணல் (புறம். 128)

என்றும் "தேர்வேள் ஆய்" (புறம். 133) என்றும்,

> மலைகெழு நாடன் மாவே ளாஅய் (புறம். 135)

என்றும் பாடினார். இதனால் மலைகிழவன், வேள், நாடன் என்ற சொற்கள் அரசனைக் குறிக்கச் சங்க காலத்தில் பயன்பட்டதாகத் தெரிகிறது. வேந்தருக்கும் வேளிர்க்கும் அரசர், மன்னர் என்ற பெயர்கள் பொதுவானதாகும்.

பிற்காலத்தில் சோழனைக் 'காவிரி நாடன்' என்றும் சேரனை 'மலைநாடன்' என்றும் பாண்டியனைப் 'பாண்டி நாடன்' என்றும் நாட்டின் தலைமை காரணமாக அழைத்து வந்துள்ளனர். வேளிரும் வேந்தரும் சங்க இலக்கியங்களில் உரவோர், பெரியோர், உயர்ந்தோர், விழுமியோர், விழுத்திணைப் பிறந்தோர், அறிவுடையோர், சான்றோர் என்றும் தெளிவாக இறைகிழவோர், நாடுகிழவோர் என்றும் அழைக்கப்பட்டனர்.

வேளிரின் தனித்தன்மை

வேளிர்களின் முரசு

வேளிர்களுக்கு முரசு, செங்கோல், வெண்கொற்றக்குடை போன்ற தனிப்பெருமைகள் இருந்தமை தெரியவந்துள்ளது. கி.மு. முதலாம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. முதலாம்

நூற்றாண்டிலும் வாழ்ந்த பேரரசன் சோழன் கரிகாற் பெருவளத்தான் என்பானைப் பற்றிப் பரணர் பாடியுள்ளார்.

காய்சின மெய்ம்பின் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
இமிழ் இசை முரசம் பொருது களத்து ஒழிய
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி அறுத்த ஞான்றை
தொய்யா அழுந்தூர் ஆர்ப்பினும் பெரிதே (அகம். 246)

சோழநாட்டு வெண்ணி வாயிலில் நிகழ்ந்த போரில் பேரரசரான வேந்தரும் சிற்றரசர்களான பதினொரு வேளிரும் கரிகால் சோழனை வந்து எதிர்கொண்டு தோற்றுப் போயினர். அவரின் முரசுகளைப் போர்க்களத்தில் சோழன் பறித்துக் கொண்டான். பதினொரு வேளிர் என்போர் சோழனது குடியினர் என்றும் சில அறிஞர்கள் கருத்துரைத்துள்ளார்.

வேளிர் முரசுக்கு உரியோர் என்பது அவ்வையாரின் திருவாக்கிலும் அறியப்படுகிறது. புறநானூறு 99 ஆம் பாடல் சேரர்குடி பற்றிய செய்தியைத் தருகிறது. இச்செய்யுளில் "முரசின் எழுவரொடு முரணி" என்று குறிப்பிடுவது இருபெருவேந்தரும் ஐம்பெரும் வேளிரும் ஆவர். மன்னர் குலத்தவரான வேளிருக்கும் வேந்தருக்கும் முரசு உண்டு. முரசுக்கு இருந்த மரியாதையையும் மதிப்பையும் மோசிகீரனார் என்ற புலவரின் வரலாற்றால் நாம் உணரலாம். ஆனால் பிற்காலத்தில் எழுந்த வேளாளர் சமூகத்தின் எழுச்சிக்குரிய பாடலில் அரசரின் முரசு நெல் காய்ந்திட அமைந்த முற்றத்தில் கிடந்தது என்று அரச குலத்தைக் கேலி செய்வதை மு. இராகவையங்கார் போன்றோர் அறிந்திருந்தும் வேளிரை வேளாளரோடு வேறுபடுத்தாது எழுதியது வருத்தத்திற்குரியது.

மாங்குடி மருதனாரின் மதுரைக்காஞ்சி (128-129),

அரசுபட அமர் உழக்கி
முரசு கொண்டு களம் வேட்ட

என்பதற்கு நச்சினார்க்கினியர் தம் உரையில் "பாண்டியன் வென்ற நெடுநில மன்னர் இருவரும் குறுநில மன்னர் ஐவரும் படும்படி

போரிலே வென்று அவர் முரசைக் கைக்கொண்டு" என்று குறிப்பிடுகின்றார். போரின்கண் முரசைக் கொள்வது தண்ட நீதியாகும். முரசு வேளிர்க்கும் வேந்தர்க்கும் உரித்து.

சூளாமணி (பாடல் 1791) என்ற நூல் "ஐம்பெரும் குலத்தவராகிய அரசர்" என்று சொல்வது வேளிர் இனத்தவரான மன்னரைக் குறிக்கும் என்பது திண்ணம்.

தமிழக மூவேந்தரின் முன்னோர் மற்றும் அவர்களின் பிற்காலப் பரம்பரையினர் பற்றி அறிந்து கொள்ளப் பல அக புறச் சான்றுகள் உள்ளன. மூவேந்தர்கள் பற்றிய அகச்சான்றுகளாகச் சங்க இலக்கியப் புறப்பாடல்களும் புறச் சான்றுகளாகக் கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள், வெளிநாட்டார் குறிப்புகள் போன்றனவும் நம்மிடையே மிகுந்து காணப்படுகின்றன. ஆயினும் மூவேந்தர்கள் பற்றிய நம் அறிஞர்களின் முடிவுகள் ஒரு சார்பாக இருந்து வருவதும், அவற்றை அடியொற்றியே தமிழ் மாணவர்கள் அறிந்து கொள்வதும் இருந்து வருகின்றது.

அரசகுல வேளிர் மற்றும் மூவேந்தர்களின் வாலாறு, அவர் சந்ததியார் வரலாறு ஆகியவற்றை உண்மையோடு ஆய்ந்து வெளிப்படுத்தினாலேயன்றித் தமிழக வரலாறு முறையாக அமையாது.

1. வேளிரின் தோற்றம்

வேளிரின் பிறப்புத்தோற்றத்தை அடையாளங்காணும் முயற்சி அறிஞர்களால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது.[1] புறநானூற்றில் (201) கபிலர் குறிப்பிடும் இருங்கோவேளின் முன்னோர்கள், அவனுக்கு நாற்பத்து ஒன்பது தலைமுறைகளுக்கு முன்னர்த் துவாரகையை ஆண்டுள்ளனர் என்பது தெரிய வருகின்றது.[2] இப்புறநானூற்றுப் பாடல் (கி.பி. முதல் நூற்றாண்டு வாக்கில் எழுதப்பட்டது) குறிப்பிடுகின்ற இந்த வரலாற்று உண்மை நம்பகத்திற்குரியதுதான். ஏனெனில் குஜராத் மாநிலம் துவாரகையின் கடலடியில் அகழாய்வு மேற்கொண்ட திரு. எஸ்.ஆர். ராவின் கண்டுபிடிப்புகளுடன்[3] கபிலர் கண்டறிந்த வரலாறு பொருந்தியிருக்கிறது. கபிலர் தமக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த வேளிர் வரலாற்றை இப்பாடலில் கூறியுள்ளார்.

புறநானூற்றுப் பாடலில் (201) குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு உண்மையும் தொல்லியல் ஆய்வால் நிரூபிக்கப்பட்டுள்ளது; அது துவாரகையின் கோட்டை மதில் செம்பு அல்லது செம்பு உலோகம் கொண்ட கற்களால் கட்டப்பட்டுள்ளது என்பதுதான்.[4]

---

1. காண்க: "A Forgotten Chapter in South Indian History", in Prof. V.R. Ramachandra Dikshitar Centenary Volume, *Studies in South Indian History and Culture(ed.)* R. Nagasamy.

2. புறநானூறு 201 ஆம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சேட்டிருங்கோ என்பதற்கு 'ஜேஷ்ட இளங்கோ' என்று பொருள். கி.பி. 8ஆம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுகள் சிலவற்றில் இருங்கோவேள்களை "இருங்கோ மூத்தரைசரு" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. எஸ்.ஆர். ராவின் வெளியிடப்படாத அறிக்கை.

4. செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை........ -புறம். 201.

இது மண்ணியலாளர்களாலும் நிறுவப்பட்டுள்ள ஓர் உண்மையாகும். துவாரகையின் யதுகுல அரசு, செம்பு உலோக நாகரிகத்தினைப் பிரதிநிதித்துவம் செய்ததாகவும் அது இரும்பு உருக்கும் தொழில்நுட்பம் அறிந்த மக்களால் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் ஊகிக்க முடியும். இந்த வாதத்திற்கு ஆதரவாக மகாபாரதத்தின் மூசல (எலி) பர்வக் கதையைக் குறிப்பிட முடியும்.

இக்கதையின்படி யதுகுல மக்களின் வெறிச்செயல்கள் ஒரு முனிவரின் சாபத்தினைச் சம்பாதித்துக் கொண்டு அவர்களின் வீழ்ச்சிக்கும் அவர்கள் குலத்தின் பரவலுக்கும் காரணமாயின. யதுகுல மக்களின் தலைவன் கிருஷ்ணன் ஆவான். இவன் அம்பு ஆயுதத்தால் கொல்லப்பட்டான். அம்பு என்பது இரும்பு நாகரிகத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரும்புக் கருவியாகும்.

கிருஷ்ணனின் அழிவுக்குப் பின்னர்தான் வேளிரைத் தொடர்ந்து வேந்தரும் புலம்பெயர்ந்துள்ளனர். இவ்வனைவரும் பல குடிவகையினர் ஆவர். வேள்புலத்திற்கும் (கருநாடகம்) தமிழகத்திற்கும் புலம்பெயர்ந்தனர்.

வேளிரின் தோற்றமும் தடவும்

ஒரு வடக்கத்திய முனிவரின் தடவிலிருந்து வேளிர் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது.[5] புறநானூற்றுப் பாடலில் காணப்படுகின்ற இந்த வரிக்கு, அம் முனிவரின் ஓமகுண்டம் அல்லது பலியிடப்படுகின்ற குழியினைக் குறிப்பதாக உரையாசிரியர்களால் விளக்கமளிக்கப்படுகிறது. ஆனால் 'தடவு' எனும் இச்சொல்லுக்கு மற்றொரு பொருளும் உண்டு. தடம், தடவு அல்லது தடாகம் என்னும் சொற்கள் ஒரு 'தண்ணீர் ஆதாரம்' என்று பொருள் படும். இச் சொற்கள் இன்றைக்கும் மலையிலுள்ள ஊற்று அல்லது குளம் என்ற பொருளில் வழக்கிலுள்ளன.[6] சுனை என்றும் கூறலாம்.

புறநானூற்றிலுள்ள இந்தக் குறிப்பு, ஒரு மலையிலுள்ள தண்ணீர் ஆதாரத்தைக் குறிப்பதாகப் பொருள் கொண்டால், அது வலங்கை மாலை (கி.பி. 1600) என்ற நாட்டுப்புற வரலாற்றுக்

---

5. புறநானூறு 201. நீயே வடபால் முனிவன் தடவினுள்தோன்றி நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே...

6. தமிழ் அகராதி.

கதைப்பாடலில் சான்றோர் குலத்தின் பழம்பெருமை 'வாய்ந்த தோற்றம் விரிவாகக் கூறப்பட்டுள்ளதுடன் பொருந்தும். இந்தக் கதைப்பாடலின்படி, சான்றோர் குல முன்னோர்கள், 'வலங்கை வேளான்' 'வலங்கை வேள்' என்றும் 'வேளிர்' என்றும் அழைக்கப்பட்டுள்ளனர் என்பதுடன் அவர்கள், வித்தியாதர முனி என்றவருக்கும் கன்னியர் எழுவர்க்கும் இடையிலான சேர்க்கையில், ஏலாச்சுனை எனப்பட்ட ஓர் ஊற்றில் பிறந்தவர்கள் ஆவர்.

இந்தச் செய்தி சான்றோர் குலத்திற்குரிய புகழ்ப்பாடல்கள் பலவற்றிலும் செப்புப் பட்டயங்களிலும் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது.[7] மற்ற சமூகத்தவரின் ஆவணங்கள் ஏதேனும் இந்தக் குறிப்பைக் கொண்டிருக்கின்றனவா என்பது தெரியவில்லை. இது வெறும் நாட்டுப்புற நம்பிக்கை மட்டுமன்று; மாறாக ஒரு வரலாற்று விவரமாகும். சான்றோர் சமூகத்தின் ஒரு பிரிவினர் 'வேளான் சான்றார்' என்று அழைக்கப்படுவதாகக் கி.பி. 1824ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிலோன் அரசிதழில் (Ceylon Gazetteer) பதிவு செய்யப்பட்டுள்ளது.[8]

முதலாம் ஆதித்த சோழன் ஆட்சிக்காலத் திருக்கண்ணபுரம் கல்வெட்டிலும் முதலாம் பராந்தக சோழனின் திருச்சோற்றுத்துறைக் கல்வெட்டிலும் ''வோளன்'' என்ற வேளிர் அடைமொழி சான்றார் என்று காணப்பெறுகிறது. (தெ.இ.கல் 13:65), (140 / 1931)

வேளிரும் வேள்வியும்

வேள்வி என்பது நெருப்புடன் தொடர்புடையது. வேளிர் என்ற சொல்லின் சொற்பிறப்பியல் மூலத்தை வேள்வி (பலி) என்ற சொல்லில் இருந்து எடுத்துக் கொண்டால்[9] பழங்குடிப் பலிச்

---

7. *வலங்கை மாலை* – பதிப்பாசிரியர் முனைவர் ஆ.தசரதன், (அச்சிலுள்ளது); ''சான்றோர் குலச் சமுதாய ஆவணங்கள்'' –திருவிடைமருதூர் செப்புப்பட்டயம், போன்றன. பதிப்பாசிரியர் எஸ்.டி. நெல்லை நெடுமாறன்; மேலும் காண்க "Decline and fall of Vellai Nadars" by S.D. Nellai Nedumaran and S. Ramachandran, 1997.

8. Ceylon Gazetteer 1824.

9. அளக்குடி ஆறுமுக சீதாராமனால் (த.நா., கரூர் மாவட்டம்) கருவூரில் கண்டுபிடிக்கப்பட்ட சங்க காலத்திற்குரிய முத்திரை மோதிரத்தில் பிராமி எழுத்துப் பொறிப்பு உள்ளது. வேளிச் சம்பான் என்று அதில் உள்ளது. வேளி என்ற சொல்லை 'வேள்' (பலியிடுதல்) என்ற வினைச்சொல் மூலத்திலிருந்து தருவிக்கலாம்.

சடங்குகளும் கூடவே வழிபாட்டு முறைகளும் தண்ணீர் சொரிந்து (அபிஷேகம்) நிகழ்த்தப்பட்டுள்ளனவே தவிர நெருப்புக் கொண்டு அல்ல. இத்தகைய பழங்குடி வழிபாட்டு முறைகளும் கூடவே பலியிடுதல்களும் நெருப்பை மூட்டுகின்ற தொழில் நுட்பத்தில் கைத்தேர்ச்சியற்ற புதியகற்கால மக்களால் செய்யப்பட்டு வந்துள்ளன. கடவுளர்களின் மூலத்தோற்றத்துடன் தொடர்புடைய கதைகளும்கூட இவ்விவரத்தை மறைமுகமாகச் சுட்டுகின்றன. மலை மக்களின் பழங்குடிக் கடவுளான முருகவேள், ஒரு தண்ணீர் மூலத்தில் இருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது.[10] (குறிப்பு: *பரிபாடல்*) ஆனால், பிற்காலப் பழங்கதைகள் முருகனை அக்கினி புத்திரனாக (நெருப்பின் மகனாக) விவரிக்கின்றன. இதற்கு, நெருப்பின் தூய்மைப்படுத்தும் தன்மை என்ற வேத நம்பிக்கை காரணமாக இருக்கலாம்.

வேளிர் சுனை அல்லது ஓமகுண்டம் அல்லது பலியிடுகின்ற குழியிலிருந்து தோன்றியவர்கள் என்ற கோட்பாட்டைச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதுக்கோள் வேள்வி[11] என்ற பின்னணியில் பார்க்கவேண்டும். கள் நொதித்தல் (புளித்துப் பொங்குதல்) என்பது ஒரு கடவுட் சக்தியின் இருப்பைச் சுட்டுகின்ற ஒரு நற்குறியாகக் கருதப்படுகிறது. யதுகுலத்துடன் உறவுடைய பலராமன் அல்லது வாலியோன் ஆகிய நாகராசன் போதை யூட்டும் மதுவில் விருப்பங்கொண்டவன் என்ற விவரத்தை இங்குக் குறிப்பிடலாம். அவன் தாலத்வஜத்தைத் (பனைக் கொடியைத்) தனது கொடியாகக் கொண்டிருந்தான். பனை மரத்திலிருந்து கள்ளிறக்கும் தொழில்நுட்பத்தை வேளிர் கண்டுபிடித்திருக்கலாம். கள் (பெண்ணைப்பிழி)[12] வேதகாலச்சோம பானத்திற்குச் சமமானது. இந்த மதுக்கோள் வேள்வியானது தனது மூலத்தோற்றத்தைப் புதிய கற்கால அல்லது செம்பு உலோகக் காலக்கட்டத்தில் கொண்டிருந்த வைதீகச் சோம யாகத்திற்கு இணையான பழங்குடிச் சடங்காகக் கொண்டிருந்திருக்கலாம்.

---

10. திருமுருகாற்றுப்படை, வரிகள் 253–4; பெருங்கதை.

11. சிலப்பதிகாரம் 3:28:149. 'ஓமகுண்டம்', புறநானூற்றில் *(201:13)* 'சேட்டிருங்கோ' என்று அழைக்கப்பட்ட இருங்கோவேள் சோமயாகம் செய்ததாகத் தெரிகிறது. பல்லவர்களின் காசாக்குடி செப்பேட்டில் பதிவாகியுள்ள கொடைபெற்றுக் கொண்டவர்களில் ஒருவர் சேட்டிருங்கோ சோமபாஜி ஆவார்.

12. பட்டினப்பாலை 89. ''மணர்ப்பெண்ணைப் பிழி மாந்தியும்''

புகழ்பெற்ற பாரிவேள் கபிலர் போன்ற புலவர்களுக்குக் கள்ளையும் கறியையும் தாராளமாக வழங்கினான் எனப் புறநானூற்றுப் பாடலொன்றில்[13] குறிப்பிடப்பட்டுள்ளது.

பானை (பலிக்குழி) என்ற குறியடையாளத்தை வேளிர் பிறந்த தடவு என்பதாக எடுத்துக் கொள்ளமுடியும். மிழிச்சாணார் அல்லது மூழிக்களத்து ஒழுக்கவிச் சான்றார் என்போர் (T.A.S. Vol. 2,3) வேள் நன்னனின் குலமான மூக்ஷிக (எலி)க் குலத்தில் தோன்றியவர்கள் என்று கருதப்படுகிறது.

வேளிரும் சந்திரகுல உறவும்

சங்க இலக்கியங்களில் வேள் என்ற சொல் போர்க் குடியினர் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.[14] முருகன் மற்றும் மன்மதன் ஆகிய கடவுளர்களும்கூடச் சங்க இலக்கியத்தில் முருகவேள் என்றும் காமவேள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களின் போர்த்திறன் காரணமாகவே 'வேள்' என்ற பின்னொட்டைப் பெற்றுள்ளனர். முருகன் தேவசேனாதிபதி ஆவான்; காமவேள் (மன்மதன்) தனது ஐங்கணைகளைக் கொண்டு காதலர்களின் இதயத்தைத் துளைப்பதில் தேர்ந்தவனாவான். பெருங்கதையில் மன்மதன், 'பெருவேள்' (மாபெரும் தலைவன்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.[15]

புராணங்களின்படி, புருவும் யதுவும் சகோதரர்களாவர். கி.பி. 9-10ஆம் நூற்றாண்டிற்குரிய பாண்டிய அரசர்களின் செப்பேட்டுப் பொறிப்புகளின் பிரசஸ்தி பகுதி, பாண்டியர்களின் மூலத் தோற்றத்தைச் சந்திர குலத்துடனும் புரூரவஸ் மன்னனுடனும் அடையாளப்படுத்துகிறது.[16] இருக்கு வேதத்தின் 10ஆம் அத்தியாயத்தில் வானுலகத் தேவதை ஊர்வசி என்பார் புரூவரஸ் என்ற அரசனை ஈலா (ஈழா) புத்திரர் என்று கூறியுள்ளார். சங்க இலக்கியங்களில் ஒன்றான கலித்தொகையிலுள்ள பாடல் ஒன்று ஒரு குடத்திலிருந்து தோன்றிய நல்லிநாட்டு ஆயரை, (ஆய்வேளிர்) பாண்டியனின் ஒன்றுவிட்ட சகோதரராகக் கூறுகிறது. இந்த நல்லிநாட்டு ஆயர்கள் சுவீரா ஜெய்ஸ்வாலால் நல்லிநாட்டு ஆயர்

13. புறநானூறு 113. மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும் அட்டு ஆன்றானாக்கொழுந்துவை ஊன்சோறும்.......

14. புறநானூறு 20 மற்றும் பிற.

15. பெருங்கதை 42.

16. பாண்டியர் செப்பேடுகள் பத்து.

என்று எழுதப்பெற்றுள்ளனர். முன்வைத்துள்ள கருதுகோளின் படி[17] பிற்காலத்தில் யாதவ குலத்தில் சேர்ந்துவிட்ட ஆஹிர் (அல்லது ஆஹிராஸ்) என்ற குலத்தைச் சேர்ந்த புல்லிநாட்டு ஆயரிலிருந்து[18] வேறுபட்டோராவர். கலித்தொகை நட்ட குடியோடு தோன்றிய நல்லினத்து ஆயர் என்பதைச் சுவீரா ஜெஸ்வால் நல்லி நாட்டு ஆயர் என்று எழுதியுள்ளார்.

தென்னிந்தியாவை அரசர்களும் பிறரும் படையெடுத்து அடிமைப்படுத்திய பின்னரும் வேளிர் குலத்தைச் சேர்ந்த சில ஆளும் குடும்பங்கள் தங்களின் தகுதிநிலையையும் உரிமைகளையும் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருந்ததுடன் படிப்படியாகச் சந்திரகுலத் தோற்றமூலத்தைக் கோரினர். எடுத்துக்காட்டாக, தங்களைத் தோற்றுவித்தவனாக மகாசேனன் அல்லது முருகனையும் தங்களை வளர்த்தவர்களாகச் சப்தமாதர்களை (ஏழு கன்னியர்களை)யும் கூறிக் கொண்ட வேள்குலச் சாளுக்கியர்கள், பின்னர், சந்திரகுல அரசர்களாகத் தங்களை அடையாளப் படுத்திக்கொண்டனர்.[19] தங்களின் யதுகுலத் தோற்றத்தைக் குறிப்பிட மறக்காத ஆய்வேளிர் எதற்கும் குறைவின்றித் தங்களின் சந்திரகுலத் தொடர்பு குறித்துப்பெருமை கொண்டனர்.[20]

பெருங்கற்படை நாகரிகத்தினரின் வருகைக்கு முன்னர் வேளிரை உள்ளடக்கியிருந்த ஆளும் வர்க்கத்தினர் (ruling class), வேந்தர்களின் படையெடுப்புக்குப் பின்னர் முற்றிலுமாக அழிந்து விடவில்லை. கால மாற்றங்களுடன் சேர்ந்துபோகத் தயாராக இருந்தவர்களும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் தங்களின் திறனை நிரூபித்துக் கொண்டவர்களும் ஆளும் வர்க்கத்தவராக (nobility) அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

சில வேளிர் ஆசான்களாகவும் ஏனாதிகளாகவும் (போர்க்கலை பயிற்றுவிப்போராகவும் படைத் தலைவர்களாகவும்) பேரரசர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாக, சங்கப் புலவரான மதுரை வேள் ஆசான், மலையமான் தலைவனான சோழிக ஏனாதி திருக்கண்ணன், ஏனாதி, திருக்கிள்ளி மற்றும் சேரர்களின் ஒரு தளபதியான சோழிய ஏனாதி திருக்குட்டுவன்

17. ''நட்டகுடியோடு தோன்றிய நல் இனத்து ஆயர்'' கலித்தொகை 13.

18. வைணவத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சுவீரா ஜெய்ஸ்வால்.

19. கலித்தொகை 113.

20. பிங்கல நிகண்டு 416.

போன்றவர்களை நாம் குறிப்பிட முடியும். இவர்கள் புறப்பாட்டில் அரசவாகையில் பாடப்பட்டுள்ளனர் (புறம் : 74, 167)

வேளிரும் வேளாளரும்

வேளிர் குறித்து எழுதிய அறிஞர்கள் பலரும் வேளிரை வேளாளருடனோ அல்லது தமிழக வேளாளரின் மூலத் தோற்றத்தை வேளிர் குலத்துடனோ அடையாளப்படுத்தியுள்ளனர்.[21] இந்தக்கருத்தை முழுமையாகவும் விரிவாகவும் அவர்கள் அலசியுள்ளனர். என்றாலும் வேளிருக்கும் வேளாளர்க்கும் இடையில் தெற்றெனத் தெரிகின்ற ஒற்றுமையின்மைகளை அவர்கள் கவனிக்கத் தவறிவிட்டனர். முதலாவதாக, பெரும்பாணாற்றுப் படையில் 'வேளாண் வாயில்' என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக, 'வாயில்' என்பது, இடைத் தரகர்களாகச் செயல்படுவோரைக் குறிக்கக் கூடியதாகும். (தொல். புறத்திணை 28). திருவள்ளுவர் ''வேளாண்மை'' என்பதை விருந்தோம்பல் அதிகாரத்திலேயே குறிப்பிடுகின்றார்.

சங்க இலக்கியங்களில் வேளாளர் பற்றிய ஒரு குறிப்புமில்லை; ஆனால், வேளிர் பற்றி, அதிலும் மண்ணுக்குரிய ஆட்சியாளர்களாக அவர்களைச் சொல்லுகின்ற குறிப்புகள் நிறைய உள்ளன.[22] வேளிர் பற்றி ஒன்றும் குறிப்பிடாத தொல்காப்பியம், வேளாளர்களைச் சூத்திர வருணத்தவராகக்[23] குறிப்பிடுவதுடன் வேளாளர்களின் வாழ்க்கைப் பணி உழுதுண்பது மட்டுமே என்கிறது.

---

21. காண்க. "A Forgotten Chapter in South Indian History" in Prof. V.R. Ramachandra Dikshitar Centenary Volume, *Studies in South Indian History and Culture(ed.)* R. Nagasamy.

22. '' தொன்முதிர் வேளிர்'' – புறநானூறு 24:21. ''அகத்திய முனிவராற் கொண்டு வரப்பட்ட பழமை முதிர்ந்த வேளிர்''–உ.வே.சாமிநாதையர். ''தொன்று முதிர்வேளிர்'' நற்றிணை 280:8.

''வேந்தரும் வேளிருமொன்று மொழிந்து'' – பதிற்றுப்பத்து 30:30, ''வேந்தரும் வேளிரும் பின்வந்து பணிய'' – பதிற்றுப்பத்து 88:13. ''வேளிரொடு பொரீஇய'' – அகநானூறு 331:3.

நாற்பத்தி யொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே விரற்போ ரண்ணல்
(புறநானூறு 201:11–12).

''தேர்வேள்'', ''வெல்போர் வேந்தரும் வேளிரும்'', ''மலைகெழுநாடன் மாவேளன்'', ''நெடுவேள் ஆதன்'', ''வாட்டாற்று வேளெழினியாதன்'', ''வேள்வேளாதன் எழினி'', ''பாரிவேள்'', ''ஆய்அண்டிரன்'', ''வேள் பேகன்'', ''வேளெவ்வி'' – (புறம். 133:7). பிற.

23. *தொல்காப்பியம் அகத்திணையியல் நூற்பா 31. மரபியல் நூற்பா 78.81*

வேளாளர்களை உழவுத் தொழிலுடன் தொடர்புபடுத்துகின்ற போக்கு இன்றைக்கும் கூடப் பயிர்த்தொழில் எனும் பொருளில் பயன்படுத்தப்படுகின்ற வேளாண்மை அல்லது வெள்ளாமை என்ற சொல்லில் எதிரொலிக்கின்றது. வேறுபொருளில் வேளாண்மை செய்தன கண் என்ற சொல் *கலித்தொகை* (பாடல் 101:46) இல் உள்ளது. *பரிபாடலில்* (எண். 20, வரி 63) வேளாளர் என்ற சொல் உழவன் என்ற பொருளில் வந்துள்ளது. *பரிபாடல்* என்ற கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு நூலில் ''எருது ஓடவிடும் முறைமை வேளாளர்க்குப் படர்த்தி இல்லை'' என்று அவரின் குலத்தகுதி பதிவு செய்யப்பட்டுள்ளது (பரி: 20:63)

வேளம் என்ற அடிமை நிறுவனம்

அரசர்களின் அதிகாரத்தை எதிர்த்த இனக்குழு மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு அவர்களின் பெண் மக்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர். இது, *பட்டினப்பாலையில்*[24] வருகின்ற 'கொண்டி மகளிர்' மற்றும் *நற்றிணையில்*[25] வருகின்ற 'ஆளில் பெண்டிர்' பற்றிய குறிப்புகளில் இருந்து தெரிய வருகிறது. சிறைப்பிடிக்கப்பட்ட பெண்களின் நிலை 'வேளம்' எனப்பட்டது. சங்க இலக்கியத்தில் வேளம் என்ற சொல் குறிப்பிடப்படவில்லை என்ற போதிலும். 'அடிமை உணவு என்ற பொருளில் வேளாண் சிறுபதம்' எனப் *புறநானூற்றில்* (பாடல் 74:4) சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடிய பாடலில் வருகிறது. அடுத்ததாக, கி.பி. 8இல் தொடங்கி 13ஆம் நூற்றாண்டு வரையிலான கல்வெட்டுகளில் 'வேளம்'[26] பற்றியும் 'வேளாட்டி'[27] (திருமதிகள் வெள்ளாட்டிகள் மற்றும் வேலைக்காரப் பெண்கள்) பற்றியும் ஏராளமான குறிப்புகள் உள்ளன. இவ்வேளாட்டிகளுக்குப் பிறந்த பிள்ளைகள், 'அடிமைகள்' என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

---

24. பட்டினப்பாலை 246.
25. நற்றிணை 394.
26. ''வேளத்துப் பெண்டாட்டி கள்ளிச்சி உத்தமதானி'' – புதுக்கோட்டைக் கல்வெட்டுகள். வேளம், வேளாளர் என்பதற்கு இயையப் பிற்காலச் சோழர்களின் ''வேளைக்காரப்படை'' தோன்றிற்று.
27. கோக்கருந்தடக்கன் என்ற ஆய் மன்னனின் பார்த்திபசேகரபுரம் செப்பேடு. அறிஞர்கள் பலரும் இது குறித்து விவாதித்துள்ளனர்.நெல்லை நெடுமாறன் விரிவாக ஆராய்ந்து ''தமிழக நாட்டார்'' என்ற தலைப்பில் சென்னைக் கோட்டையில் தொல்லியல் துறையில் கட்டுரை வாசித்துள்ளார்.

தொல்காப்பியத்தின்படி வேளாளர்கள், வேதங்களில் குறிப் பிட்டுள்ள தஸ்யூக்களுக்குச் (வேலைக்காரிகளின் பிள்ளைகள்) சமமாகச் சொல்லப்பட்டு, வேத சமூக - அரசியல் அமைப்பின் அடிப்படையில் வருணாசிரம ஒழுங்கில்[28] சூத்திரத் தகுதி நிலை அளிக்கப்பட்டுள்ளனர்.

வேளாளர் சாதியின் உருவாக்கம்

தமிழர்களின் சமூக - அரசியல் வரலாற்றுப் போக்கில் எதிர் கொண்ட பல மாறுதல்கள் தொடர்ந்து வந்த இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. அரசு உருவாக்கம், காடுகளை அழித்து விவசாய விரிவாக்கம், பெரும் நிலப்பரப்புகளை விளைநிலங்களாக மாற்றுதல் மற்றும் பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களைத் தொடங்குவது ஆகியன மனித ஆற்றல் அதிகமாகத் தேவைப் படுகின்ற செயல்களாகும். இந்த மனித ஆற்றலைப் பெறும் பொருட்டு, போரில் சிறைப்பிடிக்கப்பட்டவர்களும் வேளத்தில் பிறந்த ஆண் பிள்ளைகளும் பயன்படுத்தப்பட்டனர்.[29] இது இயற்கையான விதத்தில் வேளாளர்கள், சமூக - அரசியல் அடுக்கில் தவிர்க்க முடியாத ஒரு சாதியாக வலிமை பெறுவதற்கு இட்டுச் சென்றது. வீரயுகத்திலேயே தொடங்கிய இந்தப் போக்கு, களப்பிரர் காலத்தில் முழுவதுமாக வளர்ச்சி பெற்றிருப்பதுடன் சங்க நூல்களுக்குப் பிந்தைய இலக்கியங்களில், அதாவது, கி.பி. 4 முதல் கி.பி. 7க்கு இடைப்பட்ட காலத்திற்குரிய நீதி இலக்கியங் களில்[30] எதிரொலித்துள்ளது.

மணவுறவுக்கு வெளியே பிறந்த[31] தாய்வழிப் பிறப்புரிமை முறையைப் பின்பற்றிய வேளாளர்கள், தங்கள் எண்ணிக்கை வலுவின் காரணமாக ஒரு வகையான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டதுடன் வீரயுகத்திற்குப் பிந்தைய (கி.பி. 4 முதல் கி.பி. 7ஆம் நூற்றாண்டு) களப்பிரர் ஆட்சியின் நடைமுறைகளில் அரசு

---

28. தொல்காப்பியம், மரபியல் 81.

29. 'விஷ்டி' அல்லது 'வெட்டி' எனப்படும் கட்டாய உழைப்பு. 'தாஸ' மற்றும் 'ப்ருத்ய' என்ற இரண்டு வகை போர்க் கைதிகள் அசோகரின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன. (காண்க ரோமிலா தாப்பரின் "Past and Prejudice" தமிழ் மரபின்படி, ஈழத்தில் சிறைப்பிடித்த போர்க் கைதிகளைக் கொண்டு கரிகால சோழன் காவிரியின் குறுக்கே கல்லணை கட்டினான். இத்தகைய பல நிகழ்வுகள் வரலாற்றில் உள.

30. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்.

31. தொல்காப்பியம், கற்பியல் 3–4.

நிருவாகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளனர். களப்பிரர் நாலாம் வருணத்தினர் என்று இந்நூலாசிரியர் விரிவாக ஆராய்ந்து கட்டுரை வரைந்துள்ளார். சமணம் மற்றும் பௌத்த மதக் குருக்களின் பின்புல ஆதரவைப் பெற்ற களப்பிரர் காலத்தில் வேளாளர்களின் தகுதி நிலை உயர்வுக்கு இயைந்த சூழலை உருவாக்கித் தந்தது. எனினும், இது உருமாற்றத்தின் ஒரு கட்டம் மட்டுமே.

அனைத்திந்திய சூழலிலும்கூட ஒரு பெரும் மாறுதல் நிகழ்ந்து கொண்டிருந்தது. குப்தர்கள் ஆதரவின்கீழ் வணிகத்திலும் விவசாயத்திலும் சாதிக்கப்பட்ட விரைவான முன்னேற்றம்தான் இதற்குக் காரணம்.[12] இதற்கு முன்னர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த வைசியர்கள் முழு அளவில் வணிகர்களாக மாறிவிட்டதால், சூத்திரர்கள் (அடிமைகள்) விவசாயிகளாக ஆகிவிட்டனர். மணிமேகலை (கி.பி. 6ஆம் நூற்றாண்டு)யை இயற்றிய கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் இம்மாற்றச் செயல்முறையின் வகைமாதிரியான ஓர் உதாரணமாவார். அவரது முன்னோர்கள் விவசாய விளைவிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களாக இருந்திருக்கலாம். சீத்தலைச் சாத்தனார் புஞ்சைப் பயிர்களின் வணிகராக ஆகியிருக்கலாம். பரந்து விரிந்த பயணத்தின் விளைவாகப் பல நாடுகள் மற்றும் தொலைதூரப் பகுதிகள் குறித்த அறிவை அவர் பெற்றிருக்கலாம். அது அவரது இலக்கியப் படைப்பிலும் எதிரொலித்துள்ளது.

முனைவர் நாகசாமியின் கருத்து

வேள் என்ற சொல்லிலிருந்து வேளாளர் என்ற சொல் தோற்றம் பெற்றிருக்கலாம் என்பது முனைவர் இரா. நாகசாமியின் கருத்தாகும். “வேள் எனில் மண் என்பது பொருள்” (யாழ்ப்பாணத்து அகராதி, லெக்ஸிகன்) என்பதால்; மண்ணைக் கொண்டு தொழில் புரியும் குயவனுக்கு வேட்கோ என்ற பெயர் பல கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றது. அதனால் மண்ணை ஆள்பவர் என்னும் பொருளும் வேள் ஆளர் அல்லது வேளாளர் என வந்திருக்கக் கூடும். என்பது அவர் கருத்து. இரா. நாகசாமி குறிப்பிடுவதாவது:

> வேள் – மண் என்னும் சொல்லிலிருந்தும் வேளிர் என்னும் பெயர் வந்திருக்கக் கூடும். வேளாளர், வேளார் வேளிர் என்று மூன்று திறத்தாரும் ஒரு குடியினராகவே கருதப்படுதல் உண்டு என்றும் முன்னரே கூறினோம். வேளிரும் வேளாளரும் முதலில் ஒரே

இனத்தவராகவே இருந்து இருத்தல் வேண்டும் என்று கொண்டால் தவறில்லை.

தொகுப்பு: புலவர் மணியன், கோவை 18. (வேளாள சீலர் கோவை திரு. எஸ். இராமசாமி அவர்களின் நாள்மங்கல விழா வெளியீடு)

மேலும் அவர் (வரலாற்றில் வேளாண் குடிகள், பக். 2-3) குறித்து இருப்பதைப் பார்ப்போம். வேள்ாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி என்பதைக் குறிப்பிட்ட முனைவர் நாகசாமி, பெரிய கழனியுடையவர்களையே கிழவன் என்பார்கள். காவிரி அணையும் தாழ்நீர் படப்பை நெல்விளை கழனி அம்பர்கிழவோன்(புறம். 385) (பக். 4 மேற்படி கட்டுரை) சங்ககாலப் பாடல்களில் தலைமகன் கிழவன் எனப்பட்டான். நாடு ஆண்ட பிறரும் குறிப்பிடப்பட்டாலும் கிழவன் அடைமொழி தலைமக்களுக்குரியதாம்.

நாடு அறிந்த அறிஞர் முனைவர் இரா. நாகசாமி வேளாள சீலர் கோவை திரு. எஸ். இராமசாமி அவர்களின் நாள் மங்கல விழா வெளியீடு என்ற நூலில் ''வரலாற்றில் வேளாண் குடிகள்'' என்று தலைப்பிட்டு எழுதியுள்ள இக்கட்டுரையில் வேளாண்குடிப் பெருமகன் ஒருவரை மகிழ்விக்கப் புகழ்ந்து எழுதியதாகத் தோன்றுகிறது.

அதே வேளாண் செல்வர் நாள் மங்கல விழா வெளியீடுதனில் அறிஞர் பூங்குன்றன் வேளிர் வேளாளர் அல்லர் என அழுத்தம் திருத்தமாக மறுத்துள்ளார்.

'குயவர்' வேள்கோ என்ற பெயருக்கு உரியவர் என்பது மட்டுமல்ல வேளார் என்று குயவர்கள் இன்றும் பட்டமிட்டும் அழைக்கப்படுகின்றனர். குயவராகிய் வேட்கோவர் பதினெட்டுத் தொழிற் சாதியில் ஒருவர்; மேலோர் மூவருக்கும் ஏவின ஊழியம் செய்து வருபவர்.

முனைவர் இரா. நாகசாமி தமது கட்டுரையில் **ஏர் எழுபது** பாடலை மேற்கோள் காட்டி வேளாளர் பெருமைகளை அடுக்கியுள்ளார். உழுதொழிலை மேற்கொண்ட வேளாளர் உழும் குலம் என்றும் குறிப்பிடுவதை வேளாளரின் பெருமை என்று அடையாளம் காட்டுகிறார்.

சுடர்மணி மன்னவர் எழுங்குலத்தினர். சூரிய சந்திரர்போல் எழுங்குலம். மன்னர்கள் செங்கோலுக்குரியவர். ஆனால் வேளாளர் உழவுத் தொழிலுக்குரிய சிறுகோல் உடையவர்கள். வேளாளரில் சிலரின் பெருமை உழுவித்து உண்போர் என்று

அடையாளமிட்ட உயர்ந்த வேளாளர் என்பதே. தங்கள் பெருமையாக 'அரசரின் பெருமுடியான நெடுமுடியை நாற்று முடியாக வயலிலே நட்டுவிடுவது வேளாளருக்குப் பெருமை என்று பாடியுள்ளனர். நெல்முடி சூடியவர் அரச குடி என்று வாதாடுகிறார் நடன. காசிநாதன்.

நெடுமுடி வேந்தர் மற்றும் வேளிர் பொன்முடியைத் தம் உயிரினும் மேலாக, உயர்வாகக் கருதினர் என்பது சங்க கால நூல்களில் பாடப்பெற்றுள்ளது. கல்வெட்டில்கூடச் சிறப்பாக மன்னர் முடி பற்றிச் சொல்வது அறியாமல் அன்றோ எழுதியுள்ளார். வேளிர் குலத்தவரான மன்னர்கள் வேள்வி செய்தே முடிசூடினர். என்பதால் கி.பி.17,18ஆம் நூற்றாண்டு நூலான ஆதிபூர்வ மண்டங்குடி நாட்டு மன்னர் வரலாறு என்ற நூல் வேள்முடி சூடிய குறுநில மன்னர் என்பதை அறிந்து உணர்க.

வேந்தரும் வேளிரும் முரசு உடையவர்கள். செங்கோல் உடையவர்கள். போர் நிகழ்வுகளில் போர்க்களத்தில் வேந்தரும் வேளிரும் முரசுகளை இழந்து ஓடினர் என்று பல சங்கப் பாடல்களில் புலவர் பலர் பதிவு செய்துள்ளனர். கி.பி. முதல் நூற்றாண்டிலும், 2ஆம் நூற்றாண்டிலும் வாழ்ந்த அவ்வையார், "இமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணி" என்று பாடியுள்ளாரே; சேரரிடம் பகைமை பாராட்டிய எழுவரை வென்று அவர் முடியை உருக்கி மார்பிலே அணி ஆரமாகச் சேரமான்கள் அணிந்து கொண்டதாகப் பல நூல்களில் காணப் பெறுகிறதே; எழுவரில் இருவர் வேந்தராக உயர்வு பெற்றிருந்த சோழரும், பாண்டியரும், ஐவர் என்போர் ஐம்பெரும் வேளிர் என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளதே இதைப் பற்றி ஏன் சிந்திக்கவில்லை?

வேளாளர் சங்க காலத் தலைமக்களா?

முனைவர் இரா. நாகசாமி மண், நிலம் தொடர்பை வேள் ஆளர் (வேளாளர்) என்று வலியுறுத்தியதை மேலும் சிந்தித்தால், "வேளாண்மை செய்தன கண்கள்", "வேளாண் வாயில் வேட்பக் கூறி'', ''வேளாண் வாயில்'', ''வேளாண் சிறுபதம்" போன்ற சொற்கள் இலக்கியத்தில் எடுத்தாளப்படுகின்றன. வள்ளுவர் தம் குறளில் வேளாண்மை என்ற சொல் வேளாளர் பற்றி யூகிக்க இடமளிக்கிறது. எனினும் மண் பற்றிப் பொருள் கொள்ளவில்லை. பாரதிய நிகண்டு என்ற நிகண்டு வேளாண்மைக்கு இரண்டு பொருள்களைச் சொல்கிறது. உபசாரம், மெய் உபசாரம் என்று

உணர்த்துகிறது. இதன் பொருளை அறிஞர்கள் உற்று நோக்கி ஆய்ந்திட வேண்டும்.

"வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" என்று தொல்காப்பியர் மரபியல் சூத்திரத்தில் சொல்லி இருப்பதையும் வேந்தரைப் போன்று வேளிருக்கும் ஆட்சி உரிமை என்ற அரசு உரித்து என்று சொல்லியிருப்பதையும் ஒப்பிட வேண்டும். அம்பர்கிழானைக் கழனி உழவன் என்று குறிப்பிட்ட நிலை ஏற்புடையதல்ல.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னன் சடையன் மாறனின்கீழ் அதிகாரியாகப் பணிபுரிந்த பராந்தகப் பள்ளி வேளாயின நக்கன் புள்ளன் பற்றித் தெரிவித்து இவனை வேளாளன் என்கிறார். இராசசிம்ம பாண்டியனுக்குப் பெரும் காக்கூர் கோன் கணக்கனாக இருந்தான் (சின்னமனூர் பெரிய சாசனம்) என்று குறிப்பிட்டு மூவேந்த வேளான் பட்டமிட்டவர்கள் வேளாளர் என்பதில் ஐயமில்லை என்று ஒருதலை முடிவு கொள்கிறார்.

'வேளிர் வேளாளரா?' என்ற தலைப்பில் கட்டுரை எழுதிய நெல்லை நெடுமாறன் - சீ. இராமச்சந்திரன் ஆகியோர் தம் ஆய்வில் பல சாதியினர் வேளான் என்ற பட்டம் தரித்துள்ளனர் என்று பட்டியலிட்டுள்ளனர். வேளாளனான வேளான், வேட்டுவ வேளான், ஊர் பிராமணனான வேளான், மறவனான வேளான், வணிக வேளான், தச்சனான வேளான், வேட்கோவனான வேளான், பூலுவனான வேளான், சேதிராயபன்மனான வேளான், தொண்டமான் வேளான் என்று சாதியைக் குறித்து அழுத்தம் திருத்தமாகப் பலர் குறிப்பிடப்பட்டாலும் வேளான், மூவேந்த வேளான் என்று மட்டும் சொல்லப்படுபவர் வேளிர் இனத்தவர் என்ற பொருளில் உணர்த்தியுள்ளனர். பண்டு வேளிர் ஓர் அரச குடியோடு அடையாளம் காட்டப் பெறும் அரச குலத்தவர் அவரை வேளாளர் என்பது ஏற்புடையது ஆகுமா?

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் அமைந்த வேளாளர் செப்பேடு தங்கள் உரிமைத் தலைவர்கள் பட்டியலைத் தருகிறது. வேளிர் என்ற சங்க காலத் தலைவர்களுக்கு அவர்கள் உரிமை கோரவில்லை. மூவேந்தரைச் சிறை செய்து தமிழ் பாட வைத்தோம் என்று கிண்டல், கேலி செய்துள்ளனர். சிதம்பரம் பட்டயத்தில் வேளாண் சீலர்கள் பலரைக் கூறும் வேளாளர்கள் வேளிர் பலரையும் உரிமை பாராட்டிக் கூறியுள்ளனரா? கல்வெட்டுகள் பலவற்றிலும் மூவேந்த வேளார் என்போர் சிலர் சந்திரகுலம், சூரிய குலம்,

மனுக்குலம், அரசகுலம் என்று தங்களைக் குறிப்பிட்டுள்ளனரே இவரெல்லாம் வேளாளரா?

நான்காம் வருணத்தவர்

வேத மொழிகளில் பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர் என கி.மு. முதலாம் நூற்றாண்டிலேயே சமூகக் கட்டமைப்பு தோற்றம் பெற்றுவிட்டது. தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்று ஒழுங்குப்படுத்தியுள்ள சமூக அமைப்பில் சூத்திரராகிய வேளாளர் நாலாம் குலத்தவர் என்று அங்கீகரிக்கப்பட்ட வேளாண் குடியினர் ஆவர்.

வடமொழியிலும் தென்மொழியான தமிழிலும் வேதம் ஓதும் உரிமை மேலோர் மூவருக்குமே; ஓதுவித்தல் உரிமை அந்தணராகிய பார்ப்பனருக்கு மட்டுமே; வேளாளராகிய சூத்திரர் வேதம் ஓதத் தடைசெய்யப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அனைத்துத் தமிழ் நூல்களிலும் இது காணப்பெறுகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். நாலாம் குலத்தவராக இருக்கும் வேளாளர் என்ற சூத்திரர் தலைமையாளர் எனில் நாலாம் குலத்தவரை வேதங்களும் இறையனார் அகப்பொருளும் தொல்காப்பியமும் புறப்பொருள் வெண்பாமாலையும் நம்பியகப் பொருள் போன்ற தொடர்ச்சிபெற்ற நூல்களும் எவ்வாறு முதன்மைப்படுத்தும்? வேள்வி மறுக்கப்பட்டுத் திருமண முறைமை கூட முற்பட்டு மறுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் வேளாளர் எவ்வாறு அரச அமைப்பின் தலைவராகத் திகழ முடியும்.

தொல்காப்பியக் கற்பியல் நூற்பா "மேலோர்மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" என்று குறித்திருப்பதில் கீழோர் என்று அடையாளப்படுத்தப்பட்ட சமூகம் பற்றி அறிந்து அவரைத் தலைமையுடையார் என்று எண்ணித் துணியலாமா? தலைமையுடையவரைத் 'தலைமக்கள்' என்று இலக்கியத்தில் உணர்கின்றோம். சங்க இலக்கியத்திலேயே வேளாளர் என்ற சொல்லே இல்லாத நிலையில் சங்கம் மருவிய காலப் பரிபாடல் உரையில்,

> உழுவதற்குப் பயன்படுத்திய மாட்டினை வண்டியில்
> பூட்டி ஓடவிடும் கடன் வேளாளருக்குப் படர்த்தி இல்லை

என்று பதிவு செய்யப்பட்டுள்ளது இவ்வாறிருக்கையில் தேரும் யானையும் குதிரையும் உடையவர் என்று வேளிரோடு வேளாளரைப் பொருத்திக் காட்டி வரலாறு எழுத முடியுமா? புறநானூறு 202ஆம் பாடலைப் பாடிய கபிலரால், "இயல்தேர் அண்ணல் எவ்வி தொல்குடி" என்று சிறப்பிக்கப்பட்டவன் மன்னரின்குடி அன்றோ!

வேளாளர் பணிமக்கள் என்று வேதங்களும் இறையனார் அகப்பொருளும் தொல்காப்பியமும் எடுத்துக் கூறுகின்றன. வேளாளரை இறையனார் அகப்பொருள் சூத்திரம் 'இழிந்தோர்' என்று அல்லவா அடையாளம் காட்டுகிறது. காலத்தால் மேம்பட்டு உயர்ந்தாலும் தங்களைப் பணிமக்களின் தலைவர் என்றே அடையாளம் காட்டியுள்ளார்களே தவிரத் தாங்கள்தாம் தலைவர் என்று வேளாளரைக் கூறிய நூல்கள் யாதேனும் உண்டா?

அந்தணருக்கு அடுத்த இடத்தில் இடம்பிடித்துக் கொண்ட அரசர் என்பார் பட்டியலிலேயே வேளிர் சுட்டிக்காட்டப்படு கின்றனர். வேள்வி தொடர்பான, ஒளி தொடர்பான, நாடு தொடர்பான பட்டியலில் வேந்தர், வேளிர், அரசர், மன்னர் என்னும் சொற்கள் தொடர்புடையன மட்டுமின்றித் தலைமக்களாகவும் இலக்கியங்கள் இவர்களைக் குறித்துள்ளன. வேதத்திலும் இலக்கண நூல்களிலும் குறிப்பிடப்படும் தலைவர், தலைமக்கள் மரபினரான தலைமக்களுக்கும் பணிமக்களுக்கும் இருக்கும் வேறுபாடுகளை உணராது முடிவு கொள்வது சிறந்த ஆய்வாக இருக்க முடியாது.

சிறப்பும் செழிப்பும் வேளாளரை வந்தடைந்த பிறகும் பணிமக்களின் தலைவராகத் தங்களைச் சித்திரித்துக் கொண்டனரே அன்றி ஆட்சிக்குடி அரசர் என்று அடையாளம் காட்டிக்கொள்ளவில்லை. கல்வெட்டுகளில் கோயில் அடிமைகளாக, பணி மக்களாகிய அடிமைகளாக மிகவும் அதிகமான எண்ணிக்கையில் இடம்பிடித்துள்ளவர்கள் வேளாளர்களே. மேலோர் மூவருக்கும் ஏவின ஊழியம் செய்ய வேண்டும் என்று பதிவு செய்யப்பட்ட மரபினரில் ஓர் கிளை உயர்வு பெறத் தொடங்கி 'உழுவித்து உண்போர்' என்று அடையாளம் காட்டப்பெற்றதால் அவர்களை ஆட்சிக்குடி என்று

காட்ட முடியுமா? இவ்வாறு உயர்ந்தவர்கள் வேளாண்குடித் தலைவர் அல்லது வேளாண்குடி முதல்வர் என்றுதான் சொல்லியுள்ளரே அன்றி அரசர்க்கு அரசர் என்று சொல்லவில்லை.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் மன்னார்குடியில் அமைந்த மூன்றாம் இராசராச சோழனின் கல்வெட்டில், "பெருங்குடிகளின் பேரால் வேளாளரைச் சிறைசெய்யக் கூடாது" என்ற வேண்டுதலின் பொருளை உணர்ந்தால் பெருங்குடிகளின் பட்டியலில் வேளாளர்க்கு இடமில்லை என்பது உறுதியாகிறது.

கி.பி. 1274இல் அமைந்த அவிநாசிக் கல்வெட்டு இராசகேசரி ஸ்ரீ வீரபாண்டியனுக்குரியதாகும். ''வேளாளருக்கும் ஸ்ரீலுவருக்கும் சிலகுடிகள் நாட்டார் என்ற அடை மொழியைத் தரித்துக்கொள்ள ஆணையிட்ட நிலையில் வேளிர் குடி என்றோ (வேளான்குடி) எழுகுடி என்றோ சொல்லக்கூடாது" என்று உத்தரவு பிறப்பித்துள்ளான். இதனாலும் வேளாளர் வேளிர் அல்லர் என்று புலனாகும் (தெ.இ.கல். 26:196)

அரச மரபினரின் பட்டங்கள்

> இன்னாட்டு பாம்பணிக் கூற்றத்து
> கூடலூர்கிழவன் ஆச்சன் வெண்நாடன்
> நேரியன் மூவேந்த வேளானும்

திருவிந்தளூர்ச் செப்பேடுகள் வரி 13, பக். 176
(தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறைப் பதிப்பு)

இச்செப்பேட்டில் கிழவன் நாடன் நேரியன் மூவேந்த வேளான் அரச மரபினன் ஆவான்.

செங்கோல் சிற்றரசன்

போர்க்களத்தில் எவ்வி பொருது வீழ்ந்த எழினியை அரிசில்கிழார் பாடிய பாடலில்,

> விலங்குபகை கடிந்த கலங்காச் செங்கோல்
> வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாட்
> பொய்யா வெழினி பொருதுகளஞ் சேர **(புறம். 230)**

என்று குறிப்பிடுவதால்,

பகையைத் துரந்த நிலங்கலங்காத செவ்விய ஆட்சியினையும் உலகத்தார் புகழ்ந்த விளங்கிய போரைச் செய்யும் ஒள்ளிய

வாளினையும் தப்பாத மொழியினையுமுடைய எழினி
பொருது களத்தின் கண்ணே வீழ

என்பதால் செங்கோலாட்சியுடைய சிற்றரசன் எழினி ஆவான் எனத் தெரிகிறது.

திருவள்ளுவ நாயனார் 'குடிமை' என்ற தலைப்பில் 'குடிப்பிறந்தார்' பற்றிக் குறிப்பிட்டுள்ளார். (குடிமை 96)

ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந்தார் (குறள் 952)

என்றும்

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர் (குறள் 954)

என்றும் குறித்துள்ளார். குடிப்பிறப்புப் பற்றிக் குறளில் கூறிய திருவள்ளுவர் குடிப்பிறந்தாரைப் 'பழங்குடி' என்று (குறள் 955) கூறி, தொல்குடியின் பெருமையை விவரித்துள்ளார். பரிமேலழகர் தம் உரையில் 'பழங்குடி' என்பதற்குத் தொன்று தொட்டு வருகின்ற குடியின்கண் பிறந்தார் என்று பொருளுரைத்து விளக்கம் தந்தவிடத்து, "சேர, சோழ, பாண்டியர் என்றார் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" என்கிறார்.

வள்ளுவம், 'குலத்திற் பிறந்தார்' என்பதால் குடி என்பது குலம் என்றும் பொருள்படக் கூடும் (குறள் 959). இக் குறளடிக்கு உரை செய்த பரிமேலழகர், 'குலத்தியல்பு' என்று விளக்கமிடுகிறார். குடிமையின் தொடர்ச்சியில் மானம், பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நன்றியில் செல்வம், நாணுடைமை, குடி செயல் வகை என்று பலவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக மேலும் விரிவாகச் சொல்லியுள்ளார்.

நாலடியார் குடிப்பிறப்பு (அதிகாரம் 15),

சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவை மூன்றும்
வான்தோய் குடிப்பிறந் தார்க்கு (நாலடி. 142)

என்று குடிப்பிறந்தார் பற்றிக் கூறுகிறது. மேலும்,

குடிப்பிறந்தார் குன்றா ஒழுக்கம் (நாலடி. 143)

என்று குறித்ததோடு குடிப்பிறந்தார்க்கு அந்நூல் இலக்கணம் செய்துள்ளது. நல்ல குடிப்பிறந்தார் மேன்மக்கள் எனத்

"தொல்வழிக் கேண்மை பிறந்த சான்றவர்" என்கிறது. மேன்மக்கள் இருந்தது போன்று கீழ்மக்களும் இருந்தார்கள் என்றும் நாலடி நானூறு வலியுறுத்துகிறது. மேன்மக்களை மூத்த குடி என்று சங்க நூல்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. படைப்புக் காலம் தொட்டு மேம்பட்ட மேன்மக்கள் சேர, சோழ, பாண்டியர் மரபு மேம்பட்டது என்பது உணராமல், ஒப்பிட்டு நோக்காமல் மு. இராகவையங்கார் வேளிர் வரலாற்றில் வடபுல அறிஞர் சிலர் கூறிய சில குறிப்பினை எடுத்துக்கொண்டு தமிழக மன்னர்குடியைத் தாழ்த்தியுள்ளார். விழுக்குடிச் சிறப்பு என்பதே குடிப்பிறந்தாரைக் கூறும் நிலையாகும்.

வேள் வேந்தர் மண உறவுகள்

திணை என்பது குடி என்றும் பொருள்படும். அறிஞர் பெருந்தகை உ.வே.சா.வும் திணை என்பது குடியைக் குறிக்கும் என்று புறநானூறு உரையில் குறிப்பிட்டுள்ளார். குடி, குடிமை தொடர்பில் திணை என்று சங்க கால நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆட்சிக் குடியாகத் தமிழகத்தில் அங்கீகாரம் பெற்றிருந்த வேளிரும் வேந்தரும் திணை என்ற குடிப்பிறந்தாராவர். இக்குடிகளுக்குள்ள மணவுறவு தெளிவாக அறியப்படுவதுடன் தெளிவாக இருபாலரும் மகள் கொண்டும் கொடுத்தும் வாழ்ந்த குடிப்பிறந்தார் ஆவர்.

கரிகாற் பெருவளத்தான் வேந்தன் எனினும் இவனது தாய் சோழப் பெருந்தேவி என்று அடையாளம் காட்டப்பட்டு, தாயின் வயிற்றிலே இருந்து உரிமை எய்தினன் என்று இலக்கியங்களில் குறிப்புகள் காணப்பெறுகின்றன. தாயின் வயிற்றிலே கருவாக இருந்தபோழ்தே உரிமை எய்தியவன் அரச குலத்தவன் என்பதால் கரிகாலன் தாய் அரச மரபினள் என்று பெறப்படும். சோழன் கரிகாலனின் தாய் வேளிர் குடியிலே தோன்றியவள் என்பதும் கரிகாலனின் திருமகள் ஆதிமந்தி சேரர் குடியின் தொடர்புடைய வேளிர் குடியில் தோன்றிய ஆட்டன்அத்தியை மணஞ் செய்விக்கப்பட்டவள் என்பதும் அகப்பாடல்களில் தெளிவாக இடம்பெற்றுள்ள குறிப்புகள் ஆகும்.

திருக்கோயிலூர் மன்னன் தெய்வீகன் என்பான் சேர, சோழ, பாண்டியர்களின் திருப்புதல்விகளை மணம் கொண்டவன் என்பதோடு பிற பெண்களையும் கொண்டு வாழ்ந்தான் என்று

குறிப்புகள் உள்ளன. கொடும்பாளூர் வேளிர்கள் மணவுறவு, கொங்கு நாடு ஆண்ட கோனாடர் எனும் வேளிர் மணவுறவு என்பதோடு வேந்தரின் திருமண உறவு கொள்ள, கொடுக்கல் என்ற நிலை தொன்றுதொட்டு உறுதி செய்யப்பட்ட மணவுறவாகக் காணப் பெறுகிறது.

சேரவேந்தர் என்று அடையாளம் சொல்லிக் கொண்ட வேந்தர்கள் வேளிர் குடியொடு உறுதியான மணவுறவு கொண்டவர்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை ஆசிரியர் குமட்டூர்க் கண்ணனார் பாடிய பதிற்றுப்பத்து (2ம் பத்துப் பதிகம்)

> இன்னிசை முரசின் உதியஞ் சேரற்கு
> வெளியன் வேண்மாள் நல்லினி ஈன்றமகன்

என்று குறிப்பிடுகிறது. வெளியன் என்ற சொல் ஒளியன் என்ற பொருளுடையது. வேண்மாள் என்ற சொல் வேள்மகள் என்ற சிறப்பிற்குரிய அரச மரபிலே தோன்றியவளைக் குறிக்கும். இம்மகளுக்குப் பிறந்த மகன் சேரமானாக நல்லாட்சி நடத்திய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஆவான். இவனது உடன்பிறந்த தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனும் இருபத்தையாண்டு ஆட்சி செய்தான் என்று (பதிற்றுப்பத்து, மூன்றாம் பத்துப் பதிகம் கூறுகிறது. சேரர் குடியை விவரித்த குமட்டூர்க் கண்ணனார்,

> எழுமுடி கெழீஇய திருஞெம ரகலத்து
> நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை

ஏழு அரசர்களை வென்று அவர்தம் பொன்னாலான மணிமுடிகளை வென்று கைக்கொண்டு ஆரமாக அணிந்து கொண்ட மரபினர் என்கிறார்.

எழுமுடிகளை வென்றவர் என்ற சிறப்புக்குப் பெருமையுடையவர் சேரர் ஆவர். இரு வேந்தர்கள் எனச் சோழன், பாண்டியன் முடிகளோடு வேளிர் ஐவரும் ஆக எழு முடியுடைய அரச மரபு தெளிவாகிறது.

தொன்றுதொட்டு மணவுறவுடைய வேளிர், வேந்தர் குடிக்குரிய சிறப்பை உணர்ந்த குமட்டூர்க் கண்ணனார்,

> முன்திணை முதல்வர் போல நின்று நீ (பதிற்றுப்பத்து 14)

என்று உயர்வாகவே சுட்டிக் காட்டுகின்றார்.

"விளங்குகின்ற மணிகள் செறிந்த பொன்னாற் செய்யப்பட்ட அணிகலன்களைப் பூண்டு அரசியலாகிய

ஆணையைச் செலுத்திக் கடல் சூழ்ந்த நிலவுலகத்தே இத்தமிழகத்தை முழுதும் ஆண்ட நின் குலத்து முன்னோர்களைப் போல நீயும் அழியாத நல்ல புகழை நிறுவி நீ மெலிவின்றி வாழ்வாயாக"

(பதிற்றுப்பத்து 14) என இதன் பழைய உரை கூறுகிறது.

'முன் திணை முதல்வர்' என்ற தொடர் உயர்குடியாகிய வேளிர் வேந்தர் மணவுறவால் ஏற்பட்ட மரபுக்கு ஏற்பட்ட பெருமைமிக்க தொடராகும். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் தேவியரில் ஒருவர் பெயர் பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனார் பாடிய *(பதிற்றுப்பத்தின்)* நான்காம் பதித்துப்பதிகம்,

ஆராத் திருவின் சேரலா தற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் தேவி ஈன்ற மகன்

என்று முடிசூடி ஆட்சி செய்யத் தகுதியுடைய வேளிர் வேந்தர் மணவுறவுடைய குடியிலே தோன்றிய "நெடுஞ்சேரலாதலின் மூத்த புதல்வன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் இருபத்தை யாண்டு ஆட்சி செய்தான்" என்று விவரித்துள்ளது.

துளங்குகுடி விழுத்திணை திருத்தி முரசுகொண்
டாண்கட னிறுத்தநின் பூண்கிளர் வியன்மார்பு

(பதிற்றுப்பத்து 31)

இவ்வடிகளுக்கான பழைய உரை:

தன்குடிப்போர் வீரர்களை வருத்தமுற்று நல்லொழுக்கம் நீங்கப் போகாது விழுத்திணைக் குடியென அவரை நிலவப்பண்ணிப் பகை மன்னர்களை வென்று அவர் முரசுகளைக் கைக்கொண்டு வீரர்களுக்கு ஆற்றிய கடன் செய்து

என்பதே பொருள்படும். 'ஆண் கடன்' என்பது குடிமக்களைக் குறிப்பிடாது போர்க்குடியினரைக் குறிப்பிடும் என்பது திண்ணம்.

புறநானூற்றுப் பாடல்களில் 286, 291 வேத்தியல் மரபு வீரர்கள் பற்றிப் பாடியிருப்பதை இதனுடன் ஒப்பிடலாம்.

பரணர் பாடிய பதிற்றுப்பத்து ஐந்தாம்பத்தின் பதிகம்,

வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமா னெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக் கிள்ளி யீன்ற மகன்

என்று கடல்பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனைக் குறிப்பிடுகிறது.

சேரன் செங்குட்டுவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் புதல்வர்களில் ஒருவன் என்பதும் அவனது தாய் சோழர்குடியில் தோன்றியவள் என்றும் தெளிவாகத் தெரிகின்றன. அவன் முடிசூடி அரசுக் கட்டில் ஏறியது சேரன் நார்முடிச் சேரலுக்குப் பின்னர் என்று அறியப்பட்டுள்ளது.

பதிற்றுப்பத்து ஆறாம் பத்து காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் மீது பாடியது ஆகும். இதன் பதிகம்,

குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி ஈன்றமகன்

என்று வேளிர் வேந்தர் மணவுறவை எடுத்துக்கூறுகிறது.

பதிற்றுப்பத்தில் கபிலர் பாடிய ஏழாம் பத்தின் பதிகம் அந்துவன் சேரலும் பொறையன் பெருந்தேவியும் ஈன்ற மகன் சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்பதால் சேரர் குடிக்குள்ளும் சிலர் மணவுறவு கொண்டதாகப் பெறப்படும்.

அரிசில் கிழார் பாடிய பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் பதிகம்,

பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்றமகன்

என்று பெருஞ்சேரலிரும்பொறையைக் குறிக்கிறது.

சேரர் குடி, வேளிர் மன்னர்குடி இரண்டுக்குமுள்ள மணவுறவு பதிற்றுப்பத்துப் பதிகங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புடைய தாய உரிமை உடைய குடியிலே தோன்றிய மரபினரை முன்திணை முதல்வர் குடியென்று அரிசில் கிழார் வலியுறுத்தியுள்ளார்.

காவ லெதிரார் கறுத்தோர் நாடு நின்
முன்திணை முதல்வர்க் கோம்பின ருரைத்து
மன்பதை காப்ப அறிவு வலியுறுத்து
நன்றறி யுள்ளத்துச் சான்றோ ரன்னநின் (பதிற்றுப்பத்து 72)

என்பதில் 'முன்திணை முதல்வர்' என்ற குடிமைக்குரிய குடி தெளிவாகத் தெரியவரும். அக்குடியையும் அக்குடிக்குரியவரையும் விளக்கமாகக் கூறுவதாகும். பதிற்றுப்பத்திற்கான ஒளவை துரைசாமியாரின் உரை முழுதும் உற்று நோக்கப்பட வேண்டும்.

பெருங்குன்றூர் கிழார் பாடிய பதிற்றுப்பத்துக்குரிய ஒன்பதாம் பத்துப் பதிகம்,

குட்டுவ னிரும் பொறைக்கு மையூர் கிழான்
வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஈன்றமகன்

என்றும்

ஆய்ந்த மரபின் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசை முரசின் இளஞ்சேரல் இரும்பொறை

என்றும் குறித்துள்ளது.

முறையான திருமண முறைமையுடைய வேந்தர், வேளிர் மணவுறவில் தோன்றிய சேரர் குடிக்குரியோன் இளஞ்சேரலிரும் பொறை ஆவான். மையூர்கிழான் வேண்மாள் (வேள்மாள்) அந்துவஞ் செள்ளை என்போர் சேரர் குடியின் மற்றொரு பிரிவினர் ஆவர்.

மெய்யூர் அமைச்சியன் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி

என்பதால் மையூர்கிழான் சேரர் குடியினன் ஆவான். மெய்யூர் அமைச்சன் என்பது ஆட்சி பற்றி வந்த பெயர் ஆகும். தொல்காப்பியப் பொருளதிகார உரையில் இளம்பூரணர் கிழவர் என்போர் யாவர் என்றும் ஆட்சி பற்றி வரும் கிழவர் குறும்பொறை நாடன் என்றும் விளக்கம் தருகிறார்.

2. வேளிர் வேளாளர் வேறுபாடுகள்

வேளிர் விவசாயத்திலும் நிலவருவாய் நிருவாகத்திலும் செலுத்திய கவனம்தான் அவர்களை வேளாளரிலிருந்து வேறுபடுத்திற்று. நீரைத் தேக்கி, முறைப்படி பாசனம் செய்து, கலப்பை அல்லது நாஞ்சிலைக் (சமஸ்: 'லாங்கல') கொண்டு நிலத்தில் பயிரிடுவது ஆகியன வேளிர் குலத்தவரால் அறிமுகப்படுத்தப் பட்டவை.[1] உற்பத்திச் சக்திகளை ஒழுங்கமைத்து, கூடவே நிருவகித்தவர்கள் வேளிர்களாவர். வேள்வி என்ற சொல்லும்கூட, பின்னாளில் 'ஏர்க்கால்வேள்வி' என்று பயன்படுத்தப்பட்டு, உற்பத்தி என்ற பொருளைப் பெற்றது.[2]

நாடு என்கிற நிருவாகம் அல்லது அரசியல் - புவியியல் அலகுகள் வேளிர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நிருவகிக்கப்பட்டன.[3] இதுவே தமிழகத் தொல்குடியின் நாட்டார் அமைப்பாகும்.

நாடும் வேளிரும்

நாடன் என்ற சொல், வேளிர்க்கான ஓர் அடைமொழியாகச் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.[4] இது, நில நிருவாகம் விவசாயத்தையும் நில வருவாய் நிருவாகத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததைக் காட்டுகிறது. எனினும், அக்காலத்தில் அரசு என்பது முறையான அதிகார வர்க்கத்துடன் நன்கு நிறுவப்பட்டதாக இருக்கவில்லை என்பதை நினைவிற்

---

1. எஸ். இராமச்சந்திரன், ''சங்க கால உற்பத்திக்' கருவிகள்,'' ஆய்வுவட்டக் கட்டுரைகள் தொகுதி 1,3,997, சென்னை.
2. மேலது.
3. புறநானூறு 24: 18–22, 117:3.
4. மேலது.

கொள்ள வேண்டும். அது வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்பதால், நிருவாக அமைப்பு என்பது யதுகுலத்தின் விருஷ்ணிகள் போன்ற குடியுரிமைக் கூட்டத்திடம் அல்லது கணங்களிடம் வைத்துக் கொள்ளப்பட்டது. புத்தர் (கி.மு. 5ஆம் நூற்றாண்டு) பிறந்த லிச்சாவிக் கணத்தை வேளிர்களுடன் ஒப்பிடலாம்.[5] சித்தார்த்தரின் தந்தையான சுத்தோதனருங்கூட, நிலத்தை உழுவதில் சிறந்த தேர்ச்சியுடைய ஒருவர் என்று சொல்கிறார் டி.டி.கோசாம்பி.[6]

வேள்குலம் மற்றும் வேளாளர் குலத்தின் சகவாழ்வு

களப்பிரர் காலத்தில் தமிழ்ச்சமூகம் பெரும் மாறுதல்களுக்கு உள்ளானது. திருமணம் மற்றும் குடும்பம் போன்ற நிறுவனங்களைச் சீர்திருத்துகின்ற முயற்சியில், மணச்சடங்குக்கு அப்பாற்பட்டுப் பிறந்த வேளாளர்களுக்கும்கூடச் சமூகத்தில் சில தகுதிகள் வழங்கப்பட்டதுடன், அவர்களிடத்திலும் திருமணம் என்ற அமைப்பு, அக்கால ஆட்சிக் குடியினரால் அறிமுகப்பட்டது. "கலியுகக்" களப்பிரர் வேளாண்மை (பயிர்த்தொழில்) நன்கறிந்த வேளாளர் ஆவார்.

முற்காலத்தில் திருமணச் சடங்குகள் முதல் மூன்று உயர் வருணத்தவர்களுக்கு (அதாவது அந்தணர், அரசர், வணிகர்) மட்டுமே செய்யப்பட்டன என்றும், படிப்படியாக அவை வேளாளர்களிடத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டன[7] என்றும் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

> இல்லிருந்து செந்தீயோம்பல் வேளாளர்க்கு
> இன்மையிற் கொண்டு தலைகழிதலவர்க்கு உரித்தாயிற்று
> (தொல். பொருள் நச்:உரை) (நூற்பா 15)

சமணமும் பௌத்தமும் அமைதியான வாழ்க்கைத் தொழில்களை விரும்பியதனால், வைசியர்களும் சூத்திரர்களும் அம்மதங்களால் ஆதரவளிக்கப் பட்டனர். சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பெருங்கதை போன்ற காவியங்கள் இக்காலத்திற்குரியவை என்பதுடன் மாறியிருந்த சூழல்கள் குறித்த விரிவான விளக்கத்தையும் அவை தருகின்றன.

---

5. டி.டி. கோசாம்பி, மொழிபெயர்ப்பு: இந்தியாவின் நாகரிகமும் பண்பாடும் அதன் மக்களும்.
6. மேலது.
7. தொல்காப்பியம் பொருளதிகாரம், கற்பியல், நச்சினார்க்கினியருரை.

அரசியல் வானில், வடக்கே பல்லவர்களும் தெற்கே பாண்டியர்களும் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்தபோழ்து, அப்பொழுது நடப்பிலிருந்த சமூக - அரசியல் சூழலை அவர்கள் கணக்கில் கொள்ள வேண்டி இருந்தது. பல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் தங்களின் ஆணைகளுக்கு உள்ளூர் உழுகுடிகளின் ஏற்பைப் பெறுவதில் அக்கறை காட்டினர்.[8] சில வேளைகளில், முந்தைய நில உரிமையாளர்களான பிராமணர்கள் போன்றவர்களுக்குக் கொடையளிக்கப்பட்டுச் சூத்திரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலங்களைப் பாண்டிய அரசர்கள் தலையிட்டு மீட்டுத் தர வேண்டியிருந்தது.[9] அரசகுலத்தவர் நிலவுடைமையாளர் என்பதை மறந்தே வரலாறு எழுதியுள்ளனர்.

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசு அதன் நெடிய ஆட்சியைத் தொடங்கியபொழுது வேள்குலச் சாளுக்கியர்கள்[10] கருநாடகத்தையும் ஆய்வேளிர்கள் தமிழகத்தின் தென் கோடியையும் ஆட்சிபுரிந்து வந்தனர். இவ் வேள்குல அரசர்கள் க்ஷத்திரியர் களாகக் கருதப்பட்டனர். இந்த விவரத்தைச் சீனப் பயணி யுவான் சுவாங் குறித்து வைத்திருக்கிறார்.[11] ஒரு சாதிப் பின்னொட் டாக(குலப்பெயர்)ச் செம்பியன் தமிழவேள் என்ற பட்டம் விக்கியண்ணன் என்பவருக்குச் சூட்டப்பட்டதை ஆதித்த சோழனின் (கி.பி. 9ஆம் நூற்றாண்டு) கல்வெட்டு ஒன்று குறிப்பிடு கிறது.[12] இதைப் போலவே ஈழச் சான்றான் முந்நூற்றுவப் பெருமானாகிய சோழ வேள் ஏனாதி என்ற திருக்கண்ணபுரம் கல்வெட்டையும் இங்குக் குறிப்பிடலாம்.

அரசர்கள், தங்களுக்குத் துணை நின்ற சிற்றரசர்கள் அல்லது அரச குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேள் பட்டம் சூட்டிய வழக்கம் இருந்ததை இது நமக்குச் சுட்டுகிறது. பிற்காலத்தில் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) சோழ அரசன் மூன்றாவது இராசராசன், மாறவர்மன் சுந்தர பாண்டியனிடம் தனது தோல்வியை ஒப்புக் கொண்டு அவனுக்குக் கீழ்ப்பட்ட ஆட்சியாளனாக இருப்பதற்கு விருப்பம் தெரிவித்தான்; அந்தப் பாண்டிய அரசன் மூன்றாம் இராசராசனுக்கு 'மாவேள்' என்று பட்டஞ் சூட்டினான்.[13]

8. சிம்மவர்மனின் பள்ளங்கோயில் கொடை செப்புப்பட்டயம் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு), 'சாசன மாலை' பதிப்பாசிரியர் எஸ். இராஜம், சென்னை, 1960.
9. பாண்டியர் செப்பேடுகள் பத்து பக். 38, 135. *Epigraphica Indica*. Vo.XVIII, pp. 291-309.
10.. முதலாம் இராசராசனின் மெய்க்கீர்த்திகள்; 'முப்பது கல்வெட்டுகள்' 1992; பார்க்க: சேந்தன் திவாகரம் (நிகண்டு).
12. Huen Tsang, pub: Asian Educational Services, Chennai.
13. S.I.I., Vol.III Part III, No.89.

இத்தகைய சம்பவங்கள், க்ஷத்திரியர்களுக்கே சிறப்புரிமையுடைய 'வேள்' பட்டம் பயன்படுத்தப்பட்டதைக் காட்டுகின்றன.[14]

யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பாடல் (62) தேர் அரசர்களைச் சத்திரியர் என்று விவரிக்கிறது.

சோழ ஆட்சியில் ஓர் அமைச்சராக இருந்த வேளாளரான சேக்கிழார், வேளிர் குலத்தை அரச குலத்தின் ஓர் அங்கமாகக் குறிப்பிடுவதுடன், அதை வேளாளர் சாதியிலிருந்து வேறுபடுத்தியும் காட்டுகிறார். வேளாளர் சாதி என்பது வேளாண் குடி, சூத்திர நற்குலம் மற்றும் நாலாங்குலம் (நான்காவது வருணம்) என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.[15]

வேள் பட்டமும் வேளான் பட்டமும் ஒன்றே

பிற்காலச் சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் (கி.பி. 10 முதல் கி.பி. 14ஆம் நூற்றாண்டுகள்) காலத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளில், அதிகாரிகள் பலருக்கும் 'மூவேந்த வேளான்' என்ற பட்டம் அவர்களின் பெயருடன் சேர்ந்திருப்பதைக் காண்கிறோம். இதை ஆய்வு செய்த சில அறிஞர்கள் மூவேந்த வேளான் என்ற பதவியில் வேளாளர்களும் இருந்தனர் என்பதாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தப் பதவி, நிலவருவாய் நிருவாகத்துடன் தொடர்புடையது என்பது உண்மையாகவே தெரிகிறது. சோழப் பேரரசுக்கு முற்பட்டுப் பாண்டியப் பேரரசர்களின் கல்வெட்டுகளிலும் ''வேளான்'' என்ற அடைமொழியை பெற்றிருந்த அதிகாரிகள் பற்றித் தெரிய வருகிறது.

முதலாம் இராசேந்திர சோழனின் ஆட்சியாண்டு 22க்குரிய கி.பி. 1034இல் அமைந்த பாப்பாரப்பட்டிக் கல்வெட்டு (தருமபுரி) (தொடர் எண் 36/1973 கிருஷ்ணகிரி தொகுதி)

> நிகரிலி சோழமண்டலத்துத் தகடூர் நாட்டுக் காமுண்டன் வேள் கலியன் சோழன் வீமனான மதுராந்தக வேளான் இடுவித்த கல்த்தூம்பு

---

14. மாறவர்மன் சுந்தர பாண்டியனின் மெய்க்கீர்த்தி.

15. பாண்டிய அரசர்களும்கூட அவர்களின் அதிகாரம் தேய்ந்துவந்த காலத்தில் வேள் என்று அழைக்கப்பட்டனர். தென்காசிப் பாண்டிய அரசனான சீவலமாறன் (கி.பி. 16ஆம் நூற்றாண்டு), சீவல வேள் எனப்பட்டான் . காண்க: 'சீவலமாறன் கதை'. உ.வே.சா. நூலகம், 1982, சென்னை. கி.பி. 1552 மற்றும் 1564ஆம் ஆண்டுகளைச் சேர்ந்த கல்வெட்டுகளில் அப்போதைய பாண்டிய அரசர்களின் பெயர்கள் 'வேள்' என்ற பட்டத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளன. S.I.I., Vol.XXVI, No.538 - 39.

என்பதால் வேளிர் இனத்தவரே வேளான் ஆவர் என்று உணர்தற்குரியதாகும்.

வேளிரின் பட்டமான வேளான் என்ற குல அடைமொழியே மூவேந்த வேளான் என்று மூவேந்தர்குடி தொடர்பிலே அழைத்தார்கள். கி.பி. 1000இல் அமைந்த திருச்சோற்றுத்துறை கல்வெட்டு (தெ.இ.கல் 5:621) புறக்கிளியூர் நாட்டுப் புன்கன்னூர் கிழவன் வேளான் கண்டனான வகையிலி மூவேந்த வேளான் பற்றித் தெரிவிக்கிறது. இவன் மரபினர் வேறு கல்வெட்டுகளில் (பாபநாசம் தொகுதி) ஏனாதிக் கிழவன் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏனாதி அரையர் வேள்குல அரசமரபினர் ஆவார்கள். போர்க்கலை மரபினரான இவர்கள் பெயரால் வேள் நங்கக்காரன் அணை என்று இருந்ததைச் சிவாடி (தருமபுரி) கல்வெட்டு குறிப்பிடுகிறது. (கிருஷ்ணகிரித் தொகுதி, பக். 203-204) வேள்குலத்தவர் போர்க்கலை மரபினர் என்றும் (அங்கக்காரன்) புலனாகிறது.

சிறுகுன்ற நாட்டுக் காரிகைக்குளத்துக் கண்டன் மாதவன் போன்ற மண்டலம் ஆளுமை பெற்றுவிட்ட வேள்குலத்தவர் போன்று சோழரின் சேனாதிபதியான வேளான் பட்டம் பெற்றிருந்த கருணாகரத் தொண்டமான் சிறுகுடி வேளாளர் ஆவான்.

'மூவேந்த வேளான்' மற்றும் 'வேளான்' ஆகிய பட்டங்கள் நிலவருவாய் நிருவாகத்தில் ஈடுபட்டிருந்த அதிகாரிகளுக்குச் சூட்டப்பட்டன என்பதுதான் உண்மை. அடுத்தடுத்து வந்த சோழ அரசர்களின் ஆட்சியில் (கி.பி. 10 - கி.பி. 13ஆம் நூற்றாண்டுகள்) சமூகத்தின் வெவ்வேறு அடுக்கு மற்றும் வெவ்வேறு சாதியைச் சேர்ந்த அதிகாரிகளும் இப்பட்டத்தைப் பெற்று இருந்திருக்கலாம் என்பதுடன் இது பரந்த அடிப்படையில் அமைந்து, அனைத்து மக்களையும் உள்ளடக்கிய, சரியான ஒரு வருவாய் வலைப் பின்னலாக ஆயிற்று. உள்ளூர்வாசிகளின் திறமைகள் மற்றும் இயற்கையிலேயே அமைந்த புத்திக்கூர்மை ஆகியன கணக்கில் கொள்ளப்பட்டதுடன் மரபான தேர்ச்சியும் சோழ வருவாய் அமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டது. சோழப் பேரரசு அறிமுகப்படுத்திய இந்த அமைப்பைப் பிற்காலப் பாண்டிய அரசர்களும்கூடப் பின்பற்றினர். இந்த வாதத்திற்கு ஆதரவாகப் பின்வரும் சான்றுகளைக் குறிப்பிடலாம்.

அந்தணர் வேளான்[16] (பிராமணர்)
தில்லை மூவாயிர வேளான்[17](தில்லை மூவாயிரவர்)
நான்மறை வேளான் [18] (வேதங்களை நன்கு பயின்றவர்)
ஸ்ரீமூலஸ்தான வேளான்[19] (பூசை செய்பவர்)

இப்பெயர்கள் பிராமண சாதிக்குரியன. செம்பியன் வேதி வேளான் அரச மரபினன் என்று பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. வேள்வி தொடர்பான குடி வேளிர் என்பதற்கு இவன் சான்றாக, கல்வெட்டுகளில் காணப்பெறுகின்றது. அடியில் கண்டவர்கள் பல சாதியினர் ஆவர். இது அரச குலத்தவரும் உட்பட்ட பட்டியலாகும்.

கிழான் பாடி சான்றான் பழயனூர் வேளான் (140 / 1931)
இவ்வூராழ் சான்றான் முந்நூற்றுவ பெருமான்
சோழவேள் ஏனாதி (SII 13:65)

கரைய வேட்டுவரில் வேளான்[20] (மீனவர்)
தட்டான் வேளான் [21] (பொற்கொல்லர்)
வேட்கோவன் வேளான்[22] (குயவர்)
அகம்படி வேளான் [23] (அரண்மனைப் பணியாளர்)

---

16. பெரியபுராணம், இடங்கழி நாயனார்புராணம் – பாடல் 3. "அன்னகரத்தினி லிருக்கும் வேளிர்குல அரசாளிட்டு"; செருத்துணை நாயனார்புராணம் – பாடல் 2, "திருந்து வேளான்குடி முதல்வர்... செருத்துணையார்"; இளையாங்குடி மாற நாயனார் புராணம் – பாடல் 1, "சூத்திர நற்குலம்... இளையாங்குடிப்பதி மாறனார்"; ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் – பாடல் 207, "நாலாங்குலத்தில் பெருகுநலமுடையார்... வேளாண்மை மிக்க திருஞாயிறுக் கிழவர்" 'கொடும்பாளூர் குரிசில்கள்' என்னும் சொற்களைக் காண்க. S.I.I., Vol. VIII, No. 624.
17. திருவீழிமலை, S. No. 567-68/1977, நன்னிலம் தொகுதி, த.நா. தொல்லியல்துறை.
18. S.I.I., Vol. VIII, No. 43.
19. திருவீழிமலை X. No. 575/1977, நன்னிலம் தொகுதி, த.நா. தொல்லியல்துறை.
20. S.I.I., Vol. VII, No. 499.
21. S.I.I., Vol. XXII, Part, No. 198.
22. ஆவணம் இதழ் 3, புலவர் செ. இராசு, பக்.22.
23. எஸ். கிருஷ்ணமூர்த்தி, 'விக்கிரமசிங்கபுரம் உலா', பக். 93.
24. S.I.I., Vol.XIV, No. 233.

உகிரை வெள்ளாளர் வேளான்[25] (வேளாளர் சாதியில் ஒரு பிரிவு)
பல்லவரையர் வேளான்[26] (நானாதேசி வணிகர் அல்லது தேசிகர்)
அணுக்க வேளான் [27] (மெய்க்காப்பாளன்)
பிள்ளை வேளார் [28](வேளாளர்)
தேவரடியாரில் வேளான்[29] (பரத்தையர்)
எட்டி வேளான் [30] (வணிகர்)
வியாபாரியான வேளான் [31](வணிகர்)
சித்திரமேழி வேளான்[32] (சித்திரமேழி தொழிற்குழு)
அரையரில் வேளான் [33](உள்ளூர்த் தலைவன்)
தொண்டைமான் வேளான்[34] *(வேளாண்குடி)*
பூவாணிய வேட்டுவரில் வேளான்[35] *(வேட்டுவர்)*
வாணாதிராயன் வேளான் [36]*(அசுரகுல வீரக்குடி)*
அகம்படி முதலிகளில் வேளான்[37]
தென்னிலங்கை வலஞ்சியரில் வேளான்[38]
பனங்காடி குடியுடையார் வேளான்[39] *(சான்றார்)*
கொங்க வேளான்[40]
சேர வேளான் [41]
கோதுகுலவன் வேளான்[24] (அரச குலத்தவன்)

---

25. S.I.I., Vol.XXII, Part I no.239.
26. திருவிசையலூர், வரலாறு தொகுதி 5, 1995, பக். 9, நன்னிலம் தொகுதி 55/1977.
27. நன்னிலம் கல்வெட்டுகள், எண். 471.
28. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள்.
29. 'வரலாறு' இதழ் 3 அழுந்தூர்க் கல்வெட்டு, புதுக்கோட்டைக் கல்வெட்டுகள்.
30. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண். 312.
31. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண். 97.
32. 'சாசன மாலை' திருவஹிந்தரபுரம், கடலூர்.
33. நன்னிலம் கல்வெட்டுகள், தொகுதி 1, S.No.17/1977.
34. S.I.I., Vol.XVII, No.695; Vol. XXVI, No.320.
35. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், திருக்கோகர்ணம், ஆலங்குடி வட்டம், எஸ். இராமச்சந்திரன், முரம்பன் கல்வெட்டுகள், 'வரலாறு' இதழ் 5, 1995; S.I.I., Vol. V.No.466; நன்னிலம் கல்வெட்டுகள், எண். 26/1977.
36. S.I.I., Vol.IV, No. 862.
37. South Indian Temple Inscriptions, Vol. III, pp.666.
38. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண் 715.
39. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண் 338.
40. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண் 995.
41. S.I.I., Vol..XVI, No. 157.

குடிமக்களில் வேளான்[42] (பணி மக்களில் வேளான்)
சமய நாராயண வேளான்[43] *(சான்றார்)*
ஒற்றியரசர்களில் வேளான்[44] (திருவொற்றியூர் ஆட்சியாளர்)
வேளார்மகன் நாடாள்வான்[45] *(சான்றார்)*
வேட்டக்குடையன்... மூவேந்தவேளான்
பெருநற்கிள்ளி சோழ மூவேந்த வேளான் (திருவிந்தளூர் செப்பேடு)
கூடலூர் கிழவன் வெண்காட நாடன் நேரியன்
மூவேந்த வேளான் (திருவிந்தளூர் சான்றோர்)
நிருபவீர ராசேந்திர மூவேந்த வேளான் (SII 22 பகுதி 3; எண் 553)
வஞ்சி வேளாயின இரவி குலாவன் (தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள்)
சோணாடன் வீரநாராயண மூவேந்த வேளான் (விருதுநகர் மாவட்டத் தொகுதி)
ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்தவேளான் *(வேளிர்)*
நாடாள்வாரில் வேளான்[46] *(சான்றார்)*
ஆரியபுரோசன் வேளான்[47] *(வேளிர்)*
மணிக்கிராம வேளான்[48]
சேனாதிபதிகளில் வேளான்[49]
சேதிராய பன்மரில் வேளான்[50] *(கிராதர் வம்சத்தவர்)*
வெள்ளாளரில் வேளான்[51]
''வெள்ளாளன் நாற்பத்தெண்ணாயிர வேளான்'' (559/1902)
''கோமான் குடானாயின வீர நாராயண மூவேந்த வேளான்
(அரசமரபினன் (தெ.இ.கல். 4:508)

''புரவுவரி திணைக்கள நாயகம்
நிருபசிகாமணி மூவேந்த வேளார்'' (தெ.இ.கல். 17:301)
''பரந்தகப் பள்ளி வேளான்''
''பார் மன்னு குலதீபவேளார்'' (அரசமரபு)
''சத்திரிய சிங்க மூவேந்த வேளார்'' (அரசகுடி)
(தொல்லியல் நோக்கில் காஞ்சிபுரம் மாவட்டம்)

---

42. S.I.I., Vol., V, No. 281.
43. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண் 541.
44. S.I.I., Vol.VII,No. 788.
45.S.I.I., Vol.XXVI, No. 276.
46.S.I.I., Vol.XVII, Nos. 701, 708, 722, 725.
47. Epigraphica Carnatika, Vol.IX, Kolar 186, Bangalore - 85.
48. S.I.I., Vol.XXIII, No. 401.
49.S.I.I., Vol.VII, No. 979.
50. Tirikkodikka Inscriptions, A.R.E. 1931, No. 46.
51. A.R.E.1918, No. 75, 1915, No. XXIII, pp.118; S.I.I., Vol.XXIII, No. 1.

''காமான் சந்திரகுல மூவேந்த வேளான்'' (அரசகுலம்)
''சத்திரிய சிகாமணி மூவேந்த வேளான்'' (அரசமரபு)
''அரச மீகாம வேளான்'' (அரசகுலம்)
''இரவி குல ராஜராஜ மூவேந்த வேளான்'' (அரசகுலம்)
''இருங்கோளரான் வேளார்'' (வேளிர்)
''இருக்கு வேளிர்''
''இருக்கு வேளான்''
''செம்பியன் வேந்த வேள்'' (அரசகுலம்)
(திருவாரூர்க் கல்வெட்டு)

அரச மரபிலே தோன்றிய வேளிர் இனத்தவர் தலைமக்கள் குலத்தில் உயர்ந்தோர் பட்டியலில் இடம்பெற்றவர்கள். சந்திராதித்திய குலத்தவர்கள் சத்திரியர் என்று உரிமை பராட்டியவர் ஆவர். ''செம்பியன் வேதிவேள்'' வேதம் ஓதும் குடியினன். திருவெறும்பூர் (திருச்சி) கல்வெட்டுகளில் மிக அதிகமாகக் குறிப்பிடப்பட்ட வேளிர் இனத்தவன். இவனது பெயரால் நீர் செல்லும் கால்வாய் அமைந்துள்ளது.

மேலே பட்டியலிடப்பட்டவர்கள் அரசகுலத்தவரான வேளிரும் அந்தணர் உட்படப் பலரும் வேளான் பட்டம் பெற்றிருந்தார்கள் என்று புலனாகிறது. இவரில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவு வேளாளரும் வேளான் பட்டம் பெற்றார்கள். வேளத்திலிருந்து வந்த சிலர் வேளான் பட்டம் பிற்காலத்தில் பெற்றனர்.

புராணங்களிலும் இதிகாசங்களிலும் தேவ சேனாதிபதியான முருகனை நெடுவேள் என்றும் மன்மதனை வேள் என்றும் சுரர்குடிப் பிறப்பாலும் போரின் அடிப்படை உடையவராகவும் அறியமுடிகிறது. அம்பிகாபதி கோவை (433) ''வேலும் சிலையுமில் லாவிறல் வேளென்னு வேந்தனும்'' என்பதும் வேலுடைய முருகவேளையும் சிலையுடைய மன்மத வேளையும் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியத்தில் வேளாளர் என்ற சொல் இல்லை. ஆனால் வேள், வேளிர் என்ற சொற்கள் தமிழி எனும் தமிழ் - பிராமியில் கூட முன்பு இருந்ததாக அறியப்பட்டுள்ளது. வேளாளர் பற்றிச் சங்க கால நூல்களில் இல்லையெனினும் சங்கம் மருவிய காலப் பரிபாடல் நூலில் 'வேள்' பற்றியும் அவர்களின் சிரம சாலை (போர்ப்பயிற்சி செய்யுமிடம்) பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிபாடல் (20), "எருது ஓட விடும் கடன் வேளாளர்க்குப் படார்த்தி இல்லையாம்" என்ற பாடல் அடி உள்ளது. வேளாளர் உழுதொழிலை மேற்கொண்ட மரபினர். உழவுத் தொழிலைச் செய்யும் மாட்டினை வண்டி பூட்டி ஓடவிடும் கடன் வேளாளர்க்குப் படர்த்தி இல்லை என்பது *பரிபாடல்* சொல்லும் பாடமாகும். ஆனால் வேளிர் தேர், குதிரை, யானை போன்றவைகளின் தொடர்புடையவர். குறிப்பாக, "தேர் வேள்ஆய்" என்று அழைக்கப்பட்டவர். வேளிரும் வேளாளரும் ஒருவர் எனில் இந்தப் பாகுபாடு இருக்குமா?

திருமண முறைமை உடையவர் வேளிர் என்பது நம் இலக்கணப் பாடம். ஆனால் வேளாளருக்குத் திருமண முறைமை மறுக்கப்பட்டு, "மேலோர் மூவருக்கும் புணர்த்த கரணம் கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" என்ற தொல்காப்பியச் சூத்திர உரையை உணராமல் இரா. நாகசாமி அவர்கள் எழுதியுள்ளார் இவர். கிரந்தம், தேவநாகரி, வட்டெழுத்து, கல்லெழுத்து, தமிழ் - பிராமி இவை அனைத்திலும் ஒருசேரத் தேர்ச்சி பெற்றவர் என்றால் மிகையாகாது. 49 தலைமுறை வரலாறு உள்ள வேளிர்க்குத் திருமண முறைமை இருப்பதாலேயே வேளிர் மகளுக்கு வதுவை வேண்மாள் எனப் பெயர் ஏற்பட்டுள்ளது.

வேள்வியின் தொடர்பை விளக்கிய நிலையில் 'தீ வேள் சாலை', 'வேள் ஒளி' எனும் சொற்களை எடுத்தாண்டு இருப்பது போன்று அறிஞர் மறைமலையடிகளார் எழுதிய *வேளாளர் நாகரிகம்* (பக். 101), என்ற நூலில்

> "வேள்வி என்பதின் முதலை ளகர ஒற்றுப் பெற்று
> 'வேள்' என்று நிற்கும்"

என்று சீரிய விளக்கம் அளித்துள்ளார். ஆனால் வேள்வி செய்ய மறுக்கப்பட்ட குடியோடு பொருத்திப் பார்க்க முயற்சித்துள்ளார்.

'அம்பர்கிழவோன்' என்ற அரச மரபினன் பற்றித் தெரிவதற்கு கிழவன் யார் என்று அறியாது எழுதுகின்றனர். அறிஞர்கள் தொல்காப்பியப் பொருளதிகார அகத்திணையில் நூற்பா 21இன் இளம்பூரணர், உரையையும் 'நாடு கிழவோனே' என்று வேந்தரையும் வேளிரிரையும் சங்க இலக்கியங்களில் சுட்டிக் காட்டியிருப்பதையும் இவர்கள் உணர்ந்து பார்க்கவில்லை. கிழவன்

என்ற சொல் கழனி உழவனைக் குறிக்காது. அம்பர் நாட்டின் அதிபதியைக் குறிக்கும். 'அம்பர்ழான் அருவந்தையின் தொடர்ச்சி சேந்தன் திவாகரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டில்கூட, கி.பி. 400-500இல் சேந்தன் கூற்றன் என்ற வேளிர் தலைவன்கீழ் அம்பர்கிழான் குமார போந்தை என்பான் அதிகாரியாக இருந்த நிலைபற்றி முன்பே பதிவு செய்யப்பட்டுள்ளது. திருக்கோயிலூர் பாடல் கல்வெட்டைக் கல்வெட்டு எனும் காலாண்டு இதழில் சிறப்பாகப் பதிவு செய்தவரும் நிலவுடைமைச் சமூகமாக முதலாம் இராசராசன் மெய்க்கீர்த்திப் பாடலில் 'அம்பர் நாடன்' என்பானை முனைவர் இரா.நாகசாமி அவர்கள் நமது இலக்கியங்களில் கிழவன், நாடன் என்ற இரு சொற்களும் ஒரே பொருளைத் தரவல்லன என்பதை அறியமாட்டாரா என்ன?

அம்பர் கிழான் மரபுக் கல்வெட்டில் (கி.பி. 13ஆம் நூற்றாண்டு) அரசு காணியுடைய அகளங்க நாடாள்வார் பற்றித் தெரிய வருகிறதே. இவர் கழனி உழவராகிய கிழவரா? அல்லவே. குடிமக்களில் கிழவர்களும் உண்டு. ஆனால் தலைமக்களில் கிழவனான குறும்பொறை நாடனை, ஆட்சி பற்றிய நிலத்தலைவர்களைப் பற்றி இளம்பூரணர் குறிப்பிடுகின்றாரோ அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமன்றோ!

> பழஞ்சேறுயிறு முழங்கு நீர் படப்பைக்
> காவிரி கிழவன் மாயா நல்லிசைக்
> கிள்ளி வளவன் (புறம். 399)

என்று சோழ வேந்தனைக் குறிப்பிடுகிற பாடல்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

சத்திரிய சிகாமணி மூவேந்த வேளான் என்று கல்வெட்டுப் பாடம் கிடைத்துள்ளதே, இவரெல்லாம் வேளாளரா? சூரிய குலம் சந்திரகுலம் பாராட்டிய வேளிர் வேளாளரா?

வேளாளரே தாங்கள் வேளிர் என்று உரிமை பாராட்டிக் கல்வெட்டில், செப்பேட்டில், இலக்கியங்களில் கூறாத நிலையில் வலிய சொல்லாராய்ச்சி செய்து வேளாளர்க்குப் பரிவட்டம் கட்டுவது ஆய்வாகக் கருத முடியாது.

- அரசரின் செங்கோலினைவிட வேளாளரின் சிறு கோல்தான் மேலானது என்பது;
- முடிசூடிய வேந்தரையும் வேளிரையும் இழிவுபடுத்தி அவர்தம் பட்டத்திற்குரிய நெடுமுடியைவிட வேளாளரின் நாற்று முடியே மேலானது என்பது;
- பலி வேள்வி செய்து உயர் கட்டிலில் வைத்துப் போற்றிய காவல் முரசினை வேளாளர்கள் தங்கள் முற்றத்தில் போட்டுள்ளோம் என்பது;
- அரசகுடிக்கு 96 விழுப்புண்கள் வேளாளர்களுக்கு 97 புகழ் புலவர்கள் என்பது;
- மூவேந்தரைச் சிறையில் வைத்துத் தமிழ் பாட வைத்தோம் என்பது;
- பாண்டி மண்டலச் சதகம் நூலில் மூவேந்தரையும் அடிமையாகக் கொண்டோம்;

என்பதை எல்லாம் எதனைக்காட்டும்? வேந்தர் (பேரரசர்) வேளிர் (சிற்றரசர்) இவர் முரசுக்கும் செங்கோலுக்கும் உரிமையுடைய தொல்குடி மன்னர்; ஊரன் என்று உரிமை பாரட்டிய மருத நிலத்தலைவர்களாவர்.

3. தமிழ்-பிராமி மற்றும் பிற கல்வெட்டுகளில் வேளிர்

இந்திய திருநாட்டில் தமிழ் - பிராமி எழுத்துகள் கண்டறியப் பட்டபின் பிறநாடுகளிலிருந்தும் மாற்று மொழியாரிடமிருந்தும் தமிழ்ச்சமூகத்திற்கு மிகப்பெரிய சிறப்புகள் கிடைத்துள்ளன. இது பெருமைக்குரியதாகும். வடபுலம் ஆண்ட அசோகன் காலத்திற்கு முற்பட்டே கி.மு. நான்காம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் அமைந்த தமிழ் - பிராமி எழுத்துகள் கண்டறியப்பட்டுள்ளன. முனைவர் எம்.டி. சம்பத் "மாமன்னர் அசோகன் காலப் பிராமியை விட, தமிழ்வேந்தர் காலப் பிராமி முற்பட்டது" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவதிலிருந்து இது உறுதியாகிறது.

முனைவர் கே. இராசனால் கண்டறியப்பட்ட புலிமான் கோம்பைத் தமிழ்-பிராமி நடுகல் கல்வெட்டில் "வேள்ஊர் அவ்வன் பதவன்" என்னும் சொற்கள் இடம்பெறுகின்றன. பழந்தமிழிலக்கியங்களான புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப்பத்து போன்றவற்றில் தமிழகத்தின் தொன்மைமிக்க பெருங்குடி மக்கள் வேளிர் என்று கூறப்பட்டுள்ளதற்குச் சான்றாக இப் புலிமான் கோம்பைத் தமிழ்-பிராமிக் கல்வெட்டில் வேள் எனும் பெயர் அமைந்துள்ளது. நமது வரலாறு பழமையானது என்று உலகம் அறியும் நிலை இதனால் ஏற்பட்டுள்ளது. வேள் ஊர் என்பது தமிழ்-பிராமி பாடமாகும். புறப்பாட்டில் தொல்குடி மன்னர்கள் ஊரின் தலைவராவார்.

சேரரும் பாண்டியரும் வேளிரே

கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்குரிய தமிழ்-பிராமிக் கல்வெட்டினை முனைவர் கே. இராசனும் முனைவர் ஒய். சுப்புராயலுவும் கண்டறிந்துள்ளனர், இக் கல்வெட்டு, மதுரை அரிட்டாபட்டியைச் சார்ந்ததாகும்.

நெல்வெளிஇய் சிழியன் அதினன் வெளியன்
முழாகை கொடுபித் தோன்

என்று வாசிக்கப்பட்டிருக்கிறது. சிழியன் என்பது பாண்டியர் குலத்திற்கே உரிய செழியன் என்பதாம். செழியனை அதினன் வெளியன் என்றும் கூறுவதால் ஒளியுடைய வெளியன் எனப் பொருள் பட்டு, வேளிரின் சிறப்புப் பெயராக, குலப் பெயராகக் காணப் பெறுகிறது. இதனால் பாண்டியரும் வேள் மரபினர் என்று யூகிக்க முடிகிறது. வேந்தன் என்றும் பேரரசன் என்றும் பட்டம் பெறுவதற்கு முன் வேள் என்ற சிறப்புப் பட்டத்தையே பாண்டியர் பெற்றிருந்தனர் போலும்.

மதுரை மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்ட தமிழ் - பிராமிக் கல்வெட்டு, "குவிரந்தை வேள் அதன்" என்று படிக்கப்பட்டது.

இந்தக் கல்வெட்டு கி.மு. 2 அல்லது மூன்றாம் நூற்றாண்டினது என்று முனைவர் சொ. சாந்தலிங்கம் கருதுகிறார்.

கரூர் புகளூரில் அறியப்பட்ட தமிழ்-பிராமிக் கல்வெட்டு அறிஞர் ஐராவதம் மகாதேவன் குழுவினரால் கண்டறியப் பட்டதாகும். அது,

முதா அமண்ணன்யாற்றூர் செங்காயபன் உறைய்

கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன் மகன்

ளங் கடுங்கோ ளங்கோ ஆக அறுபித கல்

என்று படிக்கப்பட்டது. இதன் காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டு என்று முடிவு கொண்டுள்ளனர்.

குறும்பலாப்பேரி அருள்மனோகரியால் கண்டறியப்பட்டு, தொல்லியல் துறை அலுவலர்கள் திரு. செந்தில் செல்வக்குமார், திரு சந்திரவாணன் ஆகியவரால் படிக்கப்பட்ட அம்பாசமுத்திரம் மன்னார்கோயில் (கல்வெட்டு) தமிழ்-பிராமி எழுத்துகள் கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இது, பள்ளிசெய்வித்தான் கடுங்கோவின் மகன் பெருங்கூற்றன் என உள்ளது.

மதுரை மாவட்டம் சுந்தரராசன் பட்டி தமிழ்-பிராமிக் (கல்வெட்டு அரையன் கலபன் ஈழவாவிரயனு என்பதாகும். (தமிழ் நாட்டு வரலாறு பக். 53) ஈழாவாவியன் என்பது ஈழ அரையனை என்பதாம்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தமிழ்-பிராமிக் கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். (பக். 61) இதில். ''எருகாடூர் ஈழ குடும்பிகன் போலாலயன் செய்தா ஆய்சயன நெடுசாதன்'' என்பதைப் பார்ப்போம். எருகாடூர் என்பது தமிழ் நாட்டிலுள்ள ஓர் ஊர் என்று தமிழ்நாட்டுத் தொல்லியல் துறையினர் முடிவு கொண்டுள்ளனர். (பக். 61) தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள்) போலாலயன் என்பது கொடையாளியின் இயற்பெயர் ஆகும். ஆய்சயன நெடுசாத்தன் என்பதும் இயற்பெயர் என்றே கொள்ளத்தகும் (பக். 62) என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

''ஈழக்குடும்பிகன்'' என்பது உயர்குடியைச் சார்ந்தவனையே குறிப்பிடுகிறது. பூலாங்குறிச்சி தமிழ்-பிராமிக் கல்வெட்டில் ''வேள்கூறு பெயப்பட்ட குடும்பியர்'' என்பது வேள் குலத்தவர் வழி தொடர்புடையதாகும். ஈழ என்பது முதலில் ஈழர் என்றும் இவரின் தொடர்புடைய குடி ஈழர் என்றும் அறியலாம். குடும்பியர் என்ற சொல் இருங்கோளர்க்குரியதாகக் கோவை மாவட்டம் குண்டடம் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கி.பி. 10ஆம் நூற்றாண்டினரான நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியில் ''ஈழகுலதிபன்'' என்று அடையாளமிடும் உயர்குடியை அறிஞர் ஐராவதம் மகாதேவன் தவறாகக் குறிப்பிடுகிறார். இப்பிராமியில் ஆய்சயன நெடு சாத்தன் என்ற பெயரே ஆய் மரபினர்க்குரியதாகும். சேக்கிழாரின் பெரிய புராணம் ஏனாதி நாதரை ஈழகுலச் சான்றார் என்றும் அரசகுலத்துக்குப் போர்கலையைப் போதிக்கும் ஆசிரியத் தொழில் செய்வதாகவே கூறுகிறது. ஈழச்சேரி, ஈழக்காசு, ஈழத்தரையர், ஈழகுலதிபன், ஈழச்சான்றான், ஈழகுடும்பிகன், ஈழ நாட்டரசர் என்பவற்றைக் கவனத்தில் கொள்க.

மதுரை மாவட்டம் பிள்ளையார் பட்டியில் அமைந்த தமிழ்-பிராமிக் கல்வெட்டு கி.பி. 7ஆம் நூற்றாண்டில் எருகாட்டூருக்கோன் பெருதசன்'' என்பவன் சிற்றரசனான வேளிர் ஆவான். இக்கல்வெட்டு பிற்காலத் தமிழ் வரலாற்றிற்குப் பெரிதும் பயனுடையதாகும். கடிகை கோ என்ற சொல் போர்க்கலையைப் போதிக்கும் ஒரு தலைவனின் பெயர் ஆகலாம். இவனின் மகன் பெருங்கூற்றன் ஆவான். இவன் ஒரு நிலத்தை அதாவது, ஒரு கூற்றத்தை ஆண்ட ஒரு சிற்றரசன் ஆகலாம்.

பொதிகையை ஆண்ட ஆய் மன்னன் மாவேள் ஆய் அண்டிரனை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர்,

"பொதுமீக் கூற்றத்து நாடுகிழவன் (புறம். 135) என்று குறித் துள்ளார். மன்னார்கோயில் பொதியமலையின் அருகில் இருக்கும் ஊராகும். கூற்றத்தை ஆள்பவனைக் கூற்றன் என்று அழைத்ததாகக் கருதலாம்.

இதுபோன்று கோஆதன் செல்லிரும்பொறை, பெருங் கடுங்கோ என்ற பெயர்கள் சேரர் குடியை அடையாளம் காட்டு கின்றன. கடுங்கோ என்ற பெயரில் சேரமன்னர் பலர் இருந்தனர். அகப்பாடல்களில் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்ற சேரர் குடியினன் புலவனாகவும் இருந்தான். புதிய அரசர்களாகக் களப்பாழர்கள் தோற்றம் பெற்றுச் சிலகாலம் மதுரையை ஆக்கிரமித்துக் கொண்டு ஆண்ட அவ்வேற்று மரபினரை வென்று வீழ்த்தியவன் பாண்டியன் கடுங்கோன் என்று வேள்விக்குடிச் செப்பேடு (கி.பி. 771) குறிப்பிடுகிறது. இம்மன்னன் ஆட்சியைப் பெறுவதற்கு முன் சேரநாட்டில் வாழ்ந்துவந்திருக்க வேண்டும்.

சேலம் மவாட்டம் பெரியோன் பட்டி (தாரமங்கலம்) ஊர் இணைந்த அம்மன் கோயில்பட்டியில் கிடைத்த தமிழ்-பிராமிக் கல்வெட்டு கி.பி. 4 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும் (பக். 86, தமிழ்-பிராமிக் கல்வெட்டுகள்) இக்கல்வெட்டை

வரம்பன் கோகூர் கிழார் மகன் வியக்கன் பரம்பன்
கோபன் கணதேவன் தொட சுனை பரம்பன்

என்று படித்ததை மேலும் உணர்ந்து படித்த திரு. பூங்குன்றன் வரம்பன் என்றே படிக்க வேண்டும் என்று கருதுகிறார்.

வானவரம்பன் என்பது சேரர் குடி. கோபன் கண தேவன் இப்பகுதியில் இருந்த சிற்றரசன் ஆகலாம். அம்மன்கோவில்பட்டி தாரமங்கலம் கைலாசநாதர் கோயில் நிலமாம்.

மோதிரங்களில் எழுத்துகள்

தொல்லியல் அறிஞர் திரு. இராசகோபாலிடமிருந்து பெற்ற ஆவணம் ஒன்றில் கிடைத்த வெள்ளி மோதிரம், தங்க மோதிரங்களில் பொறிக்கப்பெற்ற முத்திரைகளின் காலத்தைக் கணக்கிட்டனர். கரூரில் கிடைத்த வெள்ளி மோதிரம், "வேள் ஈ சாம்பன்" என்கிறது. இதன் காலம் கி.மு. முதலாம் நூற்றாண்டு என்று அறிகின்றோம். அப்பொழுது ஆட்சியாளனாக அது வேளிர் தலைவன் இருந்தான். வேள் சாம்பன் என்னும் எழுத்துகள் பொறித்த மோதிரம் கிடைத்திருப்பது வேளிர் வரலாற்றுக்குப் பெரிதும் உதவும்.

'தித்தன்' என்னும் எழுத்துப் பொறித்த வெள்ளிமோதிரம் ஒன்று கண்டறியப்பட்டுள்ளது. சங்ககால நூல்களில் தித்தன் என்ற வேளிர் தலைவன் குறிப்பிடப்படுகின்றான். பரணர் தித்தன் என்ற வேளிர் மரபினன் உறையூரை ஆண்டவன் என்று அடையாளம் காட்டுகின்றார்.

நொடைநறவின்
மாவண் தித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன யுரைசா னன்கலம்
கொடுப்பவும் கொளாஅன்..... (புறம். 352)

உறந்தை ஊரினனான தித்தன் பெயரால் மோதிரம் கிடைத்து இருப்பதால் வேளிர் குல ஆட்சியாளர் மக்களால் மதிக்கப்பட்ட அரச மரபினர் என்றும் அதற்கு "வேளிஈ சாம்பான்", "தித்தன்" போன்ற மோதிர முத்திரைகள் சான்றுகளாகும் என்றும் அறியலாம்.

வேள்தித்தன்

வேள்தித்தன், தித்தன் வெளியன் (வெளியன் தித்தன்) போன்றார் பற்றிச் சங்கப் பாடல்கள் உள்ளன.

சீர் சான்ற விழுச் சிறப்பின்
சிறுகண் யானை பெறலருந் தித்தன்
செல்லா நல்லிசை யுறந்தை குணாது
(புறம். 395 – மதுரை நக்கீரர் பாடல்)

தித்தன் வெளியன் உறந்தை நாளவை
(அகம். 226 – பரணர்)

வீரை வேண்மான் வெளியன் தித்தன்
முரசு முதல் கொளீஇய் மாலை விளக்கின்
வெண்கோடு இயம்ப (முதுகூற்றனார், நற்றிணை 58)

நாளவை இருந்த நனைமகிழ் தித்தன்
வேளிரொடு பொரீஇய கழித்த
வாள்வாய் அன்ன (அகம். 331 – மாமூலர்)

தித்தன் வெளியன் (அகம். 152:5)

வீரை வெளியன் தித்தனார் என்ற வேளிர் தலைவனால் அகம். 188ஆம் பாடல் பாடப்பட்டுள்ளது.

போர்புறு முரசின் இரங்கி முறை புரிந்து
அறநெறி பிழையாத் திறனறி மன்னர்
அருஞ்சமத் ததிர்ந்த பெருஞ்செய் ஆடவர்

அறப்புகழ் கொண்ட வேளிரையும் வேந்தரையுமே இவர் குறிப்பிடுகின்றார்.

வேளிரும் வேந்தரே

பரணர் பாடிய நற்றிணைப் பாடல் (270) பிட்டன் என்ற அரசனை வேந்தன் என்று கூறுகிறது.

விரியுளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஒட்டிய ஏந்து வேல் நன்னன்
கூந்தல் முரற்சியிற் கொடிதே........

சிறந்த குதிரைப் படைகளையுடைய பகை மன்னன் பிட்டன் போன்றோரை நன்னன் தன் வேற்படையால் வென்று அப் பகையரசர்களின் தேவியரின் கூந்தலை மழித்துக் கயிறாகத் திரித்து, அதனால் அப்பகை மன்னரின் யானைகளைப் பிணித்தது கொடுமையினும் கொடிது என்கிறார் பரணர்.

வேளிரிடம் குதிரை, யானைப்படை இருந்தன. மேலும் பிட்டன் போன்ற சிற்றரசரை வேந்தர் என்று பரணர் போன்ற புலவர்கள் பாடியிருப்பது எண்ணுதற்குரியது. நன்னன் வேல் ஏந்திய வீரன் என்பதால் யானைப்படை உடையவன் என்பதோடு யானை மீது அமர்ந்து போர்புரியும் உயர்குடி வீரன் என்றும் உணரலாம்.

அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இருபெரு வேந்தர் பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல .... (நற்றிணை 180 மருதம்)

சோழநாட்டின் அன்னிக்குடியில் தோன்றிய அன்னி என்பவனும் தேரமுந்தூரில் வாழ்ந்த பெரிய திதியன் என்பானும் வேந்தர் குடியினராகிய அரசர்கள். போர்க்களத்தில் போரிடுகையில் "அன்னி என்ற அரசன் வெட்டிச் சாய்த்த பூவும் மலரும் நிறைந்த புன்னை மரம் விழுதலும் அவ்விருவரின் பகையும் ஒழிந்தாற் போல" என்று இப் பாடலடிகளுக்கான உரையில் குறிப்பிட் டுள்ளனர்.

சேந்தன் திவாகாம் என்ற நிகண்டு வேளிரைக் குறுநில வேந்தர் என்றே குறிப்பிடுகின்றது.

வேளிர் மரபிலே தோன்றிச் சிறந்த சாளுக்கியப் பேரரசர்களின் கொடியைச் சேந்தன் திவாகரம் "கேழல் வேள்புல வரசர் கொடியே" என்கிறது. (கேழல் - பன்றி) ஒட்டக்கூத்தரால் பாடப் பெற்ற கி.பி. 12ஆம் நூற்றாண்டு நூலான குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் (93) "இருக்கு வேதம் கூறும் முதற்குலம் சாளுக்கியரின் குலமும் சூரியன் குலமாகிய சோழர் குலமும் ஆகிய திருக்குலம்" என்று குறிப்பிடுகிறது. இருக்கு வேத கால அரசர் தங்களை 'இருக்கு வேள்' என்றனர்.

பிங்கலந்தை (மக்கட்பெயர்த் தொகுதி) "தாரக காரியுஞ் சளுக்கியர் வேந்தனும் வேனிலாளனும் வேளெனலாகும்" என்பதால் வேளிரும் வேந்தரும் ஒருவரே ஆவர். பதினெண் அரசர் என்பவர் பதினெட்டு நாடுகளின் மன்னர். இம்மன்னர் குடியிலே தோன்றிய மரபினர் என்பதே சாலச் சிறந்ததாகும்.

வெண்புள் வேந்து (வேளிர்)

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு 28க்குரிய கி.பி. 1098 இல் அமைந்த தொப்பிலாங்கரை (திருச்சுழியல்) கல்வெட்டு (தொடர் எண் 238/2005)

> ஸ்ரீ எங்கள் பிரான் சோழந்யாண்டிருபத்தெட்டில் எழில்
> துங்க மதிள் சூழ் குளத்தூரில் துர்க்கைக்குச் சிங்கம்
> செய்வித்தான் வீரன் சடைக்க. தான் செந்தமிழ் சேர் தம்ம
> வித்தான் வெண்புள் வேந்து

இக்கல்வெட்டில் வெண்பு நாடு வேந்து என்பவன் வேளிர் என்றும் நாடன், நாட்டார் என்றும் அறியப்பட்டவன். (நாட்டார் வரலாறும் ஆய்வும் (கட்டுரை) நெல்லை நெடுமாறன்)

அரசன் என்ற தலைப்பிட்ட பெயர்ப்பட்டியலைச் சேந்தன் திவாகரம் எடுத்துக்கூறுகிறது. பதினெட்டுப்பெயர்கள் அடங்கியதாகிய பெயர்களில் வேந்தன் பெயரும் ஒன்று. மன்னன் நரபதி, நிருபன், கோ, குரிசில், தலைவன், அண்ணல் என்ற சிறப்புப் பெயர்கள் அனைத்தையும் வேளிர் பெற்றிருந்தனர் என்று கல்வெட்டுகளில் காணப்பெறுகிறது. ''வேந்த வேள்'' என்று பல கல்வெட்டுப் பாடம் உள்ளது அறியத்தக்கதாம்.

''கோ'' என்ற வேந்தன் பட்டம் வேந்தருக்கும் வேளிருக்கும் உண்டு. வேளிர் ''விச்சிக்கோ'' சேட்டிருங்கோ'' எனப் புறம். 200, 201இல் பாடப்பட்டுள்ளனர். காவலன் என்ற பட்டம் பற்றிப்

புறப்பொருள் வெண்மாலையில் உணர்த்திக் காட்டப்படுகிறது. அறிந்து கொள்க.

சேனாவரையர் தொல்காப்பியம் கிளவியாக்கம் (51) உரையில் தலைவனை உணர்த்தும்பொழுது ''வேந்து, வேள்குரிசில் புரோசு" என்று குறித்துள்ளார்.

'வேந்தன்' என்ற சொல்லை ஆராய்ந்த கடும் தொடை காவினார் என்ற புலவர் தாம் பாடிய அகநானூற்றுப் பாடலில் (109),

அறன் இல் வேந்தர் ஆளும்
வறன் உறு குன்றம் பல விலங்கினவே

என்று குறிப்பிடுவதால் காட்டாட்சி முறைமையுடைய குன்றங் களின் தலைவர்களான வேடர், மறவரை, "அறன்இல் வேந்தர்" என்று குறித்துள்ளார் போலும். குன்றம் என்ற மலையின் வேளி ராகிய அரசர் பலர் ஆட்சி செய்தாலும் சில பகுதிகளில் வேட ராட்சி இருந்தது சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட் டுள்ளது. (கண்ணப்ப நாயனார் புராணம்) கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர் ''வேடர் இனத்தவனான குகனைக் ''புளிஞர் வேந்தன்'' என்று குறித்துள்ளார்.

வேள்குலத்தவரின் எச்சம்

பூலாங்குறிச்சி மலைச்சரிவில் இடதுபுறம் (வடபுறம்) உள்ள கல்வெட்டு 1

1. ந்தற்கு யாண்டு நூற்றுத்
2. நா (ற்) ர. ப.
3. (ணு) ஈள்(ளை)
4. மருகண் மகன் (க) டலகப் ேப.
5. ன் ஒல்லையூருக் கூற்(ற)
6.
7. செ வகள வய
8.

9. (பெ) கு நிலனும் புன்செஇ வெள்ளேற்றான் மங்கலமென்

10. (முவருழவ) ரு ய் கூடலூரு நாட்டுப் பிரம்மதாயஞ் சிற்றையூருப் பிரம்ம தாயக்கி

11. (ழமை)யும் (மீயா)ட்சியும் கொண்டாளும் மவூருப் படுங்கடைய வயலென்னும்

12. புலத்தவன் விற்றுக்கொண்டு கொடுத்த புன்செ நிலனு

13. துப் பிரமதாயத்துட் பிரம்மதாயக் கிழவரா(ன)

14. றராலும் பிரம் யுங் காராண் மையுமாகக் கொண்டாளுந் நீர் நிலனும் புன்

15. நிலனும் பிறவுஞ் பாண்டி நாட்டுங் கொங்கு நாட்டும் மருவ காராண் கிழமையுங் கல

16. க் கிழமையும் மேல் (லாண்மை) கொண்ட(ன)வும் மவருடைய காலாசமுந் தோட்டங்களும் மவரு தமரையும் ம

17. வரு குடிகளையும் டையா ரும் பிரம்ம தாயமுடையாருந் நாடு காப்பாரும் புறங்காப்

18. பாரும் முப்பு(ரு காப்பாரு) தாயந் நெறி அ செஇதாரு தத்த மானும் வேறு வேறு அஇரத்தறுநா

19. று காணந் று டுவே ன ரு கேட்டாருலவியப் பெருந்திணை நல்லங்கிழா னெ இனங்கு

20. மானும் முலவி ம ங் கிழான் னங் கூற்றனும் முலவியப் பெருந்திணை ஆலத்தூர் கி

21. லை துவான் (றமன்வ) டுகங் குமரன் டைப்பி(ஒ)

22. (தளருக்கு) பூலாங்குறிச்சி

மலைச்சரிவில் வலதுபுறம் (தென்புறம்) உள்ள கல்வெட்டு - 2

1. கோச் சேந்தங் கூற்றற்கு யாண்டு நூற்றுத் தொண்ணூற்றி

2. ரண்டு நாள் முப்பத்தாறு பக்கத் தைப்பிறை நாள் ப(ன்னிரண்டு) வேள்மருகன் மகன் கடலகப் பெரும்படைத்

3. தலைவன் எங்குமான் வொல்லை யூருக் கூற்றத்து வேள்கூருப் பச்செறிச்சின் மலை மேற் செஇவித்த தேவகுலமும்

4. முத்தூற்றுக் கூற்றத்து விளமரு(ச்) செஇவித்த தேவகுலமும் மதிரை உலவியத்தான் குளத்தின் வடப்பாகத்துச் செஇவி

5. த்த தாபதப் பள்ளியுள் (வா) சி தேவனாரு கோட்டமும் மவை அத்தி கோயத்தாரு முன்மனை யாருந் நாற்பாற் றிணைகளுந் தமக்கு காவலாக

6. அவற்றுக்குற்றது செ(யக்) கொண்ட மையால் லவற்றை வ(ழிபடுவது)ம் மவற்றுக்குப் பெயப் பட்ட அறப்புறந் நடையாட்டுவதூஞ் செயும்

7. பாண்டங்கருஞ் சேவுக்கரும் (வி)ரும்மச்சாரிகள்ளுந் தருமிகளு மூ(ர்)காவல் கொண்டா(ருஆ) ரா இந்து வைஇக்கப் பட்டாரு அல்லது வழிபடப்

8. பெறாமையும் மவற்றுட் பச்செறிச் சி(ல்) மலைமேற் செஇவி(த்ததேவகு) லத்துக்குக் குடும்பிபராவரு குழ

9. (லூ)ருத் துஞ்சிய உடைபரால் வேள்கூருப் பெயப்பட்ட குடும்பி (யர் வழியல்லது வேறொரு) குடும்பாடப் பெறாமையும்

10. மத் தேவகுலத்துக் குற்றது செய்து வல்லக் குற்றந் தொழில் செய ....க(ளு) ....(டஞ்) செயவும் மெழுதி வைக்கென் றருள்ளித்தாரு

11. கேட்டா ருலவியப் பெருந்திணை நல்லங்கிழானெ இளங்குமரனும் முலவிபப் பெருந்திணை ப............... ஆறு கிழான் கீரங்காரி

12. யு முலவியப் பெருந்திணை அம்பரு கிழான் குமாரம் போந்தையுங் கேட்டு வந்து கூறின (னோ) லை எழுதுவான் (றம)ன் காரி

13. கண்ணன் இது கடைப்(பி) ஓலை காற கண்டெழுதி கொடுத்தேன் (வே)ண்ணாட்டான் (ந....ரி) நரியங்காரி

கோச்சேந்தன் கூற்றன் என்ற வேள்குலத்தரசனை ஆய்வாளர் சிலர் களப்பிரர் இனத்தவன் என்று தவறாகக் கணக்கிட்டுச் சொல்லி உள்ளனர். 'கோ' என்ற மொழி நம் அரச மரபினரான வேந்தருக்கும் வேளிருக்கும் உரியதாகும். கோக்கோதை மார்பன் பூழியர் கோ, பெருங்கடுங்கோ, கடுங்கோன், செல்வக் கடுங்கோ, கோப்பெருஞ்சோழன் என்று நம் அரசகுலத்தவர் பலர் பெயராம்,

இவனது படைத்தலைவன் எங்குமான் வேள்குலத்தவன் என்பதும் இவன் தேவர்கோயில் செய்வித்த செய்தியும் ''வேள் கூருப்பெயப்பட்ட குடும்பியர் வழியல்லது வேறொரு குடும்பாடப்

பெறாமையும்'' என்பது தலைமக்கள் தொடர்புடையதாகும். வேள்குலத்தவர் என்ற பெருமைக்குரிய அம்பருகிழான், உடையார், வேணாட்டான் என்ற பெயர்கள் அரசகுடி தொடர்புடையதாகும்.

தமிழ்-பிராமி எழுத்துகளில் காணப்பெறும் கடிகை கோவின் மகன் பெருங்கூற்றன் என்பதைச் சேந்தன் கூற்றன் என்ற தலைவனோடு பொருத்தி உணர வேண்டும்.

சேந்தன் கூற்றனின் பெருந்திணை அதிகாரிகளில் ஒருவன் சோழநாட்டு அம்பர் கிழான் குமாரம் போந்தை ஆவான்.

சேந்தன் என்ற அரசகுலத்தவன் ''அம்பர் கிழவோன்'' ''அம்பர் மன்னன்'' ''நீடிசைத் தலைவன் அருவந்தை சேந்தன்'' ''அம்பர் காவலன்'' ''திவாகரத்து அண்ணல்'' என்று உரிமை பாராட்டித் தன்னை அடையாளமிட்டுள்ளான் (சேந்தன் திவாகரம்). மேலும் ''கப்புநாவினன் கேட்ட செவியினன் முற்றுவுணர்ந்த மூதறிவாளன்'' என்றும் தன்னைக் குறிப்பிட்டுள்ளான். வேதம் அறிந்த மரபினன் என்றும் உணர்த்திக் காட்டியுள்ளான். ''நாகரிக நாட்டத்தன் ஆரியன் அருவந்தை'' என்று உயர்வான குடியில் தோன்றியவன் எனவும் சுட்டிக்காட்டியுள்ளான்.

சங்ககால வேள் குலத்தவன் அம்ப்ர் கிழவன் அருவந்தையின் குடியினன் எனவும் தெளிவுபடுத்தியுள்ளான்.

அம்பர் அருவந்தை கிழவோன்

காவிரி ஒடி வளம் புரக்கும் வளநாடுகளில் அம்மா நாடும் ஒன்றாம். இந்நாட்டில் வாழ்ந்த அருவந்தை எனும் வேளிர் தலைவனைக் கல்லாடனார் என்ற புலவர் பாடிய புறநானூற்றுப் பாடல்

காவிரி யாணையுந் தாழ்நீர்ப் படப்பை
நெல்விளை கழனி யம்பர் கிழவோன்
நல்லரு வந்தை வாழியர் புல்லிய
வேங்கட விறல்வரைப் பட்ட
ஓங்கல் வானத் துறையினும் பலவே (புறநானூறு **385**)

என்கிறது. வளம் நிறைந்த நாட்டுக்குத் தலைவன் அம்பர் கிழவோன் என்று சங்க காலத்தில் அழைக்கப்பட்ட அருவந்தை என்ற அரசமரபினன் ஆவான்.

பூலாங்குறிச்சி (சிவகங்கை) வட்டெழுத்துக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் அரசன் கோச்சேந்தன் கூற்றன் என்ற வேளிர்குல சிற்றரசன் ஆவான். அக்காலத்திய கல்வெட்டின் எழுத்தமைதியை வைத்து அதைச் சற்றேறக்குறைய கி.பி. 500 என்று முடிவு கொண்டுள்ளார்கள்.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் அதிகாரிகளில் ஒருவன் சோழ நாட்டு அம்பருக்கிழான் என்பான். இவன் கோச்சேந்தன் கூற்றனிடம் அதிகாரியாகப் பணிபுரிந்துள்ள "உலவியப் பெருந் திணை அம்பருகிழான் குமாரம் போந்தை" என்பவனாவான். இவனையே சேந்தன் திவாகரம் என்ற நிகண்டு நூலும் குறிப்பிடுகிறது.

கற்ற நாவினன் கேட்ட செவியினன்
முற்ற வுணர்ந்த மூதறிவாளர்
நாகரிக நாட்டத் தாரிய னருவந்தை

நாடே பிறர் நாட்டிற் குவமை யாறே
காலமறிந் துதவுங் காவிரி யாறே
ஆடவர் திலக னம்பர் மன்ன
னீடிசைத் தலைவ னருவந்தை

வருநற் கங்கை வடதிசைப் பெருமையும்
தென்திசைச் சிறுமையும் நீங்கிய குறுமுனி
குண்டிகைப் பழம் புனற் காவிரி பெரும்பதி
அம்பர்க்கதிபதி (திவாகரம்)

இப்பகுதியில் குறிப்பிடப்பெறும் மூதறிவாளர் என்பது மூத்த குடியான வேளிர் குலத்தவன் என்று உணரலாம். காவிரி நாட்டின் உரிமையுடைய ஆடவர் திலகன் அம்பர் மன்னன் தலைவன் அருவந்தை; காவிரியின் பெரும்பதி அதாவது ஊரன் என்ற சங்ககாலச் சிறப்புடையவன் அம்பர் நாட்டுக்கு அதிபதி என்று அறியலாம்.

கி.பி. 833இல் அமைந்த சாத்தூர் இருக்கன்குடி கல்வெட்டில் சொல்லப்பட்டது போன்று பெருமையுடைய குடியினன். இம்மரபினன் சோழர் குடிமரபிலே சிறந்திருந்த உயர்குடித் தலைவன்.

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக்குரிய திருக்கோயிலூர்க் கல்வெட்டுப் பாடலில் அரசனின் குடி பற்றிய மெய்க்கீர்த்தியில் அம்பர் நாடன் என்று சுட்டப்பட்டுள்ளான்.

பூலாங்குறிச்சிக் கல்வெட்டின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று முடிவு கொண்டதற்கு அறிஞர் என். சேதுராமன் சில ஆய்வுகளை மேற்கொண்டு உறுதுணை அளித்துள்ளார். ஐந்திரமானம் என்ற ஆட்சியாண்டு தொடர்பான செய்திகள் இந்தியாவில் கி.பி. 4ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே காணப்படுவதாகத் தெரிவித்ததை நம் அறிஞர்கள் ஏற்றுப் பூலாங்குறிச்சிக் கல்வெட்டு ஐந்தாம் நூற்றாண்டு என்று முடிவு கொண்டதையே கி.பி. 500 என்று இறுதி முடிவாகக் கொண்டுள்ளனர். இதனை, கி.பி. 400இல் இருந்தும் கொள்ளலாம் என்று இரா.பூங்குன்றன் கருதுகிறார்.

கோச்சேந்தன் கூற்றன் மரபினரின் ஆட்சிக் காலம் கி.பி. 401லிருந்து 450க்குள் இருந்து, வீழ்ச்சியுற்றிருக்க வேண்டும். களப்பிரர் காலத்தில் வச்சிர நந்தி என்ற சமணப் பெரியார் கி.பி. 470இல் திராவிட சங்கத்தைத் தோற்றுவித்தார் என்ற குறிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. திராவிட சங்கம் என்பது தமிழரசரான பாண்டிய வேந்தர்கள் தோற்றுவித்த தமிழ்ச் சங்கம் போன்று தமிழ் பற்றி ஆராயவில்லை. சமணர் தொடர்பான கொள்கைகளைப் பரப்புதல் செய்யத் தொடங்கிய அமைப்பு ஆகும். அதற்குக் களப்பிரர் (களப்பாளர்) உதவி இருந்திருக்கக் கூடும். களப்பாள மன்னர் தொடங்கிய அமைப்பு திராவிட சங்கம் அன்று; இதனை உணர்ந்து நோக்கினால் கி.பி. 575 அளவில் கலி அரசனான களப்பிர மன்னனிடமிருந்து பாண்டியநாட்டைக் கடுங்கோன் கைப்பற்றினான் என்று வேள்விக்குடி செப்பேடு கூறுவது உண்மை என அறியலாம்.

4. வேந்தரும் வேளிரும் நாடுகிழவோரே

சங்க இலக்கியங்களில் வேந்தர்க்கும் வேளிர்க்கும் உள்ள ஒத்த சிறப்புகள் பல பதிவாகியுள்ளன. அவற்றுள் அவர்களை நாடுகிழவோர் எனச் சிறப்பித்து அழைப்பது பலவாகக் காணக்கிடக்கின்றது. கீழ்க்காணும் சான்றுகளில் வேளிர் 'நாடுகிழவோர்' எனப் பாடப் பெற்றிருக்கின்றனர். சங்க காலத்து வேளிரின் எச்சத்தினர் பிற்காலத்திலும் நாடுகிழவோராக அழைக்கப்பெற்றுவந்ததைக் கல்வெட்டுகளாலும் இலக்கியச் சான்றுகளாலும் அறியமுடிகின்றது.

நாடுகிழவோன் விச்சிக்கோ

வள்ளல் பாரியின் மகளிரை மணம்செய்விக்கவேண்டி வேளிர் தலைவன் விச்சிக்கோவிடம் சென்று கபிலர் பாடுவதாவது[1]:

... கழைமிசைத் துஞ்சும் கல்லக வெற்ப!
நிணம்தின்று செருக்கிய நெருப்புத்தலை நெடுவேல்
களம்கொண்டு கனலும் கடுங்கண் யானை
விளங்கு மணிக்கொடும்பூண் விச்சிக் கோவே!
... சினப்போர்
அடங்கா மன்னரை அடக்கும்
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே![1]

நெடிய வேலினையும் போர்க்களத்தைத் தனதாக்கிக் கொண்டு காயும் தறுகண்மையையுடைய யானையினையும் விளங்கிய மணிகளாற் செய்யப்பட்ட வளைந்த ஆபரணங்களையுமுடைய விச்சிக்கோவே....!

நீ பகைவரைப் போர் செய்த முறைமையாற் பொருது தாழ்விக்கும் வாளான் மேம்படுபவன்;

---

1. புறநானூறு, 200.

> சினத்தையுடைய போராலே பகைவேந்தரை மிகை
> யடக்கும் மடக்கப்படாத மிக்க விளைதலையுடைய
> நாட்டையுடையோய்[2]

என்றும் வேளிர் ஆட்சியாளனை அடையாளமிடுகிறார் கபிலர். வீரக்குடியிலே வந்த வேளிரை அரசனாகப் பதிவு செய்த பாடலில் விளைநிலம் பற்றி இருப்பதை மட்டும் ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் கொண்டு வரலாறு எழுதி, இந்த நாட்டின் வரலாறு, சிறப்பு, பெருமை இவைகளைக் குழிகளில் போட்டு மூடிவிட்டனர். விச்சியின் பெயரிலேயே கோ என்று சிறப்பித்துப் பாடப்பெற்றிருப்பதால் அவன் தொல்குடி அரசன். இவனையே, குறுந்தொகை 328இல் பரணர்,

> வில் கெழுதானை விச்சியர் பெருமகன்
> வேந்தரொடு பொருத ஞான்றை....

என்று குறித்திருப்பதை நாம் உணர்ந்தால் வேளிர் என்போர் வீரராகவும் இயல்பாகவே படையினை உடையவராகவும் விளங்கியுள்ளனர் என்று அறியலாம். படை வைத்திருப்பவரைத் தொல்காப்பிச் சூத்திரம் "இடையிரு வகையோர்" என்று கூறுகிறது.

நாடுகிழவோன் இருங்கோவேள்

புறநானூறு 201ஆம் பாடலும் கபிலரால் பாடப்பெற்றதாகும். இது பாரிவேளிரின் மகளிரை மணம் செய்விக்க வேண்டி இருங்கோவேளிடம் சென்று கபிலர் பாடிய பாடலாகும்.

> நீயே! வடபான் முனிவன் தடவினுட் தோன்றிச்
> செம்பு புனைந் தியற்றிய சேணெடும் புரிசை
> உவரா வீகைத் துவரை யாண்டு
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே விறற்போர் அண்ணல்
> தாரணி யானைச் சேட்டிருங் கோவே.....!

என்றும் அதே பாடலில்

> பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்
> உடலுந ருட்கு தானைக்
> கெடலருங் குரைய நாடுகிழவோயே[3]

என்றும் பாடியுள்ளார். இருங்கோவேளை அவர் விளித்தலாவது:

---

2. புறநானூற்றின் பழைய உரை.
3. புறநானூறு 201.

> "வேளே! அண்ணல்! இருங்கோவே! புலிகடிமால்! கிழவ! நாடுகிழவோய்! நீ இப்படிப்பட்ட உயர்ந்த குடியிற் பிறந்தவனாதலால்......"

என்று பழைய உரை குறிப்பிடுகிறது.

பொன்னுண்டாகும் மலைக்குத் தலைவன் இருங்கோவேள். இவன் தொன்றுதொட்டு இருந்து வந்த ஆட்சிக்குடியிலே தோன்றியவன். இவன் 49 தலைமுறையுடைய அரசமரபினன் என்று குறித்துள்ள பாடலின் உண்மைப் பொருளை மு.இராகவையங்கார் உணராமல் பிற்காலத்தில் எழுந்த சாதியைத் தூக்கி வேறு வகையாக அடையாளமிட முயற்சித்துள்ளார். வேளிரின் நாற்பத்தொன்பது தலைமுறை ஆட்சித் தொடர்ச்சி பற்றிக் கி.பி. 1ஆம் நூற்றாண்டிலேயே கபிலர் கூறினார். வீழ்ச்சியடைந்த யது வம்ச வரலாற்றை ஆராய்ந்து மனுஸ்மிருதியோடு பொருத்திப் பார்க்கிறார்.

ஓர் அரசனை உணர்த்தும் சிறப்பு அடைமொழிகளை எல்லாம் குறிப்பாக அண்ணல், கிழவ, கோவே, நாடுகிழவன் என்று வேளிரான இருங்கோவேளுக்கும் சார்த்தி, அவனை மேலும் 'வேளிருள் வேள்' என்றும் கபிலர் பெருமைப்படுத்துகிறார்.

சோழனும் நாடுகிழவோன் ஆவான்

சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக் கண்டு சேரமான் அந்துஞ்சேரலிரும் பொறையோடு வேண்மாடத்து மேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய *புறநானூறு* 13ஆம் பாடலில் சோழன் நாடுகிழவோன் என அழைக்கப்பட்டுள்ளான்.

வேள்மாடம் என்பது அரசர்களின் அரண்மனையாகும். அரண்மனையில் சேரமானுடன் இருந்த அந்தணப்புலவர் முடமோசியார் சோழனைப் பாடியுள்ளார்.

> **கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்**
> **கொழுமீன் விளைந்த கள்ளின்**
> **விழுநீர் வேலி நாடுகிழ வோனே**

என்று சோழ வேந்தனை நாடுகிழவன் என்கிறார். பிற்காலத்தில் அரசனின் மாளிகை அல்லாத 'வேளம்' எனும் பணிமக்கள் தங்குமிடத்தினின்றும் வேள்மாடம் வேறுபட்டதாகும். அறிஞர் டி.என். சுப்பிரமணியன் பதிப்பித்த தென்இந்திய கோயிற்

சாசனத்தில் வேளான் என்ற பட்டம் வேளத்தில் தோன்றியவன் என்ற பொருளில் குறிப்பிட்டு இருப்பது பொருள் உணர்தலில் உள்ள தவறு எனக் கொள்ளலாம்.

சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக்கண்ணியார் *பொருநராற்றுப்படை* என்ற நூலில் பாடியுள்ளார்.

இந்நூலில் சோழ வேந்தனான கரிகாலன் "காவிரி புரக்கும் நாடு கிழவன்" எனப்படுகிறான்.

இளங்கோவடிகளின் *சிலப்பதிகாரம்* சோழமன்னரை, "காவிரி புரக்கு நாடுகிழ வோற்கு"(27:171) என்று குறிப்பிடுகிறது. நாடாளும் மன்னரே நாடுகிழவர் என்று அடையாளப்படுத்தப்படுவர். வேளிரும் வேந்தர்க்கு இணையானவரே.

பாகவதம் என்ற நூல் கங்கையாற்றுப் பகுதியை ஆளும் அரசனை, "கங்கை புரக்கும் நாடு கிழவோன்" என்று குறிப்பது தேசம் ஆளும் அரசனே நாடுகிழவோன் ஆவான் என்பதாம்.

குன்று சூழ் இருக்கை நாடுகிழவன் நன்னன்

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய் நன்னனை *மலைபடுகடாம்* என்ற நூலில் பாடியுள்ளார். இதன் நச்சினார்க்கினியர் உரையில்,

குன்றுசூழ் இருக்கை நாடுகிழவனே

என்று நன்னன் பாராட்டப்பட்டுள்ளான். பாடலடியில் வேளிர் தலைவன் நன்னன் சேய் நன்னன் நாடுகாவல் செய்த மன்னர் குடியினன். தமிழ் நாட்டின் பல பகுதிகளை வேளிர்கள் ஆண்டார்கள் என்று பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் ஆட்சியால் அறியமுடிகிறது. கல்வெட்டுகளில் வேணாடு என்று காணப்பெறுவது இதற்குச் சான்றாகும். வேளிர்கள் இயல்பாகவே நாட்டினை உடையவர்கள். வேந்தனாகிய மூவேந்தர்கள் வேளிர்க்கு அரசு வழங்குவது தொன்று தொட்டு நடைமுறையில் இருந்த தண்டநீதிமுறைமையாகும்.

நாடுகிழவோர் சேரர்

பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்து பரணர் கடல்பிறக் கோட்டிய சேரன் செங்குட்டுவனைப் பாடியது ஆகும். நாடு கிழவன்

என்பான் "நாடு கெழு தாயத்துக்குரியவன்" என்பது பரணரின் கருத்தாகும்.

விழுமியோர் துவன்றிய அகன்க ணாட்பின்
எழுமுடி மார்பி னெய்திய சேரல்

என்று சேரர் குல மரபு பரணரால் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளது. 'எழுமுடி' என்பது இருபெரும் வேந்தரான சோழனையும் பாண்டியனையும் வேளிர் ஐவரையும் வென்று, அவர்களுடைய நெடுமுடிகளாலான பொன்னால் செய்த ஆரத்தை மார்பிலே சேரவேந்தர் அணிந்திருந்தனர் என்பதால் வேளிரும் மணிமுடி சூடிய அரசமரபினர் என்று துணியலாம். வேந்தரும் வேளிரும் நாடுகெழு தாயத்திற்கு உரியவர்.

பதிற்றுப்பத்துக்கு உரை எழுதிய அறிஞர்களில் சிறப்பான உரை எழுதியவர் அவ்வை துரைசாமியார் ஆவார். மேலே கண்ட பாடல் அடிகளுக்கு அவர் எழுதிய உரையில்:

வீரர்க்குரிய சால்பு அனைத்தும் நிரம்பிய சான்றோ ரென்றற்கு விழுமியோர் என்றார். எதிர்த்த வேந்தர் எழுவரை வென்று அவர் முடிபொன்னாற் செய்த ஆரமணிந்த மார்பு என இயைப்பினு மமையும். தும்பையும் அம்பும் வில்லும் நெஞ்சும் எஃகமு முடைய விழுமிய விழுமியோர் என இயையும் என்றார்.

(பதிற்றுப்பத்து பக். 209).

சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் தாம்பாடிய (பதிற்று. 66) பாடலில் அச்சேரவேந்தனை "நாடு கிழவோய்" என்று குறிப்பிடுகின்றார்; ஊர்கள் பல உடைய நாட்டின் தலைமகன் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்கிறார்.

அரிசில்கிழார் பாடிய பதிற்றுப்பத்தின் எட்டாம் பதிகம் செல்வக்கடுங்கோவுக்கும் வேளாவிக் கோமான் பதுமன் தேவிக்கும் பிறந்து முடிசூடி ஆட்சி செய்த சேரமான் பெருஞ்சேரலிரும்பொறை பற்றியதாகும். இம்மன்னனின் தலைமையில் இவன்குல வேளிர்களால் 'ஆன்பயம் வாழ்நர்' என்று சுட்டிக்காட்டப்பெற்ற இடையர் தலைவன் கழுவுள் காமூர் (பதிற்றுப்பத்து 71:17) அழிக்கப்பட்டதையும் தகடூர் எறிந்து, அதிகர் மரபினரை வென்றவன் இச்சேரனே. இம்மன்னனை அரிசில்கிழார் "அகன்கண் வைப்பின் நாடுகிழ வோயே" (பதிற்றுப்பத்து 76:15) என்கிறார். பதிற்றுப்பத்து 9ஆம் பதிகம் குட்டுவனிரும்பொறைக்கு மையூர் கிழான், வேண்மாள் அந்துவஞ் செள்ளை ஈன்ற மகன்

இளஞ்சேரலிரும் பொறையைப் பற்றியது. பெருங்குன்றூர் கிழார் பதிற்றுப்பத்து 88ஆம் பாடலில் "தண்கடற் படப்பை நாடு கிழவோய்" என்றும் 90ஆம் பாடலில் "பெருநல் யானை யிறைகிழ வோயே" என்றும் பாடியுள்ளார். இறைகிழவன், நாடுகிழவன் என்று சேரவேந்தர்குடி பாடப் பெற்றிருப்பதும் சேரர் குடியினர்க்கும் முதியர் என்ற வேளிர் குடியினருக்கும் இடையே ஏற்பட்டிருந்த மணவுறவு இயல்பாகவே ஏற்பட்டிருந்த இரத்த சம்பந்தமானது என்றும் தெரியவருகின்றது.

சோழரும் ஒன்பது வேளிரின் வெண்குடைகளும்

சோழன் கரிகால் வளவனைப் பரணர், பாடிய (அகம். 125) பாடலில்,

வெருவரு தானையொடு வேண்டு புலத்து இறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்
சூடா வாகைப் பறந்தலை ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த
பீடுஇல் மன்னர் போல

என்று கரிகாற் சோழனின் வெற்றி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இம்மன்னனை எதிர்த்துக் களம் நின்றவர்கள் ஒன்பது குடையுடைய வேளிர்கள் ஆவர். பேரரசர்களுக்கு மட்டுமே வெண் கொற்றக்குடை உண்டு என்று கொள்ள முடியுமா? ஒன்பது பேர் தமக்குரிய வெண்குடைகளைப் போர்க்களத்திலே இழந்து போனார்கள் என்று பரணர் குறிப்பிட்டுள்ளார். கரிகாலன் மரபிலே தோன்றி அரசு உரிமைப்போர் என்று இதைக் கொண்டால் இவர்கள் சோழ மரபிலே தோன்றி அரசுக்கு உரிமை பாராட்டிய வேளிரான சோழகுடியினர் என்று உணரலாம்.

பதிற்றுப்பத்து நூலின் ஐந்தாம் பதிகம்,

ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து

என்பதால் அரச மரபிலே தோன்றிய சோழகுடியினர் பலரும் வெண்கொற்றக்குடைக்கு உரிமையுடையவராக இருந்த வேளிர் ஆவர். இந்த உரிமை அவர்களுக்குத் தொன்றுதொட்டே இருந்து வந்ததாகும்.

சேரநாட்டு வேளிர் 14 பேரின் வியன்குடைகள்

பரணர் பாடிய அகப்பாடல் ஒன்று போர்க்குடி மரபிலே தோன்றிய வேளிர் பற்றியும் இடையர் தலைவன் கழுவுளின் காமூர் பற்றியும் தெரிவிக்கிறது. (அகம். 135)

அடுபோர்
வீயா விழுப்புகழ் விண்தோய் வியன்குடை
ஈர் ஏழு வேளிர் இயைந்து ஒருங்கு எறிந்த
கழுவுள் காமூர் போல

என்பதால் சேரநாட்டில் காமூர் என்ற பகுதியில் ஆட்சிசெய்தவன் இடையர் தலைவன் கழுவுள் ஆவான்; அவனை அடுபோர் செய்கின்ற, விழுப்புகழ் உடைய வானளாவிய வெண்கொற்றக் குடைக்குரிய பதினான்கு வேளிர் ஒன்று திரண்டு அழித்தனர். வேளிர்குடியினும் வேறானவன் இடையர்தலைவன் என்பது பரணர் கருத்தாகும்.

வேளிர் வரலாறு எழுதிய அறிஞர் மு. இராகவையங்கார் இடையரை வேளாளர் பட்டியலில் இணைத்து இடையரும் வேளிரே என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் பரணரின் அகப்பாட்டு (135) வேளிர் மரபினர் பட்டியலில் கழுவுள் என்பானைச் சேர்த்துச் சொல்லவில்லை. முன்பு சுட்டிய பதிற்றுப்பத்து 71ஆம் பாடலிலும் வேறு பாடல்களிலும் கழுவுளின் வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆன் பயம் வாழ்நர் எனும் கழுவுள் என்பான் சேரமான் பெருஞ்சேரலிரும்பொறையாலும் அவன் மரபுச் சிற்றரசர்களான வேளிர் அரசர்களாலும் தோற்கடிக்கப்பட்டான் என்று கருத இடமுண்டு.

அடுபோர் வேளிர் என்று அடையாளப்படுத்தப்பட்ட போர்க் குடி மரபினரைப் பற்றிச் சங்ககாலப் புலவர் மருதனிள நாகனார் (அகம். 206)

அடுபோர் வேளிர் வீரை முன்துறை
நெடுவெள் ளுப்பி னிரம்பாக் குப்பை

எனக் குறிப்பிடுவதிலிருந்து வேளிர் போர் மரபினர் ஆவர்.

வஞ்சிவேள்

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அமைந்த செங்காளிப்பாளையம் நத்தமேடு (கரூர்) கல்வெட்டு (தமிழ்நாட்டுக் கல்வெட்டுத் தொகுதி - மூன்று, பக். 119)

> **ஸ்ரீ தென்னவன் வஞ்சி வேளாஇன**
> **இரவி குலாவன் மணவாட்டி**
> **நிறந்தேவி வஞ்சி வேளான்கேய்**
> **ஐம்பது பொன் குடுத்து**

என்கிறது. குடையூர் மகாதேவருக்கு நொந்தா விளக்கு எரிப்பதற்கும் திருவமிர்து படைப்பதற்கும் பொன்னும் கொடுத்து நிலமும் வழங்கப்பட்டது.

ஸ்ரீ தென்னவன் என்ற திருப்பெயரால் சுட்டப்படும் வஞ்சி வேளானை இரவி குலாவன் என்று கூறுவதால் இவன் சேரர் மரபினன் ஆவான். வேளிர் பற்றி ஆய்வோரின் மேலான கவனத்திற்கு இக்கல்வெட்டு பெரிதும் பயன்படும். வேந்தரும் வேளிரும் இரவிகுலம், சந்திரகுலம் என்றே தம்மைக் குறிப்பிட்டனர். வேந்தர் பட்டம் பெற்ற வேளிர் உரிமைக்குலமாம்.

தொல்குல மரபான யதுகுல சாளுக்கியர் சசிகுலத்தரசர் என்று பல கல்வெட்டுகளில் அடையாளப் படுகின்றனர். முதலாம் இராசாதிராசனின் (கி.பி. 1018 - 1054) மெய்க்கீர்த்தி ''வேள்குல சளுக்கி'' என்றும் வீரராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தி "திங்கள் வழி சளுக்கி" என்றும் கூறுவது இதற்கு மேலும் சான்றாகும்.

ஓமாய நாடு கிழவனாயின ஊர்வேளான்

கி.பி. 10ஆம் நூற்றாண்டுத் திருவிடைக்கோடு (கல்குளம்) கல்வெட்டில் (79/1969 கன்னியாகுமரி கல்வெட்டுத் தொகுதி நான்கு) மருத்தூர்த் திருவிடைக்கோடு மாதேவர்க்கு ஓமாய நாட்டரையரைச் சார்த்தி ஓமாய நாடுகிழவனாயின ஊர் வேளான் திருநொந்தா விளக்கு எரிப்பதற்கும் திருவமுதுக்குமாகப் பூமி (நிலம்) வழங்கியுள்ளான் என்பது தெரியவருகிறது.

பொன்னி நாடு கிழவோன்

முதலாம் இராசராசசோழனின் ஆட்சியாண்டு 27க்குரிய கி.பி. 1012இல் அமைந்த திருக்கோயிலூர் (விழுப்புரம்) கல்வெட்டு சோழ

அரசர்களின் அதிகாரிகளில் உயர்வு பெற்றிருந்தவனான செழுநீர்வேலி மணிய கம்பன் மஹிமாலய மூவேந்த வேளான் பற்றிக் குறிப்பிடுகிறது. இவன் கோயிலுக்குச் செய்த நிவந்தங்களும் தெரிகின்றன. ஆசிரியப்பாவினால் அமைந்த இக்கல்வெட்டுப் பாடலை ஆராய்ந்த முனைவர் இரா. நாகசாமி கல்வெட்டு இதழில் கட்டுரையாக எழுதியுள்ளார்.

சோழ வேந்தன் முதலாம் இராசராச சோழனின் பெருமைகளை மெய்க்கீர்த்தியாகவும் இக்கல்வெட்டுப் பாடல் தெரிவிக்கிறது.

ஒன்பது வேலியில் அடைகுன் றகர்க்கும்
ஒன்பது வேலியுடைய உரவோன்
கோம்பர் நாடுங் குளிர்மலர்ச் சோலை
அம்பர் நாடன் ஆலங்குடிக் கோன்
தெண்டிரை பழனத் திரைமூர் நாடன்
வண்டிரை துயா பொழில் மணற்குடி நாடன்
நேரிய அருமொழி நித்த வினோதன்
காரியம் அல்லது காரியம் நினையா
தாராண் தலைமை கற்பக சதுசன்
பேராண் தலைமை புணர் புயத்து உரவோன்
கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த

என்று சோழ மன்னர் குடியின் ஆட்சி நாடுகளில் அரசகுடிக்கு இருந்த உரிமையையும் பெருவேந்தன் இராசராச சோழனின் உயர்வுகளையும் கூறுகிறது.

சங்க காலத்தில் உயர்குடி வீரனை உரவோன் என்பது போன்று இக்கல்வெட்டுப் பாடலிலும் உரவோன் என்று குறிப்பிட்டுள்ளனர். கோஅம்பர் நாட்டின் தலைவன் அம்பர் நாடன் என்று நாட்டின் உரிமையைப் பாராட்டியுள்ளனர். சோழ அதிகாரியான வேளிர் தலைவனான வேலியர்கோன் வீதிவிடங்கன் விறல் கம்பன், ஆலியல் மான் சோழன் அதிகாரி என்றும் "தடநீர் நலந்தரு பொன்னி நாடு கிழவோனே" என்றும் வேளிர் குடியினர்க்கு இருந்த பழம்பெருமையும் தொல்குடிச் சிறப்பும் இக்கல்வெட்டில் வெளிப்படுகின்றன.

நாடுகிழவனான மூவேந்த வேளான்

முதலாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு 29க்குரிய கி.பி. 1013 - 14இல் அமைந்த தஞ்சைப் பெரிய கோயிலில் அமைந்த

கல்வெட்டு இம்மன்னனின் உயர் அதிகாரிகளில் ஒருவனான வேளிர்குல மரபினன் தஞ்சைப் பெரிய கோயிலில் ஸ்ரீகாரியம் செய்கின்ற பொய்கை நாடுகிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் பற்றித் தெரிவிக்கிறது. சங்க காலத்தில் நாடுகிழவர் என்போர் வேளிரும் வேந்தருமே. பிற்காலத்தில் அக்குலத்தோரின் வழித்தோன்றல்களுக்கும் அப்பட்டம் தொடர்ந்து வந்துள்ளது.

உயரதிகாரிகளுக்கும் நாடுகிழவன் என்ற திருப்பெயர்

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சடையவர்மன் ஸ்ரீ வல்லவனின் கட்டாரி மங்கலம் (திருச்செந்தூர்) கல்வெட்டில் அரசு அதிகாரிகளாகக் கையெழுத்திட்டவர்களில் இருவர் வேளாகவும் நாடுகிழவோராகவும் இருந்தனர்.

> "இவை புரவரி திணைக்களத்து முகவெட்டி வேள் மங்கலமுடையான் எழுத்து இவை இவ்வூர் நாடுகிழவன் எழுத்து"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாடுகிழவன் திருப்பெயர் உயர் அதிகாரிகளுக்கு அமைந்திருப்பதும் வேளிர் பெயரால் அந்தணர்க்கு வழங்கிய தானம் வேள் மங்கலம் என அமைந்து இருப்பதும் வேள் மங்கலம் என்ற ஊர் பிற்காலத்தில் கட்டாரிமங்கலம் எனப்பட்டதாகவும் கருதமுடிகிறது. கட்டாரி மங்கலத்தின் மேற்பக்கம் வஞ்சிக் குடியிருப்பு ஊர் இருந்ததும் அவ்வூரினருக்குக் கட்டாரிமங்கலம் கோயிலில் சில உரிமைகள் இருந்ததும் தெரியவருகிறது.

கி.பி. 13ஆம் நூற்றாண்டினனான குலசேகர பாண்டியன் ஆட்சிக்காலப் பெருந்துறைக் கல்வெட்டு (திருமெய்யம்) (SII XXII part II No.406)

> கானாடான விருதுராஜ பயங்கர வளநாட்டு
> பெருந்துறை திருமேற்கோயில் தியாக மீகாம
> விண்ணகர் ரெம்பெருமானுக்கு சிரிகண்டன்
> ஆளுடையானான கல்வாயில் நாடாள்வானென்
> எம்பெருமானுக்கு இறையிலி கல்வெட்டிக் குடுத்த
> நிலம் ஆவது தடிமிதி சூலம் செயங்கொண்ட
> சோழன் கானாட்டு வேளானுக்கான நாடு
> கிழவன் நாலில் ஒன்று நிலம்

என்கிறது. செயங்கொண்ட சோழன் வேளான் என்றும் நாடு கிழவன் என்றும் காணியுடையவன் என்றும் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளான்.

சங்க காலத்தில் சோழன் நாடுகிழவோனாகக் குறிக்கப்பட்ட அதே தொடர்ச்சி கி.பி. 13ஆம் நூற்றாண்டிலும் வேளான் பட்டமெய்திய சோழனுக்கும் அமைந்துள்ளது.

நாடுகிழவோன் மலையமான்

மலையமான் திருமுடிக்காரியை மாறோக்கத்து நப்பசலையார் பாடிய புறப்பாட்டு(126)

> வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
> ஓடாப் பூட்கை உரவோன் மருக

என்கிறது. ''பெண்ணையம் படப்பை நாடு கிழவோயே' சிறந்த தலைமையினையும் புறம்கொடாத மேற்கோளினையும் உடைய பெரியோன் மரபிலுள்ளவனே'' என்று பழையவுரை குறிப்பிடுகிறது. பெரியோன் என்ற சொல் உரவோர் உயர்ந்தோர் விழுமியோர் சான்றோர் என்று பொருள்படும். பெரிய குடியில் பிறந்தோர் பெரியோர் குலம். பெரியோன் மரபு என்பது அரச குலத்தின் அடையாளமாகும்.

மலையமான் குலத்தைத் திருக்கோயிலூர்க் கல்வெட்டுப் பாடல் மலையர் திருக்குலம் என்றும் உயர்குடிச் சிறப்பையுடையவர் என்றும் கூறுகிறது. மலையர் குலத்தவர் மலையமான் என்றும் மலாடர் என்றும் பண்டு அறியப்பட்டனர். பழைய உரையாசிரியர் இப்பாடலில் 'முள்ளூர் வேந்தே' என்றே திருமுடிக்காரியைப் பாடியுள்ளார். மலையர் குல மன்னரை வேந்தன் என்று குறிப்பிட்டது மட்டுமின்றி முடியுடைய மன்னர் என்பதாலே சிறப்பாகத் திருமுடிக்காரி என்றும் இப்பாடலின் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

> ...தலைமையையுடைய யானையுடனே அரசு போர்க்களத்தின் கட்படப் பொறுத்தற்கரிய பூசலைச் சிதற வெட்டிப் பெரிதும் பொருந்தாத பகைவரைத் தடுக்கும் பெண்ணையாற்றுப் பக்கத்தையுடைய நாட்டை உடையோய்!
>
> இவர் இலக்கியங்களில் முள்ளூர் மன்னர் எனப்படுகின்றனர்.

உரவோன்! மருக! பொருந! நாடு கிழவோய் என்று பழைய உரையில் விவரித்துள்ளார். தேரில் செல்லும் மலையர் குலம் மலையமான்களாகும்.

அரசவாகை, பார்ப்பன வாகை, வாணிப வாகை, வேளாண் வாகை என நாற்குலத்திற்கும் உள்ள அடையாளம் இலக்கண நூலான புறப்பொருள் வெண்பா மாலையில் சுட்டப்பட்டுள்ளது. அரசவாகையில் பாடப் பெற்றவர் அரசகுலத்தவர் என்று உணரவேண்டும். அரசவாகை என்ற துறையில் வண்ணக்கன் பேரிசாத்தான் என்பார் பாடியுள்ளார். (புறம். 125)

நாடுகிழவன் வேள்ஆய்

அரச மரபான வேளிர் குலத்தில் தோன்றிப் பொதுமீக் கூற்றம் என்னும் பொதிய மலைப்பகுதியை ஆண்ட ஆய்அண்டிரன் என்ற வேள்ஆய் என்பானை முடமோசியார் என்ற புலவர் நாடுகிழவன் என்றும் ஆட்சி முறைமையுடைய வேள் எனவும் குறிப்பிடுகின்றார் (புறம். 135).

உறுமுரண் கடந்த வாற்றற்
பொதுமீக் கூற்றத்து நாடுகிழவோயே

என்று பகைவரது மிக்க மாறுபாட்டை வென்ற வலியையுடைய, யாவரும் ஒப்பப் புகழும் நாட்டையுடையாய்" என்று புறநானூறு பழைய உரை குறிப்பிடுகிறது. இதே பாடலில், அவனை

மன்றுபடு பரிசிலர்க் காணிற் கன்றொடு
கறையடி யானை யிரியல் போக்கும்
மலைகெழு நாடன் மாவே ளாஅய்
களிறு மன்றே மாவு மன்றே
ஒளிறுபடைப் புரவிய தேரு மன்றே (புறம். 135)

பொதியில் மலைக்குத் தலைவனே! இறைவனே! வள்ளன்மை யுடையவனே எல்லோர்க்கும் வழங்கும் வள்ளல் என்று 'மாவேள் ஆய்' என்றார் புறம். 133இல். இம்மன்னன் 'தேர்வேள்ஆய்' என்று சுட்டிக்காட்டப்படுகின்றான். (புறம். 129)

தீஞ்சுனைப் பலவின் மாமலைக் கிழவன்
ஆஅ யண்டிர னடுபோர் அண்ணல்

என்றும் உணர்த்திக் காட்டுகின்றார். மாமலைத் தலைவன் என்பதோடு கொல்லும் போரைச் செய்கின்ற அடுபோர் அண்ணல் என்று வேளிர் குலமகன் ஆய் பாடப்பட்டுள்ளான்.

மேலும் ஆய்.அண்டிரன் என்ற ஆய்வேள் என்ற தலைவனைப் புறம். 375வது பாடல்வழியும் அறியலாம். வறுமையில் நிலை தடுமாறிய புலவர் முடமோசியார் சொல்வதாவது:

நாரும் போழுங் கிணையொடு சுருக்கி
ஏரின் வாழ்நர் குடிமுறை புகாஅ
ஊழிரந் துண்ணு முயவல் வாழ்வைப்
புரவெதிர்ந்து கொள்ளுஞ் சான்றோர் யாரென

ஊழிரந் துண்ணு முயவல் வாழ்வைப் புரவெதிர்ந்து கொள்ளும் சான்றோர் யாரென என்பதால் ஏரின் வாழுநர் (வேளாளர்) என்பாரிலும் வேறுபட்ட ஆய்மன்னன் சான்றோர் எனப்பட்டவன். வேளாண் குடியிலே ஏரின் ஊழ் என்று சிறப்புப் பெற்றிருந்தாலும் இவரைத் தாழ்வாகவே முடமோசியார் சுட்டிக்காட்டியுள்ளார். ஆய்வேள் அண்டிரன் நன்னாட்டுப் பொருநன் என்று போர்க்குடித் தோன்றலாக இப்பாடலில் சுட்டிக்காட்டப்படுகின்றான் வேளிர்தான் வேளாளர் என்று சொல்லிச் சில அறிஞர்கள் இப்பாடல்தனை உற்று நோக்கி உணரவில்லை.

வறுமையால் வாடி, பசியால் பலவற்றையும் உண்டு, ஏரின் வாழ்நர் அதாவது வேளாளரிடம் இரந்து உண்டு வாழ்ந்த உயவல் வாழ்வை நீக்கி என்னைப் பாதுகாத்துக் காப்பாற்றிக் கொள்ளும் சான்றோன் யாரென அறிந்து ஆய் அண்டிரனாகிய உன்னிடம் வந்தேன் என்ற பொருள்படஇப் பாடல் பாடப்பட்டுள்ளது.

ஏரின் வாழ்நர் வீட்டில் உண்டால் இழிவு என்று ஆய்வேளிடம் வந்து உண்டு இன்புற எண்ணிய காட்சியை வைத்தே ஏரின் வாழ்நராகிய வேளாளர் குடியிலும் ஆய்குடி வேறானது என்பதை எண்ணுதல் வேண்டும்.

பிற்காலத்தில் தோற்றம் பெற்ற சுந்தர பாண்டியம் என்ற நூல் அரசனே ஆட்சி அதிகார முதன்மையுடையவன் என்பதோடு பார்ப்பன வாகை, வணிக வாகை, வேளாண் வாகையெனச் சமூக அமைப்பை அடையாளப்படுத்துகின்றது.

தெங்க நாட்டு வேள்

திருநந்திக்கரையில் கி.பி. 855- 860இல் அமைந்த கல்வெட்டுச் சாசனம் (பாண்டியன் செப்பேட்டில் பதிவு செய்யப்பட்ட சாசனம்) விக்கிரமாதித்த வரகுணன் காலத்தியது ஆகும். பாண்டியர்

ஆட்சிக்காலத்தில் ஆட்சி செய்த வேளிர் இனத்து மன்னனின் திருமகள் பற்றிய குறிப்பு வருமாறு:

> தெங்க நாடு கிழவன் மகள் ஆய்குல மாதேவியாயின
> முருகன் சேந்தியைத் திருவடி சார்ந்த இவளுக்கு
> குடியாக அட்டிக்குடுத்த பூமி வள்ளுவ நாட்டு மேற்போட்டு
> பழங்கோப் பற்றில் செங்கண் நாவன் தடி

என்பதாகும். தெங்கநாடு என்பது ஏழ்ஏழ் நாடுகளில் ஒன்றாகவும் கடற்கோளால் அழிக்கப்பட்ட நிலையில் எச்சமாகத் திகழ்ந்ததாகும். தொன்றுதொட்டு ஆட்சி செய்த வேளிர்குடியின் எச்சமாக அமைந்திருந்தது போலும். தெங்கு - என்பது தென்னை என்று வழங்கும். இந்நாட்டின் தலைவர்கள் வேளிர் குலத்தவரே. இவரில் ஓர் அரசன், பாண்டியருக்கு அடங்கிய சிற்றரசன் தெங்க நாடுகிழவன் என்று அழைக்கப்பட்டான். இம்மன்னன் மகள் ஆய்குல மாதேவியான முருக சேந்தி ஆவாள். இவள்பெயரை உணர்ந்தால் இவள் ஆய்குலத்தவள் ஆவாள்.

முருகன் வேளிர் மற்றும் நெடுவேள் என்னும் சேனாதிபதியாவான். சேந்தி என்ற சொல் சேந்தன் வேந்தன் என்ற சொல்லோடு தொடர்புடையது. ஆய்குல மாதேவியின் திருவடியைச் சார்ந்த பணிமகளைக் குடியாகக் கருதி வழங்கிய பூமி வள்ளுவ நாட்டு மேற்கோட்டுப் பழங்கோப் பற்றாகும். பழங்கோப் பற்று என்பது பூர்வஅரசர் நிலம் என்று பொருள்படும். இந்நிலம் அரச மாதேவியின் பணி மகளுக்குத் தரப்பட்டது.

செப்பேட்டில் தவறான பாடம்

கி.பி. 860இல் அமைந்த பார்த்திவசேகரபுரம் சாசனம் கோகருந்தடக்கன் என்ற ஆய் மன்னனுக்குரியதாகும். இச்சாசனத்தில்

> பணிமக்கள் சட்டரைப் பிழைக்கப் பேசுவார் 1 காசு தண்டப்படுவது
> இப்பரிசு தெங்க நாட்டு வெண்ணீர் வெள்ளாளன் தெங்க நாடு
> கிழவன்

என வந்துள்ள பகுதியில் தெங்க நாடு குறிப்பிடப்பட்டுள்ளது எனப் பாண்டியர் செப்பேட்டில் பதிவுசெய்துள்ளனர். செப்பேட்டின் நிழல்படமும் செப்பேட்டுத் தொகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பார்த்திவ சேகரபுர சாசனத்தில் வேளான் என்பது 'வெள்ளாளன்' என்று தவறாகப் படிக்கப்பட்டுள்ளது என்று அறிஞர்கள் பலர் உணர்ந்துள்ளனர். செப்பேட்டின் நிழல்படத்தில் "வெள்ளாளன் என்று படிக்கப்பட்ட அப்பகுதி சிதைந்துள்ளதால் தவறான பாடத்திற்கு வழிவகுத்துள்ளதாகத் தெரிகிறது.

குறிப்பாகப் பணிமக்கள் அடிமைகளை வைத்துக் கொள்ளக்கூடாது என்று செப்பேட்டில் காணப்பெறுவதால் தெங்க நாடுகிழவன் வேள் குலத்தவன் ஆவான்.

ஆய்குலத்தவரும் வேளாளரும் ஒருவரல்லர். புறம். 375ஆம் பாடலில் மன்னரிலிருந்து ஏரின் வாழ்நர் ஆகிய வேளாளர் வேறானவர் என்று சங்ககாலப்புலவர் முடமோசியார் பதிவு செய்துள்ளார் என்பது முன் பகுதியில் பதிவு செய்யப்பெற்றுள்ளதைக் காண்க.

ஆய்குல மாதேவி வழங்கிய நிலம் அவளின் திருவடி சேர்ந்த பணிமகளுக்கு ஆகும் . பணிமக்களின் தலைவராகத் தொடர்ச்சியாக வேளாளரே சித்திரிக்கப்பட்டுள்ளனர். பார்த்திவ சேகரபுரம் சாசனத்தில் அந்தணர்கள் தங்கள் வேள்விச் சாலைகளில் வெள்ளாட்டிகளைப் பணி மகள்களாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வெள்ளாளன் என்ற சொல்லோடு வெள்ளாட்டி என்ற சொல் தொடர்புடையது ஆகும்.

பார்த்திவசேகரபுர சாசனத்தில், "பணிமக்கள் சட்டரைப் பிழைக்கப் பேசுவோர் 1 காசு தண்டப்படுவது" என்பதில் வருவது வெள்ளாளருக்கு அளிக்கப்பட்ட தண்டமுறைமை சட்டமாகும்.

இறை கிழவோய் (இறைவன்)

சேரமான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய பதிற்றுப்பத்து ஆறாம்பத்தில்,

> **ஒல்லார் யானை காணின்**
> **நில்லாத் தானை இறை கிழவோயே**

(பதிற்றுப்பத்து, 54:16–17)

"பகை வேந்தருடைய யானைப் படையைக் கண்டால் நொடிப் போதேனும் நில்லாது சென்று தாக்கும் தானைகளை உடைய அரசனாந் தன்மையைத் தனக்கே யுரிமையாக யுடையோனே"

என்றார். இறைகிழவன் அரசன் என்று அறிவதால் நம் அரசகுடி மன்னர்களைக் கடவுளாக வணங்கிப் போற்றி வந்துள்ளனர்.

நாடுகிழவன்

> ஜெயங்கொண்ட சோழப் பெருவாயில்
> நாடு கிழவன் எழுத்து

(கி.பி. 1261 ஆட்சி 11 - சடையவர்மன் சுந்தரன் பெருமாநாடு வட்டம் மைலாபட்டி, குளத்தூர் தாலுகா, புதுக்கோட்டைக் கல்வெட்டு, எண் 350.)

5. வேளிரே ஒளியர்

வள்ளன்மையும் தாளாண்மையும்

வேளாண்குடியின் நிலை அறிய முற்படாமல், தாளாளர் என்போர் யாரென உணராமலே சில மூல பாடங்களில் வேளான் என்பதை வேளாளர் என்று சில நூற்றாண்டிற்கு முன்னர் ஏடுகளில் திருத்தம் செய்துள்ளனர். தாளாளர் என்போர் யார் என்றுகூடத் தெரியாமல் அறியாத செயலாக நூல்களைப் பதிவு செய்தனர். வள்ளன்மை எனில் வேளிர் தொடர்புடையது என்று கூட மறந்துவிட்டனர். கடையெழு வள்ளல்களில் ஐவர் வேளிர். இருவர் வேடர், வேட்டுவர் எனப்பட்ட மறக்குலத்தவர். நாலடி நானூறு (100)

> அடுக்கிய மூவுலகும் கேட்கும் சான்றோர்
> கொடுத்தார் எனப்படும் சொல்

என்பது வள்ளன்மையாகும். முல்லைக்குத் தேரினை அளித்த பாரியையும் மயிலுக்குப் போர்வை நல்கிய பேகனையும் பழமொழி நானூறு சான்றோர் என்று சுட்டிக்காட்டுகிறது. புறப்பொருள் வெண்பாமாலை மேற்கோள் பாடல் பாரியையும் பேகனையும் 'இறைவன்' என்று எடுத்தோதுவது உணர வேண்டும். எனவே வேளான் என்பவனே தாளாளர் ஆவான். விருந்தோம்பல் வேளாளரோடு பொருந்துவதால் தாளாளர் என்ற சொல் வேளாளர்க்குரியதாகாது. கீழ்க் காணும் பாடலில், வேளான் என்பது வேளாளன் எனத் திருத்தம் பெற்றிருந்தது.

> வாளார்கண் செந்துவர்சாய் மாமலையான் தன்மடந்தை
> தோளாகம பாகமாப் புல்கினான் தொல்கோயில்
> வேளான் ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்கும்
> தாளாள ராக்கூரில் தான்தோன்றி மாடமே

(திருஞான சம்பந்தர் தேவாரம் 1919
திருஆக்கூர் தான்தோன்றி மாடம்)

காலிங்கர் மன்னவனது கைவண்மை பற்றிக்கூறும் திரிகடுகப் பாடல் தாளாளனையும் வேளாளனையும் வேறுவேறாகக் குறிக்கிறது

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்து இருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் – இம்மூவர்
கேள்ஆக வாழ்தல் இனிது. (திரிகடுகம் 12)

இதனால் ஆக்கூர் பதிகத்தில் திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய பாடல்களில் வேளான் என்பதை வேளாளன் என்று மாற்றம்செய்து பிழை நிகழ்ந்துள்ளது. ஆக்கூர்ப் பகுதிக் கல்வெட்டுகளும் இதை ஆய்ந்து அறிய எடுத்துக் கொள்ளப்பட்டன.

சான்றோர் ஒளியுடையவர்

தகடூர் யாத்திரை நூலில்,

“.... சான்றோர் தம்
தோற்றமும் தேசும் இழந்து (புறத்திரட்டு 13:4)

இந்நூலுக்கு உரை செய்த அறிஞர் இளங்குமரன் சான்றோர் என்ற உயர்குடி வீரரைப் “பெருமிதமான ஒளியினையுடைய வீரர்” என்றார்.

அறநெறிச் சாரம் என்ற நூல்,

ஒளியு மொளி சான்ற செய்கையுஞ் சான்றோர்

தெளிவுடைய னென்று உரைக்குந் தேசும்

என்பதாலும் ‘சான்றோர்’ என்பார் ஒளியராவார்.

வள்ளுவப் பெருமகனாரும் குறளில் (வாய்மை)

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு (குறள் 299)

என்றார். ஒளியோடு தொடர்புடைய சான்றோர் பொய்மை கூறினால் அது அவர்களின் புகழ், பெருமை, சிறப்பு இவைகளை அழிக்கும் என்பதால் ஒளியுடைய அறிவார்ந்த சான்றோர் உண்மை நிலையிலிருந்து மாறுதல் பெறக்கூடாது என்று எடுத்தோதினார்.

திருநாவுக்கரசர் தேவாரம் , மழபாடி பதிகம்,

ஒரு சுடரா யுலகேழு மானான் கண்டாய்
ஓங்காரத் துட்பொருளாய் நின்றான் கண்டாய்
விரி சுடராய் விளங்கொளியாய் நின்றான் கண்டாய்
விழவொலியும் வேள்வொளி யினன்கண்டாய்

என்கிறது. அதிமரபின் வரும் பெரிய அரசர் குலத்தில் அவதரித்த சோதி வடிவ மங்கைதனைத் தடாதகையார் அவதரித்த திருவிளையாடல் ஒளியுடையவள் என்கிறது.

பட்டினத்தார் பாடல்கள், கந்தபுராணம், தணிகைப்புராணம் போன்ற பல இலக்கியங்களில் இறைவன் ஒளியுடையவன் என்று எடுத்துச் சொல்லியுள்ளனர்.

1. முறை செய்யும் மன்னன் இறை என்று வைக்கப்படும்
2. வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துள் வைக்கப்படும்

என்பதாலேயே ஒளியுடைய அரசர் இறைவனாகக் கருதி "தேவர்" என்று அடையாளமிடப்பட்டனர்.

இறைவனே வேள்

பெருந்தொகை என்ற பாடல் தொகுதியை மு.இராகவையங்கார் பதிப்பித்துள்ளார். இந்நூலில் பாடல் 142இல் "ஒளியுடைய வேந்தர்'' என்று குறிப்பிடப்படும் அருகக் கடவுள் பாடல் எண் 151 இல் 'சின வேள்' எனப்படுகிறார்.

ஈஸ்வர மைந்தர் எனப்பட்ட தேவசேனாபதி 'செவ்வேள்' முருகவேள் எனப்படுகிறார். இவர் போன்று மன்மதன் என்பார் சிலை வேள், மன்மதவேள் எனப்படுகிறார். நெடுவேள் என்று திருமாலுக்குச் சிறப்புப் பெயர் இருப்பது அறியத்தக்கது. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் ''தெய்வ நல்வேள்'' என்று என்று குறிப்பிடுவது உணர்தற்குரியது.

விசைய மங்கலம் சந்திரப் பிரபா தீர்த்தங்கரர் கோயில் கல்வெட்டு (தொடர் எண் 1210 / 2003 கோவைத் தொகுதி) ''கொங்கு வேளிரையும் தேவாசிரியரையும் தோழன்மாரையும் எழுந்தருளிவித்து விஷி அயன சங்கராந்தி கார்த்திகைக்கு அமுதுபடிக்கும்" என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் கொங்கு வேளிர் என்று இறைவன் பெயர் காணப்பெறுகிறது.

இதனால் வேள் என்ற சொல் உயர்வு பெற்ற வேள்வி தொடர்பான சொல்லாகும்.

கல்வெட்டுகளில் வேள்விப் பலிச் சடங்கு நடத்தி முடி சூடிய வேந்தர் குலம் ''சிவலவேள்'' ''வீரவேள்'' என்று தென்காசி கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது.

குன்றா விளக்கு

"குடி என்னும் குன்றா விளக்கம்" (குறள் 601 - அரசுஇயல் அதிகாரம்) என்பதற்குப் பரிமேலழகர் "தான் பிறந்த குடியாகிய நந்தா விளக்கு" என்றார். காலிங்கர், "அரசர்குலம் என்று எடுத்துரைக்கப்பட்ட கெடாத விளக்கானது" என்றார்.

இறையனார் அகப்பொருள் (களவியல் சூ. 23) மேற்கோள் பாடல்

அறத்தொடு நிலையின் அஃதறிந் திருந்த
சிறப்புடை மரபின் தெய்வம் அன்ன
இருபெருங் குரவரொடு பொருவில் ஆற்றல்
தன்னையர் தம்மை சால்புடை மரபின்
மன்னிய சிறப்பின் மதியோர் தேற்ற

என்கிறது.

மன்னர்க்கு ஒளி

மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னவாம் மன்னர்க் கொளி (குறள் 556)

மணக்குடவர் உரை : மன்னராவர் தமக்குத் தமது ஒளி நிலை பெறுதலாவது செங்கோன்மை நிலைபெறுதல்; மற்று அஃதில்லை எனின் மன்னர்க்கு நிலையவாம் ஒளியானவை (எ-று) என்கிறது.

மன்னுதல் என்பது நிலைபெறுதல்; மன்னவாம் என்பது நிலையவாம் என்பது; ஒளி என்பது குலமும், குணனும், கல்வியும், உணர்வும், பிறவும் ஆகிய ஒளிகளான் பெறு பொருள்கள் என அறிக.

பரிமேலழகர் உரை: "அரசர்க்கு ஒளி மன்னுதல் செங்கோன்மை யான் ஆம்". இந்த உரையே சிறந்தது எனத் தண்டபாணி தேசிகர் போற்றிப் புகழ்கின்றார்.

நச்சினார்க்கினியர்: "ஒளி என்பது அரசனுக்குள்ள கடவுள் தன்மை" என்றார்.

இறைமகனாகிய மன்னனை இறைவன் என்பதாலேயே தெய்வமாகக் கருதப்பட்ட அரசன் "தேவன்" எனப்பட்டான். மேலே சொல்லப்பட்ட உரையாசிரியர்கள் அனைவரும் ஒளியுடையவனே அரசன் என்று உணர்த்தி யுள்ளனர் என்பதில் எவர்க்கும் ஐயமில்லை. *பழமொழி நானூறு*, "தலைமகன் தன்னொளி நூறாயிரவர்க்கு நேர்" என்று குறித்து இருப்பது உணர்தற்குரியதாம். (*பழமொழி* 214)

வேந்தர்க் கொளி

கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி (குறள் 390)

மணக்குடவர் உரை : "கொடுத்தலும் தலையளி செய்தலும் செங்கோன்மையும் குடிகளைப் பாதுகாத்தலும் என்று இந்நான் கினையும் உடையவன் வேந்தர்க்கெல்லாம் விளக்காம்" என்றார். மேலும், "அரசன் செய்யும் திறம்" என்றார்.

பரிதியார் உரை: "கொடையும், செங்கோலும், நீதியும், குடியைப் பார்த்துக் காத்தலும், கருணையும் இந்த நாலுகாரிய முள்ளவன் "இராச சூரியன்" என்றவாறு என்றார்.

பரிப்பொருள் உரை : "வேண்டுவோர்க்கு வேண்டுவன கொடுத்தலும் யாவர்க்கும் தலையளி செய்தலும் முறை செய்தலும் தளர்ந்த குடிகளைப் பேணுதலுமாகிய இந்நான்கு செயலையும் உடையவன் "வேந்தர்க்கு எல்லாம் விளக்காம்."

தண்டபாணி தேசிகர் விளக்கம்: "வேந்தர்க்கு ஒளி" என்ற குறள்பா அடிகளுக்கு உரையாசிரியர் பலரும் வேந்தர்க்குள் ஒளி என்று உரைத்தனர். மணக்குடவர் "அரச இனத்திற்கே கலங்கரை விளக்கம் போல்வர்" என்றார் என்பதையே சிறந்த உரையாகக் கருதியுள்ளார். எனவே வள்ளுவன் சொல்லிய கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் ஆகிய நான்கும் உடையவனே இராசாக்களுக்கெல்லாம் விளக்காம் என்பதே ஏற்புடையதாகும்.

"அரசன் திறம்" "இராச சூரியன்" "கலங்கரை விளக்கம்" என்றுரைத்தமை பலவும் அரச இனத்தவரையும் அவரில் மேம்பட்ட வேந்தரையும் உணர்த்திக் காட்டின. மேம்பட்ட மன்னரைச் சிறப்பித்தவர் "சாலக்குடியோம்பல் வல்லான் அரசன்"

DEPARTMENT OF
LIBRARY.
Acc No
Date

எனக் குறிப்பிடுவதும் (*திரிகடுகம் 13*) மக்களைக் காத்து ஓம்புதல் வல்லான் அரசன் என்பதும் காண்க. குடிகாவல் அரசமரபிற்கே உரியது என்பதாலேயே தேவநேயப் பாவாணர் "குடிகாவல் மரபு" பற்றி ஆராய்ந்து அறிந்து உணர்த்தியுள்ளார்.

திருத்தக்க தேவரின் *சீவக சிந்தாமணி* "மன்னவன் தன்னொளி, கறங்கு தெண்டினை வையகங்காக்குங்கால்" என்று குறிப்பிடுகிறது. "ஒளியுடைய மரபிலே தோன்றிய வேந்தர்குடியே உலகில் மக்களைக் காத்தல்" என்று அது வலியுறுத்துகிறது.

ஒளியும் அரசரும்

ஒளிஒருவற் குள்ள வெறுக்கை இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல் (குறள் 970)

பரிமேலழகர் உரை: ஒருவனுக்கு ஒளியாவது பிறரால் செயற்கரிய செய்வோம் என்று கருதும் ஊக்கமிகுதி என்று அரசனை அடையாளமிடுகிறது.

காலிங்கர் உரை: "தமது உள்ளம் என்றும் பெருமக்கள் சேறலே, ஒருவர்க்கு இவர் பெரியர் என்று பேர் விளங்கும் தோற்றம் என்றார்." பெரியோர் என்பதே அரசரைக் குறித்த சொல் என்பது இலக்கியங்கள் சொல்லும் தெளிவான பாடம்.

தண்டபாணி தேசிகர்: "உண்ணான் ஒளி நிறாஅன் ஓங்கு புகழ் செய்யான்" என்ற நாலடியார் பாடல் பகுதியும் "மன்னவன் தன்னொளி" முதலான *சீவக சிந்தாமணி* பாடலிலும் சங்க காலச் செய்யுளிலிலும் அரசர் பாலுள்ள கடவுட் தன்மை, புகழ், வடிவு, மன்னவன் ஒளி எனப் பல பொருட்கள் காணப்பெறுகின்றன. ஆதலால் அவற்றிற்கிடையே அமைந்த பரிமேலழகர் உரையே சிறந்தது எனத் தண்டபாணி தேசிகர் முடிவு கொண்டுள்ளார்.

பரிமேலழகர் உரையில் மிகத் தெளிவாக ஒளியை அரசரோடு பொருத்தியே காட்டியுள்ளார்.

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும் (குறள் 698)

பரிதியார் உரை: "இவர்க்கும் நமக்கும் இப்படி நட்பு - இவர் நமக்கு இன்னமுறையாம் என்று இப்படி அரசரை அவமதியாது அவர்மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்."

காலிங்கர் உரை: "இவர் மிகவும் இளையராய் இருந்தார் என்றும் கருதிக்கொண்டு இகழாராய் மற்று அவ்வரசர்க்கு

அவரது குலமரபினரால் உளதாம் நிலைபெற்று வருகின்ற பெரிய தோர் ஒளியுண்டு அன்றே; மற்று அதனோடு சாரக் குறிகொண்டு ஒழுக அடுக்கும் அமைவுடையோர் என்றவாறு" என்றார்.

பரிமேலழகர் உரை: "இவர் நம்மின் இளையார்" என்றும் எமக்கு இன்னமுறையினையுடையவர் என்றும் அரசரை அவமதியாது அவர்மாட்டு நின்ற ஒளியோடு பொருந்த ஒழுகுதல் செய்யப்படும்" (எ.று). மேலும் "ஒளி உறங்கா நிற்கவும் தாம் உலகம் காக்கின்ற அவர் கடவுள் தன்மை" என்று எடுத்தோதி உயரிய விளக்கம் தந்துள்ளார்.

"ஒளியைத் தலைமை என்றார்" மணக்குடவர். காலிங்கர் "குலமுறையால் நிலைபெறப் பெற்றுவருகின்ற பெரியதோர் ஒளி" என்றார். பரிமேலழகர், "கடவுட் தன்மை உடைய அரசர் உலகம் காக்கும் ஒளியுடையவர்" என்றார். பரிமேலழகர் உரையே சிறந்தது என்று தண்டபாணி தேசிகர் தம் திருக்குறள் உரை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலே சொல்லப்பட்ட உரையாசிரியர்களின் ஆய்வுக் கருத்துகளைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனோடு பொருத்தி உணர்ந்து கொள்க. "இளையன் இவனென உளையக் கூறி" (புறம். 72:2) என்பதானும் "நம்மிற் பொருநனும் இளையன்" (புறம் 78:5) என்பதானும் உணரற்பாலதாம்.

ஒளியை இழப்பார்

"ஒளி இழப்பார் என்ற (குறள் 921) அடிகளுக்கு உரைசெய்த பரிமேலழகர், "கள்ளின் மீது காதல்கொண்டு வாழும் அரசர்கள் தம் ஒளியை இழப்பார்" என்றார்.

மேலும் தம் முன்னோரான் எய்தி நின்ற ஒளியையும் இகழற் பாட்டான் இழப்பர் என்பதாம்" என்று உணர்த்தியுள்ளார். காலிங்கர் உரையில் "பெரியோர் என்று மதிக்கப்படார்" என்றும் மற்றும் "இவர்தம் ஒளியையும் இழப்பார்" என்றும் வலியுறுத்தியுள்ளார்.

திருக்குறளிலும் பிற நூல்களிலும் ஒளி என்பது அரசன் தொடர்புடையது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அமைந்த தமிழ் அகராதி சேந்தன் திவாகரம் (22.63) ''வாளே ஒளியும் வாளுடைப் படையும் என்பதால் வாள் என்பது ஒளியுடையது" என்று விவரித்துப் போர்க்குடியோடு பொருத்திக் காட்டுகிறது. புறப்பொருள்

வெண்பாமாலை என்ற இலக்கண நூல் மேற்கோள் பாடல் வீரக்குடியை மூத்தகுடியொடு எடுத்தோதி மலையின் கண் தோன்றிய வீரக்குடியினரான வேளிரை,

> **கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
> **வாளோடு முன்தோன்றி மூத்த குடி**

என்று அரசச்குடியை சிறப்பிக்கிறது.

மு.இராகவையங்காரால் பதிப்பிக்கப்பட்ட பெருந்தொகைப் பாடல்களில் வேளாண்குடியினர் நிரை காத்து ஓம்புதலால் அரசன் ஒளி பெறுகிறான் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சிலர் பிழையாகப் பதிப்பித்த பாடங்களை வெள்ளாளரோடு பொருத்தித் தவறு செய்து வருவது வருந்துவதற்குரியது.

கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் நிழல் என்ற வீரர் ஒளியொடு தொடர்புடைய வீரராகக் காணப்பெறுகின்றனர். பட்டினப்பாலை (274) நூலுக்கு உரை செய்த நச்சினார்க்கினியர் ''ஒளி நாட்டார் தாழ்ந்து வீரம் குறைய'' என்று ஒளியர் பற்றித் தெரிவிக்கின்றார். ஒளிநாடு வேளிர்க்குரியது. பல் ஒளியர் என்பது பல அரசராகிய வேளிர் என்பதாம். ஒளியர் பற்றிய உரையில் 'வீரம் குறைய' என்பதிலிருந்து ஒளியர் என்பார் வீரக் குடியினரே; 'தாழ்ந்து' என்பது உயர்ந்த நிலையில் நாடாண்ட வேளிர் தாழ்வு பெற்றதை விளக்குகிறது. இவ்வுரையின்கீழ் ''ஒளியராவர் மற்றை மண்டலத்திற்கு அரசராவதற்குரிய வேளாளர் என்பது இடைச்செறுகலாகலாம்.

மற்றைய மண்டலம் என்பது சோழ மண்டலம் நீங்கிப் பிற மண்டலங்கள் அல்லது தமிழ் நாடு நீங்கி வேறு மண்டலங்கள் என்று பொருள்படக்கூடும். அகம்படிய அரசரான கருணாகரத் தொண்டமான் போன்ற வாணகுல அரசர்கள் வேளாண்குடிக்கு உரிமை பாராட்டுகிறார்கள். இவ்வாறு தெரிவதால் வேளாளர்கள் பிற மண்டலங்களை ஆளுவதற்குரிய அரசர்கள் என்று எவ்வாறு பொருள்படும். பிற்காலக் கல்வெட்டுகளில் பெரும்பாலும் வேள் குலத்தவரே பல மண்டலங்களில் ஆட்சியாளராகச் சோழராட்சியில் நியமனம் பெற்றனர். மூலநூல்களில் ஒளி அரசனொடு சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் பொழுது இதற்கு மாறாக நச்சினார்க்கினியர் உரை எழுதி இருக்க மாட்டார். மேலும் அருவா நாட்டு அரசர் தொழில் கேட்டது என்பது இவர்

பணிமக்கள் குழுவில் தோன்றிய அரசர் என்று புலனாகிறது. வரி 281க்கு உரையில் புல்லிய இடையராய்க் கிளை முழுதும் கெட்டு போகவென்றும் ''இருங்கோவேளிரின் ஐம்பெரும்குலம் குறைந்து போகவும்'' என்றும் எழுதி இருப்பதிலிருந்து புன் பொதுவர் என்பார் அரசகுலத்தவரான வேளிர் அன்று என்று புலனாகிறது. வேணாடு, கோனாடு, பூழிநாடு, எழில்நாடு என்பன வேள்குலத்தவரின் எச்சமாகும். இதுவே ஒளிநாடுகள் ஆகும். மன்னனுக்கு ஒளி என்பது வேளிரையும் வேந்தரையும் குறித்து நின்றது. இதனாலேயே மூவேந்தரும் அவர்குலத்தவரான வேளிரும் ஒளியின் அடையாளமாகச் சந்திராதித்தியகுலத்தவர் என்றார் என்பதாம். ஒளிநாடு வேளாளர்க்குரியதன்று.

ஒளி நாடு

மூல திராவிட மொழியில் (DED R. No. *5496* a), "வேள் என்பதற்கு - விருப்பம், ஒளிவிடு தலைமை என்ற பொருட்கள் தரப்படுகின்றன" என்பதை வேளிர் பற்றிச் சிறப்பான ஆய்வினை மேற்கொண்ட அறிஞர் இரா. பூங்குன்றனின் தொல்குடி அரசியல் என்ற நூலில் (பக். 95) குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்து ஏற்புடையதாகும். தமிழ் நூல்களில் மேலே சொன்ன பொருளுக்குச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. முனைவர் ரோமியா தாபர், வேத மொழியில் காணப்பெறும் ராஜா என்ற சொல்லுக்கும் ஒளி விடுதல், தலைமை பெறுதல், சிறப்பாக இருத்தல், தன்வயப்படுத்துதல் ஆகிய பொருள்கள்தாம் சரியானவை என்றும் வேள் என்ற சொல்லுக்கு அளிக்கப்படும் பொருள்களும் ஒன்றுபட்டிருக்கின்றன (Romila Thapar, பக். 48, என்றும் வலியுறுத்துவார்" (பூங்குன்றன் பக். 95) என இவர் எடுத்தாண்டுள்ளார்.

ஒளி விடுதல் என்ற சொல் இறைவனோடும் அரசர்களோடும் தொடர்புடைய சொல்லாகும். ஒளியர் என்று தமிழகத்தில் எந்த அரச குலமும் தோன்றவில்லை. ஒளியுடையவர் என வேளிரும் வேந்தரும் பழைய இலக்கியங்களில் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளனரே அன்றி வேளாளர் ஒளியர் அல்லர். ஒளியுடையவர் பட்டியலில் இருந்த வேணாட்டு அரசர் பெயரால் ஒளி நாடு இருந்தது என்று உரையாசிரியர் சிலர் குறிப்பிட்டுள்ளனர். வேள்நாடு (சேர நாடு) பற்றிய குறிப்பில் வேணாடரை வென்று அவனது நாட்டினைச் சோழ நாட்டோடு இணைத்ததைக் கல்வெட்டில், 'வேணாட்டரசை வேணாட்டோடு

ஒதுக்கி' என்று முதலாம் இராசராச சோழன் மெய்க்கீர்த்தி குறிப்பிடுகிறது.

தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டுகளில் "சேரமானையும் பாண்டியரையும் எறிந்து" கைக்கொண்டு வந்த பொருட்களை முதலாம் இராசராசன் பெரிய கோயிலுக்கு வழங்கினான் என்று கி.பி. 11ஆம் நூற்றாண்டில் அமைந்த கல்வெட்டு சுட்டிக் காட்டுகிறது. மேலே குறிப்பிட்ட வேணாடு அரசர் சேரமான் குடியினர் என்று கல்வெட்டுப் பாடம் இருக்கும் நிலையில் ஒளிநாடு என்ற வேணாடு சேரர் குடிக்குரியதே; கல்வெட்டுகளில், இலக்கியங்களில் சேரர் பேரரசு வீழ்ச்சிக்குப்பின் வேணாடு என அழைக்கப்பட்ட நிலை தெரிய வருகிறது. இவரை 'வேணாடர் வேந்து' என்றும் 'வேணாடர்' என்றும் அழைப்பதை அறியமுடிகிறது.

ஒளியர் என்ற சொல்லினை வள்ளுவர் திருக்குறளில் 'வேந்தர்', 'மன்னர்' என்ற அரசர்களின் பெயரோடு பொருத்திப் பார்த்துக் குறித்துள்ளார். கி.பி. 9 அல்லது 10ஆம் நூற்றாண்டு நூலான திருத்தக்க தேவரின் சீவகசிந்தாமணியும் ஒளியர் என்று மன்னனையே குறிப்பிடுகிறது.

ரோமிலா தாபர் வேத மொழிகளில் தலைமையுடையவராக ராஜா என்று குறிப்பிடுவது வேளிரைக் குறிக்கும் என்பதில் எவர்க்கும் வேறுபாடு இல்லை. ஆனால் இராசா என்ற சொல் வேளாளர் தொடர்புடையது என்பதை அறிஞர்கள் எவரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

வேற்படைத் தலைவன் ஒளியுடையவன்

திணை தும்பை, துறை நூழிலாட்டு என்ற நிலையில் புறப்பாட்டு (309) வேற்படைத்தலைவன் ஒளி உடையவன் என்று பெருமையுடன் உணர்த்துகிறது அது வருமாறு:

> மாற்றுதற்குரிய வலியொடு பகைவர் பாசறைக் கண்ணே இவன் இருக்கின்றானென்று வெருவுதற்குக் காரணமாகிய ஒப்பற்ற ஒளி வெற்றியாய் உயர்த்தும் நெடிய வேற்படையுடைய என் தலைவனிடத்து உள்ளது.

வீரர்கள் ஒளியுடையவர். இதனை உணர்ந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப்

புறத்திணையியல் சூத்திரம் (21) ''பெரும்பகை தாங்கும் வேலினாலும்'' என்பதனுரையில் "சான்றோர் பெரும்பாலும் வேற்படையையே சிறப்பித்துக் கூறுவாரென்று'' குறிப்பிட்டுப் புறநானூற்றுப் பாடல் (309) தனை மேற்கோள்காட்டிப் பதிவு செய்துள்ளார்.

தலைவனே ஒளியுடைய வீரன் என்பதாலேயே பாண்டியர், சோழர் பல்லவர் செப்பேடுகளில் ஒளியொடு தொடர்புடைய குடியினர் அரச மரபினர் என்று பதிவு செய்துள்ளனர். மூன்றாம் நந்திவர்மனின் குலச்சிறப்பு இயல்புகளைப் பதிவு செய்த நந்திக்கலம்பகம் நூலில் இம்மரபினர் ''சந்திர குல பிரகாசன்'' என்று காணப்படுகிறது. சூரிய சந்திரரும் இயல்பாகவே ஒளியுடையவர் ஆதலால் இக்குலத்திற்கு மூவேந்தரும் உரிமை பாராட்டினர் என்பதாம்.

ஓவியர் குடியினர் ஒளியார்

ஒய்மான் நல்லியக்கோடன் ஒய்மாநாட்டுத்தலைவன் எயிற்பட்டின நாடன் பற்றி நச்சினார்க்கினியர் ஒளியுடையவன் (அறிவுடையோர்) என்று குறிப்பிட்டு குறள்பா (714) தனை மேற்கோள்காட்டிச் சிறுபாணாற்றுப்படையில் தெளிவுபடுத்தி உள்ளார். (சிறுபாணாற்றுப்படை வரி 216), புறப்பாடல் (176).

''பெருமா விலங்கைத் தலைவன்''

பெரிய மாவிலங்கை என்னும் ஊர்க்குத்தலைவன் ஆவான். (சிறுபாணாற்றுப்படை 120).

''நன்மா விலங்கை மன்னருள்ளும்''

என்றும்

''புரவலன் பேரிசை நல்லியகோடன்''

(மேற்படி 125-126)

''ஓவியர் பெருமகன்'' (மேற்படி 122)

என்றும் சுட்டிக்காட்டப்படுகிறான். இவனையே அறிவுடையோர் என்று அடையாளமிட்டு ஒளியர் என்று திருக்குறளை மேற்கோள் காட்டிச் சுட்டிக்காட்டுகிறார்.

திருப்புகழ் (1216) தனில்

குலிச பார்த்திப னுலகு காத்தருள
கோவே தேவே வேளே வானோர் பெருமாளே

இறைமகனைப் பார்த்திபன், கோ, தேவன் வேள் என்று அருணகிரிநாதர் கூறும் பெயர்கள் அரசர்க்குரியதாகும். இப்பெயர்களை இறைவன் மீது ஏற்றிச்சொல்லியுள்ளார்.

''வேதனத்ரய வேளே'' (திருப்புகழ் 1243)

என்று செவ்வேள் முருகன் சுரர்வமிசவேள் உணர்த்தப்படுகின்றான். ''மேலைக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே'' (திருப்புகழ் 600) என்றும் சிறப்பிக்கப்பட்ட தலைமக்கள் இறைவன் எனப்பட்டனர். மேலும்

''காலாளும் வேளும்'' (திருப்புகழ் 545)

என்பது சிந்திக்கத்தக்கதாம். காலாள் என்போர் பணிமக்கள் மேலாள் என்பது (மேன்மக்கள்) வேளிராகும். இதனைக்கூட மு.இராகவையங்கார் உணர்ந்தாரில்லை.

''கிளர் ஒளி நாதர்க் கொருமகன்'' (திருப்புகழ் 944)

என்று ஒளிநாதர் எனும் சிவனின் மகன் என்கிறார். சுரர்வேந்தன் மகளை வேள்முருகன் மணம் கொண்டான் என்பது புராணம்.

''ஞானவேள், குறத்தி துஞ்சும் மணிமார்பன்''

(திருப்புகழ் 895)

மறக்குல மங்கை வள்ளி நாயகியைக் கொண்டதையும் திருப்புகழில் வலியுறுத்தியுள்ளார்.

அந்தணரும் அரசரும் ஒளியரே

''ஒளியோர் பிறந்தவிம் மலர்தலை உலகத்து''(புறம். 53)

எனச் சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறையனைப் புறம். 53ஆம் பாடலில் பொருந்திலிளங் கீரனார் பாடினார் என்பதோடு கபிலர் என்ற புலவர் பெருமானையும் இச்செய்யுளில் குறிப்பிட்டார். "கேள்வி விளங்கு புகழ்க் கபிலர்", "கடுங்கொள் யானைக் கடுமான் பொறையன்" என்று கபிலரும் சேரமானும் குறிக்கப்பெற்றுள்ளனர். ஒளியோர் என்போர் அறிவுடையோர் என்ற பொருளில் குறிப்பிடப்பட்டோர் அந்தணரான கபிலரும் அரச குலத்தவனான சேரமானும் ஆவர். இப்புறப்பாட்டின் பழைய உரையாசிரியர் 'ஒளியோர்' என்றது கபிலர் முதலாயினோரை எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து கபிலரும் சேரமானும் ஒளியோர் என்றும் அறிவுடையோர் என்றும் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.

தொல்காப்பியப் பேராசிரியர் உரையில் "அந்தணரைப் போன்று அரசரும் அறிவுடையோர் ஆகினர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்கள் மட்டுமின்றிச் சுக்கிர நீதி போன்ற வடமொழி வேதங்களிலும் போர் மரபிலே தோன்றிய அறிவுடையோர் தொல்குடி வீரராவர் எனத் தெரியவருகிறது. இவர்களை அறிவுடைய வீரர் என்று அந்நூல் குறிப்பிடுகிறது.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்"(புறம்.)
"மன்னுயிரெல்லாம் மண்ணாள வேந்தன் தன்னுயிர்" (மணிமேகலை).
"மன்னுயிர் ஞாலக்கு! இன்னுயிர் ஒக்கும் இறை" (பெருங்கதை).
"வீங்கு நீர்வேலி வாழ்பவர்க்கு ஆவியாவர் அரசராதலால்".
(சூளாமணி)

என்று நூல்கள் சொல்வதால் மேற்சுட்டிய புறம். 53ஆம் பாட்டின் உரையாசிரியர் முதலாயினோர் என்பது மலர்தலை உலகத்து மன்னரையும் குறிக்கும்.

திருவள்ளுவர் அவை அறிதல் அதிகாரத்தில் "ஒளியார்" என்று தொடங்கும் (714) குறள் பா அடிகளுக்கு உரைசெய்த மணக்குடவர் முதல் பரிமேலழகர் வரை "ஒளியார் என்ற சொல்லிற்கு "அறிவுடையோர்" என்று குறித்திருப்பது உற்று நோக்கி உணர்தற்குரியதாம்.

ஐய்யனாரிதனாரின் இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலை வாகைப்படலம் முறையே "அரச முல்லை, பார்ப்பன முல்லை, அவைய முல்லை என்று தொடர்ச்சியாகவும் சால்பு முல்லை என்று சொல்லியிருப்பதும் உற்று நோக்குதற்குரியது.

வள்ளுவரின் இறையாட்சி அதிகாரம் குறள்பா (எண் 386)வுக்கு உரை செய்த பரிமேலழகர் "பேரத்தாணிக்கண் அந்தணர் சான்றோர் உள்ளிட்டாரோடு செவ்வியனாக இருத்தல் என்பதை "மீக்கூறும் மன்னன் நிலம்" என்கிறார்.

வேளிரும் வேந்தரும் இறைவர்

இந்நாட்டில் அமைந்த இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் உலகினைக் காக்கும் தெய்வ அடையாளமாக இறைவன் என்னும் கடவுள் குறிப்பிடப்பட்டார். நாட்டினைக் காக்கும் நல்லோர் எனும் அரசனை இறைவன் என்று அழைத்து வந்தனர். 'இறைவன்' என்று உணர்த்திக் காட்டப் பெற்ற வேந்தரும் வேளிரும் தங்களை 'இறைவன் குலத்தோர்' என்றும் குறிப்பிட்டுக் கொண்டனர்.

இறைவன் இருக்கும் ஆலயங்களைத் 'திருக் கோயில்' என்றனர். இதுபோல் அரசர்கள் வாழ்ந்த இடங்களும் 'கோயில்' என்று அழைக்கப்பட்டுள்ளன. இறைவனாகிய தேவனுக்கு 'ஆண்டவன்' என்ற திருநாமம் உண்டு. இதுபோன்று மன்னர்கள் ஆண்டவன் என்று அழைக்கப்பட்டனர். கோயில்கள் இருக்கும் இடம் திருத்தலம் எனப்பட்டது. அரசர்கள் திருக்குலத்தார் என்றும் அரசகுடியினர் திருமகனார் என்றும், திருமகளிர் என்றும் திருத்தமக்கையார், திருத்தம்பியர் என்றும் உயர்குடி உணர்வைக் கல்வெட்டுகளில் வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர். 'கோ' எனின் அரசன், ஆதலால் 'கோ' இருந்த இடம் கோயில் எனப்பட்டது. ஆண்டவன் குடிகொண்ட கோயில் 'கோபுரம்' என்று அழைக்கப் பெறுகிறது.

தமிழரின் ஒழுக்கம் கற்பிக்கும் அறநூல் திருக்குறள் என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். இறைவனைப் பரம்பொருளாகக் கண்ட திருவள்ளுவப் பெருமான் அரசனை இறைவனாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

> வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்

என்பதால் நாடு முறை செய்த மன்னனை இந்நாட்டின் இறைவன் என்கிறார் வள்ளுவர். சிறப்பாக வாழ்ந்த உயர் மனிதனே தெய்வமாக வணங்கப்படுகின்றான். இதனாலேயே 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்றனர் போலும். நம் நாட்டில் தோன்றிய திருக்கோயில்களில் இறைவன் குடிகொண்ட கோயில் எனும் வரகுண பாண்டீச்சுவரம், இராசராசேச்சுவரம், இராசேந் திர சோழ விண்ணகரம் என்பவை அரசர்களின் திருப்பெயரை உடைய கோயில்கள் ஆகும்.

சேர அரசர் குடியினரான் ஐயனாரிதனாரின் புறப்பொருள் வெண்பாமாலை (பொதுவியற் படலம்) கற்புமுல்லை மேற்கோள் பாடலில் வரும்,

> இறை காக்கு மிவ்வுலகி னிற்பிறந்த நல்லாள்

என்பதில் வரும்சொல் நாடு காக்கும் அரசனை அடையாளமிடுகிறது. அரசனை இறைவன் என்றே கொண்டனர் நம் முன்னோர்.

பழமொழி நானூறு (74),

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை அளித்தாரை கேட்டறிதும் – சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடு நீர்சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க்கு அணி

என்ற பாடல் முல்லைக்குத் தேரினை வழங்கிய பாரியையும் மயிலுக்குப் போர்வை வழங்கிய பேகனின் செயலையும் போற்றுகின்றது. அவர் அருங்கொடையாளர் எனினும் அறியாத செயலைச் செய்தனர். எனினும் அது அறிமடம் என்றும் "அறிமடமும் சான்றோர்க்கு அணி" என்றும் சிறப்பித்து வேளிர் அரசர்களைப் *பழமொழி நானூறு* உணர்த்திக் காட்டுகிறது.

இம்மன்னர்கள் பற்றிய பாடல் *புறப்பொருள் வெண்பா மாலையின்* மேற்கோள் பாடலில் பறம்பு மலை பாரி முல்லைக்கு தேர் வழங்கிய குறிப்பும் பழனிமலை பேகன் மயிலுக்கு வழங்கிய செயலையும் குறிப்பிட்டு,

முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசை விளங்கத் – தொல்லை
இரவாம லீந்த விறைவர்போல னீயும்
கரவாம லிகை கடன்
(புறப்பொருள் வெண்பா மாலை, செ. 194 – மேழிகாண், பக். 91)

என்று புலவர் பாடியுள்ளார். இதனால் அரசர்கள் பட்டியலில் இடம்பெற்றிருந்தவரே வேள் மன்னர் என்பது உணருதற்குரியது. வேந்தரை இறைவன் என்பது போன்று வேளிரையும் இறைவன் என்று புலவர் அடையாளம் சொன்னால் வேந்தரும் வேளிரும் ஒருவர் என்பது தெளிவாகும்.

விழுமியோர் என்பவர் உயர்ந்தோர் எனப் பெருங்கதை கூறுகிறது.

குலத்தினும் குணத்தினும் நலத்தகு நண்பினும்
நிலத்தில் நின்னொடு நிகர்க்கு நனாதலின்
மேல்வகை விதியின் விழுமியோர் வகுத்த
பால்வகை மற்றுஅது பழிக்குநர் இல்லை
(பெருங்கதை 1 – உஞ்சைக் காண்டம் 47 உரிமை விலாவண 137–140)

கரந்தைச் செப்பேடுகள் காட்டும் ஒளியர்

சோழனுடைய குடியாகிய வம்சத்தில் தன்னொளியால் கதிரவனைப் போல் மிக்கு விளங்கும் உபரிசரவசு (உபரிசரன்).

பகை கொண்ட அரசர்களாகிற இருளின் கூட்டங்களை அழித்தவனும் பிரதாபம் (வாட்டுதல்) மிக்கவனும் இணையற்ற ஒளியை உடையவனுமான ஆதித்தன் அவனிடமிருந்து தோன்றினான் (ஆதித்த சோழன்).

பெருந்தோள் படைத்த (முதலாம்) இராசராச சோழன் வாணாசுரனையொத்த ஒளியுள்ளவனான வாணராசனைப் படைக்கலங்களால் அடியோடு அழித்துப் போகதேவனுடைய தலையைத் துணித்தான்.

எல்லா அரசர்களுக்கும் விளக்குப் போன்றவன்,

மதுராந்தகன் எனப்படும் முதலாம் இராசேந்திரன்.

என்று கரந்தைச் செப்பேடுகள் விரிவாக விளக்குகின்றன.

வேள்வியும் வேளிரும் வேந்தரும்

முற்காலத்தில் வேந்தர், வேளிர் என்போர் களவேள்வி, இராசசூய வேள்வி, துரங்க வேள்வி, அறக்கள வேள்வி, மறக்கள வேள்வி, வதுவை வேள்வி மதுகொள் வேள்வி போன்ற வேள்விச் சடங்குகளைச் செய்ததாக நம் இலக்கியங்களில் குறிப்புகள் பல உள்ளன. பிற்காலம்கூட, கி.பி.13ஆம் நூற்றாண்டில் சுந்தரபாண்டியன் வீரபலியாகத்துடன் முடி சூடினான் என்று அழகர்மலைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

மன்னர்கள், வேந்தர்கள் முடிசூடும் நிகழ்வுகள் வேள்விச் சடங்குடன் தொடங்கின. பிற்காலத் தென்காசிக் கல்வெட்டுகளில் பாண்டிய அரசர் சிற்றரசாக எய்திய நிலையிலும் வேள்விச் சடங்குகள் நிகழ்த்தி முடி சூடினர் என்று கி.பி. 1554, கி.பி. 1568 எனும் ஆண்டுகளில் அமைந்த தென்காசிப் பாண்டிய வேந்தர்கள் கல்வெட்டுகள் ''வீரவேள்'' எனவும் ''சீவல வேள்'' எனவும் மகுடம் சூடினதாகக் காணப்பெறுகின்றன.

கி.பி. 7ஆம் நூற்றாண்டினரான கொங்கு வேளிரின் பெருங்கதை வேள்விச் சாலையைத் தீவேள் சாலை என்கிறது. (3 மகத காண்டம்

22 பதுமாவதி வதுவை). ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை ''முத்தீ வேள்வி நான்மறை வளர ஐ வேள் உயர்த்த அலு தொழிலாளன்'' (6-7) என்பதால் ஐ வேள் என்ற சொல் ஐந்து வேள்வி என்று பொருள்படும்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டுத் திருநாவுக்கரசர் தேவாரத்தில் திருமழபாடி பதிகத்தில் "விழவும் வேள் ஒளியும்" என்பதற்குப் பாடபேதமாக "விழாவும் வேள் ஒலி நீர்" என்னும் குறிப்புகள் காணப்பெறுகின்றன. புகழையே ஒளி என்று திருநாவுக்கரசர் குறிப்பிட்டார் என்று நம்பலாம்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டு நூலான திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணி வேள்வியும் விழாவும் நிகழ்ந்த செய்தியை "விழவும் வேள்வும்" என்றே குறிப்பிடுகிறது.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் 'விழவும் வேள்வும்'எனக் குறித்திருப்பது ஊர்களில் நிகழ்த்தப்பட்ட விழாக்களையும் நிகழ்த்தி வைக்கப்பட்ட வேள்விகளையும் தெளிவாகக் குறித்துள்ளது. வேள்விச் சடங்குகளை அரசர் நடத்தினர். எனினும் வேள்விச் சடங்கு வேதியரால் நடத்தும் நிலை இருந்தது. கி.பி.11ஆம் நூற்றாண்டு நூலான வீரசோழியத்திற்குச் சற்றுப் பின்னர், கி.பி. 11ஆம் நூற்றாண்டின் இறுதியில் உரை செய்த பெருந்தேவனார் வேதியன் என்பதற்கான பொருளைக் கூறியவிடத்து வேள்தீயன் என்பதே வேதியன் என்று அந்தணரைக் குறித்தது என்று விளக்கமளித்துள்ளார்.

முடி சூடுவதற்கென வேள்விச் சடங்கு நடந்தது என்பதற்குச் சேக்கிழார் எழுதிய பெரியபுராணத்திலிருந்து சான்றுகள் உள்ளன.

கூற்றுவ நாயனார் சோழ நாட்டினைக் கைக்கொண்டு ஆட்சி செய்ய முயற்சித்தபொழுது அரச குலம் அல்லாத கூற்றுவ நாயனார் என்ற தலைவனுக்கு முடி சூடுவதில்லை என்று தில்லைவாழ் அந்தணர் மறுத்த செய்தியை விளக்கிய சேக்கிழார்,

செம்பியர்தம்
தொல்லை நீடும் குல முதலோர்க்கு
அன்றி சூட்டோம் முடி

என்று சுட்டிக்காட்டுவது மூவேந்தர் உயர்குடி அரசர்; கூற்றுவ நாயனார் கீழ்க்குடியில் தோன்றி அரசராக அமைந்தவர். இதனால்

வேதியர்கள் முடி சூட்டிட மறுத்தது என்பது வேள்விச் சடங்கு நடத்தி முடியைச் சூட்டி வைத்தல் செய்ய மாட்டோம் என்பதே.

முடி சூடுதல் வேள்விச் சடங்குடன் தொடர்புடையதே. இதனாலேயே தில்லைவாழ் மூவாயிரவர் முடிசூட்டி வைக்க மறுத்தனர். கூற்றுவ நாயனாரின்குடி வேள்விக்குத் தொடர்புடைய அரசர்குடி அன்று எனப் பெறப்படும்.

"தொல்லை நீடும் குலமுதலோர்" என்போர் தொன்றுதொட்டு நாட்டினை ஆளும் உரிமையுடைய மூவேந்தர்குடி என்றும் மூத்த குடியினர் என்றும் உணரப்படும்.

கி.பி. 833இல் அமைந்த் சாத்தூர் இருக்கன்குடி கல்வெட்டு வேளிரின் சிறப்புகள், ஆட்சி, நிலங்கள், ஊர், நகர் என்றும் வேளிரைப் "பெருஞ்சாந்தி குல மன்னர்" என்றும் பெருமையுடன் உண்மை உணர்த்தி உள்ளதை முன்பும் பார்த்தோம். பெருஞ்சாந்தி குல மன்னர் என்பது வேள்வி செய்த வேளிரைக் குறித்திருப்பதை ஆதிபூர் மண்டங்குடி மன்னர் வரலாறு என்று நூல் வேள்முடி சூடிய குறுநில மன்னர் என்று எடுத்தோதுகிறது. வேள்வி என்பது ஒளி பெறுதலுக்காக நடத்தப்படும் சடங்கு. இக்கல்வெட்டில் சந்திராதித்த குலத்தவர் என்றும் அரச மரபு அடையாளம் காட்டுகிறது.

வேளிர் பற்றிச் சிறப்பாக ஆராய்ந்துள்ள அறிஞர் இரா. பூங்குன்றன் தம் கட்டுரையில் (வரலாற்றில் வேளாண் குடிகள்) வடபுல அறிஞர் ரோமிலா தாபர் சொல்லிய சில செய்திகளில் 'ஒளி' அரசரோடு தொடர்புடையது. வேள் என்பதற்கு மூல திராவிட மொழியில் ஒளி விடுதலை, தலைமை பெறுதல், சிறப்பாக இருத்தல் என்று விவரித்துள்ளார்.

வேள்வித் தீ

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனை எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் பாடிய பாடல் அடிகளில்,

> அறுதொழி லந்தணர் அறம்புரிந் தெடுத்த
> தீயோடு விளங்கும் நாடன் வாய் வாள்
> வலம்படு தீவிற் பொலம்பூண் வளவன் (புறம். 397)

என்பதை உணர்ந்தால் அரசர்கள் வேள்வியோடு தொடர்புடைய வேந்தர் குடியினர் என்பது உறுதிப்படும்.

திருவள்ளுவர் ஒளியை அரசனோடு பொருத்திப் பார்த்து "மன்னன் ஒளி", "வேந்தர்க்கு ஒளி" என்று குறித்துள்ளார்.

உரையாசிரியர்கள் ஒளி நாடு என்பதற்கு வேணாடு என்று கொண்டனர். ஒளியர் என்ற சொல் வேந்தர், வேளிரோடு தொடர்புடையது. எனவே அரசர்கள் அனைவரும் ஒளியாராவர். குறிப்பாக வேணாட்டு அரசர்கள் இலக்கியங்களில், செப்பேடுகளில், கல்வெட்டுகளில் "வேள் நாடர் (வேணாடர்), "வேணாடர் வேந்து" (வேள்நாடர் வேந்தன்) என்று அழைக்கப்பட்ட சேரர்கால்வழி மரபினரெனப் பெறப்படும்.

அகநானூறு பாடல் 24இல் "வேளாப் பார்ப்பான்" என்பதற்கு அந்தணரில் வேள்வி செய்யாத பார்ப்பனர் என்று பொருள் கொள்கிறோம். வேள்வி மறுக்கப்பட்டவன் வேளாப் பார்ப்பான் என்பது போன்று வேள்வியை ஆளாதவன், வேள்வி மறுக்கப்பட்டவன் வேளாளன் ஆவான். ஸ்ரீ வைஷ்ணவரும் வைஷ்ணவரும் ஒருவரல்லர்.

உயர்திணை மகளிரும் பெருந்திணை மகளிரும்

கொங்குவேள் அருளிய பெருங்கதை, உஞ்சைக் காண்டம் நங்கை நீராடியது பகுதியில் மகளிர் வருணனை வருமாறு:

> மந்திர நாவி னந்தண மகளிரும்
> வரும்புன லாடற்குப் பரிந்தனர் வந்த
> விரைபரி மான்றேரரைச மகளிரும்
> அறிவினுஞ் செறிவினும் பொறியினும் புகழினும்
> எறி கடற் றானை யிறைமீக் கூறிய
> செம்பொற் பட்டத்துச் சேனாபதிமகளும்
> நங்கை தோழி நனிநா கரிகியும்
> அருந்திணை யாயத் தவ்வையின் வழாஅத்
> திருந்திய திண்கோட் பெருந்திணை மகளிரும்
> செண்ணம மைத்த செம்பொற் பட்டத்து
> வண்ண மணியொடு முத்திடை விரைஇய
> கண்ணி நெற்றிக் காவிதி மகளிரும்
> காலினுங் கலத்தினுஞ் சாலத் தந்த
> மாநிதிச் செல்வத்து வாணிக மகளிரும்
> நிலத்தோரன்ன நலத்தகு பெரும்பொறை
> அருங்கடி மூதூர் பெருங்குடி மகளிரொ

(பெருங்கதை 1:42: 165–180)

மேலே சொல்லப்பட்ட மகளிர் பட்டியலில் அந்தணர் மகளிர், அரச மகளிர், வணிக மகளிர் போன்றோர் உயர்வாகக் கூறப்பட்டுள்ளனர்.

பதிற்றுப்பத்து 54க்குரிய பழைய உரையில், "உயர்திணை மகளிர் நெஞ்சத்துமென உம்மையை மாறிக் கூட்டுக, தெய்வமென்றது தெய்வத் தன்மையை" என்றும், "தெய்வந்தரூஉம் ஆன்றோரெனக் கூட்டுக குலமகளிரை உயர்திணை மகளிர்" என்றார். திணை என்பதற்கு அறிஞர் உவே.சா. திணை - குலம் (அடிக்குறிப்பு, பக்கம் 222) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'திணை' என்பது குலம் என்றும், குடியென்றும் நம் அறிஞர்களால் பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

6. வேளிரான உரவோர்

சங்க இலக்கியங்களில் உரவோன் என்ற சொல் வலியோர், அறிவுடையோர், மூத்தோர் என்று பொருள்படுகிறது. இச்சொற்கள் உயர்ந்தோர் எனப்படும் மரபினை வலியுறுத்துகின்றன. உரவோர் தலைவன், தலைமக்கள், தலைமகன் என்று இலக்கியங்களில் அறியப்பட்டுள்ளனர். உரவோரின் நாடும் ஊரும் குலமும் மரபும் புகழும் வாய்மையும் எல்லா இலக்கியங்களிலும் சுட்டிக் காட்டப்பெறுகின்றன. உரவோன் மரபினர் அதாவது வலியோர் என்று வேந்தரும் வேளிரும் தங்களைக் குறிப்பிட்டுக் கொண்டனர். வல்லமை மிகுந்த மக்கள் வலியோர் ஆதலால் தங்களை வல்லவன் என்றும் ஸ்ரீ வல்லவன் என்றும் குறித்துள்ளனர். வலியுடையோர் என்போர் அறிவுடைய வீரக்குடியெனவும் பொருள்படுவர்.

சேரர் அரசகுடியினரைத் தொன்று தொட்டு உரவோர் என்று அழைக்கும் வழக்கு இருந்ததைப் *பதிற்றுப்பத்து* (22:11) கூறும். "உரவோர் உம்பல்" என்பதற்கு அறிஞர் அவ்வை துரைசாமிப்பிள்ளை "அரசியலை முறையே செலுத்திய பேரரசர் வழித்தோன்றலே" என்று சேரர் குடிக்கு உயர்வு கூறுகிறார். (கழகப் பதிப்பு, பக்கம், 77) மேலும் *பதிற்றுப்பத்து* (73:1) - இல் வரும் 'உரவோர்' என்பதற்குப் ''படைமடம் படுதலறியாத அறிவுத் திண்மையுடையோர்'' என்கிறார் (கழகப் பதிப்பு, பக்கம், 352). *பதிற்றுப்பத்து* 90:24 இல் வரும், "கொற்றத் திருவி னுரவோர் ரும்பல்" என்பதற்குப் "பெற்ற பெரும் பொருளைப் பலருக்கும் வழங்கியதனாலுண்டாகிய கொற்றமும் செல்வமுடைய திண்ணியோராய முன்னோருடைய வழித்தோன்றலே" என்கிறார் அவர். (கழகப் பதிப்பு பக் 432)

திருக்குறள் (597) உரவோரை ''அறிவுடையோர்'' என்கிறது.

சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு

என வலிய மரபினிற் பிறந்தவன் என்கிறார். இதனால் அரச குலத்தவரையும் அவர்தம் முன்னோரையும் உணர்த்த உரவோன் என்ற சொல்லை இலக்கியங்களில் பயன்படுத்தியுள்ளனர்.

சீத்தலைச் சாத்தனாரின் *மணிமேகலை* (பளிக்கறை புக்க காதை: 107-109)

இளமை நாணி முதுமை எய்தி
உரை முடிவு காட்டிய உரவோன் மருகற்கு
அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்

எனச் செங்கோலரசன் கரிகாற்பெருவளத்தானை உரவோன் என அவன் மரபுவழிப் பெருமையைக் குறிப்பிடுகிறது. உரவோன் என்ற சொல்லுக்கு மூத்தோர் என்ற பொருளைச் *சேந்தன் திவாகரம்* தருகிறது. மூத்தகுடி என்பது அரசகுடி என இலக்கியங்களில் காணக்கிடக்கின்றது.

வேளிர்களான உரவோர்

புறநானூறு 126ஆம் பாடல் மலையமான் திருமுடிக்காரியை மாறோக்கத்து நப்பசலையார் பாடிய பாடலாகும். மலையமான் குடியினர் சேரர் குடியுடன் தொடர்புடைய வேளிர் இனத்தவர். மலையமான் திருமுடிக்காரி என அடையாளம் காணப்படுபவன் திருமுடி தாங்கியவன் என்பதால் முடிசூடி ஆட்சி செய்த அரச மரபினன் என்பது தெற்றென விளங்கும். இப்பாடல்,

வாடாத் தாமரை சூட்டிய விழுச்சீர்
ஓடாப் பூட்கை யுரவோன் மருக

என்று குறிப்பிடுகிறது.

சிறந்த தலைமையினையும் புறக்கொடாத
மேற்கோளினையும் உடைய பெரியோன் மரபிலுள்ளாய்

என்றார் இதன் உரையாசிரியர். (உ.வே.சா. பதிப்பு, பழைய உரை) பின்னரும் தம் உரையில் உரவோன் மருக! பொருந! நாடுகிழவோய் என்று விளிக்கின்றார். பெரியோன் மரபு என்பது அரச மரபு ஆகும்.

நாஞ்சிற் பொருநன் வள்ளுவன்

ஓடாப் பூட்கை உரவோர் மருக
உயர் சிமைய உழாஅ நாஞ்சிற் பொருந

என மருதனிள நாகனார் நாஞ்சில் பொருநனைப் பாடியுள்ளார்.

புறக்கொடாத மேற்கோளையுடைய வலியோர் மரபிலுள்ளானே! உயர்ந்த உச்சியையுடையதாய் உழப்படாத நாஞ்சிலென்னும் மலைக்கு வேந்தே!

என்று பழைய உரை குறிப்பிடுகிறது. போரின்கண் நிலைநின்று போரிடும் மரபினர் வேளிரே ஆவர். பெருஞ்சித்திரனார் பாடிய புறப்பாடல் (237) *"பொய்த்த லறியா உரவோன்"* என்று வாய்மையுடைய வேளிர் வெளிமானைக் குறிப்பிடுகின்றது.

பொன்முடியார் பாடிய புறநானூற்றுப் பாடல் 310

"முன்னாள் வீழ்ந்த உரவோர் மகனே"

என உயர்குடி வீரனை விளிக்கின்றது. இதற்கு உரை செய்த ஔவை துரைசாமிப்பிள்ளை முன்னாள் போரில் பொருது வீழ்ந்த தந்தையார், ஆகிய சான்றோரை 'உரவோர்' என்கிறார். (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப்பதிப்பு). உரவோர் உயர்குடி வீரர் என்று பொருள்படுவர். இவர்களே போரின்கண் நிலைநின்று அரசனுக்காகப் போரில் வீழ்ந்தோர். இவர்களே நடுகல் எடுக்கப்பட்ட உயர்குடி வீரர் ஆவர். இன்றைய நடுகல் வழக்கில் இவ்வீரர்கள் தகடூர் நாட்டில் கிருஷ்ணாரப்பன், சாணாரப்பன் என்று அழைக்கப்படுவதாகத் தொல்லியல் அறிஞர் ச.கிருஷ்ணமூர்த்தி *நடுகல்* என்ற நூலில் குறித்துள்ளார். இந்த நடுகல் வேடியப்பன் (வேடர்) என்று அழைக்கப்படுவதற்கு மாறானது.

கோப்பெருஞ்சோழன் பாடிய *குறுந்தொகைப்* பாடல் "அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து பொருள் வயிற் பிரிவோர் உரவோர் ஆயின் உரவோர் ஆக" என்று குறிப்பிடுகிறது. பொருள்வயிற் பிரிவோர் உரவோர் என்பதால் வேளிரையும் வேந்தரையும் குறிப்பிட்டனர் என்று தெளிவுறும். பிற பணி மக்கள் அரசன் ஆணைவழி வேறிடம் செல்வது வேறானதாகும்.

கீழ்க்காணும் *பெரும்பாணாற்றுப்படைப்* பாடலடிகளுக்கு (29-31)

இருநிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த்
திரைதரு மரபின் உரவோன் உம்பல்

இதன் உரையாவது:

> பெரிய நிலத்தை அளந்த திருவாகிய மறுவை அணிந்த மார்பினையுடைய கடல்போலும் நிறத்தையுடையவன் பின்னிடத்தோனாகிய சோழர் குடியிற் பிறந்தோன்

எனச் சோழர் குடியைத் தம் உரையில் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார். மேலும் *பெரும்பாணாற்றுப்படை* நூலில் சுட்டப்படும் தொண்டமான் அரசன் பின்னிடத்தோன் எனப்படும் பின்னவர் ஆவான். *சேந்தன் திவாகரம்* பின்னவர் என்பதை வேளாளர், சூத்திரர் என்று உணர்த்துகிறது. பிற்காலத் தொண்டமான் அரசர்கள் தங்களை 'வேளாண் குடி முதல்வர்' என்றே அடையாளமிடுகின்றனர்.

கி.பி.17 ஆம் நூற்றாண்டில் சரவணய்யா என்ற காரைக்காட்டு வேளாளரால் பாடப்பட்ட *மேழி விளக்கம்* என்ற நூல் சோழனுக்கும் வேளாண் குடிப்பெண்ணுக்கும் பிறந்தவர் தொண்டமான் அரசர் என்கிறது. அதேநேரம் மூவேந்தர் குடியினரை அதாவது அரச குடியைத் தொல்புவியோர் என்றும் வேளாளரைப் பின்னவர் என்றும் தெளிவு படுத்துகிறது. இலக்கண நூல்களிலும் வேளாண் மரபினர் என்பார் பின்னோர், பின்னவர் என்றே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொங்கு வேளிரின் *பெருங்கதை* (உஞ்சைக் காண்டம்1:45:12) உரவோன் என்ற சொல்லை "உரத்தகை அண்ணல்" "பெருந்தகை அண்ணல்" என்று அரச குலத்தவனான உதயணன் மீது ஏற்றிச்சொல்கிறது.

மேலும் "விழுத்தகு நெஞ்சத்து உரத்தகையாளர்" என்றும் (*பெருங்கதை* :3:19:57–58) அறிவுடையோராகிய உயர் வீரரைக் குறிப்பிடுகிறது. *பெருங்கதை* (3:7:25-26)

> *விருத்திக் காரரும் வேண்டியது பெறூஉம்*
> *உரத்தகை யாளரும் மொருங்கு வந்தீண்டி*

என்பதால் அரசனால் அளிக்கப்பட்ட விருத்தியைப் பெறுவோரும் தங்கள் தேவை எவையோ அவற்றையெல்லாம் பெறும் தலைமை பெற்ற உரத்தகையாளராகிய அறிவுடையாளராகிய வீரர் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஐயனாரிதனாரின் *புறப்பொருள் வெண்பா மாலை* எனும் இலக்கண நூல் 'உரவோர்' என்ற சொல்லைத் 'தலைவன்' 'வலியோர்' 'அரசன்' என்று பொருள் கொள்கிறது.

.....தந்தமரின்
ஒற்றினா னொன்றி உரவோர் குறும்பினைச்
சுற்றினார் போகாமற் சூழ்ந்து

(வெட்சிப்படலம் புறத்துறை 7)

தம்முடைய உற்றாராகிய ஒற்றராலே ஆய்ந்து அறிந்தபின் மிகுந்த வலியினையுடைய உரவோர் தம்மிடம் பகைமையுடைய குறும்பு அரணை ஒருவரும் தப்பித்துப் போகாதபடி வளைத்துக் கொண்டார். குறும்பு என்பது அரசனுக்கு அடங்காத குறும்பர்களின் காட்டரண் ஆகும். இத் தலைவன் 'மீளி' எனப்பட்ட தலைவன் என்றும் கொள்ளலாம். இவனை வல்லாளன் என்றும் அகராதிகள் அழைக்கின்றன. உரன் உடையோர் என்றும் சில நூல்கள் குறித்துள்ளன.

கல்வெட்டுகளில் 'உரவோன்' எனும் சொல்லாட்சி

கி.பி.1012இல் முதலாம் இராசராச சோழன் ஆட்சிக் காலத்துத் திருக்கோயிலூர்க் கல்வெட்டுப் பாடல் (SII VOL. VII No. 863) இம்மன்னனின் பெருமைகளை மெய்க்கீர்த்தியாகவும் இம்மன்னனின் உயர் அதிகாரியாகத் திகழ்ந்த வீதி விடங்கன் கம்பன் மஹிமாலைய மூவேந்த வேளானின் சிறப்புகளையும் அவனை மிக உயர்வாக 'உரவோன்' என்றும் தெரிவிக்கிறது. முற்குலத்தவனான வீதிவிடங்கனின் சிறப்பியல்புகளை முனைவர் இரா.நாகசாமி *கல்வெட்டு இதழ்* (7) இல் மிக உயர்வாக ஏற்றிக் குறித்துள்ளார். ஆயினும் இவனை வேளிர் குலத்தான் என இவர் குறிப்பிடாதது வருந்தற்குரியது.

திருக்கோயிலூர்க் கல்வெட்டுப் பாடல் வேள் குல வீதிவிடங்கனைச் சோழர் அரசவையான அறங்கூறும் அவையிருந்த சான்றோன் என்றும் அவனது அறக்கொடை பற்றியும் தெரிவிக்கின்றது.

அன்பது வேலியில் அடைகுன் றகர்க்கும்
ஒன்பது வேலியுடைய உரவோன்
கொம்பர் நாடுங் குளிர்மலைச் சோலை
அம்பர் நாடான் ஆலங் குடிக்கோன்
தெண்டிரை பழனந் திரைமூர் நாடன்
வண்டிரை துயர் பொழில் மணற்குடி நாடன்

தாராண் தலைமை கற்பக சதுசன
பேராண் தலைமை புனர்புயத்து உரவோன்
கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த

என்று இவ்வேளிர் தலைவன் மிகவும் போற்றப்படுகின்றான். கூத்துத்தொழில் செய்யாத தனுர்வேதம் எனும் ஏத்தொழில் (போர்த் தொழிலான விற்தொழில்) செய்பவன், இவன் போர்த்தொழில் மரபுவழி வேளிர் என்று வீதிவிடங்கன் சுட்டிக்காட்டப்படுகின்றான்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் 91ஆம் நூற்பாவுக்கு உரைசெய்த நச்சினார்க்கினியர், "கூத்தராயிற் பாரசவரும் வேளாளரும் பிறரும் அவ்வாடற் தொழிலுக்கு உரியோர்" என்கிறார். இதை உணர்ந்தாலே வேளிருக்கும் வேளாளருக்கும் உள்ள வேறுபாடுகளை அறிய முடியும். திருக்கோயிலூர்க் கல்வெட்டுப் பாடலில் வேளிர் தலைவன் "கோலக் கருங்களிற்று உழவன் கம்பத்தடிகள்" என்று சுட்டப்படுவது யானை மீதிருந்து போர் செய்யும் உயர்குடி வீரனாம்; "வில்லேருழவர்" ''சொல்லேருழவர்'' என்பன போன்றாம்.

வீதிவிடங்கனான மஹிமாலைய முவேந்த வேளான் "பொன்னிநாடு கிழவோன்" "வேலியர் கோன்" "குலவேலி காவலான்" என்று அழைக்கப்பட்ட அரசகுடியினன் என்பது தெளிவாக உணரக்கிடக்கின்றது. தென்தமிழ் நாட்டில் வேலியார் குளம் என்ற ஊர் உள்ளது. இவ்வூருக்கு உரிமையுடைய உகந்தாட்சியாபுரம், காணியாளர் குடியிருப்பு போன்ற ஊர்கள் இருக்கின்றன. எனவே அடையாளம் தெரிந்த உண்மைகளில் உரவோன் என்ற சொல் வலியோர் அறிவுடையோரையே குறிப்பிடும் என்பது உறுதி.

"வேலிகோன் திறற்கம்பன் விறல் வீதிவிடங்கன் வேந்தர் பிரான் அருள் மொழிக்கு விண்ணப்பம் செய்தே" (SII. VII 880 முதலாம் இராசராசன் ஆட்சி 29) எனக் கல்வெட்டுப் பாடம் உள்ளது. இக்கல்வெட்டு கோயில் நிவந்தம் அளித்துள்ளோரைக் குறிப்பிடுகிறது. வேலியர் கோன் என்பது கோட்டை அரசரைக் குறிக்கிறது. மதிலரசர் என்று இலக்கண நூல்களால் குறிப்பிடப்பட்டோர் வேலியர்கோன் எனப்பட்ட வேளிர் ஆவர்.

ஏனாதி குலத்தவர்

சோழ நாட்டு எயினனூரில் இருந்த போர்க்கலை மரபினரான ஏனாதி நாதருக்கும் அவர் குலத்தவரான அதிசூரன் என்பவருக்கும்

ஏற்பட்ட பகைமையைச் சேக்கிழார் பெருமான் *திருத்தொண்டர் புராணத்திலே* பதிவுசெய்துள்ளார்.

சேக்கிழாருக்கு முன் *திருத்தொண்டர் திருவந்தாதி* தந்த நம்பியாண்டார் நம்பி ஏனாதிநாதரை "ஈழக்குல தீபன்" என்கிறார்.

"ஈழக்குலச் சான்றார் ஏனாதி நாதனார்" என்று (பா.2) சேக்கிழார் சுட்டிக் காட்டுகிறார்.

மன்னர்க்கு வென்றி வடிவாட் படைபயிற்றும்
தன்மைத் தொழில் விஞ்சை யில்தலைமை சார்ந்துள்ளார் (பா.3)

வாளின் படைபயிற்றி வந்த வளமெல்லாம் (பா. 4)

தள்ளாத தங்கள் தொழிலுரிமைத் தாயத்தின்
உள்ளான் அதிசூரன் என்பான் உள்ளானான் (பா. 5)

இவ்வாறு ஏனாதி மரபினர் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஏனாதிநாதர் "தோட்டார் பூந்தாரார்" என்றும் (பா.31) "புண்ணிய போர்வீரர்"(பா.35) என்றும் குறிக்கப்படுவதுடன் அதிசூரனை "வெவ்வாள் உரவோன்" என்றும் (பா.32) குறித்துள்ளார். தொன்று தொட்டுப் படைவைத்துக் கொள்ளும் உரிமை படைத்த இனத்தவர் என்று சேக்கிழார் போர் நிகழ்வைப் பாடியுள்ளார். உறுதி செய்யப்பட்ட சங்க காலப் போர் முறை, போர்க்களம் இவைகளைக் கூறும் சேக்கிழார் வாட்குடித் தாய முறைமையுடைய சான்றோர் பற்றிக் குறித்து இருப்பதுடன் உரவோன் என்று வலியோர் குடியை வல்லமக்கள் என்று முத்துக்குட்டி சுவாமிகள் அகிலத்திரட்டு அம்மானையில் குறித்திருப்பதையும் அறிய வேண்டும்.

உரவோர் கிராமணியர்

நம்பியகப் பொருள் "உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறலும்" (சூ.166) என்கிறது.

நாடு, ஊர், குலம், மரபு இவைகளோடு அவர்தம் புகழையும் வாய்மையையும் கூறுதல் என்பது தலைமகனான அரசனையும் அவன் நாடு, ஊர் குலத்தையும் மரபையும் கூறுதல் என்பதே. கி.பி. 16ஆம் நூற்றாண்டு *மாறன் அகப்பொருள்* இலக்கணம் உரவேள் என்பதை உரன் உடையோர் என்கிறது. (அகத்திணையியல் 89)

...வாட் டடக்கை
சத்திய சித்தெனு முரவோர்
பருதிதேர்க் கயிறு பற்றியூழ் முறையின்
மதிதொறும் பயில்கிரா மணியர்"

(கூர்மபுராணம் ஆதவர் சிறப்புரைத்தது 39 செய்யுள் 4)

கி.பி. 16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியரால் பாடப்பெற்ற *கூர்மபுராணம்* ஆதவன் முதலாயினாரைக் கிராமணியர் (உரவோர்) என்கிறது. வேதங்களில் மனுவைக் கிராமணி என்பதும் *இராமாயணம்* தசரதன், இராமன் போன்ற அரச மரபினரைக் கிராமணி என்று அழைப்பதும் எண்ணுதற்குரியது.

கிராமணி என்ற இனத்தாரை இலங்கைப் பிராமி எழுத்துக்களில் காமணி என அழைத்துள்ளனர். ஈழநாட்டில் அரசகுலத்தவர் வட்ட காமிணி, துட்ட காமிணி என்று பெயரிட்டுக் கொண்டனர். இவரே உரவோர் என்றும் அழைக்கப்பட்ட மேம்பட்ட வான் உலகத்தார்.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிதம்பரநாத கவி என்ற வேளாள மரபில் மேம்பட்ட கவிராயர் *சீவலமாறன் கதையைப்* பாடினார்.

வளவர் கோமகன் மந்திரிக் கன்பொடும் மகிழ்ந்தே
அளவிலாதன விருந்தளித் திடவகம் மகிழ்ந்தே
இளவலாகிய நாதனும் வினோதனு மிறைஞ்ச
உளம் மகிழ்ந்திடனுறைந்தனன் மந்திரத்துரவோன்
(செப்பேடு காண்படலம் 730)

இதனால் தலைமக்களான வேந்தரையும் வேளிரையும் உரவோர் என்று அழைக்கும் வழக்கு இருந்தது தெரியவருகிறது.

சோழநாட்டு அதிகாரிகளான வேளான்கள்

தென்னாற்காடு மாவட்டம் ஜம்பைக் கல்வெட்டு முதலாம் இராசாதிராச சோழனின் ஆட்சியாண்டு 32க்குரியதாகும். (கி.பி.1049 – 10.50) (தெ.இ.க. 22:81).

இக் கல்வெட்டில் இம்மன்னனின் மெய்க்கீர்த்தி சிறப்பாக அமைந்துள்ளதுடன் ஆறிலொன்று கடமை பெறும் அரசகுடி சோழர் மரபு என்றும் மனுநெறி நின்று அசுவமேதயாகம் செய்ததையும் விவரிக்கிறது. இவ்வூர்க் கோயிலில் திருவிளக்கு எரிக்கச் சங்கரபாடி நகரத்தார் வசம் 20 நற்காசுகள் வழங்கியதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

பாம்பூர் நாட்டு நல்லாவூர் ஊரான் நரேந்திர சூளாமணி மூவேந்த வேளான் வாணகோபாடி ஜம்பையில் வந்து அவ்வூர்க் கோயிலில் விளக்கு எரிய நற்காசுகள் வழங்கியுள்ளான். இவன் அரசுப் பணியின் அடிப்படையில் சென்றவனாதல் வேண்டும்.

விக்கிரம சோழனின் ஆட்சியாண்டு 12க்குரிய கி.பி. 1120இல் அமைந்த திருமாணக்குழி கல்வெட்டு இம்மன்னனின் ஆட்சிக்கால அதிகாரிகளைப் பற்றித் தெரிவிக்கிறது.

- நகரக் கணக்கு திருவெண்ணை நல்லூருடையான் அப்பன் திருவரங்க முடையான்
- குடிமக்களில் குளக்குடையான் தில்லை நாயக மூவேந்த வேளான்
- வடசேரி உடையான் தரணி விச்சாதிர மூவேந்த வேளான்
- வேளியூருடையான் பேரேறான முடிகொண்ட சோழ மூவேந்த வேளான்
- வேளியூருடையான் வேளான் கிணறனான வீர நாராயண மூவேந்த வேளான்

என்போர் இம்மன்னன் காலத்திய அதிகாரிகள் ஆவர்.

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு 41க்குரிய (கி.பி. 1110 – 1111) திருமால்புரம் (வாலாஜாபேட்) கல்வெட்டு (தெ.இ.க. 22:2:287) சோழ வேந்தரின் அதிகாரிகள் பட்டியலைத் தருகிறது. தாமரங்கிழவன் வேளான் குலமாணிக்கமான வீரராஜேந்திர தாமர் கோட்ட மூவேந்த வேளானும் வேறுசில அதிகாரிகளும் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களில் வேளிர் இனத்தவர் பலராகும். சில அதிகாரிகளை அடையாளமிட 'வேளான்' என்று குறிப்பிட்டே பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சில பெயர்கள் குறிப்பாக "அத்தியூர் செல்வனான நிருபராஜ மூவேந்த வேளான், நொச்சிக் கிழான் வேளான், தில்லைக்கரசனான விக்கிரம சிங்க வேளான், நொச்சிக் கிழான் ஒற்றி ஏகாம்பரநாத தென்னவன் சிகாமணி மூவேந்த வேளான்.

இவ் வேளான்களில், நிருபராஜ மூவேந்த வேளான் தாமர் நாட்டு ஊருக்கு அமைந்தவனாயும் தாமர் கோட்டத்து அதிகாரியான தாமரங்கிழவன் "வேளான் குல மாணிக்கம்" என்பதாலேயே வேளான் குலத்தினன் போலும்.

இராசகுலவர் காணியும் உழுவித்து உண்போர் காணியும்

இரண்டாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு ஐந்தாவது (கி.பி. 1150 – 1151) திருக்கடவூர் கல்வெட்டு (தெ.இ.க.22:2:31.)

ஜயங்கொண்ட சோழ வள நாட்டு ஆக்கூர்
நாட்டுத் திருக்கடவூர் உடையார் ஸ்ரீ கால
கால தேவர் தேவதானங்கள் அஞ்சாவது முதல்

ராஜகுலவர் காணி கொள்வாரும் இருவேலி
நிலத்துக்கு மேல் குடிமக்கள் காணி
கொள்வாரும் திருவாணை

என்கிறது. இக்கல்வெட்டில் சுட்டிக்காட்டப்பெறும் இருவகை நிலவுடமையாளர்களில் ஒரு பகுதியினர் வேந்தர், வேளிர் எனப்பட்ட அரசகுல அமைப்பினர். மற்றொரு பிரிவினர் குடிமக்கள் எனப்பட்ட வேளாண்குடி மக்கள். இவ் வேளாண் குடியினர் உழுவித்து உண்போர் ஆவர். இவர்களின் காணி நிலம் 'வெள்ளான் பற்று' எனப்பெறும். இந்நிலம் பணி மக்கள் நிலம் என்றும் குடிமக்கள் பற்று என்றும் கூறப்பெறும். இராசகுலவர் காணிக்கும் பணிமக்கள் காணிக்கும் வேறுபாடு உள்ளது.

கன்னர தேவர் காலத்து மூவேந்த வேளான்

கன்னர தேவரின் ஆட்சியாண்டு 27க்குரிய பாகூர் கல்வெட்டில் (புதுச்சேரி தெ.இ.க.7:811) செம்பியன் முனைபாடி மூவேந்த வேளான் என்னும் அதிகாரி கோயில் தருமம் தொடர்பாக எடுத்த நடவடிக்கையை அவ்வூர் மகாசபையினர் நடைமுறைப் படுத்தியுள்ளதைக் குறிப்பிடுகிறது.

மகாசபை திருவடி பேரம்பலித்தேம்
குறிகூடி இருந்து வினாப்போக்கி
ஒத்த எழுத்திட்டு குடுத்த பரிசாவது,
நம்மூர் ஸ்ரீமூலஸ்தானமுடைய பரமஸ்வாமிக்கு
வேதம் வல்ல பிராமணரைக் கொண்டு
திருவாராதனை செய்வதுக்கும் நெல்லி ஏதத்துத்
தண்ணீர் திருமஞ்சனாமூர் அட்டுவோனுக்குமாக
நம் பிரம்மதேயம் நெரிஞ்சி குறுப்பற் கழனியில்
கலியூன்றியிலே செம்பியன் முனைபாடி மூவேந்த வேளான்
ஆவணத்து இருபது செறுவு கொண்டு குடுத்தேன்
இத்தன்மம் சந்திராதித்தவர் நிறுத்திக் குடுத்தோம்
மகாசபையோம் இறையிலியாக செய்து குடுத்தோம்

இதுக்கு விரோதஞ்செய்தாரை முதலாகக் கொண்டு
கோவுக்கு வெவ்வேற்று வகை இருபத்து ஐந்து கழஞ்சு
பொன் மன்றப் பெறுவாராகவும் இப்பரிசு ஒத்த
எழுத்து இட்டுக் குடுத்தோம் மகாசபையோம்

என்பதில் மூவேந்த வேளான் அதிகாரம் பெற்றவனாக இருந்ததை அறியமுடிகிறது.

7. வேளிரின் விழுக்குடிப் பிறப்பும் சிறப்பும்

அரசகுடியே விழுக்குடி

இளங்கோவடிகளால் பாடப்பெற்ற சிலப்பதிகாரம் விழுக்குடியில் பிறந்த பாண்டிய அரசகுடியின் சிறப்பினைக் கூறுகிறது.

ஒழுக்கொடு புணர்ந்தவிவ் விழுக்குடிப் பிறந்தோர்

(சிலம்பு : கட்டுரைக் காதை 40)

மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் பாண்டிய அரசர்களின் பெருமைகளைக் இவ்வாறு கூறுகிறது. மேலும்,

அரைசாள் செல்வத்து நிரைதார் வேந்தர்
வீயாத் திருவின் விழுக்குடிப் பிறந்த
தாய வேந்தர் தம்முள்

(சிலம்பு : கட்டுரைக் காதை, 142–144)

என்கிறது.

இத்தகைய சிறப்புடைய பாண்டிய அரசகுடியை வேளிர் வரலாறு எழுதிய மு. இராகவையங்கார் கவனத்தில் கொள்ளாமல் தம் நூலை எழுதியுள்ளார்.

களவியல் காரிகையின் மேற்கோள் பாடல் (62) வேளிர் என்றும் சோழர் என்றும் பெருமைப்பட்ட சிற்றரசரை,

வழுத்தூர் காக்கும் புணையின்
விழுத்திணை சான்ற மிகுபெருங்கிளையே

என்று குறித்துள்ளது. இப்பாடல் விழுத்திணை மரபினரான அரசகுடியைப் பெருங்கிளை என்று காட்டியுள்ளது.

வேந்தரையும் வேளிரையும் யாப்பருங்கலவிருத்தியின் மேற்கோள் பாடல் (பக். 439) விளங்கிய விழுத்திணையாகவே எனக்குறித்துள்ளது. 'விளங்கிய விழுத்திணை'க் குடிக்குரிய பெருமைக்குரியோர் வேளிரும் வேந்தரும் ஆவர். மற்றொரு மேற்கோள் இந்த நூலின் பாடல் (ஒழிபியல்),

> பெறலரிய விழுத்தாயம் விறலியர்க்கு மகிழ்ந்து
> வீசினைஎன்னார் துப்பிற் தென்னவர் மருக

என்பதால் குடிப்பெருமையை உடைய விழுக்குடித்தாயம் பிற்காலச் சமூகத்தில் பலருக்கும் வந்தடைந்ததைக் காணலாம்.

'தென்னவர் மருக' என்ற பட்டத்துக் 'குடிப்பெருமையுடைய பாண்டியன் மகன்' என்று பொருள்படும். கல்லாடம் பாண்டியர் குடியை இறைவன் குலம் என்கிறது.

> கிடந்தொளி பிறழும் நெடுஞ்சடைப் பெருமான்
> படைநான்கு உடன்று பஞ்சவன் துரந்து
> மதுரை வவ்விய கருநட வேந்தன்
> அருகர்ச் சார்ந்து நின்று அருட்பணிகடைப்ப
> மற்றவன் தன்னை நெடுந்துயில் வருத்தி
> இறையவன் குலத்து முறையர் இன்மையினால்
>
> (கல்லாடம் 57:12–16)

பாண்டிய குலத்தவர் இயல்பாகவே அரசகுலத்தவர் என்று உணர்ந்த கல்லாட ஆசிரியர், பாண்டியர்களை இறைவன் குலத்தவர் என்று குறிப்பிடுகின்றார். அரச குலத்தவரான பாண்டியர் (பஞ்சவர்) நாற்படைகளையும் இழந்து 'நட மன்னன்' என்ற களப்பாளரிடம் ஆட்சியைச் சில காலம் இழந்து விட்டனர். அந்நிலையில் பாண்டியரின் பாரம்பரியமிக்க உறவினர் நாட்டை விட்டே ஓடிவிட்டனர் என்று தெரிகிறது.

பரசுராமன் தென்னாடு வந்து காந்தமச் சோழனைக் கொலை செய்ய முயற்சித்தபொழுது அம்மன்னன் தன்காமக்கிழத்தியின் புதல்வனை ஆட்சியில் அமர்த்திவிட்டு, ஓடி ஒளிந்தான் என்று மணிமேகலையில் சீத்தலைச்சாத்தனார் குறித்துள்ளார். வேளிர் வரலாறு என்ற தம் நூலில் மு. இராகவையங்கார், க்ஷத்திரிய தருமம் அழிந்து சத்திரியரிலிருந்து நம் வேந்தர்கள் தாழ்ந்து விட்டனர் என்று எழுதியுள்ளார்.

ஆனால் நம் வேந்தர்கள் அரச குலத்தவர் என்றும் க்ஷத்திரியர் என்றும் உரிமை பாராட்டிப் பாண்டியர் செப்பேடுகளிலும்

சுந்தரசோழனின் அன்பில் செபபேடுகளிலும் முதலாம் இராசேந்திரனின் திருவாலங்காடு செப்பேட்டிலும் குறிப்பிட்டுள்ளனர்.

''க்ஷத்திரிய சிங்க மூவேந்த வேளான்''

''சத்திரிய சிகாமணி மூவேந்த வேளான்''

என்று வேள் இனத்தவர் உரிமைபாராட்டியதையும் உற்று நோக்காமல் நூலாசிரியர் சிலர் தவறாக முடிவுகொண்டுள்ளனர். பாண்டியர் களப்பிரரிடம் ஆட்சியை இழந்து வீழ்ந்ததையும் இராகவையங்கார் கருதவில்லை. 'மூவேந்தரைச் சிறை வைத்தோம்' என்று வேளாளர் வெளியிட்ட கி.பி. 17ஆம் நூற்றாண்டுச் செப்பேடுகளில் தம் பெருமைகளை அவர்கள் பேசுவதை மு. இராகவையங்கார் அறியாமல் போய்விட்டார்.

அறையும்நல் தனுவேதம் ஆய்ந்து ஆயுதகரனாய்

இறைவர்தம் குலத்து இயற்கை பூண்டு இருந்தான் இராமன்

(நல்லாப்பிள்ளை பாரதம் 3358)

என்று நல்லாப்பிள்ளை, தாம் பாடிய பாரதத்தில் அரச குலத்தையே இறைவர்தம் குலம் என்கிறார்.

விழுத்திணை

விழுத்திணை என்பதின் சிறப்பினை உணர்வதற்குத் திரிகடுகம் நூல் சான்றளிக்கிறது.

தமிழ்ச் சங்கங்கள் நீங்கிய காலத்தில் தோன்றிய நூல்களில் திரிகடுகம் ஒன்றாகும். பதினெண்கீழ்க்கணக்கு நூல் பட்டியலில் இது இடம்பெற்றுள்ளது. இந்நூலின் 92ஆம் பாடலில்,

"விழுத்திணை தோன்றாதவனும்" என்று குறித்து இருப்பதை உணர்ந்தால் உயர்குடியுடையவனே விழுத்திணை மரபு என்று இலக்கியங்களில் உறுதி செய்யப்பட்டுள்ளான் என்று முடிவு கொள்ள முடியும்; சங்க இலக்கியக் காலத்திற்கும் முற்பட்டு வேளிர் ஊர்கள் தமிழி (தமிழ்-பிராமி) எழுத்துகளில் கி.மு. 4000க்கு தொடர்புடையதாகக் குறிப்பிடப்படுகின்றன. இவ் ஊர்களின்

தலைவராக வேளிர் திகழ்ந்தனர் என்று அறியக் கிடக்கின்றது. சங்க இலக்கியங்கள் தோன்றிய காலங்களில் 'விழுத்திணை'க் குடியினராக அறியப்பட்டோர் வேந்தரும் வேளிரும் என உயர்குடியினரே சுட்டிக்காட்டப் பட்டுள்ளனர்.

சங்க காலம் நீங்கிய காலத்தில் தோன்றிய கொங்குவேளிரின் பெருங்கதை விழுத்திணை பற்றிப் பேசுகிறது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய சேக்கிழார் விழுக்குடி என்று பெரிதாக விவாதிக்கவில்லையெனினும் மானக்கஞ்சாறார் என்ற நாலாம்குலத்தில் தோன்றிய வேளாளரில் உயர்ந்தவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். -'அரசர்க்குப் படைத்தலை தலைமைவகித்த பிற்கால வேளாளர்களில் ஒருவர் மான் என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

அப்பதியில் குலபதியாய அரசர்சே னோதிபதியாம்
செப்பவருங் குடிவிளங்கத் திருவவதாரஞ் செய்தார்
மெய்ப்பொருளை அறிந்துணர்ந்தார் விழுமிய வேளாண் குடிமை
வைப்பனைய மேன்மையினார் மானஞ் சாறனார்

(மானக்கஞ்சாறனார் – 7)

இவரைச் சிறப்பித்த சேக்கிழார் 'விழுமிய வேளாண் குடிமை' என்று குறிப்பிட்டு இருப்பதைச் சிந்தனையாளர்கள் உற்று நோக்க வேண்டும். வேளாண்மைக் குடியிலேதான் இந்நாயனார் உயர்வு பெற்றவர். இவர் வேளிர் குடியிலோ வேந்தர் குடியிலோ பிறந்தவர் என்று சேக்கிழாரே குறிப்பிடவில்லை. சேக்கிழார் இடங்கழி நாயனாரை வேளிர் என்றாரே ஒழிய வேளாண்குடியினரைக் குறிப்பிடவில்லை. இந்தக் கால அளவில் வேளாளர் சிறிய அளவில் உயர்வு பெற்றதால் வேளாண் குடிமை என்றார்.

'முற்பட்ட குடிமை' என்ற சிறப்பு எவருக்கு இருக்கிறது என்று தேடி அறிய வேண்டியது ஆய்வாளர்களின் தலையாய கடமையாகும்.

விழுமியோர்

கழுமலத்து யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற் சென்றதனால் விழுமிய
வேண்டினும் வேண்டாவிடினும் உற்றார்பால்
தீண்டா விடுதல் அரிது

பழமொழி நானூறு 62

வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளி வரையுடைத்த
குறைந்த செங்கோற் குறையாக் கொற்ற
திறைக்குடி பிறந்தோர்க் கிழுக்க மின்மை

(சிலம்பு : மதுரைக் காண்டம் 2:23:50–58)

என்று சிலம்பு பாண்டியரின் பெருமை பேசுகிறது. சந்திர குலத்தவனான பாண்டியன் இந்திரனின் முடியை நெறித்துக் கைக்கொண்டதை வலியுறுத்தி இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். பாண்டியர் பாரம்பரியமாகத் தொன்றுதொட்டு செங்கோல் ஆட்சி முறைமை யுடையவர் என்றும் எடுத்தோதுகிறார்.

விழுக்குடிப் பிறப்பு

"சங்கினும் பாலினும்" (பெருங்கதை) என்ற தொடருக்கு,

சங்கும் பாலும் போல இன்னல் எய்துங் காலத்தும் தம் பண்பு குறையாத வாய்மையுடைய உயர்குடிப் பிறந்த நல்லொழுக்கமுடையவரும் நெய்யேற்றுதற் சடங்கிற்குரிய சிறப்பு அணிகலன்களை அணிந்தவருமாகிய சான்றோர் பலரும் வந்து கூடி அறுகம் புல்லையும் வாகைத் தளிரையுங் நறிய நெய்யிடத்தே தோய்த்து முறைப்படி தலையின் மிசைத் தடவி என்க

என்பது சோமசுந்தரனர் உரை.

(இலாவண 2, மண்ணு நீராட்டியது (65-70),
பெருங்கதை, கழகப் பதிப்பு)

மேலும் பெருங்கதையில் இப்பகுதியை விளக்கிடப் பழங்குடி என்று குறிப்பிடப்படும் குறளையும் அவர் மேற்கோள் காட்டியுள்ளார். மேலே சொல்லப்பட்ட திருமணச் சடங்கு முறை வேளிர்க்குரியதாகும்.

விழுக்குடி

பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான குறிஞ்சிப் பாட்டு மேம்பட்ட மரபிலே பிறந்த விழுக்குடிப் பிறப்புடைய (திணை) உயர்ந்தோரை,

வசைஇல் வான்திணை புரையோர் (குறிஞ்சிப் பாட்டு 205)

என்கிறது. இதற்கு நச்சினார்க்கினியர், உயர்குலத்தில் பிறந்தவர், உயர்ந்தோர் என்று குறிப்பிட்டுள்ளார். இதனை உணர முற்பட்டு நம் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களை ஐந்திணை மக்கள் அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலங்களில் வாழ்ந்த மக்களை இரு கூறுகளாக அட்டவணையிட்டு 'உயர்ந்தோர், தாழ்ந்தோர்' என்று பட்டியலிடுகிறது. வான்திணை புரையோர் குற்றமில்லாத குடியினர். புரையோர் பற்றித் தெளிய அகராதிகளைக் கண்டறிந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

செங்கோல் அரசர்

சடையவர்மன் வீரபாண்டியனின் ஆட்சியாண்டு 7க்குரிய தாருகாபுரம் (சங்கரன் கோவில்) கல்வெட்டு கி.பி. 1260இல் அமைந்ததாகும். பாண்டியர் குலத்தின் பெருமையை விவரித்த விடத்து செங்கோல் வேந்தர் என்று சிறப்புடன் குறிப்பிடுவதுடன் வடுகரின் கொடுங்கோல் ஆட்சி பற்றியும் விவரிக்கிறது.

மீனவர் கொடி மேருவில் ஓங்க
வடுகரைக் கொடுங்கோல் வழங்காவண்ண
நடுவுநிலைச் செங்கோல் நாடொறு நடப்ப (SII XXX No. 233)

என்று நீதியை நிலைநிறுத்தும் செங்கோலாட்சி முறைமையையும் வலியுறுத்துகிறது.

வேளிரும் விழுக்குடித்தாயமும்

திருமண முறைமையும் வேள்விச் சடங்காகும். வேந்தரும் வேளிரும் வேள்விச் சடங்குக்குரியோர் ஆவர். "ஆய்ந்த மரபின் சாந்தி வேட்டு" என்பதற்குக் கி.பி. 833இல் அமைந்த வேளிர் கல்வெட்டில் "பெருஞ்சாந்தி குலமன்னன்" என்று காட்டியுள்ளனர். கிழோர்க்கு வேள்விச் சடங்கும் திருமண முறைமையும் மறுக்கப்பட்டிருந்ததாகத் தொல்காப்பியம் சொல்லியதைக் கூட உணராமல் அறிஞர் மு. இராகவையங்கார் எழுதிய வேளிர் வரலாறு சிறந்த ஆய்வாகாது.."இல்லிருந்து செந்தீ ஓம்புதல் மறுக்கப்பட்டவர்கள்" என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறவர்கள் முற்காலத்தில் விழுக்குடித்தாய உரிமை யுடையவர் அல்லர். ஆனால் 'விழுமியோர்', 'உயர்ந்தோர்', 'பெரியோர்', 'உரவோர்' என்று இலக்கண, இலக்கியங்களில் மேம்பட்ட நிலைபெற்றிருந்த வேளிர், வேந்தரே விழுத்திணை மரபு வழி மன்னர் எனப்பட்டவர்.

விழுக்குடி என்ற உயர்குடிச் சிறப்புடைய மரபினரை விழுத்திணை மாபினர் என்று புறநானூறு 24இல் மாங்குடி மருதனார் பாடியுள்ளார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடியவிடத்து அவன் குடி வீரரையும் அவர் புகழ்ந்துரைத்துள்ளார்.

நின்னொடு தொன்று மூத்த வுயிரினும் முயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த (புறம். 24:26.29)

இத்தகைய விழுத்திணை வீரரை 'வாளின் வாழ்நர்' என்றனர். அரசகுடி வீரர் என்போர் பதிற்றுப்பத்துச் செய்யுளில் காணப் பெறும் முன்திணை முதல்வர் போன்று அரசகுடியின் முன்னோ ராகிய போர்க்குடி வீரர்கள். "நின்னொடு பழையதாய் முதிர்ந்த உயிரினும் உயிருடனே நின்று முதிர்ந்த உடம்பு போன்ற நினது வெற்றிக்குடியோடு மூத்த சீரிய குடியின்கண் சிறந்த வாட் போராலே வாழ்வோர்" ஆவர் என்று அரச மரபு வீரரைச் சிறப்பித்தனர். விழுத்திணை மரபிலே தோன்றிய இவர்களே "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தகுடி" (புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தைப் படலம்) ஆவர்.

சோழன் நலங்கிள்ளியை உறையூர் முதுகண்ணன் சாத்தனார் புகழ்ந்து, "விழுக்குடித் தாயத்தில் பிறந்தோர்" என்று புறநானூறு 27இல் குறிப்பிட்டுள்ளார்.

வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணும் காலை (புறநானூறு 27:3–4)

என்று சோழர்குடியைப் பெருமைபடச் சிறந்த குடியின்கண் பிறந்து வீற்றிருந்த வேந்தர் என்கிறார்.

பெருஞ்சித்திரனார் என்ற புலவர் வேளிர் தலைவனாகிய முதிரைமலைக் கிழவனாகிய குமணனைப் பாடிய புறநானூற்றுப் பாடல் 159இல்,

குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
அதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்

வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றல்

என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது,

"கூரிய வேலையுடைய குமணனே!...... வென்றிப் புகழையுடைய வசையில்லாத சிறந்த குடியின் கண் பிறந்த இசை மேம்பட்ட அண்ணலே"

என்று சுட்டிக்காட்டியுள்ளார். இம்மன்னனைப் புறநானூறு 158இல்,

முதிரத்துக் கிழவ!
இவண்விளங்கு சிறப்பி னியதேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே

என்கிறார் அப்புலவர். இப்பாடலடிகளின் உரை வருமாறு:

முதிரமென்னும் மலைக்குத் தலைவ! உலக முழுவதிலும் விளங்குகின்ற தலைமையினையும் இயற்றப்பட்ட தேரினையும் உடைய குமணனே! புகழ் மேம்பட்ட வண்மையுடனே பகையிடத்து உயர்க, நீ எடுக்கப்பட்ட வேல்

கொங்குவேள் என்ற அரச மரபினரால் எழுதப் பெற்ற ***பெருங்கதை*** *நூலில்,*

பயங்கெழு வையத் துயர்ந்த தொல்சீர்
விழுத்திணைப் பிறந்துதம் ஒழுக்கம் குன்றாப்
போரடு மன்னர்

(பெருங்கதை 3, மகத காண்டம், 21 மகட்கொடை வலித்தது வரி 50–52)

என்று விழுப்பேர் ஒழுக்கம் நிறைந்த குன்றாது வாழும் போர்க் குடிமரபின் மன்னர் என்கிறார்.

விச்சையும் வனப்பும் விழுக்குடிப் பிறப்பும்
ஒத்தொருங் கமைந்த வுதயண குமரனை

(பெருங்கதை, 1 உஞ்சைக் காண்டம் 35, நருமதை சம்பந்தம், 159–160)

பெருங்கதையின் *நாயகனாகச் சொல்லப்படும் அரச மரபினனான உதயண குமரனை விழுக்குடிப் பிறப்பு உடையவன் என்கிறார்.*

சங்கினும் பாலினும் சலமில் வாய்மை
விழுத்திணைப் பிறந்த வொழுக்குடை மரபினர்
நெய்தலைப் பெய்தற் கெய்திய சிறப்பணி
ஏந்திய சென்னி மாந்தர் கூடி
அறுகைப் புல்லினும் வாகைத் தளிரினும்
நறுநெய் தோய்த்து முறைவமுத னீவி
நின்னோ ரன்ன.....
(பெருங்கதை, 2 இலாவண காண்டம், 5 மண்ணு நீராட்டியது, 65–71)

என்பதால் சங்கினும் பாலினும் தூய்மையான மரபிலே குடிப் பிறந்தாராகிய விழுக்குடிச் சிறப்புடைய ஒழுக்கம் நிறைந்த அரச மரபினர் நிகழ்த்தும் திருமணச் சடங்கு பற்றிக் கொங்கு வேளிர் பதிவு செய்துள்ளார். (கழகப் பதிப்பின் உரையில் இவரைச் சன்றோர் என்று உரை எழுதிச் சிறப்பித்துள்ளனர்.) பழமொழி நானூறு (180) ''வெள்ளை மாண்பு எல்லாம் உடைய தமர்'' என்று உணர்த்தி இருப்பதை உணர்தல் வேண்டும்.

குலத் தூய்மைக்கு வெண்ணிறத்தை அதாவது வெள்ளையைக் குறிப்பிடுவது இலக்கிய வழக்கு.

சங்கம் போல் வாய்மையார் குலத்தூய்மை சால்புமுல்லை,
(புறப்பொருள் வெண்பா மாலை, 185)

சங்கம் போலும் நம்குடி (சீவகசிந்தாமணி, 547 (நச். உரை)

வலம்புரி அன்ன குலம்புரி பிறப்பும் (ஆத்திரேயன், பொது)

குலத்தூய்மை கருதியே வெள்ளை நாடர் என்றனர்.

தகடூர் யாத்திரை என்ற நூல் வீரக்குடியினரின் போர்ச் செலவு பற்றியதாகும். "நிலையமை நெடுந்திணை'' என்னும் விழுத்திணைக் குடி பற்றித் **தகடூர் யாத்திரை** (35) குறிப்பிடுகிறது. புறப்பாடல் விழுத்திணைக் குடியை "விளங்கு திணை" என்று (புறம். 373) சுட்டிக்காட்டுகிறது. இக்குடி தொல்குடி என்றும் தொன்றுதொட்டு வரலாறு உடையது என்றும் மன்னர்குடி இலக்கியங்களில் பேசப்படுகிறது. வள்ளுவர் 'பழங்குடி' என்றும் பரிமேலழகர் மூவேந்தர்குடி என்றும் கூறுகின்றனர். இதுவே தொன்முதிர் வேளிர் என்ற அரச மரபாகும்.

தொல்குடியை உயர்குடி என்பது உலக வழக்கு. உயர்குடியே உயர்திணை சங்ககால உயர்குடி மகளிரை உயர்திணை மகளிர் என்றனர். தூய்மையான குடிப்பிறப்பையுடைய அரச மகளை, "வலம்புரி வயிற்றிடைப் பிறந்த குலமணி" என்று **சூளாமணி** (1:417) குறித்துள்ளது.

சங்கு சுட்டாலும் வெண்மை தரும் என்பதும் பாலினைக் கொதிகலனில் வைத்துச் சூடு செய்து கொதிக்க வைத்தாலும் அதன் நிறம் மாறாதது போன்று குடிப்பிறந்தார் மாற்றம் அடையார். வெண்மை மாறாது என்பது போன்று ஒழுக்கம் நிறைந்த உயர்ந்தோர் தம்மை மாற்றிக் கொள்ளார். இதனால் நன்னூல் சூத்திரத்திற்கு உரை செய்த மயிலைநாதர், 'வெள் ளோலக்கர்' என்பதற்குத் தூய்மையான குடிமரபினர் என்றார்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் பெயரியல் சூத்திர உரையில் ஆத்திரேயர் குறித்து இருக்கும் சிலவற்றை விழுத்திணைக் குடியொடு பொருத்திப் பார்க்கலாம்.

> "பல்லோர் குறித்த திணை நிலைப் பெயராவது, திணைபற்றி வரும் பன்மைப் பெயர்."
>
> குறிஞ்சிக் கண்ணியர் குவளைபூண்டு
> வெற்ப ராடும் வெற்புசேர் இருக்கை
>
> என்றவழி உயர்திணைப் பொருளாகிய பன்மை குறித்து வந்தது.
>
> வெற்பன், மலையன், நாடன் என ஒருமை குறித்து வருவன உளவால் அவை அந்நிலத்துத் தலைமகனைக் குறிக்கும் உடைப் பெயராம். அந்நிலத்துள்ள மாந்தரைக் குறிக்கில் இருதிணைக்கும் பொதுவாம் என்று மேலும் விரிவான விளக்கம் சொல்லியுள்ளார். (சரசுவதி மகால் பதிப்பு).

தொல்காப்பியச் சொல்லதிகாரச் சூத்திரம் 165க்கு சேனாவரையர் உரையில் அந்தணர், அரசர் என்னும் பன்மை ஈற்றுச் சாதிப் பெயரை உயர்திணைப் பெயர் என்றும் அந்தணன் அரசன் என்னும் ஒருமை ஈற்றுப் பெயரை விரவுப்பெயர் என்றும் குறிப்பிட்டுள்ளதைப் பிற்கால இலக்கண நூலான பிரயோக விவேகம் (காரிகை எண் 49, உரை ஏற்புடையதாக்கியுள்ளது.

இதனால் உயர்திணைச் சாதிப் பெயர் இந்நாட்டில் தோற்றம் பெற்றிருந்தது என்று உணரற்பாலதாம். விளங்கு திணை என்பது

விளங்குகுடி என்றும் உயர்திணை உயர்குடி என்றும் விழுத்திணை விழுக்குடி என்றும் நெடுந்திணை நெடுங்குடி என்றும் முன்திணை முன்னோரின்குடி என்றும் தோற்றம் பெற்று விட்டது.

நமது மன்னர்கள் பலரும் நெடுமுடி மன்னர் என்றும் நெடுமுடி வேந்தர் என்றும் தங்களைக் குறிப்பிட்டுள்ளனர். அரசர்கள் பலரும் நெடுஞ்சேரலாதன், நெடுஞ்செழியன் என்றும் வேளிர் தங்களை நெடுமான்அஞ்சி நெடுவேளாதன் என்றும் பெயரிட்டுக்கொண்டனர். 'நெடுங்கை' என்றும் 'தடக்கை' என்றும் மன்னர், தலைவர் ஆகியோரின் 'கை' அடையாளப்படுத்தப்பட்டது. 'நெடுவேல் மன்னர்' என்றும் 'நெடுமுடி அண்ணல்' என்றும் குறிப்பிடப்பட்டனர். இறைவனுக்கும் 'நெடுமுடி அண்ணல்' என்று திருப்பெயர் இட்டு இலக்கியங்கள் அழைக்கின்றன.

நெடுந்தகை, பெருந்தகை என்பதும் பெருவழுதி பெருஞ்சேரன், பெருஞ்சோழன் என்பதும் உயர்வு கருதித் தன்னை மேம்பட்டவனாக அடையாளம் காட்டவே பட்டமாகக் கொண்டு பெருமைப்பட்டுக் கொண்டனர்.

சேரர் குடியினர் அனைவரும் எழுமுடி வென்ற செய்திகளைச் சங்க நூல்கள் பலவற்றிலும் குறித்து வைத்துள்ளனர். பரணர் என்ற புலவர் சேரன் செங்குட்டுவனை,

> **விழுமியோர் துவன்றிய வன்க ணாட்பின்**
> **எழுமுடி மார்பி னெய்திய சேரல் (பதிற்றுப்பத்து 45:5–6)**

என்பதற்கு அறிஞர் அவ்வை துரைசாமிப்பிள்ளை தம் உரையில்,

> வீரர்க்குரிய சிறப்பு அனைத்தும் நிரம்பிய சான்றோரென்றற்கு விழுமியோர் என்றார். எதிர்த்த வேந்தர் எழுவரை வென்று தும்பையும் அம்பும் வில்லும் நெஞ்சம் எஃகமுடைய விழுமியோர்

என்று உரை வரைந்துள்ளார்.

மேலே சொல்லப்பட்ட உரையில் இருபெரு வேந்தர் மற்றும் வேளிர் ஐவர் பற்றி அறிந்த நிலையில் இந்த உரைகாரர் வேளிரையும் தம் உரையில் வேந்தர் என்றே சுட்டிக் காட்டியுள்ளார்.

அவ்வையார் பாடிய புறநானூற்றுச் செய்யுளில் (99), சேரனை,

> **இமிழ்குரன் முரசி னெழுவரொடு முரணி**

என்று குறிப்பிட்டுள்ளார். தொன்று தொட்டு, சேரர்கள் வென்று மார்பிலே அணிந்த எழுமுடிகளின் பொன்னாரம் பற்றிப்

பதிற்றுப்பத்து (14)தனில் குறித்த பின்னரும், "இன்றும் பரணன் பாடினன்" என்று அவ்வையார் நினைவூட்டியது சேரர் குடியினரையே அன்றி அதிகமான் மரபினர்களை அன்று.

அமரர் பேணியு மாவுதி யருந்தியும்
அரும்பெறன் மரபின் கரும்பிவட் டந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல

என்பது சேரர் குடியையே குறித்துப் பாடப்பட்டுள்ளது. கடலோடு தொடர்புடைய நாடு சேர நாடாகும். சேரர் குடியின் உறவைப் பெற்றுவிட்ட அதிகர்குடி எழுந்தது பிற்காலமாகும். வான் உலகத்திலிருந்து கரும்பு கொண்டுவந்தவர்கள் வானவர், வான வரம்பன் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட சேர வேந்தர்களே. தகடூர் ஆண்ட அதியமான்கள் மழவர், குடியிலே பிறந்த தாய்வழி உறவால் உயர்ந்தவராவர். "கரும்பினைத் தந்தோன் பிறங்கடை" என்று சேரர்குடிக்கு அதியர்குடி உரிமை கோரியது பிற்பட்ட நிலையாகலாம்.

அரசு மரபுயெனும் உயர்குடிப் பிறப்புடை விழுத்திணை மக்கள் தங்களை விழுமியோர் என்று இலக்கியங்களில் காட்டியுள்ளனர். விழுப்புகழ் நிலை பெற்ற வீரர் மரபும் விழுக்குடிப் பிறப்பு உடையவரை வேத்தியல் தொடர்புடைய வீரர் என்றும் தெளிவாக உணரமுடிகிறது.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைக் கோவூர் கிழார் பாடிய பாடலில் (புறம். 41)

காலனுங் காலம் பார்க்கும் பாராது
வேலீண்டு தானை விழுமியோர் தொலைய
வேண்டிடத் தடூஉம் வெல்போர் வேந்தே

என்பதற்கு அப்பாடலின் பழையவுரை,

> கூற்றும் தன்னால் உயிர் கொள்ளலாங் காலம் வருந்துணையும் பார்க்கும்; அவ்வாறு காலம் பாராது வேல் நெருங்கிய படையினை யுடைய பெரியோர் மாளும் பரிசு நீ வேண்டியவிடத்தே கொல்லும் வெல்லும் போரையுடைய வேந்தே

என்றார்.

"வேலீண்டு தானை விழுமியோர்" என்போர் போர்த்தொழில் உடைய அரசராம். விழுமியோர் என்பதற்குப் பெரியோர் என்று பொருள் சொல்லிச் சிறப்பித்தனர். மாங்குடி மருதனாரின் மதுரைக்காஞ்சி,

தண்கடல் நாடன் ஒண்பூக்கோதை
பெருநாளிருக்கை விழுமியோர் குழீஇ (மதுரைக்காஞ்சி 524–525)

என்கிறது.

குளிர்ந்த கடல் சேர்ந்த நாட்டையுடையனாகிய ஒள்ளிய பனந்தாரையுடைய சேரனுடைய பெரிய நாளோலக்க இருப்பிலே என்ற அவையிலிருந்த விழுமியோர் (சான்றோர்) என்றார். இவரை அரசகுடி மரபினரான தலைமக்கள் என்று கொள்வதே ஏற்புடையதாகும்.

சங்க மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பதினெண்கிழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான ஆசாரக்கோவை "ஆன்றவிந்த மூத்த விழுமியோர்" என்ற பெரியோரான மூத்தகுடியில் தோன்றி விழுமியோரைக் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய மேம்பட்ட மரபினரைப் புறப்பாட்டில் "ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர்" என்றனர்.

விழுமியோர் எனப்பட்ட வீரராகிய பெரியோர் அரச குடியாகிய வேளிர்குடியிலே தோன்றிய வீரர். நாலடி நானூறு (300) மானம் என்ற அதிகாரத்தில்

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம் வீழ்ந்த துண்ணா திறக்கும் – இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின் (நாலடி : 30 பா. 300)

என்கிறது.

மானத்தைக் காப்பாற்றும் சிறப்புள்ள பெரியோர் விண்ணுலகமாகிய சொர்க்கமே சேர்வதாயிருந்தாலும் மானம் கெட வருவதாயிருந்தால் அதனை விரும்ப மாட்டார் என்பதாம். விழுமியோர் என்பார் சொர்க்கம் செல்லும் உயர்குடி என்று தெரியவருகிறது வீரசொர்க்கம் அரச குடியினர்க்குச் சில நூல்களில் வரையப்பட்டுள்ளது. யார் யாருக்கு எந்த உலகம் என்று சில நூல்களில் குறிப்பு உள்ளது.

மானம் என்ற அதிகாரத்தில் (30) செய்யுள் 298இல், தலையாய சான்றோர் மனம் என்று குறிப்பிடப்படுகிறது. இந்நூலின் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பில் இப்பாடலுக்குரிய (பக். 756) செம்பூர் வித்துவான் ''ஆறுமுகஞ் சேர்வை எழுதிய உரையில் உயர்ந்த குடிப் பிறந்த சான்றோர்'' என்று மானம் உடைய குடியைப் பற்றி விவரித்துள்ளார். மானம் தொடர்புடையவர் என்று நாலடி நானூறு (செய். 295) சான்றவர் என்று அவரைக் குறிப்பிடுகிறது.

பெரியோர், சான்றோர், உயர்ந்தோர், மூத்தோர் (மூத்தரையர்) என்போர் உயர்குடிப் பிறந்த விழுமியோராவர். இவரைப் பெரு மூத்தரையர் என்று நாலடி நானூறு விவரிக்கிறது. இவரே கல்வெட்டுகளில் விருத்தரசர் எனப்பட்ட மூத்தாதி ராஜா (அன்பில் செப்பேடுகள்) எனப்பட்ட அரச மரபினர். இவர் வேள்குல அரசரே.

நற்றிணை 180வது பாடல்,

அன்னியும் பெரியன் அவனும் விழுமிய
இரு பெருவேந்தர் பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல

என்றுரைப்பதில் இருபெரு வேந்தர் என்று அடையாளமிடப்படுவோர் வேளிர்களே. விழுமியோர் என்பதாலே. "விழுமிய இரு பெருவேந்தர்" என்றார். எனவே பெரியோர் என்ற சொல் அரசரைக் குறித்து நின்றது. விழுமிய பெரியோர் என்போர் விழுமியோர் என்று அழைக்கப்பட்டுள்ளனர்.

வேளிரின் வேத்தவை

மலைபடுகடாம் நூல் நன்னன்சேய் நன்னன்வேள் மீது பாடப்பட்டதாகும். இந்நூலில் வேளிர் ஆளும் தன்மையும் அவர்தம் வாழும் ஊர்களும் விவரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வேள்குலத்தவர் வாழும் மூதூர் பற்றிச் சுட்டிக்காட்டுவதைக் காணலாம். 'தொல்திணை மூதூர்' (மலைபடுகடாம் 41) என்ற அடிகளுக்கு நச்சினார்க்கினியர் "பழையதாகிய உயர்ந்த ஒழுக்கத்தையுடைய பழைய ஊர்கள்" என்று உரை செய்தார். புறம் 353 பாடல் ஊர்களில் வாழ்ந்த அரச மரபினரைத் தொல்குடி மன்னர் என்று அடையாளம் காட்டுகிறது.

மலைபடுகடாம் நன்னன்சேய் நன்னனின் இராச சபையை,

> இசைபெறு திருவின் வேத்தவை ஏற்ப
> துறைபல முற்றிய (மலைபடுகடாம் 39–40)

என்கிறது. வேத்தவை என்பது வேந்தனின் அவை எனில் வேளிர் தலைவன் வேந்தன் குடியினனே. வேத்தவை நடாத்தி நல்லாட்சி செய்த நன்னன் வேள் குலத்தவன் என்பதே உண்மை.

சோழன் நலங்கிள்ளியின் அவையைக் கோவூர்கிழார் என்ற புலவர் "வேத்தவை யோனே" என்று குறிப்பிடுகிறார். சோழர் அவை வேத்தவை என்றது போன்று வேளிரின் அவையும் வேத்தவை எனில் இருவரும் ஒருவரே.

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் பாண்டியரின் மூவேந்த வேளான்

கி.பி. 10ஆம் நூற்றாண்டில் கோச்சடையன் ஆட்சி ஆண்டு 3க்குரிய கல்லுடை திருச்சுழிக் கல்வெட்டு,

> சாணாட்டு திருப்பாலையூர் இறைவனுக்குக் கேரள சிங்க
> முத்தரையனான மாதேவன் மருதன் மேன்முக்குளத்து
> தன் காணிப்பற்றில் காராண்மை குடுத்த புலக்குளத்து
> சேல்கல்நிலம்

குறிப்பிடப்படுகிறது. இத்தானத்தை வழங்குவதற்குமுன் பருத்திக்குடி நாட்டுப் பார்ப்பார சான்றார்க்கும் பாற்குடிகளுக்கும் பிரம்மதேயக் கிழவர்க்கும் தெரிவித்தும் வடநாட்டில் மூத்த குடிகளுக்கும் பார்ப்பனர்க்கும் பிரம்மசத்திரியர் (பார்ப்பார சான்றார்), குடிமக்கள், அந்தணர்கள் (பிரம்மதேயக் கிழவர்) ஆகியவர்களுக்குத் தெரியப்படுத்தியும் தான நிலம் வழங்கப்பட்டுள்ளது.

உயர் அதிகாரியான திருவழுதி வளநாட்டுப் பெருங்குளத்துப் பாண்டித் தமிழ் வேளானாயின வேளான் பட்டாலகன் ஒப்புதல் பெறப்பட்டும் வழங்கப்பட்டுள்ளது. நிலம் வழங்கும் ஆணத்தியாக அரசனின் கருமமாராய்கின்ற முத்தூற்றுக் கூற்றத்துப் பிரம்மதேயமான கப்பலூர் உதாரவிடங்க பிரமாதிராயனான உத்தம பாண்டியனும் இந்நாட்டுக் கட்டிவயல் பாண்டி மார்த்தாண்ட மூவேந்த வேளானாயின பட்டன் வேங்கடவனும் இருந்துள்ளனர். ஆணத்திகளில் பிரம்மாதிராயன் பார்ப்பனர் ஆவார். மூவேந்த வேளான் பட்டன் வேங்கடவன் அரச மாபினன் என்று தோன்றுகிறது. பட்டம் கட்டின வேளிர் பற்றி வேறு கல்வெட்டில் தெரிவதாலும் திருவையாறு கல்வெட்டு ஒன்று அரச மரபினரையே பட்டகன் என்பதும் ஓர் அரசனின் தேவியரில் பட்டன் தானதொங்கியார் என்றும் மற்றொரு தேவி பட்டன்

மல்லியென் என்றும் கல்வெட்டுகளில் கூறி இருப்பதும் பட்டப்பெருமக்கள் என்போர் அரச மரபினர் என்று அறியப்பட்டமையாலும் மூவேந்த வேளானாயின பட்டன் வேங்கடவன் ஆட்சிக்குடி மரபினன் எனக் கருத இடமுண்டு.

குறிப்பாக, மூவேந்த வேளான், வேளான் என்று குறிப்பிடப்பட்டவர்கள் பலர் இக்கல்வெட்டில் காணப் பெறுகின்றனர். பாண்டியன் சடையன் மாறனின் அதிகாரிகள் ஆவர்.

வேள்வி தொடர்பான வேளிர்கள்

வேளிர் ஒருவன் பல ஊர்களை உடையவன் எனப்படுவதோடு இருஞ்சோணாட்டவர் தலைவன் எனவும் படுகின்றான். நகரின் தலைவன், குடி தோன்றல், அதிபதி என்று குறிக்கப்படுவதுடன் வெளியன்குடி விறல் ஆண்டகை (வெளியன் வேளிர் தொடர்புடைய பெயர்) எனப்படுகின்றான். 'இறைவன்' என்றும் முறைமைக் கடவுளாக அதாவது அரசனாக அமைந்து சிறந்து ஆட்சிக் கிழவனாகக் கல்வெட்டில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளான்.

இலக்கியங்களில் மலைகிழவன், நாடுகிழவன், ஊர்கிழார் என்ற சொற்கள் வேளிரையும் அவரில் மேம்பட்டு உயர்ந்த வேந்தரையுமே குறித்தன. பின்னர் அனைவரையுமே வந்தடைந்துவிட்டன. இதற்கான சரியான விளக்கத்தை இளம்பூரணர் குறித்துள்ளார். தேரிலே வரும் அரச மரபினரை 'ஊரன்' என்று சங்க இலக்கியத்தில் குறித்தனர். தலைவன் தலைவி என்று இலக்கணம் சொல்லி மணம் கொள்ளும் உரிமையும் களவொழுக்கம் கொள்ள உரிமையுடையவராகவும் வாழ்ந்த ஊரன்மார் தலைமக்களாகும்.

கொடும்பாளூர் வேளிர்கள்

சங்க காலத்தில் இருந்த அரசகுல இருங்கோவேள் குலத்தினர் இக்காலம் வரையும் தம்மை இருக்குவேளிர் குலம் எனத் தக்க வைத்து வருகின்றனர்.

சந்திர, ஆதித்த குலத்தினரே இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் தங்களை இருக்குவேளிர் குலத்தவர் என அடையாளப்படுத்தி நூல்களில் குறித்துள்ளனர். இருக்குவேளிர்க்கு இரண்டாயிரத்துக்கு மேலான ஆண்டுகள் வரலாறு உண்டு என்பது கபிலர் சொல்லும் பாடமாகும். இவர்கள் கொடும்பாளூர் வேளிர்கள் எனவும் அழைக்கப் பெறுவர். கோநாடர், கொங்குச்சோழர் என்பவரும் இவர்களே.

தமிழக வரலாற்றில் அரசகுல வேளிரை நீக்கி வரலாறு எழுத முடியாது. சங்க காலச் சான்றோர்களான வீரக்குடியுள் கொடும்பாளூர் வேளிர்குடியும் ஒன்றாகும். கோநாடர் என்றும்

இவர்கள் அழைக்கப்பட்டனர். கோநாட்டை ஆண்டதால் இப்பட்டம் ஏற்பட்டது. கோனாடு மட்டுமின்றிக் கானாடும் இவர்களுக்குரியதே. பெரிய வேள்விகளை நடத்திய இருஞ்சோணாட்டுப் பெருஞ்சாந்தி குலமன்னர் இருக்கு வேளிரே ஆவர்.

பாண்டியன் கோச்சடையமாறனுக்குரிய சாத்தூர் கி.பி. 833இல் அமைந்த இருக்கன்குடி கல்வெட்டில் "பெருஞ்சாந்திகுல மன்னர்" என்று வேளிர் குலத்தவர் தம்மை அடையாளம் காட்டியுள்ளனர். இவர்களைப் பற்றி, கி.பி. 12ஆம் நூற்றாண்டினரான ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியின் அதே கால உரை "தங்கள் குலோற்பவ னென்றது" சூரிய குலத்தில் உதித்தவனென்றபடி என்கிறது. தக்கயாகப் பரணியின் பழைய உரையைத் தெளிவாகப் பார்த்தால்தான் வரலாற்றில் உண்மை தெரியவரும். தக்கயாகப் பரணி தாழிசை 8 கூறும் கருத்தாவது:

> எருத்துக் கொடியான பல்லவ அரசன் இலாஞ்சனையும் மானினத்திற் கலைமான் கொடியான கபிலேசுரன் கஜபதி இலாஞ்சனையும் விற்கொடியான சேரமான் இலாஞ்சனையும் பருவத்தை எழுதிய கொடியான பாண்டியன் இலாஞ்சனையும் ஒக்க ஓடப் பின்பு தங்கள் குலோற்பவனான ஆதித்தனது சத்திரிய இலாஞ்சனையான யானை ஓடத் தாம் தாம் பிடித்த விருதுகள் ஓடிப் போக, பொருதுவென்றேறிய புலிப்போத்து சக்கரவாள் கிரிக்கு உள்ளும் புறமும் எங்கும் தானேயாகி விளையாடும் பொருட்டு விளையாடப் பரமசமயக் கோளரியின் கழல் பாடுவாமென்க.

"மலைத்துவசனென்பானொரு பாண்டியனாகவும் அவனுக்கு மலையவதி என்பாள் ஒருத்தி உள்ளாகவும் அவளைச் சீமுதவாகனென்னும் உபகார வித்தியாதரன் கலியாணம் பண்ணினானாகவும் மகாகவியொருவர் ஒரு காவியத்திலிட்டார். மலையைக் கொடியாகவுடையார் பாஞ்சாலர் பங்கு பெற்ற பிரம்ம சத்திரியர் என்பாரும் உளர். இரண்டில் நல்லது கொள்க (தாழிசை 8).

தங்கள் குலோற்பவரென்றது சூரிய குலத்தில் உதித்தவன் என்றபடி. இங்குக் கூறப்பட்ட ஆதித்தன் என்பவன் சோழர் குலத்தில் பிறந்து அக்காலத்தில் இருந்த தாயத்தாராகிய சோழர்களால் வெல்லப்பட்டு, கோனாட்டிலுள்ள கொடும்பாளூரின்கண் சிற்றரசர்க்குரிய ஆட்சியைச் செய்தார் என்று தெரிகிறது. (பெரிய புராணம் இடங்கழி 3) சத்திரிய இலாஞ்சனை என்பது சத்திரிய சின்னம் என அறிஞர் உ.வே.சா.வும் குறிப்பு எழுதியுள்ளார். இத்தகைய சிறந்த உரை எழுதிய உ.வே.சா.

தமது நூல்களில் வேளிரை வேளாளர் என்றது வியப்பிற்குரியது. சோழரும் இருக்குவேளிரும் சூரியகுலத்தவர் என்பது கண்டறிந்தும் வேந்தர் வேளிர் உறவு உணர்ந்தும் சூரிய குலத்திவரோடு கங்கைக் குலமரபைப் பொருத்திப் பார்ப்பது ஏற்புடையது ஆகாது.

கொடும்பாளூர் வேளிர் சத்திரிய இலாஞ்சனை யானையை உடையவர் என்று சுட்டிக்காட்டி இருக்கும்பொழுது வேளிரை வேளாளராக்கியது வருந்துவதற்குரியதாகும். பழைய உரையாசிரியர் பாண்டிய குலத்தவரைப் பிரம்ம சத்திரியர் என்றதை உணர ஆவணங்களைத் தேடுங்கள். பல்லவரை அரசர் என்று கண்டுகொண்ட பழையவுரையாசிரியர் சொல்லி இருப்பதும் பல்லவ அரசரின் நந்திக் கலம்பகம் இம்மன்னர்குடியை, "சந்திரகுலபிரகாசன்" என்று எடுத்தோதி இருப்பதும் எல்லாம் சிந்தித்து முடிவு கொள்ள வேண்டியவை.

ஆதித்தனென்பவன் சோழர் குலத்திற் பிறந்து, அக்காலத்திலிருந்த தாயத்தார்களாகிய கடைச் சங்ககாலச் சோழர்களால் வெல்லப்பட்டு, கோனாட்டிலுள்ள கொடும்பாளூரின்கண் சிற்றரசர்கட்குரிய அரசாட்சியைச் செய்து வந்தானென்று தெரிகிறது. இவனது மரபினரே இடங்கழி நாயனார் ஆவார். இந்நூலின் பழையவுரை இவரை ஆதித்தகுலச் சத்திரியர் என்று குறிப்பிடுகிறது. இவர் யானையைச் சின்னமாகக் கொண்டிருந்த இராசகுலவர் எனத் தெளிவாகிறது. சோழரில் ஒரு பிரிவினர்க்கு யானையே குறியீடு ஆகியிருந்தது.

சங்க இலக்கியத்தில் கபிலருடைய புறநானூற்றுப் பாடல் (201) மூலம் இருக்குவேளிர்கள் நாற்பத்தொன்பது தலைமுறையுடையவர்கள் என்றும் 'வேளிருள் வேளே' என்பதால் வேளிர் குலத்திற்கு இவரே தலைவர் என்றும் தெரிய வருகிறது. இவர்களைச் சூரிய வமிச சோழ குலத்தவரின் முன்னோர் என்று சேக்கிழார் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுவதை அறிகின்றோம்.

மூவேந்தரால் முற்றுகை இடப்பெற்றுக் கொல்லப்பட்ட பாரி வள்ளலின் புதல்வியர்க்குத் திருமணம் செய்து வைக்கும் கடமை புலவர் கபிலர்க்கு ஏற்பட்டது. அவர்களை அழைத்துக் கொண்டு முதலில் விச்சிக்கோன் என்பானிடம் சென்றார். அவன் அவர்களை மணக்க மறுத்துவிட்டான். பின் இருங்கோவேளிடம் சென்றார். அவனுடைய குலப்பெருமையினைப் பாடினார். அப்பாடலின் ஒரு பகுதி வருமாறு:

நீயே வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேண்நெடும் புரிசை

உவரா ஈகைத் துவரை ஆண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங்காவே
ஆண்கட னுடைமையிற் பாண்கடானாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்

என்கிறார். இப்புறப்பாட்டு இருக்குவேள் மரபினரைத் துவரைவேள் என்று கூறுகிறது. நாற்பத்தொன்பது தலைமுறை ஆட்சி கொண்ட இம்மரபினரை,

> உவராவீகை வேளிர் எனக் கூட்டுக'', ''வடபால் முனிவன் தடவினுள் தோன்றி'' என்பதற்குக் கதை உரைப்பிற் பெருகும். அது கேட்டுணர்க. புலிகடிமால் என்பது இவனுக்கொரு பெயர்; வேளே! அண்ணல் இருங்கோவே! புலிகடிமால்! கிழவ! நாடு கிழவோய்! நீ இப்படிப்பட்ட உயர்ந்த குடியிற் பிறந்தவனாதலால் யான் தர இவரைக் கொண்மதியெனக் கூட்டிவினை முடிவு செய்க. யான் இவருடைய தந்தை தோழனாதலாலும், அந்தணனாதலானும் யான் தர இவரைக் கோடற்குக் குறை இல்லை.

என்று புறப்பாட்டின் பழையவுரை குறிப்பிடுகிறது. உயர்ந்த குலத்தவர் அக்காலம் அந்தணரும் அரசரும் வணிகருமே தொல்காப்பியப் பாயிரம் மற்றும் அதன் பொருளதிகாரம் அகத்திணை இயல் நூற்பா 32இல் நச்சினார்க்கினியர் பின்வரும் வரலாற்றைக் குறிப்பிடுகின்றார். அகத்தியர்

> துவராபதிப் போந்து நிலங்கடந்தநெடு முடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்குடி வேளிருள் ளிட்டாரையும் கொண்டு போந்ததாக –

இங்குக் குறிப்பிடப்பெறும் இருங்கோ இருக்குவேள் எனவும் படுகிறான். இவன் பாரி மகளிரைத் திருமணம் செய்ய மறுத்து விடுகிறான்.

இருக்குவேள் மரபினர் கொடும்பாளூரைத் தலைநகராகக் கொண்டு எப்பொழுது தம் ஆட்சியைத் துவக்கினர் என்று அறிய முடியவில்லை. பிற்காலச் சோழர் சரித்திரம் எழுதிய தி.வை. சதாசிவ பண்டாரத்தார் முற்காலச் சோழர்களின் பரம்பரையினர் களப்பிரர்களாலும் பல்லவர்களாலும் ஒடுக்கப்பட்ட நிலையில் குறுநில மன்னராய் இருந்தனரென்றும் அவர்கள் வேளிரின் ஆட்சி இருந்த இடங்களிலும் உறையூர் மற்றும் காவிரிப் பூம்பட்டினத்தில் உறையாமல் வேறு ஊர்களில்தான் உறைந்திருக்க

வேண்டும் என்றும் அவ்வூர்களில் கொடும்பாளூர் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் கூறிவிட்டு வேறொரு இடத்தில் அதற்கு முரணான கருத்தைக் கூறுகிறார். அவர் சொல்வதாவது:

> உறையூரில் சோழர் குடியினரான வேளிர்கள் நல்லாட்சி செய்தனர் என்றும் சங்க நூல்களில் வெளிப்படுவதை அவர் உணரவில்லை. கி.பி. 9, 10, 11ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளில் வேளிர்கள் காவிரிக் கரையில் நல்லாட்சி நடத்துவதைக் கல்வெட்டுகள் படம்பிடித்துக் காட்டுகின்றன.
>
> வரலாற்று ஆசிரியருள் சிலர், கோனாட்டின் தலைநகராகிய கொடும்பாளூரில் அந்நாட்களில் இவர்கள் தங்கியிருந்தனர் என்று கூறுகின்றனர். மற்றுஞ்சிலர் இவர்கள் உறையூர்ப் பக்கத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்கின்றனர்.. இவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கோனாடு என்பது புதுக்கோட்டை இராச்சியத்தில் முற்காலத்திலிருந்த ஒரு நிலப்பரப்பாகும். அது சோழ மண்டலத்திற்கும்.பாண்டி மண்டலத்திற்கும் இடையில் அமைந்திருந்த ஒரு சிறு நாடு எனலாம். அந்நாட்டிலிருந்த கொடும்பாளூரில் இருக்குவேள் என்ற குடியினர் இருந்தனர் என்பதும் அவர்கள் சில காலம் பாண்டியர்க்கும் சில காலம் பல்லவர்க்கும் அடங்கித் திறை செலுத்திக் கொண்டு குறுநில மன்னராயிருந்து வந்தனர் என்பதும் சில கல்வெட்டுகளால் புலப்படுகின்றன. அவர்கள் கடைச்சங்க நாளில் வாழ்ந்த இருங்கோவேளின் வழியினர்; சோழ மரபினர் அல்லர். எனவே, கொடும்பாளூரில் இருவேறு குறுநில மன்னர் ஆட்சி புரிந்து கொண்டிருந்தனர் என்று கொள்வது எல்லாவற்றானும் ஏற்புடையதன்று. ஆகவே சோழர் குறுநில மன்னராயிருந்த காலத்தில் கொடும்பாளூரில் இருந்திலர் என்பது திண்ணம்

என்று கூறும் பண்டாரத்தார் பின்பகுதி ஒன்றில்,

> முதல் பராந்தகச் சோழனின் கி.பி. 907-953 மற்றொரு மகள் கொடும்பாளூர்ச் சிற்றரசனாகிய பூதிவிக்கிரம கேசரியை மணந்து வாழ்ந்தனள்; இதனால் கொடும்பாளூர்த் தலைவர்கள் சோழர்க்கு உற்ற நண்பராகவும்

> உறவினராகவும் அந்நாளில் இருந்தனர் என்பது உணரற்பாலதாம்.

என்கிறார். கொடும்பாளூர் வேளிர் சோழ மரபினர் அல்லர் என முன்பு கூறிய பண்டாரத்தார் பின்பு அவர்கள் சோழரின் உறவினர் என்கிறார்.

இருக்குவேளிராகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் இவர்கள் தங்களைச் சூரிய குலத்தினர் என்றும் சோழ குலத்தினர் என்றும் செட்டி தோளேறிய பெருமாள் என்றும் ஈழம் திறை கொண்டோர் என்றும் காந்தமச் சோழனின் கோத்திரம் என்றும் சான்றார் குலத் தலைவர் என்றும் ஏறாடி மாமலை கொண்டோன் என்றும் இன்னும் பலவாகவும் சோழகுலத்தார் கூறுவது போன்று கூறிக்கொள்வதால் இருங்கோவேளிரும் சோழகுலத்தினரே. ஒரே குடியின் உள்ளே நிகழ்வுற்ற திருமண உறவு வேளிர் வேந்தர் மணவுறவாகும்.

சங்க காலத்திற்கு முன்பே 49 தலைமுறை வரலாறு கொண்ட இவர்கள் சங்க காலத்திற்குப் பின் கி.பி. 9ஆம் நூற்றாண்டு வரை தம்மைச் சோழ குலத்தினராக அடையாளப்படுத்திக் கொண்டு ஆட்சி செய்தும், தற்காலத்திலும் அவ்வடையாளங்களோடும் அமைந்துள்ளனர். வேளிரிலிருந்து மேம்பட்ட வேந்தர் மரபினர் இவ்வேளிரோடு மணவுறவும் கொண்ட வரலாறுகள் ஏராளம்.

பூதிவிக்கிரமகேசரி

கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைந்த பூதிவிக்கிரம கேசரியின் கொடும்பாளூர்க் கல்வெட்டு இவர்களின் பரம்பரையை அறிய ஓரளவு பயனுடையதாகத் தெரிகிறது. இவர்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த மலையினைக்கூடக் 'கோநாடர்குன்று' என அழைத்துள்ளனர். இவரின் மெய்க்கீர்த்தி அமைந்த கல்வெட்டுச் செய்தி கீழ்வருமாறு:

> யானைகளின் கூட்டங்களை அழித்த ஓர் அரசன் இருந்தான். அவன் குடும்பத்தில் பிரவீரசித் அல்லது மழவர்களை வென்று புகழ்பெற்ற வீரதுங்கன் என்பான் பிறந்தான். வீரதுங்கனுக்கு அதிவீர அனுபாமா மூலம் சங்ககிருது பிறந்தான். சங்க கிருதுவிற்குப் பாம்புகளோடு வளர்ந்த நிருபகேசரி பிறந்தான்.
>
> நிருபகேசரியின் மகன் தன்னுடைய விரோதிகளின் கோட்டைகளை அழித்தவனும் வாதாபியை

வென்றவனுமான பரதுர்க்கமர்த்தனன் ஆவான். பரதுர்க்கமர்த்தனனுக்குத் தெய்வத்தன்மை பொருந்தியவனும் அதிராசமங்கலம் என்னுமிடத்தில் சலுக்கியை வென்றவனுமாகிய சமராபிராமன் பிறந்தான். சமராபிராமன் யதுவம்சத்தின் குலக் கொழுந்தாவான். ஒப்பற்ற வீரனுமாவான். இலக்குமி சரஸ்வதி பார்வதி ஆகிய மூன்று மாதர்களுடைய செல்வம் கல்வி வீரம் ஆகிய மூன்றும் நிறைந்த சோழ இளவரசி அவனுக்கு மனைவியாக வாய்த்தாள். அவளுடைய வயிற்றில் விக்கிரம கேசரி என்று (வீரம் பொருந்திய சிங்கம்) அழைக்கப் பெற்ற பூதிவிக்கிரம கேசரி பிறந்தான். இந்த அரசன் பல்லவர்களுடன் போரிட்டதனால் காவிரியின் நீர் இரத்த மயமாயிற்று. வீரபாண்டியனை வென்று வஞ்சி வேளைக் கொன்றான். மதயானைகளுடன் போரிட்டது போன்று தன்னுடைய எதிரிகளுடன் போரிட்டுக் கொடும்பாளூர்க் குன்றின் மீது அரண்மனை அமைத்து அதில் வாழ்க்கை நடத்தினான்.

தாமரை மலருக்குச் சூரியன் போன்றவனும் கற்றோருக்குக் கல்பதரு (பனை) போன்றவனும் அவனுடைய எதிரிகள் எல்லாம் கைகுவித்து வணங்கும் பெருமையுடையவனும் பூமிதேவியின் இரட்சகனும் (பாதுகாவலன்) வெற்றிச் செல்வம் புகழ்மிக்க இன்சொல் உடையவனுமாகிய பூதிவிக்கிரம கேசரியின் ஆட்சிக் காலத்தில் எங்கும் மங்கலம் பொங்கியது. பெண்களின் கண்களில்தான் கூர்மை; அவர்களுடைய கடைக்கண் பார்வையில் தான் மாற்றம்; அவர்களுடைய கூந்தலில் இருள்; அவருடைய இடையில்தான் சிறுமை; தனங்களில்தான் நடுக்கம் காணப் பெற்றது. பூதிவிக்கிரம கேசரிக்கு முதல் மனைவியான கற்றளிக்குப் பராந்தகன், ஆதித்ய வர்மன் என்ற இரு மக்கள் பிறந்தனர்.

இவை போன்ற பல செய்திகளைக் கொடும்பாளூர்க் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

பரகேசரி, இராசகேசரி

இக்கல்வெட்டினை வைத்துக் கொடும்பாளூர் வேளிரின் வரலாற்றினை எழுத முடியும். இவ்வேளிரின் முன்னோன் சங்க இலக்கியத்தில் ‘அடுபோர் அண்ணல்’ என்று குறிக்கப் பெற்றனன்.

இதற்குச் சான்றாக யானைகளின் கூட்டத்தை அழித்தவன் என்பதைக் கூற முடியும். யானைகளின் மீது ஏறிப் போர் புரிந்து மற்ற அரசர்களை யானைகளுடன் அழித்த இராசகுலவன் என்று தெளிவாகப் பெறப்படும். இவனுடைய பெயர் துங்கன், சங்கன் தொடர்புடையதாக அமைந்துள்ளது. அத்துடன் சோழ அரச வமிசத்தாரின் பெயர்களுடன் பரகேசரி, இராசகேசரி என்று சொல்லப்பட்டது போன்று கொடும்பாளூர் வேளிர் தலைவன் பெயர் நிருபகேசரி என்பதாகும். நிருபகேசரி என்பதற்கு இராச கேசரி என்று தெளிவாகப் பொருள் கொள்ளலாம்.

கி.பி. 850இல் தான் விசயாலய சோழன் பரகேசரிப் பட்டம் தரித்தான். ஆனால் கொடும்பாளூர் வேளிர் தலைவன் கி.பி. 8ஆம் நூற்றாண்டிலேயே நிருபகேசரி என்று அழைக்கப்பட்டான். எனவே வேளிர்கள் தமிழ்நாட்டின் அரசகுலமேயாவர். இராசகேசரி என்று சோழர் தம்மை அழைத்துக் கொள்வதற்கு முன் கொடும்பாளூர் வேளிர் தங்களை நிருபகேசரி என அழைத்துக் கொண்டதை உணர முடிகிறது. மேலும் கோனாட்டு வேளிர் கொங்குச் சோழராகப் பட்டமிட்டு மிளிர்ந்தபொழுது இராசகேசரி, பரகேசரி பட்டம் புனைந்துள்ளனர்.

இவன் தந்தை சங்ககிருதுவுக்கும் நாககன்னிகைக்கும் பிறந்த மகனாதல் வேண்டும். சங்ககிருது என்ற அரசன் பெயர் சோழ குல அரசன் பெயராக இருந்ததைச் செப்பேடுகளில் பார்க்கின்றோம். நிருபகேசரியின் மகன் பரதுர்க்கமர்த்தனன் வாதாபி சாளுக்கியரை வென்றதாகப் பல்லவர் பொருட்டோ பாண்டியர் தொடர்பிலேயோ சொல்லி இருக்க வேண்டும். கி.பி. 8ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பாண்டியரோடு இம்மரபினர் உறவுடன் இருந்ததால் பல்லவர், முத்தரையர் துணையுடன் இவனை வென்றுள்ளனர். இவனது மகன் சமராபிராமன் அதிராச மங்கலம் என்ற ஊரில் சாளுக்கியரை வென்றான். பல்லவருக்கு அடங்கி வாழ்ந்திருக்க வேண்டும். அதிராச மங்கலம் என்பது இராசசிகாமணி மங்கலம் என்றும் கிராமசிகாமணி மங்கலம் என்றும் மணிமங்கலம் என்றும் அறிஞர்கள் முடிவு கொண்டுள்ளனர்.

சமராபிராமன் யதுகுலம் என்று குறிக்கப்பட்டதாலேயே இவனே திருவிக்கிரமன் என்ற நிலங்கடந்த நெடுமுடியண்ணலான

திருமால் குலத்தவன் என்றும் தெளிவாக உணரப்படும். யதுகுலம் பதினெட்டு என்பர். பதினெண் நாட்டில் அமைந்ததாலேயே அவ்வாறு கூறினர் எனலாம். பதினெட்டு அரசகுலம் யது குலமாகும். யது குலத் தலைவனராகிய திருவிக்கிரமனே அரச குலத்துக்கு முன்னோன் என இலக்கண நூல்கள் சொல்கின்றன.

இக்கல்வெட்டின் மூலம் இலக்குமி சரசுவதி பார்வதி (காளி) ஆகிய தேவியர் அறியப்படுவதுடன் செல்வம், கல்வி, வீரம் இத்தெய்வங்களின் அடையாளம் என்று உலக வழக்கு ஏற்படுவதற்கு இருக்குவேளிரின் இக்கல்வெட்டு காரணமாகலாம்.

சமராபிராமனின் மனைவி சோழ அரச குலத்தவள் என்பதால் மிகத் தெளிவாகச் சோழ வேந்தர் குலத்தின் மற்றொரு கிளையே வேளிர் என்று புலனாகும். இவள் இராசமகள் என்பதாலேயே ஆட்சியிலிருந்த அரசன் மகள்தான் என்று கொள்ளலாம். இவள் விசயலாலய சோழன் மகளாகவும் இருக்கலாம். இவளது வீர மகனே விக்கிரமகேசரி என்ற மன்னன் ஆவான். இவன் சோழரின் புகழுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவனாகத் தெரிகிறது. பல்லவரிடமிருந்தே சோழ நாட்டை ஆதித்த சோழன் முழுமையாக மீட்டான். எனவே பல்லவர் பெரும் படையுடன் போர் புரிந்த செய்தியே காவிரியாறு இரத்த மயமாக்கப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

மேலும் பூதிவிக்கிரம கேசரி என்பவன் பராந்தகச் சோழன் காலத்திலும் இருந்துள்ளான் என்பதும் தன் மகனுக்குப் பராந்தகன் என்னும் பெயரினை வைத்துள்ளான் என்பதும் தெரிகிறது. சோழ மன்னருக்காக வீரபாண்டியனைத் துரத்தி அப்பாண்டியனுக்கு உறுதுணை அளித்த குறுநில மன்னனான வஞ்சிவேள் என்ற அரசனைக் கொன்றான். வஞ்சிவேள் கொங்கு நாட்டின் கிழ்ப்பகுதியை ஆண்டவன் என இரா. பூங்குன்றன் கருதுகிறார். இது பொருத்தமானதாகத் தெரிகிறது. சேரர் மரபின் சிற்றரசனே வஞ்சிவேள் எனப்பட்டான் எனலாம். பின்னர் சோழர்கள் மாமன்னர்கள் ஆனதும் கொடும்பாளூர் வேளிர் கொங்கின் ஆட்சியாளராகவே மாற்றம் பெற்றும் உள்ளனர்.

சோழர் எழுச்சிக்கு முன் பல்லவர் காலச் செப்பேடுகளில் நாட்டாட்சியின் தலைவர்களாக இவ்வேளிர் இருந்துள்ளனர். ‘கோநாடர் கோவினால் தண்டிக்கப் பெறுபவராகவும்’ என்பதால் இம்மன்னன் பல்லவருக்கு அடங்கி இருந்து விட்டனர். சோழர்

எழுச்சி ஏற்பட்டபொழுது அவரோடு இணைந்து பல்லவரைத் துரத்தி அடித்து அழித்துச் சோழ வேந்தன் ஆணையின்படி கொடும்பாளூர்த் தலைவரில் குறிப்பிடப்படும் தலைவர் கொங்கில் சென்று நாடு கொண்டனர். எனவே கோநாடர் கொங்கில் கோநாட்டார் என்ற வழக்கினைப் பெற்றனர்.

திருத்தொண்டர் திருவந்தாதியில் இருக்குவேளிர் சூரிய குலத்தவர் எனப்படுகின்றனர்.

பிற்காலச் சோழர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவரும் பதினோராந் திருமுறையைத் தொகுத்தவருமான சைவ அடியார் நம்பியாண்டார் நம்பி பாடிய ***திருத்தொண்டர் திருவந்தாதியில்*** இடங்கழி நாயனாரைப் பற்றி அமையும் பாடல் (65) வருமாறு:

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்தஆ தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வம் எனப்பறைபோக்கி
எங்கட் கிறைவன் இருக்குவே ளூர்மன் இடங்கழியே

இப்பாடலில் இடங்கழி நாயனார் எனப் பெயர்பெற்ற இருக்குவேள் மன்னன் சிங்கத்துருவனைச் செற்றவன் என்றும் கொங்கின் கனகத்தால் சிதம்பரச் சிற்றம்பல முகடுவேய்ந்தவன் என்றும் சூரிய குலமான ஆதித்தன் குலமுதலோன் என்றும் பாடப் பெற்றுள்ளது. இதனையும் இதனை அடியொற்றிப் பாடிய *பெரியபுராண* இடங்கழி நாயனார் புராணத்தையும் தெரிந்திராத சதாசிவ பண்டாரத்தார் கொடும்பாளூர் இருக்குவேளிர் சோழ குலத்தவர் அல்லர் என எழுதிய வரலாற்றில் எள்ளளவும் உண்மை இல்லை என அறிய முடிகிறது.

கொடும்பாளூர் வேளிரின் கோனாடு இடங்கழி நாடு எனவும் பட்டது. இதனைப் *பெரியபுராணம்* இடங்கழி நாயனார் புராணம் கூறுகிறது. அக்கோனாட்டின் தலைநகரம் கொடும்பாளூர். அந்நகரில் இருந்த வேளிர் குல அரசன் பற்றி அமையும் அப்புராணப் பாடல் வருமாறு:

அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசனித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டில் பாக்கொங்கின்
பன்னுதுலைப் பசும்பொன்னாற் பயில்பிழம்பா மிசையணிந்த
பொன்னெடுத் தோன் ஆதித்தன் புகழ்மரபிற் குடிமுதலோர்

ஆதித்தன் குலத்தின் முன்னோடியான வேளிர் அரசன் கோனாட்டுக் கொடும்பாளூரில் இருந்து சைவ சமயத் தொண்டாற்றினான் என இப்பாடல் மூலம் அறியலாம்.

வரலாற்று ஆசிரியரான சதாசிவ பண்டாரத்தார் இதை அறியவில்லை போலும். கொடும்பாளூர் வேளிர் சோழ குலத்தவர் அல்லர் என அவர் தெரியாமல் தம் நூலை எழுதியுள்ளார். இவ்வரசனே இடங்கழி நாட்டு* அரசன் என வேறொரு பெயர் கொண்டிருந்தான். கடைச்சங்க காலத்திலிருந்தே இடங்கழி நாட்டில் கொடும்பாளூர் வேளிர்கள் ஆட்சி செய்து வந்திருந்தனர்.

கடைச் சங்ககாலத்துச் சோழர்களின் தொடர்ச்சியாகவே பிற்காலச் சோழர்கள் நூல்களிலும் பிற ஆவணங்களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பாகப் பாடப்பட்டுள்ள ***மூவருலா, கலிங்கத்துப்பரணி*** போன்ற நூல்களிலும் ***தக்கயாகப்பரணி, வீரசோழியம்*** போன்ற நூல்களிலும்கூட இவ்வாறான தொடர்ச்சி கூறப்பெற்றுள்ளது. ஆனால் இச்சோழர் மரபினர் தற்காலத்தில் என்னவாயினர்? என்பதற்கான சான்றுகள் அரிதாகவே உள்ளன.

---

* இடங்கழி நாடு என்பது இடைங்கழி நாடு எனவும் கடைச் சங்க காலத்தில் அழைக்கப் பெற்றிருக்க வேண்டும். இடைக்கழி நாடு என அது வலித்தல் விகாரம் பெற்றுள்ளது. பத்துப்பாட்டின் சிறுபாணாற்றுப் படையைப் பாடிய நல்லூர் நத்தத்தனார் இடைக்கழி நாட்டைச் சேர்ந்தவர். "இந்நாடு சென்னைக்குத் தென்மேற்கில் உள்ளது" என்று உ.வே. சாமிநாதையர் அடையாளங் காட்டுகின்றார். ஆனால் இதுவே கோனாடான இடங்கழி நாடாக இருத்தல் வேண்டும். நல் தத்தனார் என்பதுவே நத்தத்தனார் ஆகியிருப்பதாக அறிஞர் கருதுகின்றனர். தத்தன் என்ற பெயரில் பல புலவர்கள் சங்க காலத்தில் இருந்துள்ளனர். அய்யனாரை வழிபடும் கூட்டத்தாரில் ஒரு குழுவினர்க்குத் தத்தன் கூட்டம் எனப் பெயர். இதனைத் 'தாதன் தத்தன் அல்லாத்தான் பாவாலி' என வழக்கில் உள்ள பாடல் அடியால் அறியலாம். அவ்வாறாயின் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பவர் தத்தன் கூட்டத்தைச் சார்ந்தவர் ஆவார். இக்கூட்டத்தாரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை முனைவர் ஆ. தசரதன் எழுதிய அருஞ்சுனை காத்த அய்யனார் (1996,2005) என்ற நூலில் காணலாம். தத்தன் எனும் பெயரில் தொடங்கும் ஊர்கள் பல உள்ளன.

வெங்கலராசன், சிவனணைந்த பெருமாள் போன்ற சோழ குலத்தவர் பற்றிப் பிற்கால ஆவணங்கள் கிடைக்கின்றன. அவர்கள் சந்ததியார் பற்றித் தற்கால ஆவணங்கள் அரிதாகவே உள்ளன. ஆனால் சங்க காலம் முதல் இக்காலம் வரை தொடர்ச்சியான ஆவணம் கொடும்பாளூர் வேளிர்க்கும் அவர் சந்ததியரான காயாமொழி ஆதித்த குலத்தினர்க்கும் உள்ளது தெரிய வருகிறது.

கொங்குச் சோழர் என்று பட்டமிட்டுப் பரகேசரி, இராசகேசரி பட்டம் புனைந்தவர் இருக்கு வேளிர் ஆவார். இராசகேசரி பட்டம் புனைந்த கொங்குச்சோழன் குலோத்துங்கன் (கி.பி.1163) விசய மங்கலம் கல்வெட்டில், ''இருங்கோளன் நாடு காவலில் இந்நிலம் குடுத்தோம். சந்திராதித்தன் உள்ளவரையும் நம்தமர் மாற்றப் பெறார்'' என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளான். (1209 / 2003 விசய மங்கலம்). கி.பி 11-ம் நூற்றாண்டில் அமைந்த லட்டிகம் (சித்தூர்) கல்வெட்டுப்பாடல் வேள்குலத்தவன் பெயரால் இருங்கோளீச்சுரம் என்று கோயில் அமைக்கப் பட்டிருந்ததையும் ''இருங்கோள மன்னர் இசைந்து'' என்பதும் உணரத்தக்கதாம். (தெ.இ.க.தொ. 22: பகுதி 3; எண்:547) கேரநாட்டுக் கல்வெட்டில் 'இருங்கோள குல' என்றும் குறிக்கப்பட்டுள்ளனர்.

பாண்டியர் கால வேளான் படாரி

சடையன் மாறன் ஆட்சி 14க்குரிய சுலைமான் (மதுரை) கல்வெட்டு (siii xiv No. 64)

பாகனூர்க் கூற்றத்துப் பிரம்மதேயம் திருமானத்து
பெருந்திருக் கோயில் தேவர்க்கு இக்கூற்றத்து
பெரும்பாகனூர்த் தென்னவன் அனுக்கப் பேரரையனாயின
பணயன் மாணிக்கன் மணவாட்டி வேளான் படாரி
திருநொந்தா விளக்கு ஒன்றினுக்கு அக நாழிகையான்
நாராயணன் மாதேவனுக்கு அடுத்த பசு 25
இரு நாந்தா விளக்குத்தானும் பாகம் எரிக்க
கடவனாய்புணைபட்ட முன்னூற்றுவன் திருவாரூரன் எழுத்து.

இக்கல்வெட்டில் பெரும்பாகனூர் கூற்றத்துத் தென்னவன் அனுக்கப் பேரரையனான பணயன் மாணிக்கம் என்பானின் மணவாட்டி வேளான் படாரி என்பவள் அக நாழியான் என்ற கோயில் பிராமணர் நாராயணன் மாதேவன் வசம் 25 பசுக்களை அளித்து விளக்கு எரிக்க ஏற்பாடு செய்துள்ளாள் - கோயில்

அந்தணன் மாதேவன் என்று பெயரிட்டுக்கொண்டு இருப்பதும் விளக்கு எரிப்பதற்குப் பிணைபட்டவன் முந்நூற்றுவன் திருவாரூரன். இவன் திருவாரூரன் என்ற ஊர்ப் பெயரைத் தாங்கியுள்ளான்.

சடையன் மாறன் காலத்தில் அமைந்த மணவாட்டி வேளான் படாரி முறையான திருமணம் செய்து கொண்டவள் என்றும் வேளிர்குலப் பெண் என்றும் தெரியவருகிறது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டு வேளான்

கோ மாறஞ் சடையனாயின பாண்டிப குலபதி வரகுண
மஹாராஜர் ஆட்சியாண்டு 9ல்
அண்ட நாட்டு வேளான் கையில் குடுத்த பழங்காசு

பற்றித் தெரிய வருகிறது. அண்ட நாட்டு வேளான் என்னும் கோயில் அரசு அதிகாரியாக இருந்தவனிடம் பழங்காசு வழங்கிச் சடைபாரிடம் நிவந்தம் செய்ய ஏற்பாடு செய்துள்ளான்.

பிற்காலச் சோழராட்சிக்கு முற்பட்ட பாண்டியர் ஆட்சியில் வேளான் ஒருவன் கோயிலில் பணிபுரிந்தான் என்றும் அறிய முடிகிறது. (SII CIV 12B திருத்தவத்துறை திருச்சி).

மூவேந்த மங்கலப் பேரரையர்

வேள்விக்குடிச் செப்பேடு

பொரவந்தவர் மதந்தவிர்க்கும் கரவந்த
புரத்தர் குலத்தோன்றல் மாவேந்தும்
கடற் தானை மூவேந்த மங்கலப் பேரரைய
னாகிய வைத்திய சிகாமணி மாறங்காரி

(வேள்விக்குடி சாசனம்)

மேலே குறிப்பிடப்பட்ட வைத்திய சிகாமணி என்பார் வைத்திய வேதியர் என்று மற்றொரு கல்வெட்டில் சுட்டிக்காட்டப் படுகின்றார். இவர் பார்ப்பன சமூகத்தினரான சவர்ணர் பிரிவினர். கி.பி. 771இல் சேரரும், சோழரும் பேரரசாக ஆளுமை அதிகாரம் நீங்கிய காலத்தில் பாண்டியரே தம் குடிப்பெருமை கருதி மூவேந்தர் என்று அடையாளம் காட்டினர். மூவேந்த மங்கலம் தோற்றுவித்துப் பேரரையர் என்று பிரம்மாதிராயரைச் சொல்லியிருக்கக் கூடும்.

சேர வேந்தன் செங்குட்டுவனைச் ***சிலப்பதிகாரம்*** சுட்டிக்காட்டும்பொழுது வில் அம்பு, புலி, கயல் ஆகிய

மூவேந்தரின் சின்னங்களை இமயத்தில் பொறித்தனன் என்று சொல்லும் கால அளவில் மூவேந்த வேளான் என்று பதவி வகித்த அதிகாரிகள் மூவேந்த அரையன் என்றும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றனர். தமிழ்நாட்டில் அரையராகிய அரச குலத்தவர் மூவேந்த வேளான் என்று அழைக்கப்படுவதால் வேளான் அரையர் என்றும் மூவேந்த வேளான் என்றும் சாதியை இணைத்துச் சொல்லப்படவில்லை யாகையால் அவர்கள் வேந்தர் வேளிர் தொடர்புடைய அரச குடியையே சார்வர். மூவேந்த வேளான் என்பாரே மூவேந்த அரையர் என்றும் மூவரையர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர் (கல்வெட்டு எண் 5/1996, த.நா. தொல்லியல் துறை கோயில் தேவராயன்பேட்டை).

சுந்தரசோழ பாண்டியன் காலத்து மூவேந்த வேளான்

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சுந்தர சோழ பாண்டியன் ஆட்சி 16க்குரிய மன்னார் கோயில் (அம்பை) கல்வெட்டு வேளிர் குலத்தவரான வேளிர் மரபினருக்கு இறையிலியாக நிலம் வழங்கியுள்ளதைக் குறிப்பிடுகிறது. "குமரக்கச் சாணமும் அழகெரிது உள்ளிட்ட குடிமை இப்பேற் பட்டதும் கொள்ள பிறாதாக" என்றும் ஸ்ரீ சேரகுல சுந்தரன் 2 வேலி, மாதவன் ஜயபாலன் 2 வேலி இலக்குவன் உத்தமபாண்டியனான பூசக்கர கேசரி மூவேந்த வேளான் 2 வேலி வேளான் வீரசோழனான மனுக்குல மூவேந்த வேளான் 2 வேலி செம்பொன்னாடவலானுக்கு 1 வேலி குருந்தன்காரிக்கு 1 வேலி யென வழங்கியும் இவ்வூர் நத்தமும் இவ்வூர்க்குப் படும் நிலம் வளையிற் சுற்று முற்றும் மேனோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் சோழ அரசன் ஆணைக்கிணங்கச் சேரமானார் ராஜராஜ தேவர் ராஜேந்திர சோழ விண்ணகர் பரமசுவாமிகள் தேவதானம் கோயில் வாசல் கோபுரத்து மேலை நிலையில் எழுந்தருளி இருந்தும் வில்லவன் மூவேந்த வேளான் அருளிச் செய்தது என்றும் தெரிகிறது. மேலே பெற்ற நிலத்துக் கோயிலுக்கு 2600 கலம் நெல் வழங்க வேண்டும் எனவும் பயிரிடும் குடிகளை நீக்காமல் காராண்மை செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது. தான நிலம் மானாபரணச் சருப்பேதி மங்கலத்தில் இருந்ததாகும்.

இக்கல்வெட்டில் மேலே சொல்லப்பட்ட 2 வேலி நிலம் பெற்றோர் மூவேந்தர் மரபிலே வந்த வேளிர்கள் ஆவார்கள்.

மற்றும் 1 வேலி நிலம் பெற்றவர்கள் யார் என்று புலனாகவில்லை. சோழனின் படை வீரராக இருக்கலாம். வில்லவன் மூவேந்த நாயகம் இன்னாட்டுப் பாண்டிய குலாசனி வளநாட்டு சோழ பாண்டிய ...... நாடாள்வார் ஒப்பினாலும் என்று குறிப்பிட்டுள்ளது போலவே சடையவர்மன் ஸ்ரீ சோழ பாண்டியன் கி.பி. 11ஆம் நூற்றாண்டில் சேரன்மாதேவி அம்மைநாதர் கோயில் கல்வெட்டு இம்மன்னனின் அதிகாரிகளில் ஒருவனாக இரவிகுலராஜ மூவேந்த வேளான் என்பவனை அறிமுகம் செய்கிறது.

சோழ வேந்தர்கள் இரவிகுல அரச மரபிலே தோன்றியவர்கள் என்று புராணங்களாலும் இலக்கியங்களாலும் செப்பேடு களாலும் கல்வெட்டுகளாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனர். மேலே சொல்லப்பட்ட கல்வெட்டில் சுட்டிக் காட்டப்படுவோன் இரவிகுல ராசன் என்றும் வேளான் என்றும் பட்டம் தரித்தவன். இவன் சோழர் குடியினன் என்பது தெளிவான நிலையாகும்.

தந்திவர்மன் கால இளங்கோ வேளான்

பல்லவ அரசன் தந்திவர்மன் காலத்திய திருவெள்ளறைக் (லால்குடி) கல்வெட்டு அவனது காலத்திலிருந்த கொடும்பாளூர்ச் சிற்றரசன் ஒருவனைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு சிதைந்துள்ளதால் செய்திகள் தெளிவாக அறியமுடியவில்லை.

"........ மாற்பிடு இளங்கோ வேளான்" (SII Vol IXX No. 48)

கொடும்பாளூர் மரபினரான இளங்கோ வேளான் மற்றும் மூத்தரையர்கள் பல்லவரிடம் பணிபுரிந்து அன்னார்க்குப் போரில் உதவியுள்ளனர். இக்கல்வெட்டில் இருங்கோ வேளான் என்று அழைக்கப்பட்ட வேளிர் அரசர் வேறு கல்வெட்டுகளில் இருங்கோவேள் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

தென்னிந்தியக் கோயிற் சாசனங்களைப் பதிப்பித்த அறிஞர் டி.என். சுப்பிரமணியன் வேளான் என்றால் வேளம் தொடர்புடையவர் என்று தவறாகக் குறித்துள்ளார். வேளம் தொடர்புடையவரை அடையாளம் காட்டாமல் வேளிரைத் தவறாகத் தொடர்புபடுத்திவிட்டார். ஆனால் நண்பர் சீ. இராமச்சந்திரன் வேளம் தொடர்புடைய குடியை நாட்டிற்கு அடையாளம் காட்டியுள்ளார்.

இருக்குவேளும் உறத்தூர் திணையும்

கி.பி. 926இல் அமைந்த முதலாம் பராந்தகச் சோழனின் அந்தவநல்லூர் கல்வெட்டு, சோழனின் திருமுகம் செம்பியன் இருக்குவேளானுக்கு வந்தது தொடர்பாக அவன் உறத்தூர் திணையை "இப்பரிசு செய்து குடுக்கவென்று ஏவ இவனும் இப்பரிசு செய்து குடுத்து" என்று குறிப்பிடுகிறது.

செம்பியன் இருக்குவேள் என்பான் அக்கால அரசகுலப் பிரபுக்கள் வர்க்கத்தைச் சார்ந்தவன். சிற்றரசன்; இவனுக்குக்கீழ் இருந்த கன்மி என்பவனும் உயர் பிரிவு அதிகாரி; இவனை உறத்தூர்திணை என்பதால் இவன் அவ்வூரின் தலைமகன் என்று உணர முடியும்; குடிப்பிறந்தார் திணை என்ற அலுவலரைப் பெருந்திணையரைவிட மேலானவராகக் கருத இடமுண்டு.

சடையவர்மன் ஆட்சியில் வேளான்கள்

கி.பி. 1261 இல் அமைந்த கிழ்க்காணும் கல்வெட்டிடில் கோயிலுக்கு வழங்கிய தானத்தில் பலரும் கையெழுத்திட்டுள்ளர். அவர்கள் வேளான்கள் ஆவர்.

மலாடாகிப செனநாத வளாட்டு நரையூர் கூற்றத்து
உரங்கூர் உடையார் திருவாலீச்வரமுடைய நாயனார்
கோயிலில் சித்திரை திருநா எழுந்த .... உபையம்.
பண்ணிக் குடுத்தது பரவியது. ஊரங்க ரவர் பட்டக்குறிச்சி
முல்லையூரவர் வள்ளி மருதத்தூரவர்
பனைபாதுள் ஆகியோர் திருநாள் எழுந்து இருக்கச் செய்த
வள்ளி மருததூர்க்குச் சமைந்த பேராவூருடையான் அமர கோன் எழுத்து
பனையாத்தாடுக்கு சமைந்த பேராவூருடையாந் குலோத்துங்க
வேளான் எழுத்து முல்லைவாய் ஊற்குச் சமைந்த தொழுவூர்
உடையான் உமைவளம் எழுத்து பட்டாழ்வார் குறிச்சி
ஊர்க்குச் சமைந்த மலைபடி பெருமாள் எழுத்து
உரங்கடர்க்கு அமைந்த தொழுவூருடையான் உடைய
உலகளந்த வேளார் த்தான் திருச்சிற்றம்பல
வேளான் எழுத்து குழுமுருஉடையான் துண்ட நாட்டு
வேளான் எழுத்து

பக்கம் 29–30 ஆவணம் 6 – 1995

ஏறத்தாழ எல்லா ஊர்களின் சார்பிலே வேளான்களே கையெழுத்திட்டுள்ளனர். இவர்கள் சங்க கால வேளிர் மரபிலே வந்தவர்களாவர்.

மூவேந்தவேள் பட்டம் உடையோர்

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு கல்வெட்டுப் பாடலில் வாள்வேந்தன், கோன், விறல் வீரன் என்றும் வேளான் ஆன வேள் மன்னன் சுட்டப்பட்டுள்ளான். வேளிரே வேந்தர் என்பதற்கும் வேந்தரே வேளிர் என்பதற்கும் இக்கல்வெட்டு சான்றாகும்.

மன்னுவை வேல்மருங்கூர் வாள்வேந்தன் மாப்புரிசை
மின்னவா னாண்டாண்ட மேலூர்க்கோன் - முன்னம்
விறல்வீரன் மெய்த்துணை வேளானைப் போலப்
பிறவீர் உலகுய்யப் பின்

இதைப் போன்ற கல்வெட்டுச் சான்றுகள் வேளிரையும் வேந்தரையும் ஒருங்கே கூறுகின்றன.

இவற்றின் மூலம் சங்காலத்திற்கு முன்பே வேளிரின் ஆட்சி தமிழகத்தில் தோற்றம் பெற்றிருந்தது தெளிவாகிறது. அவர்கள் பற்றி இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் குறிப்புகள் ஏற்பட்டுள்ளன. சான்றாக, முதலாம் பராந்தகச் சோழனின் ஆட்சி ஆண்டு 4க்குரிய, கி.பி. 911ஆம் ஆண்டில் ஏற்பட்ட கல்வெட்டு ஒளிமங்கலத்தில் கிடைத்துள்ளது. இது புதுக்கோட்டைக்கு அருகில் உள்ளது. 'அது வருமாறு:[10]

குடையார் வண்கை ஒல்லைஊர் குமுழிகுயிற்றுவித்தோன்
தொடையா ரலங்கற் சோழகுல நாராயண மூவேந்த வேள்
அடையார் சீயமிடைக்குடி மாயவ நிலவும் கேசவ நேய

....

மூவேந்தவேள் சோழகுல நாராயணனுக்குச் சீயஇடைக்குடி கேசவன் ஒல்லையூர் குளத்தில் குமிழி குயிற்றுவித்த செய்தி மேற்சுட்டிய கல்வெட்டுப்பாட்டில் இடம்பெற்றுள்ளது. மூவேந்த வேள் அடைமொழி பெற்ற சோழ குலத்தவனுக்குப் பணிமக்களில் ஒருவன் குமிழி குயிற்றுவித்துள்ளான். வேளிர்க்குப் பணிமக்கள் இருந்துள்ளனர் என்பது இதன்மூலம் தெரியவருகிறது.

வீரசோழிய உரையில் மேற்கோளாகக் காட்டப்பெறும் பாடலில் (203) ''வென்றி கார்முக வேந்து மாரவேள்'' என வருவது மன்மதவேள் என்ற மன்மதனைக் குறிப்பதாகும். ஒட்டக்கூத்தர் பாடிய விக்கிரமசோழன் உலாவில்

கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில்
விலக்கிய வேணாடர் வேந்தும்...

என வருவதில் வேள்குலத்தவனே வேந்தனாவான் எனலாம். கி.பி. 12 அல்லது 13ஆம் நூற்றாண்டில் அமைந்த திருமாளம்

(திருத்துறைப்பூண்டி) கல்வெட்டு (1976/160) திருமந்திர ஓலைநாயகப் பணியில் இருந்தவனை ஓலை இராசேந்திர மூவேந்தவேள் என்கிறது.

அறந்தாங்கிப் பூண்டியர் கோன் வழிவந்தவராகப் 'பூண்டி வாட் செம்பியன் மூவேந்த வேள்' பற்றி வெண்பாக் கல்வெட்டுப் பாடல் குறிப்பிடுகிறது. (ARE 5709679/1919.)'

வேளிரின் பட்டங்கள் - வேளான், நாடாள்வான் - அரையன்

கோவிராசகேசரி பன்மர் ஆட்சியாண்டு 4க்குரிய வெள்ளனூர் (குளத்தூர்) அகத்தீசுவரர் சுவாமி கோயிலின் முன்மண்டபத்தின் தென்சுவரிலுள்ள சாசனம்,

தென்சிறு வாயி னாட்டு வெள்ள நல்லூருடையான்
காழி கண்ட செம்பியன் சிறுவாயினான மூவேந்த வேளான்

பற்றித் தெரிவிக்கிறது. இவன் சிறுவாயி நாட்டுக்குரியவன். (புதுக்கோட்டை எண் 25, வெள்ளலூர் (குளத்தூர்)) கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அதே ஊரில் அதே கோவிலில் அதே மண்டபத்தில் தென்புறத்துச் சுவரில் எழுதப்பட்ட கல்வெட்டு சோழன் வீரராஜேந்திரன் ஆட்சியாண்டு 7க்குரியதாகும்.

வேலன்றெ றாழிவிட விட்டொனையமர்
வேல்வீர ராஜேந்திரற்கு யாண்டேழென்று விளம்ப
ஆலஞ்சேர் மிடற்றார்க்கு வெள்ளை நல்லூர்
மேல்பால் அகத்தீசர் கர்த்தமணி மண்டப நன்ற மைத்தான்
சீலஞ்சேர் கரமென்னச் சிறந்த தோன்றல்
செம்பியர் முடிகாப்போன் சிறுவாயி நாடன்
மாலன்செய் முடிகொண்ட சோழ நாடாள்வான்
திருப்பனவன் வயில் குழாலியர் கோன்மாநில கற்பகமேய்
(புதுக்கோட்டை எண் 115, வெள்ளனூர் (குளத்தூர்)

முற்பட்ட ஆட்சியாளன் (இராசகோ பட்டம் புனைந்தவன்) காலத்தில் தென்சிறுவாயில் நாட்டுச் சிற்றரசன் வேளான் என்றும் அவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசன் காலத்தில் தென்சிறுவாயில் நாட்டு அரசன் நாடன் என்றும் அவன் மகன் நாடாள்வான் என்றும் அழைக்கப்பட்டிருந்ததை ஆய்வாளர் ஆராய்ந்து அறிய வேண்டியதாகும். ''சிறந்த தோன்றல்'' என்பது இவனைத் தலைமகன் என்று அடையாளம் காட்டுகிறது.

இளம்பூரணர் உரை ஆட்சி பற்றிய கிழவர்

தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல் நூற்பா. 21 (இளம்பூரணர் உரையில் சூத்திரம் 23)

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே

ஆண் மக்களைப் பற்றி வரும் திணைப் பெயர் ஆயர் எனவும் வேட்டுவர் எனவும் வரும். அவ்விடத்துக் கிழவரும் உளர். ஆயர் என்பார் நிரை மேய்ப்பவர். வேட்டுவர் என்பார் வேட்டைத் தொழில் செய்பவர். அஃது எயினர் என்னும் குலப் பெயருடையார் மேல் தொழிற் பெயராகி வந்தது. வந்தது கொண்டு வராதது முடித்தல் (மரபு - 112) என்பதனான் ஆய்ச்சியர் எனக் கொள்க.

அவ்விரு திறத்தாரும் காடு பற்றி வாழ்தலின் அந்நிலத்தின் மக்களாயினர். அவ்வயின் வரூஉம் கிழவர் இரு வகையர். அந்நிலத்தை ஆட்சி பெற்றோரும் அந்நிலத்து உள்ளோரும் என; குறும்பொறை நாடன் என்பது போல்வன ஆட்சிபற்றி வரும். பொதுவான் ஆயன் குலம் பற்றிவரும் என்ற விளக்கத்தை இளம்பூரணர் தருகின்றார்.

ஆட்சி பற்றிய கிழவர் குறும்பொறை நாடர் என்றும் நிலத்திலே தோன்றிய கிழவர் வேட்டுவர் (வேடர், எயினர், மறவர்) என்றும் ஆயர் என்பார் பொதுவர் ஆயர் இடையரைக் குறிப்பிட்டுள்ளார். இதனை நச்சினார்க்கினியர் உரையோடு ஒப்பிட்டு உணரலாம்.

அகத்திணையியல் சூ. 21க்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரை வருமாறு:

> இது முன்னர்த் திணைதொறு மரீஇய பெயருடையோரிலும் திணைநிலைப் பெயராகிய தலைமக்களாய் வழங்கு வாரும் உளரென முல்லைக்குங் குறிஞ்சிக்கும் எய்தா தெய்து வித்தது. ஆடுவுத் திணைப் பெயர் - முற் கூறிய ஆண் மக்களாகிய திணைதொறு மரீஇய பெயர்களுள்; ஆயர், வேட்டுவர் வரூஉம் கிழவர் உளர்; ஆயரிலும் வேட்டுவரிலும் வரும் கிழவரும் உளர் ஆவயின வரூஉம் கிழவரும் - அவ்விடத்து வரும் தலைவரும் உளர்"

திணைதொறு மரீய பெயர் உடையார், திணை நிலைப்பெயராகிய தலைமக்கள் என்று இரு பிரிவாகக் கொண்டு - திணை நிலைப் பெயராகிய தலைமக்களைச் சிறப்பிற்குரியவராகக் கூறியுள்ளார். இதனை உரையாசிரியரான இளம்பூரணர் ஆட்சி பற்றிய கிழவர் குறும்பொறை நாடன் என்று குறித்து இருப்பதை நச்சினார்க்கினியர் தலைவராகிய கிழவர் என்று குறித்துள்ளார். தலைவர்.என்பது ஆட்சியுடையவ்வனைக் குறிப்பிடுகிறது.

இவரே சங்க காலத் தலைமக்கள் என்போர்; இவரே சங்க கால விழுத்திணைக்குடி - திணைகளில் இரு வகையினராகத் திணைதொறு மரீஇய பெயர்கள் என்பார் குடிமக்கள். திணை நிலைப்பெயருடைய தலைவராகியவர் ஆட்சிக்குடியினர்.

ஆனால் உ.வே.சா. போன்ற அறிஞர்கள் கிழார், கிழவர் என்போர் வேளாளர் என்று உண்மையை உணராது குறித்துத் தாம் பதிப்பித்த எல்லா நூல்களிலும் எழுதிவிட்டனர் - வேளாளர் என்ற சொல் குடிமக்களில் ஒருவர். அவரிலும் கிழவர் உளர். இவர் தலைமக்கள் பிரிவினர் அன்று. பணி மக்கள் பிரிவில் உயர்ந்தவர். சங்க காலக் கிழவர் என்ற சொல் நாடு கிழவன், மலை கிழவன், ஊர்கிழவன் என்று நாடு அறம் செய்து மனையறம் என்ற வேள்வித் தலைவர்.

ஆயர் என்ற சொல் தொல்காப்பிய நூற்பாவில் காணப்பெறுவதாகும். ஆயர், வேட்டுவர் ஆகிய சமூக மக்கள் காடு வாழ்தலுடைய குடிமக்கள் என்று சொல்லப்படுகிறது. சங்க காலம் அமைந்த வேள் சிற்றரசன் மாவேள்ஆய் என்பான் ஆயர்குடியிலும் வேறுபட்டவனாகத் தெரிய வருகிறது. ஆயர் என்போர் திணை தொறு மரீஇய பெயருடையோர் பட்டியலில் அமைந்து இருப்பதால் சங்க கால வேள் மன்னன் ஆய் அண்டிரன் போன்றோர் கோ வேள் ஆய், மாமலை கிழவன், மாமலை நாடன் என்றும் பொதுமீக் கூற்றத்து நாடு கிழவன் என்றும் அழைக்கப்பட்ட வேளிர் மரபினர். ஆனால் ஆயர் என்று தொல்காப்பியச் சூத்திரத்தில் சுட்டிக் காட்டப்பட்டவர் நிரை மேய்ப்பவர்; ஆயர் என்று இடையர் என்பாரை இளம்பூரணர் நினைவூட்டுகிறார். பட்டினப்பாலையில் புல் பொதுவர் (281) என்று கூறப்படும் மரபினர் காடு கொண்டு ஆண்டது தெரிய வருகிறது.

கரிகாற் பெருவளத்தான் இடையர் ஆட்சிக்கு முடிவு கட்டினான். இதுபோன்று சேர நாட்டின் காமூரில் கழவுள் என்ற ஆள் பயம் வாழ்நர் என்ற இடையர் தலைவன் ஆட்சியை வேளிரும் சேரமானும் அழித்தனர் என்று தெரிவதால் காட்டு முறைமையுடைய ஆட்சிக்குரியவர் எனத் துணியலாம்.

ஆயர் வீட்டில் கண்ணன் வளர்ந்ததை விரிக்கும் நாச்சியார் திருமொழி 624,

> கற்றினம் மேய்க்கினும் மேய்க்கப் பெற்றான்
> காடு வாழ் சாதியும் ஆகப் பெற்றான்

என்பதால் முல்லை சார்ந்த காடு ஆடு மாடு மேய்ச்சலுக்கு உகந்த நாடாக இருந்தது போலும்.

நிரை மேய்ப்போர் என்பார் பொதுவர் என்று அழைக்கப்பட்ட ஆடு மாடுகளை மேய்த்து வாழும் முல்லை நில மக்கள். இவர் ஆயர் என்று அழைக்கப்பட்ட மக்களிலும் வேறுபட்டவர். ஆய் அரசன் மரணம் எய்தியபொழுது அவனும் உரிமை மகளிரும் சொர்க்கம் (இந்திரலோகமாகிய மேல் உலகத்திற்குச் சென்றனர் என்பதும் அவனோடு உயிரினை மாய்த்துக் கொண்டனர் என்றும் துணியலாம். சில நூல்களில் நாலாம் மரபினருக்கு மரணத்திற்குப் பின் கந்தருவ உலகத்திற்குச் செல்லலாம் - ஆனால் மேல் உலகமாகிய தேவருலகம் செல்ல முடியாது என முறைமைகளை நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

ஆய்குலத்தவருக்கும் ஆயருக்கும் வேறுபாடு இருப்பது போன்று சோழர் என்பதற்கும் சோழகர் என்பதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. இதுபோன்றே ஈழருக்கும், ஈழவருக்கும் வேறுபாடு உண்டு. கொங்கரும் கொங்கிணியும் ஒருவரல்லர். வானவராகிய மலையரசரும் வாணர் என்ற அசுர அரசரும் வேறுபாடுடைய மரபினர். இதனாலேயே சுரர் வழி வானவரும் அசுரர்வழி தானவரும் வேறுபட்ட இனத்தவர். ஆய்குலம் என்பதும் ஆயர்குலம் என்பதும் வேறானவை. கற்றோர், போற்றும் கலித்தொகை ''நட்டகுடியோடு தோன்றிய நல்லினத்து ஆயர் என்று ஆய் வேளிரின் குடியை உணர்த்திற்று என்பதை அறிந்து உணர்க.

நாடாள்வான் வேளான்

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சி 44க்குரிய கிபி. 1113-1114இல் அமைந்த பெருங்கருணை முதுகுளத்தூர் கல்வெட்டு (SII

Vol XXIII No. *401)* புனவாயிலிருக்கை தடங்கழி திருவேளைக்கார மூன்று கை ஈசுவரமுடைய மகாதேவர்க்கு "வேளான் காளையவியனான குலோத்துங்க சோழ அள்ளூர் நாடாள்வான் பலதடி நிலங்களை (பூமி) நீர் வார்த்துக் கொடுத்துள்ளான் என்கிறது. இவன் நிலவுடைமையாளர் என்று அறியப்பட்ட வேளிர் குலத்தில் தோன்றியவன். நாடாள்வான் என்று வேளிர் தம்மை அடையாளம் சொல்லியுள்ளது நோக்கத்தக்கது.

வேளான்களுக்குப் படை வகை உரிமை

படை வைத்து வாழும் உரிமை அரச குடிக்கும் வணிகருக்குமே உண்டு என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு நமது கல்வெட்டுகளில் சான்றுகள் இருப்பதைப் பார்ப்போம்.

முனைவர் இராசவேலு குழுவினரால் கண்டறியப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் வயலகம் கல்வெட்டு கி.பி. 9ஆம் நூற்றாண்டில் அமைந்ததாகும். *புறநானூறு* சிறூர் மன்னன், தொல்குடி மன்னன் என்று ஊரின், நாட்டின் தலைவரைக் குறிப்பிடுகிறது. இவர் படை வைத்திருந்த வேள் குலத்தவர் ஆவார்.

''தொல்குடி மன்னன்'' *(வேளிர்) (புறம். 353)*
''ஓரெயின் மன்னன்'' *(புறம். 338)*
''சிறூர் மன்னன்'' *(புறம். 299)*
''சிறூர் மன்னன்'' *(புறம். 328)*
''பருத்தி வேலிச் சிறூர் மன்னர்'' *(புறம். 328)*

என்று குறிப்பிடப்படும் இவரே ஊரின் உரிமையுடைய ஊரன் குலவழிச் சமூகமாகும்.

கோ இராச கேசரி பன்மர்க்கு யாண்டு 3
வயலக நாட்டு வயலக குளத்துக்கு குளப்பட்டி
செய்த நிலம் இவ்வூர் நாட்டார் பெருஞ்செயும்
நாற்றங்கால் துடர்ச் செயும் இவை இரண்டும்
நிலம் நும் இக்குளத்துக்கு சந்திராதித்தவர் நிற்பதாக
செய்தோம் வீரசோழ இளங்கோ வேளார்

---

1. *ஆவணம் இதழ் 2, பக். 2.* வெண்பாவாலான இக்கல்வெட்டுப் பாடல் புலவர் முனைவர் செ.இராசு அவர்களால் பதிப்பிக்கப்பெற்று வருகிறது.

வாள்படையும் உடன்நிலை சேவகரும் இசைந்து
இது இரக்கூறிப்பான் பாதம் எங்கள் தலைமேலது
இது பின்மாகேசுவரர் ரக்ஷி

(No. 54 XXXII – வயலகம் குளத்தூர்)

தொல்காப்பியர்,

"இடையிரு வகையோர் அல்லது நாடிற்
படைவகை பெறார் என்பனார் புலவர்"

(தொல். பொருள் சூத்திரம் 621)

அரசரும், வணிகரும் அல்லாதோர்க்குப் படைக்கல வகைக் கூறப்பெறார் என்றவாறு என இளம்பூரணர் உரையிலே குறிப்பிட்டுள்ளார்.

இக் கல்வெட்டில் இருக்குவேளிர் குலத்தவரான "வீரசோழ இளங்கோவேளார் வாள் படையும் உடனிலை சேவகரும் இசைந்து" என்பதிலிருந்து வேளிர் தலைவர்கள் படை வைத்திருந்த செய்தி வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாகும்.

வேளிர் என்பாரே வேளான்

கோமாறபன்மர் சுந்தரபாண்டியரின் ஆட்சியாண்டு 11க்குரிய கல்வெட்டு திருமெய்யத்தில் அமைந்ததாகும். (I.P.S. 475 - புதுக்கோட்டைத் தொகுதி.) அது வருமாறு:

தென்கவி நாட்டு பிரம்ம தேசம் உதைய திவாகரச்
சதுர்வேதி மங்கலத்து விண்ணகர பெருமாள்கோயில்
நம்பிமாரும் ஸ்ரீ வைஷ்ணவ கண்காணி மார்களும்
கோயில் கணக்கரும் இவ்வனைவரும் இன்னாட்டு
வேளான் அழகன் செம்பியன் வேளிர்க்கு
பிரமாணம் பண்ணிக் குடுத்துள்ளனர்

இக் கல்வெட்டில் குறிப்பிடப்படும் வேளானுக்கு நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வேளிர் தலைவனை மிகச் சிறப்புடன் ஸ்ரீ வைஷ்ணவர்கள் கல்வெட்டில் அழைத்துள்ளனர். ஒரே கல்வெட்டில் ஒருவன் வேளிர் என்றும் வேளான் என்றும் அழைத்து இருப்பது வேளிரே வேளான் என்பது உறுதிப்படுத்துகிறது.

அரசர் போன்று ஆறிவொரு கடமை கொள்ளும் வேளிர்

கி.பி. 1045இல் அமைந்த பிரம்மியம் (தாராபுரம்) கல்வெட்டு கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் (கொங்கு) ஆட்சியாண்டு 41க்குரியதாகும். (129/2010).

1. சுவஸ்திஸ்ரீ கோக்கலி மூர்க்க ஸ்ரீவிக்கிரமசோழ தேவர்க்குத் திருவெழுத்தெட்டுச் செங்கோலோச்சி வெள்ளி வெண்குடைமிளிர வேந்திநாடு வளம் படுத்து நைய்யுங்கடிவோம்பி ஆறில் ஒற்று கொண்

2. டல்லவை கடிந்து கோவீற்றிருந்து குடிபுறங்காத்துப் பெற்ற குழவிக்குற்ற நற்றாய்போல திருமிகு சிறப்பிற் செல்லாநின்ற திருநல்லியாண்டு நாற்பத்தொன்றாவது

3. வடகரைத் திருக்கழுமலநாட்டு நந்தியந் நல்லூருடையாந் வீரசங்காதந் குற்றியதேவன் வானவனுத்தர மந்திரியாயிந நாநாதேசிய் நாட்டுச் செட்டி பக்கல் தென்கரை நாட்டு ஸ

4. ஹதேயம் ஸ்ரீவீரசங்காத வதவேதிமங்கலத்து ஸபையோம் இவர் பக்கல் கொண்ட பொன் பரகேசரிக்கல்லால் துளைநிறைச் செம்பொன் ஐயம்பத்தைய்ந்து கழஞ்சு இப்பொன் ஐயம்பத்தைங் கழஞ்சு

5. சிநால் வந்த அவைய்செலகார் பசானம் ஆண்டொற்று நூற்றொருபதின்கலமுங் கொண்டு திருவலஞ்சுழி வறவோர் கோயிலிலே ஸாஹணர்க்கு பண்ண வைச்ச கலம் .. நிலம் இப

6. ரகேஸரிக்காலால்க் குறுணியாக மூன்று கலத்துக்கும் நிசதம் மூன்று குறுணியால் நெல் ஆண்டுக்குத் தொண்ணூற்றுக்கலமும் நிச்சமாடும் ஸாஹணனுக்கு நிச்சம் பரகேஸரி அந்நு .... ஆ......கல நே.......

7. ஒரு தூணிக்குறுணியும் ஆட்டொரு ஆட்டைக்கு நெல்க்கலநே முக்குறுணியும் ஆக நெல் நூற்றொருபதின்கலத்தாலும் இக்கலம் மூன்றுக்கும்மாய் முள்ளிட்டு மூன்று கறியும் ஒரு கலத்துக்குக் காணத்தால்.........

8. ம் ஒரு பிடி அரை நெய்யுங் கிழாளம் பேராவிரண்டு பாக்கும் அஞ்சு வெற்றிலையும் இப்படி ஸந்திராசத்தவல் நிற்க மூன்று கலமும் ஊட்டுவதாக நாம் ஸபையோம் வானவ உத்தர மந்திரியர்க்கு இயஹக்ஷிப்பான் ஸ்ரீபாதடி என்தலைமேலேமிது.

இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் கொங்குச் சோழன் வேளிர் குலத்தில் மேம்பட்ட இருக்குவேளிர் மரபினன். இம்மன்னர் செங்கோல் ஆட்சியுடையவர்கள். வெண்கொற்றக் குடைக்கும் உரிமையுடையவராகச் சுட்டிக் காட்டப்படுகின்றனர். குடிகாவல் மரபினர் என்பதோடு ஆறிலொன்று கொண்டு அரசாளும் தமிழக மன்னர் குடியினர். ஆறிலொன்று கொள்வது அரச நீதி என்று வேதங்கள், புராணங்கள், இலக்கியங்கள், கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. கொங்கு நாட்டினை ஆண்ட இம்மரபினர் கோ நாடர் என்றும் கோ நாட்டார் என்றும் அழைக்கப்பட்ட உயர்ந்த அரசவழி சோழர் குடியின் தொடர்புடையவர். வேளிர்களாக அங்கீகரிக்கப்பட்ட இவர்கள் செங்கோல், வெண்கொற்றக்குடை, ஆறிலொன்று இறை பெறும் நிலையும் "குடிப்புறங்காத்துப் பெற்ற குழவிக்கு உற்ற தாய் போல" என்பது எல்லோரையும் காக்கும் இறைவன் என்றும் பொருள்படும். வேளாளரின் பெருமை பேசும் சோழ மண்டலச் சதகம் அறிஞர் செ. இராசுவால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் சில பகுதிகளில் ஆட்சி செய்த வேளாளர்கள் எட்டிலொன்று பெற்று ஆண்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து வேளாளர்கள் வேளிர் அன்று என்றும் புலனாகிறது.

கி.பி. 942இல் அமைந்த வள்ளியிறைச்சல் (காங்கேயம்) கல்வெட்டு முதலாம் கொங்கு வீரசோழன் ஆட்சியாண்டு 6க்குரியதாகும்.

1. சுவஸ்திஸ்ரீ கோநாட்டான் வீரசோழபன்ம
2. ர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற ஆண்டு
3. ஆறாவது இவ்வாண்டு வள்ளிஎறிச்சல்
4. மாந்தானி ஈஸ்வாத்து மகாதேவர்
5. வள்ளிஎறிச்சல் மங்கல்யன் மோடன்
6. பொதுவனைச் சாத்தி பொதுவன்
7. பாவையும் பாவை படாரியும் ஒரு
8. நொந்தா விளக்கு எரிய வள்ளி எறிச்சில்;
9. ஊரார் கைவழி வைத்த பொன்
10. காசேழேகால் பொன் பன்னிரு

11. கழஞ்சு இது காத்தான் அடி என்

12. தலை மேலின (தொடர் எண் 44/2010)

இக்கல்வெட்டில் கொங்கு வீரசோழன் தன்னை அடையாளப்படுத்த கோநாட்டான் என்றான். கோ நாட்டிலிருந்து ஐந்து கொங்கு ஆண்டவன். இம்மரபினர் கி.பி. 8-9ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுப் பாடலில் கோனாடர் என்று அழைக்கப்பட்டனர். மேலே சொல்லப்பட்ட இக்கல்வெட்டு வீரசோழ பன்மர் என்று குறித்துள்ளதை ஆய்வாளர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கி.பி. 981இல் அமைந்த வள்ளியிறச்சல் கல்வெட்டு கொங்கு வீரசோழனுக்குரியதாகும். (50/200)

1. சுவஸ்திஸ்ரீ கோனாட்டான் வீரசோழப்

2. பெருமானடிகட்குத் திருவெழுத்திட்டுச்

3. செல்லாநின்ற யாண்டு முப்பத்தெட்டாவது

4. வள்ளிஎறிச்சில் ஊரை

இம்மன்னன் கொங்கு வீரசோழன் கோநாட்டான் அடைமொழியுடன் பெருமானடிகள் என்று உயர்வோடு குறிப்பிடப்படுகின்றான். இவர்கள் அரச மரபினர்களாவர். இவரின் ஆட்சியில் சற்று வீழ்ச்சி அடைந்தபொழுது எழுந்த குடிகள் வெள்ளாள நாட்டோம் என்றும் பூலவ நாட்டோம் என்றும் தம்மைச் சிறப்பித்துக் கொண்டனர். இவ்வாறு கூறிய குடிமக்கள் பிரிவிலிருந்து மாறுபட்டவர்கள் கோ நாட்டார், கோநாடர், வேளிர் மரபினர் என்று கல்வெட்டுப் பாடங்கள் மூலம் உணரலாம். கொங்குச் சோழர்களின் ஆட்சிக்காலம் பற்றி அறிஞர் இரா. பூங்குன்றன் தெரிவித்துள்ளார்.

ஆறிலொன்று கடமை

கி.பி. 1048இல் அமைந்த முதலாம் இராசாதிராச சோழன் தன்னை உயர்ந்த புகழ் இராசகேசரி வர்மன் என்று குறித்துள்ளான். மேலும்,

அரைசரிடு திறைகளும் ஆறிலொன்று
அவனியில் கூறுகொள் பொன்களும்

(SII VOl IV No. 329) என்றும் குறித்துள்ளான்.

அரச குலத்தவர் ஆட்சியில் 1/6 என அரச கடமை பெறப்பட்டது. வேளாளரின் புகழ் பாடும் சோழ மண்டலச் சதகம் ஆறிலொன்று அரசர் பெறும் இறை எனக் கூறுகிறது.

ஈஞ்சக் குலதீபன்

சென்னை அருங்காட்சியகக் காட்லாக் தொகுதி 1 பக்கம் 393இல் ஈஞ்சக் குலதீபன் வேளிர் இனத்து மன்னர் ஏறு என்று குறிப்பிடுகிறது.

தேருலா நெடுவீதி கரும்பைநக
ரீஞ்சக் குலதீபன் கொற்ற
மாறவேள் பெரியாண்டிப் புழுகணி வேந்
துலகாளு மன்ன ரேறே

(பெருந்தொகை 1701)

இவன் தேர் ஓடும் வீதியுடைய கரும்பை நகர் தலைவன் வேந்து உலகு ஆளும் மன்னர் ஏறு என்று சொல்வதிலிருந்து இவன் மன்னரில் தோன்றிய தலைவன். ஈஞ்சக் குலம் என்பது ஈழக்குலமாம்.

மன்றாட்டு வேளான் ஊர் பிராமணன்

கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் அமைந்த பேரூர்க் கல்வெட்டு ஊர் பங்கு உரிமை பெற்ற அந்தணர் பற்றித் தெரிவிக்கிறது. "இவ்வூர் மன்றாட்டு வேளான்களில் ஊர் பிராமணர் கவுசிய கோத்திரத்து தேவன் சேட்டியான இராசராச பிரமராயன்" பற்றித் தெரிவிக்கிறது. வேளாண் என்ற சொல் நிலவுமையுடைய பிரிவையே குறிப்பிடுகிறது.

இடங்கை மீகாம வேளான்

இருப்புக்குழி என்ற ஊரிலிருந்து கிடைத்த கல்வெட்டு (எண் 217/1916) "இடங்கை மீகாம வேளானென்" என்று குறிப்பிடுவதால் இவர் கைக்கோள வீரரான செங்குந்தர் ஆகலாம். இடங்கை மீகாமன் "இடங்கை சமயம் இனிது நடாத்தின்ற கைக்கோளர்"

என்று ஸ்ரீ முஷ்ணம் கல்வெட்டில் பெருமைப்படுத்தியுள்ளனர். முனைவர் செ. இராசு பதிப்பித்த கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்களில் இடங்கைத் தலைவராகக் கொங்கு நாட்டில் காணப்பெறுவோர் கைக்கோளரே.

வேட்டுவன் கரைய வேளான்

கி.பி. 11ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த இராசகேசரி பன்மர் காலத்திய கொக்கராயன் கோட்டைக் கல்வெட்டுகள் (திருச்செங்கோடு) முனைவர் செ. இராசுவால் கண்டறியப்பட்டு (**ஆவணம்** இதழ் 3/1993) ஆவணம் இதழில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை, திருவகழிமங்கலம் சபையாரின் நிலக்கொடை பற்றியன. இதிலொன்றில், "வேட்டுவன் காழி பிடாரன் கரைய வேளான் மாடு மீட்டதுக்குச் சிறப்புச் செய்த நிலமாவது" என்பதால் அவனுக்கு நிலக்கொடை அளித்துள்ளனர் எனத்தெரிகிறது.

வேட்டுவர், ''வெட்சித்தாய வில்லேருழவர்'' என்ற பெயருடன் சங்க காலத்தில் இருந்ததாகப் பாடல்கள் உண்டு. ஆனால் கால மாறுதலால் வேட்டுவர் கரந்தை வீரராக ஆக்களை மீட்டி ஊராரிடம் அதாவது சபையாரிடம் சிறப்புப் பெற்றுள்ளனர். அக்காலக் கட்டத்தில் கரைய வேட்டுவர் என்ற மரபினரைக் கரைய வேளான் என்று பட்டமிட்டு வீரச் செயலுக்கு அழைத்து ஆட்சி அமைப்பில் அதிகாரியாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டு நடுகல்லில் வேள்

பாண்டியற் பாற்க
சோழடு வே(ள்) கொற்றா யரைசன்
ஆண்ட காலத்து
அய்யாறன் சாத்தனைக் குத்திப்பட்டான்

என்று சிங்கம்பட்டி (அம்பாசமுத்திரம்) கல்வெட்டு (XIV) எண் 97 என்பதால் சோழர்குல வேள் என்பவன் பாண்டியர் நாட்டில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தான் என்று தெரிய வருகிறது.

உகிரை வேளாளரில் வேளான்

விசையாலய தேவர் என்ற மறவர் தலைவரின் ஆட்சிக் கால ஊனையூர் திருமய்யம் கல்வெட்டு கி.பி. 1268இல் அமைந்ததாகும்.

ஆவணத்தில், இந்த உகிரை வேளாளரில் கானாட்டு வேளார் திருமேனி வாருணப்பட்டன் எழுத்து என்று ஒப்பமிட்டுள்ளான். இவன் கோயில் பணிகளில் ஈடுபட்டுப் பின்பு வேளான் என்ற சிறப்புப் பட்டத்தோடு காணப் பெறுகின்றான்.

சேதிராய பன்மன் வேளான்

கி.பி. 1253இல் அமைந்த புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதி எண் 373இல் பதிவு செய்யப்பட்ட நாட்டான் வேளான் சேதிராய பன்மன் வேடர் தலைவனாக இருத்தல் வேண்டும். இவன் நாட்டான் என்ற சிறப்புப் பட்டமும் உடையவனாக உள்ளான். சேதிராயன் என்பானைன் கிராதர் கோமான் என்று வேம்பற்றூர் நம்பியின் திருவிளையாடற்புராணம் குறிப்பிடுகிறது.

அந்தண வேளான் (கி.பி. 1194)

மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு 16க்குரிய திருவீழி மிழலைக் கல்வெட்டு (ARE 418/1908) கி.பி. 1194இல் அமைந்ததாகும்.

வெண்நாட்டு உடையார் திருவீழிமிழலை உடையார் கோயில் பிரகாரத்தில் உள்ள பார்வதீஸ்வரமுடையார் கோயில் தேவகன்மிகள் கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக எல்கையிட்டு நிலம் விற்றுக் கொடுத்துள்ளனர். "விலைப்பிரமாண இசைவுத் தீட்டுக் குடுத்தோம்" என்றும், "உடையான் அடங்கல் விழிகொண்டானான மேற்பட்ட அந்தண வேளான் எழுத்து" என்றும் மற்றும் சில அந்தணர்களும் கைஒப்பமிட்டுள்ளனர். இவை ஊர்க்கணக்கு திருவீழி மிழலை உடையான் பிச்சன் .... அந்தண வேளான் எழுத்து, இவை ஊர்க்கணக்கு திருவீழி மிழலை உடையான் ஐநூற்றுவ வேளான் எழுத்து என்றும் கையெழுத்திட்டுள்ளான்.

திருவீழி மிழலைக் கல்வெட்டில் அந்தணர்கள் வேளான் என்றும் ஐநூற்றுவ வேளான் என்று வணிகரும் கையெழுத்திட்டு, திருநாமத்துக்காணி வழங்கப்பட்டுள்ளது.

நான்மறை வேளான் (கி.பி. 1247)

மூன்றாம் இராசராச சோழனின் ஆட்சியாண்டு 31க்குரிய கி.பி. 1247இல் அமைந்த திருவீழி மிழலைக் கல்வெட்டு

அருளால் கோயில் கணக்கு திருவீழி மிழலை உடையான்
மிழலை வேந்து மேன்றுணைய் கண்டான் மெய்யாழ்
நான்மறை வேளான்"

என்பவன் கோயில் கணக்கு அதிகாரியாக இருந்த பார்ப்பனர் சமூகத்தினன். இவன் மிழலை வேந்து என்றும் பெயரிட்டுக் கொண்டான். (திருவீழிமிழலை 591/1977). (தநா.தொ. பொ. துறை தொடர் எண்.)

நம்பி செட்டனான வேளான் (கி.பி. 1214-15)

மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு 37க்குரிய (கி.பி. 1214 - 15க்குரிய) நார்த்தா மலைக் (குளத்தூர்) கல்வெட்டில் (புதுக்கோட்டை 170) "மேற்படி யூருடையான் நம்பி செட்டனான கானாட்டு வேளான் எழுத்து" என்று கையெழுத்திட்டுள்ளான். இவன் எந்த மரபினன் என்று கண்டறிய முடியவில்லை. இவன் அரச குலத்தவன் என்று மட்டும் உறுதி செய்யலாம்.

நம்பியார் வேளான் (கி.பி. 1225)

கி.பி. 1225இல் அமைந்த பாண்டியப் பேரரசன் கோனாடு கொங்கு அருளிய கோமாற வர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்குரிய நார்த்தா மலை (குளத்தூர்) கல்வெட்டு (புதுக்கோட்டை எண் 271) கையெழுத்துப் போடத் தெரியாத தற்குறி, நம்பியார் ஆவார்.

இவை மலைய நம்பியார் கானாட்டு வேளான் கை மாட்டாமை
யுமிட்டு .... குடியுடையான் ஆனை நம் தெற்ற
பெருமாள் எழுத்து

என்று கல்வெட்டு காணப்பெறுவதால் நம்பியார் என்ற அடைமொழி பிற்காலம் கோயில் பிராமணராகிய சிவ பிராமணர்க்குரியதாகும். சங்ககால அரச மரபினராக அறிவுடைநம்பி, நம்பி திருக்குட்டுவன் காணப்பெறுகின்றனர்.

மன்றாட்டு வேளான் (ஊர் பிராம்ணர்)

கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்த கொங்குச் சோழன் திரிபுவன சக்கிரவர்த்திகள் கோனேரின்மை கொண்டானின் ஆட்சிக்காலக்

கல்வெட்டு, "இவ்வூர் (பேரூர்) மன்றாட்டு வேளான்களில் ஊர் பிராமணர் கவுசியக் கோத்திரத்துத் தேவன் செட்டியான ராசராச பிரம்மராயன்" என்று குறிப்பிடுகிறது. ஊர் பிராமணன் என்பது ஊர்த்தலைவன் போலும். இதனாலேயே மன்றாட்டு வேளான் என்று அழைக்கப்பட்டுள்ளான். (111/2004, 287) (த.நா. அரசு தொல்பொருள் துறை, தொடர் எண்)

வெள்ளாளன் என்ற வேளான்

மு.இராகவையங்கார் தம் வேளிர் வரலாறு நூலில் பதினெண்குடி வேளிரைத் தலைகீழாக ஆராய்ந்து பதினெண்குடி பணி மக்கள் பட்டியலுக்குக் கொண்டு போகிறார். பணிமக்களுக்குரியதல்ல வேள் என்ற பட்டம் என்பதற்கு ஆச்சாள் புரம் கல்வெட்டு தக்க சான்றாகும் (ஆவணம் இதழ் 21)

''பணிமக்கள் வேளும் அரசும் பெறாதார் ஆகவும்''

இரண்டாம் இராசாதிராச சோழன் ஆட்சிகாலக் கி.பி.1177இல் அமைந்த இக்கல்வெட்டு ஆச்சாள் புரசபையாரின் நடவடிக்கையைத் தெரிவிக்கிறது. பணிமக்கள் என்பது அந்தணர், அரசர், வணிகர் அல்லாதவராகும். வேளாண்குடியினரின் தலைமையில் பணிமக்கள் பிரிவு இயங்கியதை நாம் கவனித்தாக வேண்டும்.

ஆச்சாள்புரம் கல்வெட்டு தரும் செய்திகளை அறிஞர்கள் உற்று நோக்கி அறிய வேண்டும். பணிமக்கள் வேள், அரசு என்று போடக்கூடாது என்பதை உணர்ந்தால் அரசபட்டத்தைச் சூடிக்கொள்ளத் தடை விதிக்கப்பட்டதைத் தெளிவாக உணர்ந்தால் மு.இராகவையங்கார் ஆய்வில் தவறு ஏற்பட்டது புலனாகும். வேள் அரசுப் பட்டம் மேன்மக்களுக்குரியதாகும். சங்க காலத்தே மேன்மக்கள், கீழ்மக்கள், என்ற இருவேறான பிரிவுகள் இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் காணப்பெறுகின்றன.

சாசனங்களைத் தெளிவாகப் படித்துப் பதிப்பித்த அறிஞர் டி.என்.சுப்பிரமணியன் என்பார் கோயிற் சாசனபதிப்பில் வேளம் தொடர்பிலேயே வேளான் என்றும் வேளத்தின் தொடர்பிலேயே வேளாளன் என்றும் எழுதித் தவறு செய்தார். வேளம் என்பது

கைக்கொள்ளப்பட்ட மகளிர் இருப்பிடமாகும். இவரிலிருந்து வேளான் பட்டம் தோன்றியது என்பது நகைப்புக்குரியது. 'வேள்' என்ற சொல் ஒளியும் வேள்வியும் தொடர்புடையது என்பதை மறந்துவிட்டார். வேள் குலத்தவர்கள் இருக்குவேள், இருங்கோள மன்னர், சசிகுலவேந்தர், பெருஞ்சாந்தி குலவேந்தர் என்று அழைக்கப்பட்ட உயர்குடியான தொல்குடி மன்னர். முடிசூடியும் வேள்வி செய்தும் போர்க்கலையைப் பயிற்றுவித்தும் முரசு வைத்தும் வேத்தவை நடத்தியும் அந்தணரின் சதுர்வேதி மங்கலச் சபையிலே தலையிட்டு உடன் இருந்தும் தொல்குடி மன்னர் சீறூர் மன்னர் என்றும் அழைக்கப்பட்ட **பெரியோர் குலத்தவர்** ஆவர் *(குலோத்துங்க சோழன் கோவை, அம்பிகாபதி கோவை)*

வேளத்தில் இடம்பெற்றோர் அடிமைகளாக இடம்பெற்றனர். மேலும் ஏவல் தேவைகளாக இருந்த உழுகுடி மக்கள் என்போர் வேளப்பிள்ளைகள் அன்று. இவர் நிலத்தில் பணி செய்தும் கோயில்குடிகளொடு பொருத்திப் பார்க்கப்பட்டவர்கள் வேளாண்குடிமக்கள் பல நிலையில் தோன்றினார்கள் எனில் மிகையாகாது. ஆனால் வேளிர் குலத்தவர் வேந்தர் குலத்தின் முன்தோன்றல்களாகும். கி.பி. 11ஆம் நூற்றாண்டு இலக்கண நூலான பன்னிருப்பாட்டியல் (சொல்லியல் 83) ''வேந்தன் முற்குலத்தோர்'' என்போர் வேள் குலத்தவராகும். இலக்கணச் சான்றுகளின்படி அரசுக்கு உரியோர் கல்வெட்டுகளில் அரசு மக்கள் என்போர் வேளிர் இனத்தவரே. புறப்பாட்டுதனில் அரசவாகையில் மூவேந்தரும் அவர்தம் குடிப்பிறந்தாராகிய வேளிரும் பாடப்பட்டுள்ளனர். பட்டப்பெருமக்கள் என்போர் வேளிர் இனத்தவர் ஆவார். தலைமக்களாகவும் அரசர் ஆகவும் அங்கீகாரம் பெற்றிருந்த உயர்குடியினரும் ஆவார்.

வேளாளர் சில கல்வெட்டுகளில் வேளான் பட்டம் தரித்தவராகக் காணப்பெறுகின்றனர். இத்தகைய கல்வெட்டுகள் வேளாளரையே குறிக்கும். ஆனால் வேளிர் வேளான் என்ற சொல் வேளாளரைக் குறிப்பிடாது.

முதலாம் குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு 5க்குரிய கல்வெட்டு கி.பி. 1075இல் அமைந்ததாகும். இதில், இவ்வூர் வெள்ளாளன் சாத்தமங்கலமுடையான் வேளான் கயிலாயத்தேன்

இவை என் எழுத்து என்று அடையாளம் தெரிவதால் வெள்ளாளர் சிறப்படைந்து வேளான் பட்டம் அடைந்துள்ளனர் என அறியமுடிகின்றது.

இதனை உணராத நிலையில் அறிஞர் மு. இராகவையங்கார் தாம் எழுதிய வேளிர் வரலாற்றில் தலைகீழாக ஆராயத் தொடங்கி வேளிர்கள் வெள்ளாளர் ஆகிவிட்டார்கள் என்றும் தம் நிலையில் தாழ்ந்து விட்டார்கள் என்றும் குறிப்பிடுகின்றார். வேளிரே வேளான் என்று தெரிந்தும் வேளாளரே வேளிர் என்பது கடைந்தெடுத்த கற்பனையாகும்.

பூமாதேவியைப் புணர்ந்தவன் என்று சொல்லப்படுகிறவன் தான் அரசன். வேளிர் - மண் மகளுக்குரிய புதல்வர்கள். இருநில உரிமை அரசர்க்கே இருந்தது. நிலத்தைக் கொடுக்கின்ற அதிகாரமும் நிலத்தைக் கைப்பற்றும் அதிகாரமும் அரசர்களுக்கு இருக்கும்பொழுது மண் தொடர்பில் வேளாளர்க்குப் பெயர் வந்து விட்டது என்று தமிழ்நாட்டு வரலாற்றினை எழுதியுள்ளனர்.

கி.பி. 8ஆம் நூற்றாண்டு வேளிர் நாடு

கங்க மன்னனான கட்டாணை பருமர் கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்ததாகக் கிருஷ்ணகிரி சந்தூர் கல்வெட்டால் தெரியவருகிறது. கிருஷ்ணகிரி தொகுதி பக்கம் 25, 27) இதில் ''வேளால் நாடாள'' என்று குறிப்பிடப்படும் நாடு அமைந்து இருப்பதை வேளாள நாடு என்று தமிழ் நாட்டு அரசு தொல்பொருள் துறையினர் பதிவு செய்துள்ளனர். கல் என்பதை கன் என்று இலக்கியங்கள் பதிவுசெய்து இருப்பது போன்று இல் என்பது இன் என்று கொள்ள வேண்டுமே தவிர வேளால் நாடு வேளான் நாடு என்றே பொருள்படும்.

மேலும் நல்நாடு என்பதை நன்னாடு என்று இலக்கியங்கள் பதிவுசெய்து இருப்பதை எண்ணுதல் வேண்டும். இதனால் வேள்நாடாகிய வேணாடு வேளான் நாடு எனப்பட்டது என்று கொள்ள வேண்டுமே தவிர வேளாள என்று கொள்ளக் கூடாது.

இது போன்று சோழநாட்டில் வேளர் நாடு என்ற நாட்டுப் பிரிவு இருந்ததாகக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

கல்வெட்டில் வேளா நாடு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. குலோத்துங்க சோழனின் ஆட்சியாண்டு 10க்குரிய (தெ.இ.கல் 7:533) கல்வெட்டில் திருவேளாலீஸ்வரமுடையார் என்றும் இம்மன்னனின் 12ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் திருவேளானீச்சுரம் உடையார்'' என்றும் படித்து உணர்ந்துள்ளனர். (தெ.இ. கல் 7:534) இவற்றையும் சிந்தித்து வேளான் நாடு என்பதையே வேளால் நாடு என்றார் என்பதாம்.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் வேளாண்குடியினர் தம்மை நிலத்தரசு என்று பதிவு செய்தனர். அதேவேளையில் முடியரசு என மூவேந்ததரைக் குறிப்பிட்டுள்ளதும் அறியத்தக்கது. அதனால் வேளிர் வெள்ளாளராக ஆகிவிடமாட்டார்.

கைக்கோளர் கணக்கு வேளான்

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இருந்த சுந்தரபாண்டியன் என்ற மன்னனின் குடுமியான்மலை (குளத்தூர்) கல்வெட்டில் (புதுக். 266) கைக்கோளர் சமூகத்தைச் சார்ந்த செங்குந்தர் "கணக்கு குடுக்குந் தியாகி வேளா(ர்)" என்று சுட்டிக்காட்டப் பெற்றுள்ளார்.

கங்கை நதிக்குல வேளாளர்

கி.பி.1568இல் அமைந்த தாரமங்கலம் கல்வெட்டு வேளாளரில் உயர்வான பிரிவுஆன கட்டி முதலியார் பற்றியதாகும். (தெ.இ.கல் 7:19)

> கொங்கான வீர சோழ மண்டலத்தில் புவாணிய நாட்டு
> தாரமங்கலத்தில் வெள்ளாழரில் நீலங்கிழார் மகுட
> குடோரி மகுட சூடாமணி மன்னர் வணங்கினாலும்
> வணங்காமுடியான முதலியார் நல்லுடையப்பர்

பற்றிக் குறிப்பிடுகிறது. நதிக்குலவேள் என்பதற்கு ஈடான நீருணி அரையன் பட்டம் பெற்றிருந்த கட்டி முதலியார் பட்டம் பெற்றிருந்த கட்டி முதலியார் கூட முடி சூடக்கூடிய மரபுக்கு உரிமை கோராத பொழுது பிறர் உரிமை பாராட்டி வேள் என்பது வேடிக்கையாகச் சொல்வதாகும். ஆணையிடுகிற இடத்தில் வேளிரும் ஆணை வழி நடத்தல் என்ற நிலைபெற்ற வேளாளரும் ஒருவர் அன்று.

தொகுப்பு நூலான பெருந்தொகையில் பதிவு செய்யப்பட்ட பாடல் (எண் 1743) கங்கை நதிக்குலவேள் பெருந்தொண்டை நாட்டினனேன் என்பதால் வேளான் மரபினன் வேள் என்று தன்னை அழைத்துக் கொண்டான் என்று பிற்காலம் அமைந்த பாடலாலும் தெரிய வருகிறது.

வேள் என்பது அரசுப் பட்டம். எனினும் இத்தொண்டை நாட்டான் நதிக்குலத்தவன் எனும் கங்கைக் குல மரபினன் சூடிக்கொண்டான்.

வேளாண் குடியிலே தோன்றிய விதுரனைப் (பணிமகளுக்கு அரசனிடம் தோற்றம் பெற்றவன்) வேளாளர் மரபினரான நல்லாப்பிள்ளை தாம் பாடிய *பாரதத்தில் (7352)* "பொது மடந்தையர் புதல்வன்" என்று குறிப்பிட்டிருப்பது சிந்திக்கத்தக்கது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டு ஒட்டக்கூத்தரின் நூலான *தக்கயாகப்பரணி* கங்கையின் புனிதத் தன்மை பற்றி விளக்க நீரர மகளிர் என்று தெய்வக்கன்னிகளை அடையாளம் காட்டுகிறது. இறைவன் சிவன் தன் தேவியோடு கங்கையைத் தன் சடையினுள் மறைத்து வைத்திருந்தான் என்று புராணங்களிலும் இலக்கியங்களிலும் காணப்பெறுகிறது. இதனால் புனிதம் கருதிக் கங்காதேவி எனப் பெயரிட்டவர் எல்லாம் தெய்வக் கன்னியர் குலத்தவரன்று.

உடையார் வேளிர்

கி.பி. 953இல் அமைந்த கல்வெட்டு (Epi Vol. VII 26இல்) உடையார் என்ற சொல் அரச பட்டமாகத் திகழ்ந்தது என்று உணர்வதற்குச் சான்றாகும். ப்ருத்வி கங்கரையனுக்கு விண்ணப்பம் செய்ய உடையாரும் கிராமஞ் செய்கிறபோழ்து, என்பதால் உடையார் என்ற சொல் உரிமையுடைய தலைமகனைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்றுள்ளது என்க.

உடையார் என்ற சொல் கோயிலாகத் திகழ்ந்த இறைவனையும் கல்வெட்டுகளில் குறிப்பிடுகிறது. எனவே ஓர் ஊரினைச் சார்ந்தவன் என்பதற்கு இவ்வூர் உடையான் என்றும் ஊரின் பெயரோடு உடையான் என்றும் கல்வெட்டுகளில்

குறித்திருப்பதைச் சிலர் தவறாகப் பொருள் கொண்டு அவரை உடையான் பட்டம் உடையவர் என்று குறிப்பிட்டிருப்பது வருத்தத்திற்குரியதாகும்.

அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகப் பதிப்பான தமிழ் அகராதியில் உடையார் பட்டமிட்ட பார்க்கவ குலத்தவரைப் பற்றிய செய்தியில் பார்க்கவ குலத்தவர் குயவர் என்று அடையாளமிடுகிறது. இவர் உடையார் என்ற சிறப்புப் பெயர் பெற்றது பிற்காலத்திலேயாகும். ஆனால் வேந்தர் குடியினராகிய வேளிர் உடையார் என்றது குழலூர் துஞ்சிய உடையார் என்ற பெயரால் தெளிவாகிறது. தொல்காப்பியப் பிற்கால உரையாசிரியர் ஆத்திரேயர், சிலர் சிறப்புக் கருதித் தேவர். உடையார் என்று சொல்லத் தலைப்படுவதை அவர் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அழுந்தை என்ற அழுந்தூர்

திருமங்கை மன்னர் என்ற அகம்படியச் சிற்றரசர் பாடிய பெரியதிருமொழியில், அழுந்தை என்ற அழுந்தூர் குறிப்பிடப்படுகிறது. அங்கு முதலில் வேளிர் ஆட்சி இருந்தது.

பாராளர் அவர் இவர் என்று அழுந்தை எற்ற
கடைமன்னர் உடல்துணியப் பரிமா உய்த்த
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் ஓர்மின்களே

(6:6:9, திருபாம்புர புராணம், ச. கிருஷ்ணமூர்த்தி, பக். 56)

என்பதால் அழுந்தை என்ற அழுந்தூரை ஆண்டவர்களை அவர் இவர் என்றும் கடைமன்னர் என்றும் பாடியிருப்பது உணர்தற்குரியது. இவர்களை வென்று விரட்டினான் சோழன் என்று அறிகிறோம்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் பிற்கால வேளிர்

மதுரை மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி (1, எண் 73/2003)யில் வேள்குல அரசர் ஒருவரை மதுரைப் பகுதியில் தருக்காக்குடிப் பகுதியில் இருந்த படையினர் காப்பாற்றிப் பாதுகாப்பு அளித்தனர் என்று காணப்பெறுகிறது.

கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைந்த தருக்காக்குடி (மேலூர்) கல்வெட்டு, வேள்குலநார் என்பவருக்கு அண்ட நல்லூர்

தருக்காக்குடி கடகமறுக்கிகள் என்ற படையினர் பாதுகாப்பு அளித்தனர் எனத் தெரிகிறது. இக்கல்வெட்டில் பூரணகும்பம், திரிசூலம், இருபுறமும் குத்துவிளக்குகள், கோட்டுருவமாகப் பொறிக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் சூத்திரம் (74) ஐவகை மரபின் அரசர் பக்கமும்'' என்பது ஓதலும், வேட்டமும் ஈதலும் படை வழங்கலும் குடியோம்பலுமாம். மங்கலச் சின்னங்கள் குறிப்பாகப் பூரணகும்பம் அமைந்தால் அவனை அரசனாகக் கருதுவது வடபுல வழக்கம். பூரணகும்ப மரியாதையுடன் மக்கள் அரசரை வணங்குவதை மகாகவி காளிதாசன் தமது நூலான இரகு வமிசத்தில் விவரித்துள்ளார்.

'வேள்குலநார்' என்று சிறப்பிக்கப்பட்ட அரச மரபினர் இப்பகுதியில் தஞ்சமடைந்தது இஸ்லாமியர் எழுச்சி நடவடிக்கையினாலா? அல்லது வாணாதிராயர்களுக்குப் பயந்து தெற்கே ஓடினாரா? தெரியவில்லை.

சங்கம் மருவிய காலத்தில் வேளிர்க்கு உடையார் பட்டம்

தமிழ்நாடு தொல்லியல் துறை அலுவலர் து. துளசிராமன் மற்றும் அறிஞர் பனையூர் இராசேந்திரன் கண்டறிந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டை (கி.பி. 500) (**ஆவணம்** இதழ் 1) அறிஞர் ஒய். சுப்பராயலு குழுவினர் ஆய்வு செய்து பதிப்பித்துள்ளனர். இக்கல்வெட்டுக் கால மன்னன் கோச்சேந்தன் கூற்றன் என்ற வேளிர் மரபிலே தோன்றிய அரசன் ஆவான். இவனுடைய குலத்தவனாகவோ முன்னோனாகவோ இருந்தவன் குழலூர்துஞ்சிய உடையார் என்று பூலாங்குறிச்சிக் கல்வெட்டுப் பாடம் உள்ளது. இம்மன்னர்குடியின்கண் பிறந்த வேள் மருகன் மகன் கடலகப் படைத் தலைவன் எங்குமான் என்பானும் வேளிர் குடியினனே. எனவே வேள் மன்னர் முன்பு தரித்த உடையார் பட்டத்தையே வேந்தராக அடையாளம் காட்டிய சோழர்கள் பின்பு சூடியுள்ளனர். இதுபோன்று வேந்தரும் வேளிரும் தொடர்ச்சியாக உடையார் என்று தங்கள் பெயருடன் சிறப்பு அடைமொழியிட்டுக் கொண்டனர்.

பிற்காலச் சோழர் காலத்தில் வேளிர் உடையார்

கி.பி. 10ஆம் நூற்றாண்டிற்குரிய கோப்பரகேசரி பன்மர் 4ஆம் ஆட்சியாண்டிற்குரிய அல்லூர் ஊரோம் (திருச்சி) தொடர்பான

கல்வெட்டு சோழப் பேரரசனின் ஆணையைத் திருமுக ஆணையாக வழங்கியவன் வீரசோழன் இளங்கோவேள் ஆவான். ஒரு வேலி நிலம் தேவதானமாக வழங்க ஆணை பிறப்பித்து ஆணையை ஓலையாக எழுதி அல்லூர் ஊரார்க்கு அவ்வோலையை அனுப்பினான். அதனைத் தலைமேல்கொண்டு அறவோலை செய்து ஊரார் அளித்தனர். (SII VIII 687, அல்லூர்)

ஆணத்தியாக ஓலை வழங்கியவன் "உடையார் வீரசோழ இளங்கோ வேளாயின ஒற்றி மதுராந்தகன்" என்ற வேள்குல மன்னன். அல்லூர் ஊரார் அரசனின் ஆணையை ஏற்றுத் தேவதானமாக ஒரு வேலி நிலம் அளித்து அறவோலையை நிறைவேற்றினர். நாட்டார் செய்யும் பணியை அல்லூர் ஊரார் செய்துள்ளனர். மேலும் அல்லூர் ஊராரில் அரச குடியினர் இருந்தனர் என்று (SII Vol. VIII) இரண்டு கல்வெட்டுப் பாடல்கள் உள்ளன.

கி.பி. 8ஆம் நூற்றாண்டுச் செப்பேடுகள் (கி.பி. 777) "களப்பாளர் களைகட்ட கற்றறிந் தோர் திறல் பரவ" என்று குறித்து இருப்பதால் களப்பாளர் என்ற கலியரசர் நீங்கி, அறிவுடையோர் மரபுவழி அரசராகிய பாண்டியர் மீண்டும் திறல் பரவினர் என்பதாம். களப்பாளர்கள் பாண்டியநாட்டு ஆட்சியைக் கைப்பற்றியது கி.பி. 470க்குச் சற்றுப்பின்னரே என்று தோன்றுகிறது. களப்பாளர் ஆட்சி ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்குமேலாகத் தென்தமிழ்நாட்டில் நீடித்தது என்று தெரிய வருகிறது. குழலூர் துஞ்சிய உடையார் என்பவர் அரச மரபினர் என்று தெரிய வருவதால் கோச்சேந்தன் கூற்றனுக்கும் உடையாருக்கும் என்ன உறவு என்று புரியவில்லை. குடும்பு போன்ற நிலையிலும் தேவகுலம் நிலையிலும் ஆணையிட்டவன் குழலூர் துஞ்சிய உடையார் என்ற தலைவன் என்பதால் இவன் பாண்டியருக்கு அடங்கிய சிற்றரசன் என்று கொள்ள முடிகிறது.

கோச்சேந்தன் கூற்றன் என்ற பெயரையும் கூற்றுவநாயனார் என்ற பெயர் ஒற்றுமையையும் கருதிக் கோச்சேந்தன் கூற்றன் களப்பாளர் என்று கருதுகின்றனர். கூறு செய்யப்பட்ட சிறு நாட்டினைக் கூற்றம் என்றார்கள். மிழலைக் கூற்றம், முத்தூற்றுக் கூற்றம் என்னும் சொற்கள் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவைபோன்று பொதுமிக் கூற்றத்து நாடு கிழவோன் ஆய் அண்டிரன் புறநானூற்றில் சொல்லப்படுவதாலும்

கூற்றங்களின் தலைவர்கள் வேளிர்களே எனலாம். களப்பிரர் குலத்தலைவன் கூற்றவ நாயனார் என்றும் பெரிய புராணத்தால் அறிய முடிகிறது. கூற்றம் என்ற நாடுகள் பலவற்றை வென்று சிறந்து தலைவனானவர் கூற்றுவன் நாயனார் என்று நாம் கருதலாம். கூற்றன், கூற்றுவன் என்று குறிப்பிட்டு இருப்பது போரில் பிறரை எமனைப் போன்று கொல்லுகின்றவன் என்றும் பொருள்படலாம். கூற்றன் என்பதைச் சிந்தித்துப் பார்க்கச் சோழன் என்ற வேந்தர் மரபும் சோழகன் என்று குடிகள் பெயரிட்டுக் கொண்டதும் சோழர் குடியின் அடையாளமன்று; சோழிய அந்தணன் அர்த்த சாத்திரம் எழுதிய சாணக்கியன் என்ற பார்ப்பான் சோழர் குடியினர் அல்லர். சோழ நாட்டில் வாழ்ந்து வடபுல மன்னரிடம் பணிபுரிந்தவர்.

செந்துறை (திருச்சி) கல்வெட்டு (SII VIII No. 624) அரசனின் பெயர் சிதைந்த இக்கல்வெட்டும் கி.பி. 10ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று அறிஞர் இரா. பூங்குன்றன் கருதுகிறார்.

> உடையார் செம்பியன் இருக்கு வேளாயினபூதி
> ஆதித்த படாரநேந், பிரம்மதேயம் ஈசான மங்கலத்துத்
> திருச்செந்துறைக் கற்றளி பரமேசுவரர்க்கு பனையூர்
> வாழ்க்கையில் கழுமலத்தேய் உடும்போடி ஆமை தவழ்ந்தது
> புன்செயும் மென்செயும் எப்பேர்பட்ட நிலமும் இறையிலி
> சந்திராதித்தவர் தேவதானமாக நீரோட்டிக் குடுத்தேன்
> செம்பியன் இருக்கு வேளாயின பூதி ஆதித்த படாரநான்

என்று ஐந்து வேலி நிலம் வழங்கப்பட்டுள்ளது.

உடையார் என்ற திருப்பெயர் வேளிர் சிறப்புப் பெயராக இக்கல்வெட்டில் வழங்கி வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இருக்குவேள் என்ற சொல் இருக்குவேத் தொடர்புடைது என்பதைச் சிலர் மறந்து வேதத்திற்குப் பகைமை பாராட்டும் குடியோடு பொருத்தி வரலாறு எழுத முயற்சிக்கிறார்கள்.

அரசன் பெயரில்லாத வள்ளியிறச்சல் கல்வெட்டு

> **சுவஸ்திஸ்ரீ** முத்தூரிலிருக்கும் வெள்ளாளன்
> மணியர்களில் வன்றன் மாராயனான
> தென்னவன் மூவேந்த வேளான் இட்ட கால்

இக்கல்வெட்டில் வேளாளக் கவுண்டர் பிரிவில் மணியர் கூட்டத்தைச் சேர்ந்தவன் மாராயனான தென்னவன் என்பவன் மூவேந்த வேளான் என்று பட்டம் தரித்துள்ளான். வேளிர் அல்லாத பிறர் தாம் எந்தப் பிரிவில் தோன்றினார்களோ அந்தப் பிரிவைச் சொல்லி வேளான் என்றோ மூவேந்த வேளான் என்றோ பட்டம் புனைந்துள்ளனர். இவர்களே அரச பட்டமான காமிண்டன் என்ற ஊர்த் தலைவன் பட்டத்தைச் சூடியவர்களாகப் பலரும் காணப்பெறுகின்றனர். இவரில் கொங்கு நாட்டில் குடியேற்றப்பட்ட வேளாளர்கள் வெள்ளாளக் கவுண்டர்கள் என்று அழைக்கப்பட்டு வருகின்றனர்.

கி.பி. 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமைந்த இந்த வள்ளியிறச்சல் கல்வெட்டு (தொடர் எண் 46/2010)

> ஸ்வஸ்திஶ்ரீ சிற்றிலோட்டில்லிருக்கும்
> வெள்ளாளன் காடகளில் ஆடன்
> புலியனான உத்தமசோழந் தமிழ்
> வேளாந் இட்ட கால்

என உள்ளது. இக்கல்வெட்டிலும் வேளாளரில் காடக் கூட்டம் (காடை) என்று குறிப்பிடப்படும் வெள்ளாளன் ஒருவன் "ஆடன் புலியநான உத்தமசோழன் தமிழ வேளான்" என்று அழைக்கப்படுவதால் வேளிர் பட்டமான வேளான் என்ற பெயர் சூடிய கொங்கு நாட்டு அரசியலதிகாரி வேளான் குடியிலே, குறிப்பாக வேளாளர் காடைக் கூட்டத்தினன் ஆவான். கி.பி.10ஆம் நூற்றாண்டில் அமைந்த ஈரோடு விஷ்ணுகோயில் செப்பேடு ''வெள்ளான் காடைகள் என்ற வேளாளக்குடிப் பிரிவினர் கோயிலுக்கு ஒப்படைக்கப்பட்ட பணிமக்கள் ஆவர். (ஈரோடு மாவட்டக் கல்வெட்டுத்தொகுதி 2)

அடுபோர் வேளிர்

சங்க காலம் நீங்கிய பின்னரும் வேளிர் போர்க்குடியாகவே மிளிர்ந்து பேரரசரான வேந்தரிடம் போர் புரிந்து வந்துள்ளனர் எனறு திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் (6) குறிப்பிட்டுள்ளார்.

> மின்னாடு வேலேந்து விளந்தை வேளை
> விண்ணேறத் தனிவேலுய்த் துலக மாண்ட
> தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
> திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே
>
> (நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் 1503)

சோழ அரசன் இப்பாடல்வரிகளில்

மலைத்தடந்த மணி கொணர்ந்து வையமுய்ய
வளங்கொடுக்கும் வரும்புனல் அம் பொன்னிநாடன்
சிலைத் தடக்கை குலச் சோழன் சேர்ந்த கோயில்

(நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் 1504)

எனப்படுகிறான். குறுநில வேந்தர் எனப்பட்ட வேளிர் பற்றிச் சேந்தன் திவாகரம் அவரை அரச மரபினராக அங்கிகாரம் செய்துள்ளது.

குறுநில வேந்தரே வேளிர் என்றால் வேந்தருக்கும் வேளிருக்கும் ஒற்றுமையான அரச குடி என்று அடையாளம் காட்டப்பெறுகிறது.

வஞ்சி வேளாயின இரவி குலாலன்

ஸ்ரீதென்னவன் வஞ்சிவேளாயின இரவி குலாலன் மணவாட்டி நிறந்தேவி குன்றவூர் கோயிலுக்கு விளக்கு எரிய ஐம்பது பொன் வழங்கியுள்ளார். இவர் சூரிய குலத்திற்கு உரிமை பாராட்டியவர். பாண்டியரிடம் பணிபுரிந்தவராவர் ஆவார்.

கணக்கரானவேளிர்

பாண்டியர் செப்பேடுகள் (தளவாய்புரம், வரிகள் 170-172) பாண்டிய வேந்தரின் ஆட்சிக்கால அதிகாரிகளில் கணக்கன் ஒருவனைப் பார்ப்போம்.

திருகை பேராண்சூழ் பெரும் காக்கூர்த்தலை ஆகிய
குலக்குரிசில் தருதேய மாணிக்கம் கலைபயில் கிழவன்
கோனும் கணக்கு நூல்பயில் கணக்கராகவும்

என்பதால் கிழவன்கோன் கணக்கராவான் என்று தெரிகிறது. தலை ஆகிய குலக்குரிசில் என்பது அரச குலத்தவரின் பட்டப் பெயராகும்.

கணக்கு எழுதும் உரிமையுடைய காயஸ்தர் எனப்படும் கணக்கந்தைகள் வேளிர் குலத்தவரே எண்ணிக்கையில் மிக அதிகமாக 'வேளான்' என்ற பெயரோடு காணப்பெறுகின்றனர். இவரைப் போன்று அந்தணர்களும் கணக்கர்களாகச் சுட்டிக் காட்டப்படுகின்றனர். வேளாளர்கள் கைக்கோளர், தேவரடியார், வேட்கோவர் (குயவர்), அகம்படியர், அகம்படிய மறவர் என்று பலரும் கணக்கராக இருந்துள்ளனர்.

முற்பட்ட சிவகாசி செப்பேட்டில் 'சாணாடு கிழவன்' கணக்கனாக இருந்துள்ளான். இவன் வேளிர் மரபினன்.

முனைவர் நாகசாமி அவர்கள் "பெரும் காக்கூர்கோன் வேளான் கணக்கனாக இருந்தான் இவன் வேளாளன்" என்று சின்னமனூர் பெரிய சாசனச் செய்தியைத் திரித்துத் தம் கட்டுரையில் எழுதியுள்ளார்.

பெருங்காக்கூர்கோன் வேளானின் மரபு. பெரும் காக்கூர்த் தலைவன் ஆகிய குலக்குரிசில் கலை பயில் கிழவன்கோன் தொடர்புடையவன்.

கணக்கர் அரச குலத்தவர்

எபிகிராபிகா இண்டிகா (22:32) கல்வெட்டு கணக்கரை (காயஸ்தர்) அரசமரபினராகக் காட்டுகிறது என்பதை சீ.இராமச்சந்திரன் எனக்கு எடுத்தோதினார்.

> தாமாசனத்து என்றல் வாயில் வென்றல்
> மற்றதானும் நம்மூரில் பிராமணன் றென்றல்
> சிவபிராமணடிகளென்றல் கணக்கரென்றல்
> வியாபாரிகளென்றல் வெள்ளாள றென்றல் மற்றும்
> எப்பேர்ப்பட்ட ஜாதிகயொன்றும் அவ்வ ஜாதிகள்
> பட்டத் தண்டம் போக்கறுப் பாராகவும்

என்பதால் வெள்ளாளரிலும் வேறுபட்டவர் கணக்கர் எனப்பட்டவராவர்.

இவரை, கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் அமைந்த திருவிடைமருதுர் செப்பேடு கணக்கந்தை என்று குறிப்பிடுகிறது. இவர்கள் தங்களைச் சோழ குலத்தவர் என்றும் அடையாளம் காட்டியுள்ளனர்.

கி.பி.1387இல் அமைந்த திருப்பத்தூர் கல்வெட்டு கணக்கன் குலாலன் அம்பலத்தாடுவானான ஆயிரத்தெழுநூற்று மூவேந்த வேளான் என்பவன் தனது உரிமையை நிலைநாட்டிடப் போராடியுள்ளதும் சூரைக்குடி விசயாலய தேவர் இடையூறு செய்து மூவேந்த வேளானை விரட்டிவிட்டு வெள்ளாளரை நியமனம் செய்ததும் கல்வெட்டு தரும் செய்தியாகும்.

கி.பி. 11ஆம் நூற்றாண்டில் அமைந்த திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டு ''கணக்கு நடார் கிழான் பதினெண்பூமி வேளான்'' பற்றித் தெரிவிக்கிறது. (எண் 166, 167). நடார் கிழானை நாடார் கிழான் என்று படியுங்கள் என்று நூல்பதிப்பிலே குறித்தவர் அறிஞர் இரா.நாகசாமி அவர்கள் ஆவார்.

வேளிர் என்பார் வேளாளர்தான் என்று தலைகீழ்ப் பாடம் செய்த நிலையில் நாம் ஒன்றினைக் கவனிக்கலாம். பறம்புமலை மன்னன் வேள்பாரி வேளிர் இனத்தவன். முல்லைக்குத் தேர் ஈந்த வேள்பாரியைப் பற்றிக் கபிலர் என்னும் செந்தமிழ்ப் புலவர் பல பாடல்களில் பாடியுள்ளார். பாரி பற்றித் தெளிந்திடக் கல்வெட்டுப் பாடம் ஒன்றினைப் பார்ப்போம்.

கி.பி. 15 அல்லது 16ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த பந்தநல்லூர் (குடந்தை) கல்வெட்டு (ARE No. 117, 118/1932)

நாலங்க வாளிபெற்றார் நாரியரே பாரியிலு
மேலங்கமான கொடை வேளாளன் காலிங்கன்

என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பாரியைவிட மேலான கொடை வள்ளல் எங்கள் வெள்ளாளன் காலிங்கன் என்று பெருமை பேசினால் பாரியின் குலத்தவனாக வெள்ளாளனைக் கருத முடியுமா?

கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளல் என்பவரை வேளாள குலச் சிற்றரசர் என்றுதான் கம்பர் குறித்துள்ளார். வேளிர் என்று குறிப்பிடவில்லை. வேளாண் மரபிலே பிறந்து, சிறிய நிலப்பரப்பு அவர்தம் ஆளுகைக்கு வந்து, வேளாண்குடித் தலைவனான உழுவித்து உண்போர் என்று சிறப்பிக்கப்பட்ட பின்னர் வேளாளரும் வேளிரும் ஒருவர் எனில் அவரை வேளிர் என்று பாடிய புலவர் யார்?

காலிங்கராயன் என்ற வேளாளன் திருவதிகைக் கல்வெட்டில் "வேளாண்குடி முதல்வன் தொண்டையர் கோன்" என்று பதிவு செய்துள்ளானே அன்றி வேள் என்று உரிமை பாராட்டவில்லை. "ஏயர்கோன் கலிக்காமர், மானகஞ்சரர் கோட்புலி நாயனார்,

செருத்துணை நாயனார், கலிப்பகையார், திருநாவுக்கரசர் போன்ற பெருமைமிக்க வேளாளர்கள் தங்களை வேள், வேளிர் குலத்தவர் என்று சொல்லி இருக்கிறார்களா?

சேக்கிழார் வேளாண்குடியை உயர்குடி என்றுதான் அடையாளப்படுத்த முடிந்ததே அன்றி வேளிர் என்று குறிப்பிடவில்லை. பிற்காலம் சிறப்பும் பெருமையும் உயர்வும் வேளாளர்க்கு வந்தபொழுது செப்பேடுகளில் வேளாள அரசர் என்று குறித்துள்ளனர். பிற்காலத்தில் எழுந்த கரவை வேலன் கோவை, "மேழி கொண்ட வேளாள வேந்தன் கரவையில்" என்று வேளாளர் என்ற நாமத்தோடு இணைத்து வேந்தர் என்கிறது. இதனால் தமிழ்வேந்தர் என்போர் வேளாளர் என்று வாதிட முடியுமா?

குமாரி லீலா என்பவர் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறைக் கல்வெட்டுக் காலாண்டு இதழில் (16) ஆறு நாட்டு வேளாளர்கள் தாமிரப் பட்டய நகல் என்று பதிவு செய்துள்ளார். அப்பட்டயத்தில்கூட வேளாளரின் முன்னோரில் பெருமையுடையவர் என்று பலரைப் பதிவு செய்துள்ளார். சேக்கிழார் குறித்துள்ள வேளாள நாயன்மார்களுக்கு உரிமை பாராட்டிய ஆறு நாட்டு வேளாளர்கள் தாமிர சாசனம் வேளிரான இடங்கழி நாயனார்க்கு உரிமை கோரவில்லையே?

வேளிர் ஆவணங்களை ஆராய்ந்தால் அவர் தம்மைச் சூரிய, சந்திரகுல மரபினராக வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர். இதைக்கூடப் பலரும் உணராமல் வேளாளர் குலமே வேளிர் குலம் என்று எழுதியுள்ளனர். வேளாளரைப் பற்றிப் புகழ்பாடும் பல நூல்களில் அரச மரபைத் தாழ்த்தி இழித்து அல்லவா குறித்துள்ளனர். எந்தச் சான்று ஆதாரமும் இல்லாத நிலையில் கற்பனை செய்து யூகித்து முடிவு கொள்ளுதல் வரலாறாக ஏற்புடையதாகாது. கங்கைக் குலம் என்று பிற்காலம் உரிமை பாராட்டும் வேளாளர் சூரிய, சந்திர குலத்தினர் அல்லர்.

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்கால வேளான்கள்

முதலாம் குலோத்துங்கன் ஆட்சிக்குரிய கி.பி. 12ஆம் நூற்றாண்டுக் கோவிலங்குளம் (அருப்புக்கோட்டை) கல்வெட்டு அரசுத் தொடர்பான சில அதிகாரிகளின் பட்டியலை மட்டும் தருகிறது (தொடர் எண் 142/2005, த.நா.அ. தொல். துறை)

1. இருஞ்சோணாட்டு கற்றவர் மகிழ் தமிழவேள் கருது தென்னவன் திருசாத்தன்
2. பாவுகுர தாங்கி நாராயணன் முடிவில் கீத்திபுவன அனுத்திர மூவேந்த வேளான்

3. எரிந்த மாணிக்கன் சதுர் நாம ராஜதுங்க மூவேந்த வேளான்
4. மலர்தாமத்தாரன் பிடாரன் சோணாடன் எனத்தன் மூத்தவிறல் வீரநாராயண மூவேந்த வேளான்
5. முழுதுணர் பாண்டிய குலபதி வேளான்
6. மதி பெற்றான் உய்யக்கொண்டான்னஞ் சாணாட்டு வேளான் தமிளப் பெற்றான் தெரி சோழன்

என்று அதிகாரிகளில் சிலரை மட்டும் இப்பட்டியலில் எடுத்துச் சொல்லப் பட்டுள்ளது.

குறிப்பிட்ட வேளான் பெயர்களை உற்று நோக்கி உணரலாம். **கற்றவர் மகிழ் தமிழவேள்** என்பதற்குக் குறிப்பாகக் கற்றவன் என்பது பொருள். திருச்சாத்தன் என்று அழைக்கப்படுவது சிறப்புடையவர்க்கே; புறநானூற்றுப் பாடல்களில் சாத்தன் என்ற அரச மரபு தெரிவதும் சிந்திக்கத்தக்கது. மலர்தாமத்தாரன் பிடாரன் சோணாடன் நாராயண மூவேந்த வேளான் என்ற பெயரில் மூத்தவிறல் என்பது எக்குலத்தவரைக் குறிக்கும்.

முழுதும் உணர்ந்தவன் பாண்டிய குலபதி வேளான் என்ற அதிகாரியின் பெயரின் முன் முழுதும் உணர்ந்தான் என்று இருக்கிறதே! இதன் பொருள் என்ன? முழுதும் உணர்ந்தான் என்பது வேதங்களையும் இலக்கிய இலக்கணங்களையும் உணர்ந்தவன் என்பதாகும். சாணாட்டு வேளான் என்பதற்கு மதி பெற்றான் அறிவுடையோன் என்று பொருளாகும். உய்யக் கொண்டான் என்ற திருநாமம் சோழர் குடிக்குரியது. ஒட்டக்கூத்தரின் குலோத்துங்க சோழன் பிள்ளையாத் தமிழ் ''கற்றவர் குடிபுடைசூழ் கற்பக இளவனமே'' என்பதால் கற்றவர்குடி அறிவுடையோர் எனும் வேளிர்குடியாகும்.

போர்க்குடியினர்

கி.பி. 1220இல் அமைந்த குடுமியான் மலை (குளத்தூர்) கல்வெட்டு முற்பட்டுப் பதிவு செய்த கல்வெட்டுச் செய்தியினைத் தெரிவிக்கிறது. முற்பட்ட செய்தியைப் பார்ப்போம். கோப்பரகேசரி வன்மற்கு ஆட்சி 33இல்

திருநிலக்குன்றத்து பரமேசுவரர்க்கு பிராந்தகன் குஞ்சர மல்லனான வீரசேர்ழ இளங்கோவேளானேன்

ஈழமெறியப் போகின்றேன் கிழ்மணநல்லூரில் குடுத்த நிலம் வேலி செய்யும் திருவின் தினைசெயமானாரியாகி யார்க்கும் திருவமுதுக்குமாக இன்நிலம் செய்து குடுத்தேன்

(புதுக்கோட்டை தொகுதி, 255 குடுமியான் மலை (குளத்தூர்)

என்கிறது. இங்குப் போர் புரியப் புறப்படும்பொழுது ஈழம் எறியப் போகிறேன் என்று சொல்லியிருக்கும் வீரசோழ இளங்கோவேளான் படைத்தலைவனாகிய வேளிர் சிற்றரசன் ஆவான். வேளிர்கள் போர்க்குடியினர் என்பதைச் சிலர் அறியாமலும் உணராமலும் தவறான தகவலை நூல்களில் எழுதி வருகிறார்கள். சங்க கால நூல்களில் போரின்கண் நிலைத்துப் போரிட்டுக் கொண்டு இருந்த தமிழ்வீரர் வேளிரே; இவரே "அடுபோர் வேளிர்" என்று நூல்களில் வெளிப்படையாகப் பேசப்படும் தொல்குடி மரபினர். - போரின்கண் நிலை நின்ற அரசு வீரர் இவரே.

இதுபோலவே ஸ்ரீகோவி ராஜகேசரி பன்மரான முதலாம் இராசசோழனின் ஆட்சியாண்டு 27க்குரிய கி.பி. 1012இல் அமைந்த கல்வெட்டுடில் (SII VOl V Mo. 980 and *116/1896* and SII Vol III No. *122/1908)*

வடகரை இராஜேந்திர சிம்ம வளநாட்டு
நாங்கூர் நாட்டு நாங்கூர் திருவெண் காட தேவற்கு உடையாற்
பொன்மாளிகை யிற்துஞ்சின தேவர்க்கு யாண்டு 27வது
ஈழத்துப்பட்ட கொடும்பாளூர் வேளான் சிறிய வேளான்
மகன் வேளான் சுந்தர வேளான்

பற்றி அறிகிறோம்.

இக்குடுமியான் மலைக் கல்வெட்டில் சொல்லப்பட்ட வீரசோழன் இளங்கோவேளும் ஈழம் எறியப் போவதாகச் சொல்கின்றான். இம்மன்னர் மரபினன் காஞ்சிபுரத்தில் பொன் மாளிகை துஞ்சின சுந்தர சோழனின் 13-ம் ஆட்சியாண்டு ஈழத்துப் போரில் இறந்து பட்டான் என்று தெரிய வருகிறது. ஈழத்துப்பட்ட கொடும்பாளூர் வேளான் சிறிய வேளான் என்றும்

அழைக்கப்பட்டான் போலும்; இவனது மகன் வேளான் சுந்தர வேளான் என்பதால் வேளான் பாரம்பரியம் வேள்குலத்தவர்க் குரியதாகும்.

சோழ நாட்டு நாங்கூர்க்கும் கொடும்பாளூர்க்கும் உள்ள தொடர்பு ஓரளவுக்கு விளங்குகிறது.

குறிப்பாக, கொடும்பாளூர் வேளிரின் பாரம்பரியம் தொன்றுதொட்டு ஆட்சி அதிகாரம் செய்த அரசகுடி வேளிர் மன்னர்களே எனில் மிகையாகாது. மேலே சொல்லப்பட்ட கல்வெட்டில் வீரசோழன் இளங்கோவேள் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இருந்த சுந்தர சோழர் காலத்தொடர்புடைய சிற்றரசனாவன். அதற்கு முற்பட்டும் வாழ்ந்தவன். கல்வெட்டில் "ஈழம் எறியப் போகிறேன்" அதிலே வெற்றி கிடைக்க இறைவனுக்கு அறக் கொடையாக 1 வேலி நிலம் வழங்கியுள்ளதோடு ஒரு நாட்டின்மீது படையெடுக்கப் போவதற்குமுன் போர் அறிவித்து விட்டுப் புறப்படும் நிலை அறக்குடித் தாயத்திற்குரியோர் என்று அறியமுடிகிறது. மேலும் சோழப் பேரரசன் ஆணை என்று கூடச் சொல்லாமல் போரிடச் செல்லும் புறநானூற்று போர்க்குடி வேளிர் மரபு என்பதோடு தங்களிடம் படை வைத்துக் கொள்ளும் உரிமையுடைய அரச மரபு வேளிர் இனத்தவரே எனில் மிகையாகாது.

பாண்டியர் கி.பி. 1552இல் வேள் என்று முடி சூடியது

வீழ்ந்து நாடு இழந்து தென்காசியைத் தலைநகராகக் கொண்டு பெயரளவில் ஆட்சி செய்த தொல்குடி தென்காசிப் பாண்டியர்கள் பொறித்து வைத்த கல்வெட்டுச் செய்தியினைப் பார்ப்போம்.

> நெய்வேலி மாறன் வீர வேள்
> குலசேகரச் செழியன் என்று
> சுராறு புனை கிலேசர் காசியிலே
> விளங்கவணி மவுலி தரித்தனன்

என்று கி.பி. 1552இல் கல்வெட்டு வைத்துள்ளான்.

இதுபோன்று மற்றொரு கல்வெட்டு கி.பி. 1564இல் (தென்காசியில்) வைத்ததாகும். இம்மன்னன்,

சுகந்தாதி புனையழகன்
சீவல வேளென மகுடம்
சூடினானே

என்று முடிசூடும் வேள்வி நடத்தி வேள் என்று மவுலி சூடியுள்ளான். இம்மன்னன் அதிவீரராம பாண்டியன் இயற்றிய கூர்மபுராணத்தில் வேளாளர் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

அந்தணர்க்காயினும் வேந்தர்க்காயினும் வந்துதித்த
பின்னோர் மாதர் (வேளாளர்)

என்று சொல்லியிருப்பதை உணர்ந்து ஆய்வு செய்வோமாக.

வேள் குலத்துச் சுந்தரன்

சேரமான் தாணுரவியின் ஆட்சிக் கால ஆவணம். (TAS VOL. II and III page 67-68). வேணாடு வாழ்கின்ற அய்யனடிகள் திருவடி குடுத்த வீடுபேறு கொல்லம் தருஸா பள்ளிக்கு வழங்கியது பற்றியதாகும். இச் செப்பேட்டின் இறுதியில் "வேள்குலச் சுந்தரனுக்கும் ஒக்கும்" என்று காணப்பெறுகிறது.

வேள்குலச் சுந்தரன் என்பவன் இப்பகுதியிலிருந்த சிற்றரசனா தல் வேண்டும்.

புறநானூறு 367ஆம் பாட்டின் இறுதிக்குறிப்பு மூவேந்தர்கள் சேரமான் மாரி வெண்கோவும் (வேள்கோ) பாண்டியன் கானப் பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும் சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கிருந்தாரை அவ்வையார் என்ற பெயருடையவர் பாடியுள்ளார் என்று குறிப்பிடுகிறது (புறம் : 367 - உ.வே.சா. பதிப்பு).

சேரமான் மாரி வெண்கோ என்பதற்கு வேள்கோ என்று படிக்கலாம் என்றும் உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார். வெண்கோ என்பது "வேண்கோ" என்று கொண்டாலும் வேற்கோ என்று கொள்ளலாம். "வெண்கோ" என்பவன் சேரமான் என்பதே.

செம்பியன் தமிழவேள் எனும் குலப்பெயர்

கி.பி. 871இல் அமைந்த தில்லை தானம் கல்வெட்டு முதலாம் ஆதித்த சோழனுக்குரியதாகும். இக்கல்வெட்டில் அரச குலத்தவனான விக்கியண்ணன் என்ற தலைவனுக்குத் "தமிழவேள்" என்ற குலப்பெயர் சொல்லப்பட்டுள்ளது (Sii iii 89)

ஸ்வஸ்திஸ்ரீ தொண்டை நாடு பரவின சோழன் பல்யானைக் கோக் கண்டனாஇன இராஜகேசரி பன்மனாலுஞ் சேரமான் கோத்தாறு ரவி யாலுங் தவிசுஞ் சாமரையுங் சிவகையுஞ் திமிலையுங் கோயிலும் போனகமும் காளமுங், களிற்று நிரையுஞ் செம்பியன் தமிழ வேளென்னுங் குலப்பியரும் பெற்ற விக்கிஅண்ணன் தேவியான கடம்ப மாதேவி திருநெய்த்தானத்து மாதேவர்க்கு காரு நந்தா விளக்கினுக்குக் குடுத்த ஆடு நூறு"

என்று குறிப்பிடுகிறது. உயர்குடியினன் என்பதால் இவனது மனைக்கிழத்தி கடம்பமாதேவி என்று அழைக்கப்பட்டுள்ளாள். சிவிகை, களிற்றுநிரை போன்ற அரசு சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளது என்பதை மனதிற் நிறுத்தி சிந்தித்து முடிவு கொள்ள வேண்டும்.

12ம் நூற்றாண்டினரான சேக்கிழார் பெருமானின் பெரியபுராணம் இடங்கழி நாயனார் என்னும் மன்னனை "வேள்குலத்து அரசர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

போர்வேள்

கி.பி. 14ஆம் நூற்றாண்டு நூலான வேம்பற்றூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம் உக்கிரன் பிறந்த திருவிளையாடல் (பா. 3)

போர்வே ளெனவே பொருவில் புதல்வன்
பேரோர் சடைய ரோடு பிறந் தனனே

இதை உக்கிரன் பிறந்த செய்தியாகக் கொள்ளலாம். பாண்டிய குலத்து அரசரை வடநூலார் உக்கிரவம்சம் என்பர். ஐம்பெரும் அரச குலம் என்று இந்தியாவின் முழுமைக்கும் என்று புராணங்களில் வேதம் தொடர்புடைய குறிப்புகளில் சுட்டிக் காட்டப்படுகிறது.

இக்குலத்தவரான பாண்டியர் தங்களை இவ்வாறே சடைய்வர்மன், மாறவர்மன் என்றும் பிற்காலப் பாண்டியர்கள் என்று பட்டம் புனைந்தனர். 'போர் வேள்' என்று அடையாளம் தெரியும் பாண்டியர் பற்றிய பாடல்களில் சில குறிப்பாகப் பிற்காலம் வேளாளர் எழுச்சிப் பாடல்களில் 'சேரனுக்கோ, சோழனுக்கோ, வீரனுக்கோ விலங்கு' என்று கேலியாகக் கிண்டல்

செய்வதை எண்ணும்பொழுது வீரன் என்று குறிப்பிட்டது பாண்டியனை என்பதும் தெரியவருகிறது.

'போர் வேள்' என்று வேம்பற்றூர்நம்பி கி.பி. 14ஆம் நூற்றாண்டில் குறிப்பிட்டுக் கூறியிருப்பது போன்று கி.பி. 16ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்கள் ''வீரவேள்'' எனத் தெரிவிக்கின்றன. பாண்டியர் வீரம்மிக்க போர்க் குடியினர் என்று உலகறியும். சங்க இலக்கியத்தில், இந்திய வரலாற்றில் மிகப் பெரிய போர்க்குடி வேளிராவர்; வேளிர்களில் மேம்பட்ட சளுக்கு வேந்தர் எனப்பட்ட சாளுக்கியர் சத்திரியர் என்றும் சசிகுலத்தவர் என்றும் அடையாளம் சொல்லிய போர்க்குடி வேளிர் ஆவார். சங்க நூல்களில் பலவற்றிலும் வேளிர்களின் போர் நடவடிக்கையைப் பதிவு செய்துள்ளனர். மேலும் சுரர் வமிசத்தைச் சார்ந்த முருகவேள் நெடுவேள் என்றும் ஈசுவர மைந்தன் மன்மத வேள் என்றும் சுரர் மரபிற்கு உரிமை கோரிய தெய்வப் பாண்டியர் போர்வேள் என்றும் தங்களை அடையாளம் காட்டுவதில் வியப்பொன்றுமில்லை.

தொல்காப்பியம் சொல்லும் இறைவன் (அரசன்)

தமிழ்நாட்டின் மூத்த இலக்கண நூலான தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல் சூத்திரம் 17

> **செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ**
> **ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்**

என்பதற்கு நச்சினார்க்கினியர்

> போரிடத்துத் தன் வேந்தன் வஞ்சத்தாற் பட்டானாக சினங்கொண்ட மனத்தானாய்ப் பெரும்படைத் தலைவன் தலை மயங்கிப் பொருத நல்ல புகழைப் பெற்ற நிலைமைக் கண்ணும்

என்றார். இலக்கண, இலக்கியங்களில் 'நாடாண்ட' என அரசன், வேந்தன், மன்னன், இறைவன் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அவரே தமிழக அரசகுலம் என அங்கீகாரம் பெற முடியும்; நல்லாட்சி நடத்திய நல்லோனாகிய உரவோன் வேந்தன், வேள் என்று புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளனர். இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இறைவன் என்று சொல்லி இருப்பதை நாம் கண்டறியலாம்.

கி.பி. 10ஆம் நூற்றாண்டினரான நம்பியாண்டார் நம்பி என்பார் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில் மிகச் சிறப்பாக வேளிர் குலத்தலைவன் குறிப்பிடப்படுகின்றான்.

"இறைவன் இருக்குவேளூர் மன் இடங்கழி"

எனக் கோனாடு இருக்குவேளூர் மன்னன் இடங்கழி நாயனார் எங்கள் இறைவன் என்று குறித்து இருப்பது முறை செய்யும் அரசனை என்பதை எண்ணுதல் வேண்டும்.

திருத்தொண்டர் திருவந்தாதி வேளிர் சமூகம் நற்குடியினர் என்பதை விளக்கக் கணம்புல்ல நாயனாரின் பாடலில் (பா. 58) "நன்னகராய இருக்கு வேளூர்தனில்" என நல்ல நகரம் இருக்குவேளூர் என்கிறார். இடங்கழி நாயனார் பற்றிய சேக்கிழார் பாடல்களில் "வேல் மன்னன்" (பா. 8), அரசர் (பா. 7) எனவும் காணப்பெறுகிறது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரின் பெரியபுராணம்,

பொன் நெடுந்தோள் ஆதித்தன் புகழ்மரபின் குடிமுடிலோன்
(இடங்கழி – பாடல்)

ஆதித்தன் குல முதலோன் என்று வேளிர் மரபுவழி சோழர் குலத்தவர் குறிப்பிட்டிருப்பது அறியற்பாலதாம்.

திருத்தொண்டர் திருவந்தாதியிலும் குறித்து இருப்பது மட்டுமின்றி இருக்குவேளிரின் கருவூலத்தை 'அரச பண்டாரம்' என்று சேக்கிழார் அழைத்துள்ளார்.

சேக்கிழார் "வேளிர்குலத்தரளித்து" எனவும் வேளிர் குலத்து அரசர் என்றும் இடங்கழி நாயனாரின் ஆட்சி பற்றி விவரித்துள்ளார்.

திருத்தொண்டர் புராண வரலாறு சோழனை, "வென்றிவேள் வளவன்" என்று சுட்டி வேள்குலத்தோரே வேந்தர் என்று எடுத்தோதுகிறது.

கி.பி. 11ஆம் நூற்றாண்டு நூலான வீரசோழியத்திற்கு அதே நூற்றாண்டின் இறுதியில் பெருந்தேவனார் (பிற்காலப் புலவர்) உரை செய்தார். "புனல் நாடன்" என்னும் சோழ வேந்தனை "மாவேள்" என்று மேற்கோள் பாடலில் எடுத்தாண்டு பதிவு செய்துள்ளார். (வீரசோழியம், அலங். 12 மேற். பெருந்தேவனார் உரை.)

8. நாடாள்வார் வேளான்கள்

சோழ நாடாள்வார்கள்

சேனாதிபதி பரகேசரி மூவேந்த வேளான் முதலாம் இராசேந்திர சோழனின் மனைவி வீரமாதேவியின் சகோதரனாவான். படைத்தளபதியாக இருந்த அவன் சோழ அரச குலத்தைச் சேர்ந்தவன். எனினும் அவன் மூவேந்த வேளான் பட்டத்தைக் கொண்டிருந்தான்.

சோலை மாணிக்கம் என்ற மற்றொரு சேனாதிபதி உத்தம சோழ மூவேந்த வேளான் என்ற பட்டத்தைக் கொண்டிருந்தான். அவன் முதலாவது இராசேந்திர சோழனின்கிழ்ப் பணிபுரிந்தான்.[1]

சோழ நிருவாகப் படிநிலையில் உயர் பதவிகளில் இருந்த சில அதிகாரிகள் நாடாள்வான் பட்டத்தைக் கொண்டிருந்தனர். அத்தகையவர்களில் ஒருவன் ஆடையூர் நாடாள்வான் இராசராசன் பரநிருபப் பராகரத்தார் என்கிற வியசோழ இளங்கோ வேளார் எனப்பட்டான்.[2] திரைமூர் நாட்டின் நாடாள்வார் தலைவனாக (கிழான்) இருந்த அவன் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். இந்த ஆடையூர் நாடாள்வான் சோழ அரச குலத்தவனாக இருந்திருக்க வேண்டும் என அறிஞர் டி.ஏ. கோபிநாத ராவ் முடிவு செய்துள்ளார். இளங்கோ வேளார் என்ற பட்டம் அரச குலத்தவராலேயே சூட்டப்பட்டிருக்கவேண்டும்.

குலோத்துங்க சோழ நாடாள்வான் என்ற மற்றொரு நாடாள்வான் வேளான் காளையாவினன் எனப்பட்டான். இந்த வேளான் என்ற நாடாள்வான் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன்.[3]

---

1. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண் 372.
2. A.R.E.1918, No.434, 1913, No.56, புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண் 36, S.I.I., Vol.III. Part.2. No.68. S.I.I., Vol.XXIII, No. 485.
3. A.R.E.1915-16, pp. 118.

விருதராச பயங்கர முரசு நாடாள்வான் என்ற ஒருவன் பெங்களூர்க் கல்வெட்டொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளான். இவன் கி.பி.12-13ஆம் நூற்றாண்டுகளில் நாட்டுக் காமுண்டர் பதவியில் இருந்த சோழ வேளாரின் மகனாவான்.[4]

வேளார் காணியிலிருந்து வெள்ளான் காணி வேறுபட்டது

நாடாள்வார்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைப் பத்திரங்கள் பொதுவாக, 'வேளார் காணி' எனப்பட்டன. மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்திய கல்வெட்டு ஒன்றில், ஆதனூர்ப் பகுதி (புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம்) நாடாள்வார்கள், 'வேளார் குடிகாடு' தங்களின் மரபுரிமைச் சொத்து என்று கோருகின்றனர்.[5] இத்தகைய சான்றுகள், வேளார்கள் அல்லது மூவேந்த வேளார்கள் அரச குலத்தை அல்லது அரசாட்சியைச் சேர்ந்தோராயிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

வேளாளர் என்ற சாதிப்பெயரும் வேளான் என்ற பட்டப் பெயரான பின்னொட்டும் கல்வெட்டுகளில் தனித்தனியே குறிப்பிடப்பட்டுள்ளன. 'வெள்ளான் காணி', 'வெள்ளான் வகை நிலம்' மற்றும் 'வெள்ளான் சுடுகாடு' என்று வருபவற்றை வேளாளர்களின் உடைமைகள் என்று பொருள்படுவதாகக் கொள்ள முடியாது. மதகு, நீர்நிலைகள் போன்றவற்றைப் பராமரித்து வந்த அரசகுலத்தவர்களுக்கு வெள்ளான்வகை நிலங்கள் உரிமையாகவும் அவர்களின் பயன்பாட்டுக்காக வெள்ளான் சுடுகாடும் இருந்தன.[6] ஒற்றி அரசன் அல்லது ஒற்றி மன்னன் என்ற ஆட்சியாளருக்கு உரிமையாக இருந்த நிலங்கள் வெள்ளாங்காணி என வகைப்படுத்தப்பட்டிருந்தன.[7] அத்தகைய நிலங்கள் வேளாளர்களின் உரிமையாக இருந்தன என்று காட்டுகின்ற சான்று எதுவும் இல்லை. அதே நேரத்தில், பிராமணர் மற்றும் பெருங்குடிகளின் நிலங்களில் பயிரிடும் குத்தகைதாரர்களாக மட்டுமே வேளாளர்கள் இருந்தனர் என்பதை நிரூபிக்கப் பல கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.[8]

---

4. S.I.I., Vol.XXIII, No. 1, திருவிசையலூர்.
5. 'செந்தமிழ்' டி.ஏ. கோபிநாத ராவ், பிலவங்க வருஷம், கார்த்திகை மாதம், பக்.49.
6. S.I.I., Vol.XXIII, No. 401, பெருகாரணை, முதுகுளத்தூர்.
7. Epigraphica Carnatika, Vol.IX Bangalore - 85.
8. புதுக்கோட்டைக் கல்வெட்டுகள், எண் 395.

ஆனால் வெள்ளான் வரிசை என்று பணிமக்களுக்கு வழங்கப்பட்ட வரிசை பற்றித் திருமழபாடிக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

வேளான்பட்டத்தைக் கோராதோர்

படிப்படியாக வேளாளர் சாதிக்குள் சேர்த்துக் கொள்ளப் பட்ட, நான்கு வருணங்களிலிருந்து தோன்றிய (சாதுர்வர்ணஸ்ய குலோத்பவம்)[9] சித்திரமேழிப் பெரிய நாட்டார்கள்கூட வேளான் என்பதைத் தங்களுக்கே உரிமையுடைய பட்டமாகக் கோரவில்லை.

கொங்கு வேளாளக் கவுண்டர்களுக்குரிய ஆவணங்கள், அவர்களைப் பாண்டிய அரசர்களின் குமாரவர்க்கம் என்பதாகக் குறிப்பிடுகின்றன.[10] இந்தக் கோருதலை, மேற்குறிப்பிட்ட சித்திரமேழிப் பெரிய நாட்டார் தொழில் குழு தொடர்பான கல்வெட்டுப் பிரதியுடன் ஒப்பிட முடியும். கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பாண்டிய குலத்திலிருந்து வேளம் என்ற நிறுவனத்தின் வழியே தோன்றியிருக்கவேண்டும். அவர்கள் க்ஷத்திரியர் என்று கோருவதற்குக்கூட விரும்பாது வேளாளர் தகுதியுடன் நிறைவு கொண்டனர்.[11]

பாண்டிய நாட்டில் மூவேந்த வேளான்

சோழன் தலைகொண்ட கோவீர பாண்டியனின் 14ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டுச் செய்தியில் திருவழுதிவளநாட்டுப் பெருங்குளத்து சத்ருபயங்கர மூவேந்த வேளானாயின

9. பெருவுடையார் கோயில் கல்வெட்டுகள், (முனைவர் இரா. நாகசாமி, பக். 150) "வெள்ளான் சுடுகாடும், கொட்டாரங்களும், தலைவாய்ச் சேரியும், ஈழச்சேரியும், கம்மாணச்சேரியும்..."

10. S.I.I., Vol.VIII, No. 570, 689.

11. 'பிராமணர் பெயரால் பெயர்க்கடமை சுட்டி வெள்ளாளர் அகங்களில் புக்கு கொடுக்காது ஒளியவும்' – மன்னார்குடி கல்வெட்டு (கி.பி. 12–13ஆம் நூற்றாண்டுகள்) S.I.I., Vol.VI, No. 48.

'பெருங்குடிகள் பெயரால் கடமைக்கு வெள்ளாளரைச் சிறைப்பிடித்தல் இவர்கள் அகங்களில் ஒடுக்குதல் செய்யக் கடவதல்லாததாகவும், S.I.I., Vol.VI, No. 48.

திருப்பாதிரிப்புலியூர்க் கல்வெட்டு (S.I.I., Vol.VII, No. 759) ஒன்று, பெருமாள் விக்கிரம பாண்டியன் ஆட்சியில் (கி.பி. 14ஆம் நூற்றாண்டு), வெள்ளாளர், ஆளவர், பள்ளிகள் மற்றும் பரம்பர் ஆகியோர் பிராமணர்களின் பயிரிடும் குத்தகைதாரராக இருந்தனர் என்று கூறுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்கள் மற்ற இடங்களிலும்கூடப் பதிவாகியுள்ளன.

பரஞ்சோதிக்கு மல்லி நாட்டுப் பிரம்மதேயம் வில்லிபுத்தூர் மகாசபையார் கூட்டம் குறைவின்றிக் கூடிக் கோயில் நிலத்தை இறையிலியாக விற்றுக் கொடுத்துள்ளது என்றும் அவர்தாம் வேண்டிய தருமம் செய்யவும் உரிமை அவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது.

பெருநான் கெல்லைக்கு உட்பட்ட பூமியும் கிணறுகளும் குளமுங் குளித்தலையும், குடியிருக்கைகளும் காவுங் கைநட்டு மரமும் பனையும் புற்றும் தெற்றியும் மீன்படுபள்ளமும் தேன்படு பொதும்பும் கூதமும் மற்றும் உடும்பு ஓடி ஆமை தவழ்ந்து எப்பேர்ப்பட்டதும் இறையிலியாக எந்தவரியினவும் கொள்ளாமல் வழங்கப்பட்டுள்ளது.

கி.பி. 10 நூற்றாண்டில் சோழர்களின் பெரும் பகைவனாகச் சித்திரிக்கப்பட்டுள்ள வீரபாண்டியன் ஆட்சியில் மூவேந்த வேளானுக்குப் பெருங்குளம் (தூத்துக்குடி) ஊரில் இருப்பவருக்குத் திருவில்லிபுத்தூரில் மிகுதியான நிலம், குளம், பொற்றைகள் மற்றும் மூப்பரையில் சுற்றுமுற்றும் (மலைப் பகுதி) வழங்கப்பட்டுள்ளன.

இரண்டாம் இராசேந்திரன் காலத்து மூவேந்த வேளார்கள்

கி.பி. 11ஆம் நூற்றாண்டுக் கன்னியாகுமரிக் கல்வெட்டு வீர ராசேந்திர சோழனின் ஆட்சியாண்டு 4க்குரியதாகும். அவன் கங்கை கொண்ட சோழபுரத்துக் கேரளன் மாளிகையில் ஸோபானத்துக் காடுவெட்டியில் எழுந்தருளியிருந்து அரச ஆணைகளாகச் சிலவற்றை உத்தரவாகப் பிறப்பித்தான். கன்னியாகுமரி பகவதிகோவிலுக்கும் சில நிவந்தங்கள் செய்தான். இக்கல்வெட்டில் இம் மன்னன் காலத்திய சில அதிகாரிகளைக் காணமுடிகிறது.

யவனர் தேசத்தவனான கந்திருவப் பெரியான் என்பான் மூவேந்த வேளான் என்ற சிறப்புப்பட்டத்துடன் அதிகாரியாக இருந்தான். பலரும் அதிகாரிகளாக இருந்த நிலையில் வேளிர் மரபினரான வேளான்கள் மிகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். உடன் கூட்டம் என்ற அரசு அமைப்பிலும் பலரும் இருந்தனர். அவர்களில் சிலர் வேறு பணியிலும் அதிகாரிகளாக இருந்தனர். இவர்களில் சில வேளிர்களின் பெயர்களைப் பார்ப்போம்.

- பரசிவ மங்கலமுடைய ராமனசனி ஒலோகபுத்திரனான நிருபேந்திர சோழ மூவேந்த வேளான்
- விடையிலதிகாரிகள் சோழ மூவேந்த வேளார்
- சேணாமுக மூவேந்த வேளார்
- உத்தமசோழ மூவேந்த வேளார்
- மனுக்குல மூவேந்த வேளார்
- உய்யக் கொண்ட சோழ மூவேந்த வேளார்
- வீரசோழ மூவேந்த வேளார்
- விக்கிரம சோழ மூவேந்த வேளார்

இவர்களின் உயர் அதிகாரியாகக் காமன் அமர புயங்கனான ராஜராஜ வெள்ளப்ப நாடாள்வான் இருந்தான். மனுக்குலம், சத்திரிய சிகாமணி, நிருபேந்திரன் போன்ற பெயர்களுக்குரியவர் யார் யார் என்று தெளிவுபடுத்திப் பார்த்தால் அவர்கள் அரசகுலத்தைச் சார்ந்தவர்கள் என உறுதிப்படும்.

வேளார்காணி

கோமாறவர்மன் குலசேகர பாண்டியனின் ஆட்சியாண்டு 16க்குரிய புதுக்கோட்டை மாவட்டம் விருதுராஜ பயங்கர வளநாட்டுக் கானாட்டு ஆதனூரில் கி.பி. 1284இல் அமைந்த கல்வெட்டில், கீழைக்குருந்தன்பிறை ஊர்க்குச் சமைந்த அரையர் களில் பெரியான் அரசனான ஏழக மீகாம நாடாள்வானும் கேரளன் கண்ணிறைந்தானான அங்கராயனும் பெருமாளி ராசனான காங்கேய நாடாள்வானும் மற்றும் சிலரும் குறிப்பிடப் படுகின்றனர்.

மேலைக் குருந்தன் பிறை ஊர்க்குச் சமைந்த தில்லை சோண்டனான இலங்கேசுவர நாடாள்வானும் தேவன் கண்டனான காளையகால நாடாள்வானும் தேவன் வில்லி யாள்வானான நாடாள்வானும் இராசன் கண்ணிறைஞ்சானான இராசசிங்க நாடாள்வானும் ஆதனூர் நாயனார் கோயிலுக்குத் தங்கள் காணி நிலத்தைத் தேவதானக் காராண்மைக் கிழமையாக இறையிலிப் பிரமாணம் பண்ணிக் கொடுத்துள்ளனர்.

இந்நிலங்களில் உள்ள இரண்டு குளங்கள் குளவாய்க்கால் தலையில் மேனோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும்

உடும்போடு ஆமை தவழும் புற்றும் தெற்றியும் தானங்களாக்கப்பட்டுள்ளன. இந்நிலத்தால் வந்த வரி இனங்களான அச்சுவரி, கடமை, அந்தராயம், கற்பூர விலை, காரிய ஆராய்ச்சி, பஞ்சு பீலி, சந்திவிக்ரகப் பேறு போன்ற வரிகள்...... தங்களுக்கே பரமாவதாகவும் என்று கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொடுத்துள்ளனர். இரு ஊரினரும் கையெழுத்திடும்பொழுது "இரண்டு ஊர் அரையர்கள்" என்று கையொப்பமிட்டுள்ளனர். (ஆதனூர் 395, புதுக்கோட்டை)

இக் கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் ஏழக மீகாம நாடாள்வான் என்பவனும் வேளிர் தொடர்பானவன். சான்றாக கி.பி.1223இல் அமைந்த மாறவர்மன் சுந்தரபாண்டியனின் பேரையூர் (புதுக்கோட்டை) கல்வெட்டில் "ஏழக சக்கரவர்த்தி அழகிய நாயக வேளான் எழுத்து" என்று ஒப்பமிட்டுள்ள தைக் காட்டலாம். (பேரையூர்- புதுக்கோட்டை தொகுதி, 264). இதனால் ஏழகம் என்பது வேளிர் தொடர்புடையதாகும்.

வேளான்களின் குலப்பெயர்

கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் (ஆவணம் இதழ் 17 - பக். 136 - 137) வருவதாவது:

> காமான் சந்திரகுலபதி மூவேந்த வேளான்...
> சாலை செய்கு கிழக்கும்

இதில் சந்திரகுலபதி என்று பெயரிட்டுக் கொண்ட வேளிர் தலைவன் பெயர் அமைந்துள்ளது. இக்கல்வெட்டு அறிஞர் மு. இராகவையங்காரின் மறைவுக்குப் பின்னர்க் கண்டறியப்பட்டதாகும்.

தொல்லியல் அறிஞர் ச. கிருஷ்ணமூர்த்தி வெளியிட்ட தொல்லியல் நோக்கில் காஞ்சிபுரம் கல்வெட்டுகள் என்ற நூலில் அமைந்த திருமுக்கூடல் கல்வெட்டு (பக். 336) "க்ஷத்திரிய சிங்க மூவேந்த வேளான்" என்று வேள் குலத்தவனைக் குறிப்பிடுகிறது. க்ஷத்திரியன் என்ற பெயர் அரச குலத்தவனையே அடையாளம் காட்டும். இதனை அறிஞர் இரா. நாகசாமி போன்றோர் உணர்ந்தும் வேளாளரை வேளிர் என எழுதியுள்ளனர்.

சடையவர்மன் குலசேகர பாண்டியனின் ஆட்சியாண்டு 13க்குரிய மேட்டுப்பட்டி (அருப்புக்கோட்டை)க் கல்வெட்டு குறிப்பிட்ட நில எல்லையைக் குறிப்பிடும்பொழுது "உய்யக்

கொண்டார் வயக்காலான மூவேந்த வேளார் நிலம்'' என்று நிலவுடைமை சமூகத்தினனான வேளிரின் மரபினனை அடையாளம் காட்டுகிறது. உய்யக் கொண்டார் குலத்திற்கும் மரபிற்கும் உரிமை பாராட்டுவது அரச குலத்தார்தாம்.

கோச்சடைய பன்மர் குலசேகரனின் ஆட்சியாண்டு 20க்குரிய கி.பி. 1210-11இல் அமைந்த கல்வெட்டு நால்கூர் திருமேற்கோயிலான விண்ணகரப் பெருமான் நந்தவனத்திற்கு நிலமளித்தது பற்றிக் குறிப்பிடுகிறது.நிலம் வழங்கியவன் பாண்டிய குலபதி மூவேந்த வேளான் ஆகும். (விருதுநகர் கல்வெட்டுத் தொகுதி, தொடர் எண் 174/2005).

கி.பி. 1278இல் அமைந்த ஸ்ரீரங்கம் கல்வெட்டில் (SII IV No.426) பாண்டியன் மாறவர்மன் குலசேகரன் காலத்து அதிகாரிகளில் ஒருவன் பெயர் ''அரச மீகாம வேளான்'' என்பதாகும். வேளான் ஒருவன் அரச குலத்தை உயர்த்திட வந்தவன் என்று தன்னைக் குறிப்பிட்டான் எனில் அவனை அரச குலத்தினன் என்றே அடையாளம் காணவேண்டும்.

உடையார் பட்டம்

தமிழ்க் கல்வெட்டுகளில் அரசனையும் வேளிர் தலைவர்களையும் கோயில் கொண்ட இறைவனையும் உடையார் என்று அழைப்பது மரபு. முறை செய்யும் மன்னன் இறைவன் என்பது திருவள்ளுவரின் திருவாக்கு. இதனால் இறைமுறைமை செய்த அரசனாகிய தலைவனை இறைவன் என்றும் தேவர் என்றும் நாடன் என்றும் தலைமகனாகப் பார்த்தனர். இதுபோன்றே உடையார் பட்டமும்.

புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம் சேரனூரில் அமைந்த கல்வெட்டு (ஆவணம் இதழ் 3, பக். 15)

> **ஸ்வஸ்திஸ்ரீ உடையார் ராஜராஜ சுந்தர வேளார்**
> **தேவியார் நம்பிரான் சாதைகுமரனான கோமத்த**
> **தேவியார் சேவித்த குமிழி**

பற்றித் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் அரசனைப் போன்று உடையார் என்ற சிறப்புப் பட்டத்தை வேளிர் குலத்தவரான இராஜராஜ சுந்தர வேளார் பெற்றுள்ளார். மேலும் வேளிர் குலத் தலைவனின் துணைவியார் 'கோமத்த தேவியார்' (அரசமாதேவி) என்று சிறப்பிக்கப்படுவது சிந்திக்கத்தக்கது.

வேந்தர், வேளிர், அரையர், நாடாள்வாரின் தேவிமாரே தேவியார் என்று அழைக்கப்பட்டதுடன் அரசரின் தொடர்புடைய தெய்வப்பெண்களும் தேவியார் என அழைக்கப்பட்ட தேவரடியாராக இருந்தனர்.

கி.பி. 9, 10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளில் 'தேவியார்' என வருவது பொதுவாக அரசனின் தேவியாரையே குறிக்கும்.

கோவி ராஜகேசரி பன்மரின் 10வது ஆட்சி ஆண்டில் பொறித்த கல்வெட்டில் செம்பியன் இருக்குவேளார் தேவியார் நங்கை நன் தேவியார் திருநிலக்குன்றத்துத் திருமூலட்டானத்துப் பெருமானடிகளுக்கு விளக்கு வைக்கத் துளைப்பொன் ஏழு கழஞ்சரை வழங்கியுள்ளார். (புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதி 52, குடுமியான்மலை, குளத்தூர்).

வேளிரின் செங்கோல்

ஸ்வஸ்திஸ்ரீ உடையார் தனிச்செங்கோல் வீரசோழர்க்கு யாண்டு நாலாண்டில்
குடையார் வண்கை ஒல்லை ஊர் குளத்துக் குமிழி குயிற்றுவித்தோன்
தொடையா ரலங்கற் சோழகுல நாராயண மூவேந்த வேள்
அடையார் சிய மிடைக்குடி மாயவ நிலவுங் கேசவ நெய்

என்பது கி.பி. 911இல் வீரசோழன் என்ற முதலாம் பராந்தகச் சோழனின் ஆட்சியாண்டு 4க்குரிய ஒலியமங்கலம் (புதுக் கோட்டை) (SII XXXII No.14) கல்வெட்டாகும். வேளிர் தலைவனை இக் கல்வெட்டில் "தொடையாரலங்கற் சோழகுல நாராயண மூவேந்த வேள்" என்று குறித்துள்ளனர். இதனால் இவன் சோழர் குலத்தவன் என்று பெறப்படும். "குடையார் வண்கை ஒல்லை ஊர்" என்பதும் 'செங்கோல் வீரசோழர்' என்று பழம் பெருமையை உணர்த்திக் காட்டுவதும் அரசகுலத் தொடர் பினாலேயே.

மூவேந்தருக்கும் வேளிருக்கும் ஒற்றுமையும் அவர்கள் வேளாளரிடமிருந்து வேறுபடுத்தலும்

இலக்கியம், இலக்கணம், ஆவணங்கள்வழி
அறியப்பட்ட பட்டியல்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
அரசு உடையோர்	அரசு உடையோர்	ஆட்சி அதிகாரம் மறுக்கப்பட்டவர்
"முரசுகெழு செல்வர்" "முரசு உடையவர்"	முரசு உடையவர், "முரசுடைத்தாய அரசு பல ஓட்டி" (பதிற் : 44)	அரசரின் முரசை உடைத்து முற்றத்தில் போட்டவர்கள் என்று பெருமையுடன் குறிப்பிட்டுக் கொண்டோர்
முதுநிலக் கிழமையின் முடிபுனை வேந்தர்; நெடுமுடி வேந்தர்	நெடுமுடி அரசர்; அரசனின் முடியைப் பாதுகாத்துப் பேணியவர், "மகுடத் தியாகிகள்" "வேள்வி செய்து முடி சூடிய மன்னர்" (ஆதி மண்டங்குடி நாட்டு மன்னர் வாலாறு	பிற்காலம் குறுமுடிக்குடியினர்; "அரசர்களின் நெடுமுடியை நாற்றாக நட்டுப் பெருமைப்பட்டவர்கள்"; "அரசன் மகுட முடியை வேலியாக நட்டவர்"
செங்கோல் வேந்தர் "அறம்புரி செங்கோல் மன்னர்" "மீனவர் கொடி மேருவில் ஓங்க வடுகரைக் கொடுங்கோல் வழங்காவண்ணம் நடுவு நிலைச் செங்கோல் நடப்ப" (தெ.இ.கல். 30: 1233)	செங்கோலரசர் "சேனைத்தலைவனான செங்கோல் அசதி" (அசதிக் கோவை)	"சிறுகோலான மாடு ஓட்டும் கோல்" "கொடுங்கோலரசராகச் சொல்லப்பட்ட வடுகர்" "கொடுங் கருநாடர் (சிலம்பு.)"

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
"வெண்கொற்றக் குடை வேந்தர்"	வெண்கொற்றக்குடை உண்டு"ஊரன் கொற்ற வெண்குடையே" (கல்லாடம் 65 : 13) "வாட் படை ஊரர்" (திருக்கோவையார் 40 : 16) "கொற்ற வெண்குடைக் கோமான் காரி" (சடகோப திவ்ய சரித்திரம் : பாண்டி நாட்டுத் திருப்படலம் 19) "ஆலவட்டப்பிறை ஐ வேல் அசதி அணிவரை" (அசதிக்கோவை)	வேளாண் அரசர் பலவர்ணக்குடை உடையோர் "மூவேந்தர்க்கும் வெண்கொற்றக்கு டையை அளித்தவர்" என்று பிற்காலம் பெருமை பெற்றவர். (கொங்கு மண்டலச் சதகம் 95 வாலசுந்தர கவிராயர்
அரச குடிக்கு உரிமை பாராட்டிய வேந்தர்	அரச குடிக்கு உரிமை பாராட்டிய வேள் குல அரசர்	வேளாண் குடிக்கு உரிமை பாராட்டியவர், "வேளாண் மரபு விளக்கிய வாணன்" (தஞ்சை வாணன் கோவை)
நாடு காவலுக்குரியவர். "நாடு காவல் நரபதிக்கு உரித்தே"	நாடு காவல் உடையோர்	காடு காவலும் பாடி காவலும்; அரசன் அனுமதித்தால் மட்டும் நாடு காவல் நியமனம் பெற்றவர் உண்டு

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
நாடுகிழவோன் எனப்பட்டவர்	நாடுகிழவோன் எனப்பட்டவர் "குறும்போழ் பொறைய நாடுகிழவோன்" (404, ஐங்குறு நூறு)	வேளாண்குடி முதல்வர், வேளாண் அரசர்
வேள்வி தொடர்பானவர்	இருக்கு வேளிர்; வேள்வி தொடர்பானவர் "பெருஞ்சாந்திகுல மன்னன்" (விருதுநகர் கல்வெட்டுத் தொகுதி II)	வேள்விச்சடங்கு மறுக்கப்பட்ட மரபினர்
வேத காலம், சங்க காலம் வேள்வி மணம் செய்து கொண்டவர்	வேளிர் பெண்கள் வேள்வி மணம் கொண்டு வேள்விக் கிழத்தி எனப்பட்டவர்	வேளாளர்கள் இல்லில் இருந்து செந்தீ ஓம்பித் திருமணம் செய்ய மறுக்கப்பட்டவர். காலத்தால் பின்னர் திருமணம் செய்யும் உரிமை பெற்றவர்
சங்க காலம் முறை செய்யும் இறைவன் என்று அழைக்கப்பட்டவர் "இறைகிழவோய்" (பதிற்றுப் பத்து)	சங்க காலமே "இறைவன்" என்று அழைக்கப்பட்ட மரபினர். "இறைவன் - தலைவன்" "எங்கட்கு இறைவன் இருக்கு வேளூர் மன் இடங்கழியே"	கி.பி.14ஆம் நூற்றாண்டின் இறுதியில் இறைவன் என்று அழைக்கப்பட்டவர் (நம்பி அகப்பொருள்)

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
இலக்கியங்களில் அரச வாகையில் அடையாளம் சொல்லப்பட்டவர்	வேந்தரைப்போல் அரசவாகைக்கு உரியவர் வேளிர் (புறம்)	வேளாண் வாகைத் தொடர்புடையவர் (மேலோர் மூவருக்கும் ஏவல் தொழில் : (புறப்பொருள் வெண்பா மாலை)
சமூக அடிப்படையில் இரண்டாம் வருணத்தினர் அரசர் எனப்பட்டவர் "குலம் நான்கும் காத்தளிக்கும் குல தீபன்" (கலிங்கத்துப்பரணி)	குலப்பட்டியலில் இரண்டாம் இடம்பெற்றிருந்த வேளிர் குலத்தவர் மன்னர் எனப்பட்டவர். திருத்தொண்டர் திருவந்தாதியில் வேளிர் இனப்பிரிவு குலதீபன் எனப்படுகின்றார்.	நான்காம் குலமான வேளாளர் என்றும் சூத்திரர் என்றும் அடையாளம் காட்டப்பெற்றவர்
"வில்லவர்" (சேரர்) கொற்றவில் உடையவர் (தக்கயாகப் பரணியின் உரையில் அரச மரபினர்க்குக் குறிப்பிடப் பட்டுள்ளது)	திருவில் உடையவர் "வில்லோர் மெய்மறை" (பதிற். 59, 65)	வில்லுடையவர் (வில்லி) வளைதடிக்கு உரிமை பாராட்டியோர்
"உரவோர்" என்று இலக்கியங்களில் அடையாளப் படுத்தப்பட்டவர்	உரவோன் என்று பிற்காலம் வரை சொல்லியவர். "வெவ்வாள் உரவோன்" (ஏனாதி நாதர் புரணாம் 32) "உரவோன்" (தலைவன்) (மாறன் அகப்பொருள் சூ. 29)	சொல்லப்படவில் லை

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
நெடுந்தகை எனப்பட்ட உயர்குடியினர்	நெடுந்தொகை எனப்பட்ட வேளிர்கள்	சிறுகுடிப் பெருந்தொழுவர், சிறுகுறுந் தொழுவர் எனப்பட்டவர்
அரச காவல் குடியினர்	காவல் மரபினர்	ஏவல் மரபினர்
அறக்குடித்தாய வேந்தர்	அறக்குடி வேளிர்	மறக்குடித் தாயத்திற்குரியவர்
ஆணை வழங்கும் அதிகாரம் உடையவர்	வேந்தர் அதிகாரம் உடையவர்	அரசன் ஆணை வழி நிற்றல் என்ற அதிகாரம் உடையவர்
பிழை பொறுத்தார் காவல் உடையோர் "பிழைத்தோர் தாங்குங் காவலானும்" (தொல்காப்பியம்) "பிழை பொறுக்கும் பெருமாள்" (குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் 30)	பிழை பொறுத்தார் காவலுக்கு உரியோர் "தம்மைப் பிழைத்தோரைப் பொறுக்கும் செம்மல்" (புறம்.) "பிழைநூறும் சான்றோர் பொறுப்பர்" (நாலடி. 357)	குறிப்பு இல்லை
சூரிய சந்திர குலத்து அரசர் என்றவர் "சந்திராதித்த குலதிலகன்" "சந்திராரித்தர் வழி தோன்றி" (இருக்கங்குடி கல்வெட்டு)	சந்திராதித்த குலத்தவர் என்றவர்	"தடினி குலக்குரிசில்" கங்கைக் குலம் என்று குறிப்பிடப்பட்டவர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
குடிகளிடம் ஆறிலொன்று இறைக்கடமை பெற்றவர்	ஆறிலொன்று உரிமையுடைய வேள்குடியினர் "ஆறில் ஒன்று பெறும் வேந்தர்" (சோழமண்டல சதகம், பக்கம்,) கொங்குச் சோழர் ஆறிலொன்று வரி கொண்டார் (கல்வெட்டு)	குடிகளிடம் எட்டிலொன்று பெற்ற வேளாண் அரசர் (சோழ மண்டல சதகம்) ஆறில் ஒன்று பெறும் வேந்தன் அருகில் இருப்பும், வரிசையும் பெற்றோர் (சோழமண்டல சதகம் 53)
ஒளியர் எனப்பட்ட அரச மரபு. "மன்னவன் தன்னொளி", "வேந்தர் தன்னொளி" (திருக்குறள்)	ஒளியர் என்ற அரச மரபு; ஒளி நாட்டுக்குரியவர், "தலைமகன் தன்னொளி" (பழமொழி நானூறு)	நாடுகாக்கும் அரசர்கள் ஒளி பெற நிரை காத்தவர் (பெருந்தொகை) 400(நச்.) உரை மேற்கோள் பாடல்)
போர்க்குடியினர் "வெம் முதண்யானை விறற் போர் வேந்து" (ஐங்குறுநூறு 467)	"போரின் கண் நிலை நின்ற வீரக்குடியினர்" "அடுபோர் வேளிர்" (அகம். 206) "அடுபோர் எஃகு விளங்கு தடக்கை மலையின்" (குறுந்தொகை 198)	உழுகுடிக்கும் கோயிற்குடிக்கும் உரிமை பாராட்டிய பணிமக்கள்
தேர் வேந்தர் குடியினர்	தேர் வேள் மட்டுமன்றி முல்லைக் கொடி படரத் தேரை வழங்கிய குடியினர் (புறம்.)	"தம் எருதை உழுதற் தொழில் செய்யாமல் ஓடவிடும் முறைமை வேளாளர்க்கு இல்லை" (பரிபாடல் 20 உரை, பரிமேலழகர்) பரிபாடல் காலம் வரை எருதினை வண்டியில் பூட்டி ஓட்ட முடியாத நிலை பெற்றிருந்த வேளாளர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
படை வைத்துக் கொள்ளும் உரிமையுடைய வேந்தர்	படையினை வைத்திருந்த வேளிர்குல இனத்தவர் (மதிலோன், கோட்டை அரசர்) "வெற்றித்தானை வேள்மன்னர்" (பாண்டியர் செப்பேடுகள்)	இலக்கணத்தில் படையினை வைத்துக் கொள்ள உரிமையில்லை எனினும் அரசனால் படையில் சேர்க்கப்பட்டு, சில உரிமைகள் வழங்கப்பெற்றோர்
போரில் மரணமடைந்தால் இந்திரலோகம் செல்லும் நிலையுடையவர் (ஸ்ரீவிஷ்ணு பிரமாணம் வருணாசிரம உற்பத்தி பக்.25)	போரில் மரணமடைந்தால் சொர்க்கம் புகுவோர்	கந்தர்வ உலகத்திற்கே செல்லும் நிலை (ஸ்ரீவிஷ்ணு பிரமாணம் வர்ணாசிரம உற்பத்தி பக்.25)
மேல்திணை, உயர்திணை, தொல்திணை, நெடுந்திணை, விழுத்திணை, விளங்குதிணை என்ற விழுக்குடிப் பிறப்புடையோர்	விழுத்திணைக் குடிப்பிறந்த தொல்திணைப் பிறந்த வேளிர்	பின்னோர் என்றும் பிற்காலம் அரசர் மக்கள் என்றும் உரிமை பாராட்டியவர். பிற்காலம் பெருந்திணைக்கு உரிமை பாராட்டியவர்
நெடுங்குடி	பெருங்குடி	உழுகுடி; சங்க காலம் சிறுகுடி, பிற்காலம் பெருங்குடி (வேளாளக் கவுண்டரில் ஒரு பிரிவினர்)

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
வள்ளன்மை உடையவர்; பூதானம், கோதானம் போன்ற தானங்களைப் பூசுரர்க்கும் பிறர்க்கும் கொடுத்தவர்	கொடையால் சிறந்தோர் (பாரி, காரி), மூன்று உலகமும் கேட்டுமே சான்றோர் கொடுத்தார் எனப்படுஞ்சொல் (நாலடி.100 ஈகை)	விருந்தோம்பலால் மேம்பட்ட நிலை பெற்றவர் “இல்லத்து வேளாண்மை” (நாலடி. 207)
அவைய முல்லைக்குரிய மரபினர்	அவைய முல்லைக்கு உரிமை பாராட்டியவர்	அரசன் அனுமதித்தால் மட்டுமே வேளாளர் அவையிருக்க முடியும்
தந்தைவழி உரிமை பாராட்டியவர்	தந்தைவழி	தாய்வழி உரிமை பாராட்டியவர்
காவன் முல்லைக்குரியவர்	காவலன் முல்லை உண்டு (எண்வகை இயல்புடையோர்; புறப்பொருள் வெண்பா மாலை)	“காவன் முல்லை இல்லை” வேளாண் முல்லைக்குரியவர்
முற்பட்ட கணக்கந்தைகள் இக்குலத்திலே இருந்தனர் பெரும் காக்கூர் தலையாகிய குலகுரிசில் தகுதேய மாணிக்கம் கலைபயில் கிழவன் கோனும் கணக்கு நூல் பயில் கணக்கராகவும் இருந்தவர் (தளவாய்புரம் செப்பேடுகள்)	கல்வெட்டுகளில் கணக்கு எழுதும் வேளான்கள் மிக அதிகம் ([illegible] ாடு கிழவன் சாமர்த்தியமுள்ள கணக்கர்களில் ஒருவன் (சிவகாசிச் செப்பேடுகள்) “கணக்கன் குலாலன்” (தெ.இ.கல் 25:126) “கணக்கர் சாதி” (இ.இ. 22 : 32)	பிற்காலம் கணக்கு எழுதும் உரிமை பெற்றுக் காலத்தால் அதிகமான வேளாளக் கணக்குப் பிள்ளைகள் “கைக்கோள முதலிகள் தேவரடியார் பிரிவில் தோன்றிய கணக்கர்”

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
அரையர்	அரையர் குலத்தவர்	வெள்ளாள அரையர், வேளாண் சாமந்தர்; தம் சாதிப்பெயரை இணைத்து அரையர் எனப்பட்டோர். வாணகுல மன்னர் வேளாண் மரபுக்கு உரிமை கோரிய நிலை (தஞ்சை வாணன் கோவை)
மக்கள்தாய் முறைமையுடைய உயர்குடி அரசர்	மக்கள்தாய மரபுவழி வேள் மன்னர்	மருமக்கள்தாய அரசர்
		பாணன் பிணம் சுமந்தவர்
மழை பிணித்தாண்ட மன்னவர் (சிலம்பு.)	மேகம் சிறைகொண்ட அய்யனார் என்று அடையாளம் காட்டியவர்	மேகத்தைப் பிணித்த மன்னரிடம் சந்து செய்வித்துத் தளைவிடுவித்தவர் வேளாளர்
		பிணம்மூடிச் சோறிட்டவர்
		பாம்புப் புற்றில் கைவிட்டவர்
		பறையரோடு களத்தில் உண்டவர்
		"மூவேந்தரைச் சிறை வைத்துத் தமிழ் பாடவைத்த வேளாளர்" ("குடிமக்களில் குளக்குடையான் தில்லை நாயக
		முளைமாரி அன்னமிட்டவர்"

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
ஏத்தொழில் எனும் தனுர்வேதம் கற்றவர்	போர்த்தொழில் உடையவர் "வீரசோழ இளங்கோ வேளார் வாள்படையும் உடநிலை சேவ்கரும்" (ஆவண இதழ்)	ஏர்த்தொழிலும் கூத்துத் தொழிலும் உடையவர் (தொல்காப்பியம் சூத்திரம் நச். உரை)
வெள்ளானை வேந்தர்	வெள்ளானை வேந்தர்	அடைமொழி இல்லை
வேளிர்க்கு மகட்கொடை வழங்கிய வேந்தர்	வேந்தர்க்கு மகள்கொடை இயல்பாகவே வழங்கிய வேளிர்	வேளாளர் வேந்தர்க்கும் வேளிர்க்கும் மகட் கொடை தந்தனர். அரச குலம் தாழ்வுற்றதால் (நாயைக் கட்டிப் போட்டுப் பெண் என்று காட்டிப் புணர்ச்சிகொள் என்று வெறுப்பினைக் காட்டியவர்
அடுபோர் அண்ணல்	அடுபோர் அண்ணல் "இயல்தர் அண்ணல் எவ்விதொல்குடி" (புறம். 202)	அடைமொழி இல்லை
நீதி அவைத் தலைவர்	நீதி அவையின் உறுப்பினர்	கோயில் நியாயத்தார்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
	அரச குலத்துக்கு வெட்டி வேலை கிடையாது என்று வாதிட்டவர். "வெட்டிப் பேறு பெற்றவர்"	காவிரிக்குலை என்ற வெட்டி வேலை செய்யக் கடமைப்பட்டவர் (கல்வெட்டுகள்)
மன்னர்	மன்னரின் முன்னோர்	மன்னர் பாங்கின் பின்னோன்
வெள்ளைக்குடை உடையவர்	வெள்ளைக்குடை உடையோர் "வெள்ளைக்குடையும் வெஞ்சாமரையும் உடைய தாழி சடைய மூப்பன்" (கோசனம் வேட்டுவர் செப்பேடுகள் : புலவர் செ. இராசு) "ஆல வட்டப்பிறை ஐ வேல் அசதி அணிவரை மேல்" (அசதிக்கோவை, அவ்வையார்)	"செங்காவிக் குடைக்கு உரியோர்." (சேதுபதி மன்னர் செப்பேடுகள்)
வெண்குடை வேந்தர்	வெண்குடை வேளிர்	வெள்ளைக்குடை பிடித்த உயர்குடி மரபினர்க்கு வரிவிதித்தவர்
இலக்கண, இலக்கியங்களில் சிங்காசனம் உடையவர் எனக் குறிக்கப் பட்டோர்	இலக்கண இலக்கியங்களில் சிம்மாசனம் உடையவர் தங்க சிங்காசனம் உடையோர் எனப்பட்டார்	கி.பி. 16 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு அரசகுல வீழ்ச்சிக்குப் பின் சிம்மாசனம் பெற்றவர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
வேள்மாளிகைக்கு உரியவர்	வேள் மாடம் இருந்த மரபினர்	வேளத்திலிருந்த பணிமக்கள் (காடவன் வேளத்து ஒதுங்கா நற்குல மகளிர்)
குறிக்கப்படவில்லை	குறிக்கப்படவில்லை	சூலி முதுகில் சோறிட்டவர்
முதுகுடிப் பெருமை	மூத்தகுடி உரிமை (முது மக்கள்) "வேள் முதுமக்கள்" (அகம். 372)	"இள மக்கள்" என்ற சிறப்பு
தலைமகன்	தலைமக்கள்	"வேளாண் தலைமையார்" (அரிவாட்டாய நாயனார் புராணம் பா.4) ஏவல் இளையர் தலைவர், இளமக்கள், இளந்தாரி மன்னன்
		சோழரையும் பாண்டியரையும் அடிமை என்று ஏலமிட்டதாகச் சொன்னவர். வேளாளர்கள் (பாண்டி மண்டலச் சதகம், சோழ மண்டலச் சதகம்) "அரசரோடு சம இருப்பு வேளாளர் பெற்றனர்"

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
இந்திரன் முடியை உடைத்து அவன் ஆரத்தைப் பறித்து மார்பிலே சூடியவர்		இந்திரனிடம் விதைவித்தும் உழவுக் கருவிகளையும் பெற்றவர்
வேந்தன் குடிப்பிறந்தோர்	வேந்தன் முற்குலத்தோர்	பின்னோர், பின்னவர்
மூவேந்தர் மேருவில் தங்கள் குலச் சின்னங்களான வில், புலி, கயல்களைப் பொறித்தவர் "முன்னோர் மருள இமயத்து விற்கொடி பதித்தனர்" (மாமூலர் பாடல்)	மேருவை மதியாத மன்னர்	இமயத்தில் மேழிக் கொடியினைப் பதித்ததாகச் சொன்னவர். (சோழ மண்டலச் சதகம் 41) வளை தடியைப் பதிப்பித்த நிலை
		அரசன் தானமளித்தால் பிற்காலப் புலவர்களில் கம்பர் இடக்கையால் பெறுவார்; வேளாளர் தானமளித்தால் கம்பர் வலக்கையால் பெறுவார் என்று மன்னர் குலத்தை இழிவு படுத்தியவர் (கொங்கு நாட்டுச் சமுதாய ஆவணங்கள்)
காவேரி எங்களின் குல நதி		காவேரி நதி எங்களின் எச்சில் நீர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
சத்திரியர் சிகாமணி – சத்திரியரில் சிறந்தவனான ஸ்ரீ மாறவர்மன் (பாண்டியன்) (சின்னமனூர் சாசனம்) (பெரிய இலெய்டன்)	சத்திரியர் (அரசர்) "பெரியான் சத்திரியன்" "சத்திரிய சிகாமணி, மூவேந்த வேளான்" (கல்வெட்டு)	சூத்திர சூளாமணி
அறத்தோடு குடிதாங்கிய அரசமரபு	"அறந்தாங்கியார்" (கண்டதேவி கல்வெட்டு)	"மறம்தாங்கியார்"
உயர்ந்தோர் (இலக்கண நூல்)	உயர்ந்தோர், உயர்ந்த குடியினர்	இழிந்தோர் (இறையனார் அகப்பொருள்) "இழிந்தோர் சாதி வகையால் குறிப்பிட்டார்" (நக்கீரர் உரை, சூத்திரம் 39)
வேதம் ஓதாமல் உணர்ந்தவர்	வேதம் ஓதாமல் உணரும் மரபினர்	வேதம் மறுக்கப்பட்ட நிலையில் வேதம் ஒருவாறு உணரும் மரபினர் (கல்வெட்டு) "இராச வல்லிபுரத்து ஒருவாறுணர்ந்தான். எனக்கு நல்ல பெருமாளான தமிழில் பல்லவரையன்" விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுகள் 343/2005
முன்னோர், முற்குலத்தவர்	விருதராஜர் (மூத்தவர்) (மூத்தாதிராஜர், மூத்தரையர்)	சமூக அடிப்படையில் பின்னோர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
திருவாணை வழங்கியவர்	திருவாணைக்குரியவர், "இராச குலத்தால் வர்ணம் செய்தவர் திருவாணை"	சேவக்கப் பெருமாள் ஆணை (தேவைக்காவலன், திருவணைக்காவலன்) (தெல்.இ.கல். 4)
	அரச சேவைக்குரியவர்	"சேவைக் காவலன்" என்று அழைத்துக் கொண்டனர்
"பெரியோர் குலத்தவர்" (குலோத்துங்க சோழன் கோவை) "குலத்தில் பெரியோர்" எனச் சோழ அரசர் அநபாயன் (சோழ மண்டலச் சதகம் பா. 86)	பெரிய குடியில் பிறந்தவர்	சிறுகுடியில் பிறந்து பிற்காலம் பெருந்திணைக் குடியாகப் பரிமளித்தவர்
இலக்கியங்களில், கல்வெட்டுகளில் திருக்குலத்தார் எனப்பட்டவர்	திருக்குலத்தார் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டவர்	உங்கள் குலத்திற்கு எங்கள் குலம் ஏற்புடையது இல்லை என்று அரச குலத்தைப் பார்த்துக் கூறியவர் (அண்ணன்மார் கதைப்பாடல்)
வேந்தர் குலக் கிழவோர்	வேளிர் குலக் கிழவோர்	"குவளைக் கிழவன்" "சூத்திரக் கிழவன்"

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
நரபதி, நிருபர், நரகேசரி எனப்பட்டனர்	நரபதி, நிருபர் என்று உரிமையுடையோர் "நிருப கேசரி மலையமான்" (கல்வெட்டு, பழவூர் புதையல்கள்) நல்லாவூர் நல்லாவூராதை ஊரான் வெண்பாடனான நரேந்திர சூளாமணி மூவேந்த வேளார் (தெ.இ.கல். 22 பகுதி I எண்81)	பிற்காலத்தில் செப்பேடுகளில் "நரபதிக்கு மேலான சேதுபதிகள்" என்று கூறிக் கொண்டனர் (சேதுபதிகள் வெப்பேடுகள் பக்.284) (நரலோகர் கண்டன் பக். 140)
சந்துவித்தல், தூது சென்று அரசுப்பணி செய்தவர் "பாண்டியன் மாகீர்த்தி தேவ அசுரப் போரில் சந்துசெய்வித்தது போல" (இறையனார் அகப்பொருள், நக்கீரர் உரை 35 சூத்திரம்)	சந்து செய்வித்துப் பெருமை பெற்றவர் "வினையிடைநின்ற சான்றோர்"	அரசன் ஆணைவழி பிற்காலத்தில் தூது சென்றவர்
	கரந்தை வீரர்	வெட்சித்தாய வீரர் வெட்சித்தாய வில்லேருழவர்
வாளொடு தோன்றிய தொல் குடியினர் என்று தங்களை அடையாளம் சொன்னவர் (புறப்பொருள் வெண்பாமாலை	வாள்படை உடையவர் என்று பெருமைப் பட்டவர் "வாட்குடி தாய உரிமையுடைய வலியோர்" (ஏனாதி நாயனார் புராணம்)	வளைதடியொடு பிறந்தவர் என்று பெருமையுடன் அடையாளம் சொன்னவர். (பாளையப்பட்டு வமிசாவளித் தொகுதி)
மானம் கருதிப் புறப்புண் நாணி வாளொடு வடக்கு இருந்து உயிர்விட்டவர் (அகம்.)	வாளொடு வடக்கிருந்து உண்ணாது அரசனோடு இருந்து உயிர் விட்டவர் (அகம்.)	பூபனுக்கு மெய்த்தலை தந்த வீரர்; சாவேறுகளாகத் தலையைத் துண்டித்து உயிர்விட்டவர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
"தோளில் பிறந்தவர்" என்று இதிகாசங்கள், புராணங்களில் குறிப்பிடப்பட்டவர்	தோளில் பிறந்த வீரக்குடி என்று புராணங்களால் உணர்த்தப் பட்டோர்	"அம்மனின் விலாவில் பிறந்தவர்" என்று பெருமைபடக் கூறியவர். "பிரம்மன் காலில் உதித்தவர்" (பாளையப்பட்டு வமிசாவளி) (சோழமண்டலச் சதகம்)
		"கன்று காட்டியும் கிணறு காட்டியும்" (அரித்துவார மங்கலம் செப்பேடுகள்)
போர்க்கலையைப் (படைக்கலம்) பயிற்றுவிக்கும் அரசகுடி)	படைக்கலப் போர்க்கலையைப் "பயிற்றுவித்த வேளிர் மரபு தூய நெறிச் சிரமநீதி சான்றவர்" (அங்கம் வெட்டின திருவிளையாடல் பா.4) "ஈழகுலச் சான்றோர்" (ஏனாதி நாதர் புராணம்) "ஈழகுல தீபன்" (நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி)	அரசனால் போர்ப்படையில் இணைக்கப்பட்டு போர்ப்படைப் பயிற்சி பெற்றவர் "போர்க்கலையைப் பயிற்றுவித்த இடும்பன்" (அசுரர்) (பழனிப் புராணம்)
வடிநூல் எனும் பூண் நூல் அணிந்த வீரர் மரபு (பெருங்கதை) "முந்நூற் பெருமார்பின் வந்தொளிர" (அவதாரம் 242) (கலிங்கத்துப்பரணி) "பாண்டியர் வேள்வி நடத்திப் பூண் நூல் அணிந்தது" (வானவீரப் புராணம்)	மார்பில் பூண் நூல் அணியும் வீரக்குடி (குலமும் முப்பிரி நூலும்) (அவடிபூந்துறைச் செப்பேடுகள்)	பூண் நூல் மறுக்கப்பட்ட வேளாண்குடி

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
இலக்கியங்களில் கானக நாடன், குறிஞ்சி நாடன் பட்டம் "வானவர் தோன்றல்"	தோன்றல்	"கானவர் தோன்றல்" "தானவர் தோன்றல்"
சேனாபதிப் பட்டம் சூட்டப்பட்ட அரசகுடி	ஏனாதிப் பட்டம் இயல்பாகப் பெற்ற அரச மரபு (இறையனார் அகப்பொருள் உரை) "சேனைத் தலைவன் செங்கோல் அசதியை" (வேளிர்) (ஐவேலி ஊரினள்) (அசதிக்கோவை) "இவ்வூராழ் சான்றோன் முன்னூற்றுவ பெருமானாகிய சோழ வேள் ஏனாதி" (திருக்கண்ணபுரம் கல்வெட்டு)	பிற்காலத்தில் தானாதிபதி என்ற சிறப்பு அடைமொழி பெற்றவர்
இருநில வேந்தர் "சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலம் தாங்காது மன்னோ பொறை" (குறள்)	வேள்விவேந்தர்	வானவேந்தர், கிராதர் வேந்தர், புளிஞர் வேந்தர், வனசரர்
வேள்வி வேந்தர்	பெருஞ்சாந்தி குல மன்னர். தீ வேள் சாலை : பெருங்கதை "வேள் ஒளி நீர்" (திருநாவுக்கரசர் தேவாரம்)	வேள்வி மறுக்கப்பட்டவர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
வேந்தன் முதலி "இராசாக்களும் இராச முதலிகளும்"	"ராஜ முதலி" "அரச முதலி"	மற முதலி, அகம்படிய முதலி, வெள்ளாள முதலி, சுரிதிமான் முதலி, மலையாள முதலி, பறை முதலி
"பெரும்படை மன்னர்" மூவேந்தர் எனப்பட்டனர்	"பெருந்தானை அடுபோர் மிஞிலி" (அகம். 181) "மாபெரும் தானையர்" "பெரும்படை மகா சேனையோம்" "வேள்மருகன் மகன் கடலகப் பெரும்படைத் தலைவன் எங்குமான்" (பூலாங்குறிச்சி கல்வெட்டு) "சத்திரிய ஆழ்வாரான பெரும்படை சாஸ்தா"	"மா குலவர்", "சேனையர்" "வேடர் மறக்குலம் போலே" (பெரியாழ்வார்)
வெண்குடை வேந்தர்	வெண்குடை அரசர்	வெள்ளைக் குடைக்கும் வெண்சாமரைக்கும் கள்ளவே வாய்த்த பெருமாள் (கல்வெட்டு, காலாண்டு இதழ்) வெண்கொற்றக் குடையை மூவேந்தருக்கு அளித்ததாகப் பெருமைப்பட்டுக் கொண்ட வேளாளர் (கொங்கு மண்டலச் சதகம்)

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
பெருமாள், பெருமகன் "பெருநிலம் முழுதும் ஆளும் பெருமகன்" (சிலம்பு 1:1:31)	பெருமக்கள், பெருமாக்கள்	"கல்லா இளையர் பெருமகன்" (அகம்.) பிற்காலத்தில் வேளாண்குடி பெருமக்கள்
முடி சூடிய மன்னர்	முடி சூடிய மரபு	முடி புனையா மூன்றாம் பட்டத்து மன்னர், முடிபுனையா புதல்வர் (நவனீதப் பாட்டியல்)
அரச குடி, வேந்தர் குடி	அரசு மக்கள்; இராஜ குலவர்	அரசர் மக்கள்; குமார வர்க்கம்
"இராஜ குலவர் காணிப்பற்று" (தெ.இல்.கல். 22 பகுதி I எண் 31)	அரசு காணி நாடன் காணி "மூத்தரையர் அரசு கூறு நாலிலொன்று நீக்கி" (500/1912)	வெள்ளான் காணிப்பற்று; "குடிமக்கள் காணி" (தெ.இ.கல். 22 பகுதி I எண் 31)

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
சடையவர்மன், மாறவர்மன்	வர்மன், பருமர் என்ற அடைமொழி உடையவர்	இல்லை
ராஜகேசரி, பரகேசரி	நிருபகேசரி, அரசகேசரி.	நிருதர், நிருத்தர், நிஷதராஜர் என்று குறிப்பிடப்பட்டோர்
மூலப்பிருத்தியர்	மூலப்படையினர் என்ற தொல்படையினர் அரச குலத்தவரின் முன்னோர் தொடங்கி வரும் படை	குடிபடைப் பிரிவினர் "புளிஞர் படை"
மேன்மக்கள் தோன்றல்; மேலோர், மேற்குல வேந்தர்	மேல் மக்கள்	கீழோர், கீழ் மக்கள்
சத்திரிய குலம் (திருப்புடைமருதூர் புராணம்) கோவி ரவி கோதை (சேரன்) "சத்திரிய மவுலி சிகரி" (ஈரோடு தொகுதி 2:1157c/2003)	சத்திரிய இலாஞ்சினையான யானையைக் கொடியாகக் கொண்டோர் (வேளிர்) (தக்கயாகப் பரணி உரை) "சத்திரிய சிகாமணி கிழானடிகள்"	"மேழிக் கொடி"; "செங்காவிக்கொடி" மேழிக் கொடியினன்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
தொல்லை நீடும் குல முதலோர், திருக்குலத்து வழி முதலோர்	குடிமுதலோர், ஆதித்தன் குலமுதலோர்	குடிமக்கள்
"ஓடாப் பூட்கை வேந்தன் பாசறை" பாசறை வேந்தர்	நிலைநின்று உயிர் துறந்து நடுகல்லார்; (பாசறை வீரர் – வீர சோழியம் : பெரும்தேவனார் உரை)	அரசன் படையில் சேர்ந்து பணிபுரிந்தோர்
நெடுந்தேரோர், தேர்வேந்தர்	நெடுந்தேர் உடையவர் "முனை நல்லூரன் புனை நெடுந்தேரே" (அகம். 14) "தேர் வேள் ஆய்" (புறம்.)	ஏரின் வாழ்நர், ஏரோர் தேரார் வேந்து
	திருப்பாப்பு மூத்தத் திருவடிகள், வேள் நாடர்; திருவடிகள் தேசத்திற்கு உரிமையுடையோர்	சிறைவாய் மூத்தவர் "திருவிதாங்கூர் நாட்டினர்" என்று பெருமை பேசியவர்
புண்ணிய கிழவர், புண்ணிய நம்பி (சீவக சிந்தாமணி)	"புண்ணிய வீரர்", புண்ணிய போர் வீரர்	இந்தச் சிறப்பு அடை இல்லை

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
உடையார் என்ற சிறப்பு அடைமொழி	உடையார், உடையார் படை கொங்கவாளர், உடைபடை "உடையார் செம்பியன் இருக்கு வேளாயின பூதி ஆதித்த படாரர்" (தெ.இ.கல். 8:624)	வெள்ளாள உடையான், மண் உடையான், குடிமக்களில் உடையான், அகம்படி உடையான், திருப்பள்ளித் தொங்கல் உடையார்கள்
மேல் திணை வேந்தர்	முன்திணை, முதல்வர், திணை நிலைப்பெயர் உடையவர்	கீழ்த்திணை மக்கள்
"அரச மீகாமன்" "அரச மீகாமனான அகளங்க நாடாள்வார்" (அழகர் கோயிலில் அமைந்த கல்வெட்டு)	ஏழக மீகாமன், ஏழகப் பெருமான், ஏழக மீகாம நாடாள்வான்	இடங்கை மீகாமன், வலங்கை மீகாமன்
ஏழக நிலை வேந்தர்	ஏழகத்தார் (ஏழகநிலை) "ஏழகச் சக்கரவர்த்தி அழகிய நாயக வேளாண்" (புதுக்கோட்டை எண் 264)	குறிப்புகள் இல்லை
அறிவுடைய வேந்தர், பெரிய சேனையையுடைய அறிவுடையோர் "சோழன் குலவிச்சை கல்லாமல் பாகம்படும்" (பழமொழி நானூறு)	அறிவுடைய வீரர் "இலக்கியங்களில் அறிவுடையோர்" என்று அடையாளம் சொல்லப்பட்டவர்	"கல்லா இளையர்", "கல்லா மறவர்" "கல்லாச் சிறியோர்"

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
கோக்கணத்தார், கொன்றையர், ஈஸ்வர மரபினர்	"சப்த மாதர் எனப்பட்ட கன்னியர்கள்" "நீளும் கண குலத்தோர்", "காளிதன் தானையர்" "காளிப்பிள்ளைகள்" "காளிக்கணத்தார்" "ஏழு கன்னிகை ஈன்ற பரிபாலகர்"	வீரபாகுத் தேவர் கால்வழியினர், காளிக்கணத்து வெள்ளாளர்
குடிப்பிறந்தார் எனும் உயர் குடியினர் (வள்ளுவம்)	குடிகாவல் மரபினர்	"குடிமக்கள்" பணிமக்கள் குடித்தலைவர்
	வேள்நாட்டு, "திருப்பாப்பு சொரூபம்"	திருவிதாங்கூர் நாட்டு, "சிறைவாய்ச் சொரூபம்"
வேத்தியல் கூத்துக் காண்பவர்	வேத்தியல் கூத்துப் பார்ப்பவர்	பொதுவியல் கூத்துக்கு உரியோர், வள்ளிக் கூத்துக்கு உரியோர் கருங்கூத்துத் தொடர்புடையோர் கூத்துத் தொடர்புடைய வெள்ளாளர் (தொல்காப்பியம் சூத்திர உரை, நச்.)
துரைகள்	துரைமக்கள்	தொண்டு துரைமக்கள்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
சங்ககாலம் "நம்பி" பட்டம் உடையவர். "நம்பி நெடுஞ்செழியன்"	அரச நம்பிமார் (சூளாமணி) "நம்பி வேள்" "நம்பி இடங்கழி" (திருத்தொண்டத் தொகை 9)	"நம்பிப் பிள்ளைகள்" வேளாளரை அடையாதார் பசிப்பார் என்கிறது (தக்கயாகப்பரணி 236 பழைய உரை)
அரசன் படை "மன்னர்தண்டம்" (பரிபாடல்)	வேளார் படை	வேளக்காரப் படையினர் திருவேளைக்காரர்
நடுவு நின்று குடிகாப்போர் (நடுவு நின்று செங்கோல் ஓச்சி - யாப்பருங்கல விருத்தி மேற்கோள் பக். 398)	நடுவிற் பெருங்குடி "பெருந்தகை சேந்தங் கிழவன், நலிமலி சீர் நடுவுநிலை நன்கு நாயகன்" (பாண்டியர் செப்பேடுகள்) "எழுநூற்றுவரும் விந்தியனூரும் அமைந்து மண்டபத்திலிருந்து செய்த கச்சம்" (தெ.இ.கல். 5:778)	நடவுசெய்து பயிர்காத்து நின்றோர்
நிறை கற்பு உடைய குடியினர் "பெருங்கற்பும் பெருமையிற்குல தீபம்" (தெ.இ.கல். 25 எண் 28)		சிறைவாய்க் கற்புக்குடியினர், (சிறை கற்பு) முற்காலத்தில் களவு மணத்திற்குட்பட்ட வர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
பெருந்தகை மீளி, மீளி அண்ணல்	மீளியார், மீளி	கூளி, வேடர்
நிருபகுல தீபன், இராசகுல தீபன், உபயகுல தீபன்	வாள்வீர குலதீபன் "நிருபகுல மூவேந்த வேளான்" (கல்வெட்டு) ஈஞ்ச குலதீபன் கொற்ற "மாரவேள்... வேந்தர் உலகு ஆளும் மன்னர் ஏறே" (பெருந்தொகை 1701)	சேவகுல தீபன், வேளாள குலதீபன் (பிற்காலம்), திரி பதகை குலதீபன், வாணகுலதீபன்
ஆண்டகை மன்னர்	ஆண்டகை வேள் "விறலாண்டகை" (விருதுநகர் மாவட்டக் கல்வெட்டுத் தொகுதி II)	அரச மரபினர் வீழ்ச்சிக்குப்பின் பிற்காலத்தில் ஆண்டே என்று பள்ளு இலக்கியங்களில் குறித்துக் கொண்டனர்
	அரையர் "அரையர் கோபமும் சாமந்தர் கோபமும் நீக்கி" (திருவிதாங்கூர் நாட்டுச் செப்பேடுகள்)	சாமந்தர் (சாமந்த ராசா என்ற அடையாளம்)
"கோவேந்தன் கண்டன்","திருக் குலத்து கண்டன்"	கண்டன், "வேளி கண்டன்" "வெளி கண்டன்"	ஸ்ரீகண்டன் வேளைக்காரன், "சங்கர மூர்த்தி வேளக்காரன்" "அடியார் வேளக்காரன்" "வலங்கை வேளக்காரர் ஆன வெள்ளாளன்"

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
சோழன்	"கொங்குச் சோழன்" "பூவேந்திய சோழன்"	வெள்ளாள சோழன், கள்ளச் சோழன், சோழகன்
அரைசர்	"அரையன் ராஜராஜனான மதுராந்தக இளங்கோ வேளான்" (தெ.இ.கல். 25 : 49). "அரையரான புரந்தவேளான் (தெ.இ.கல். 5: 483) "அரையரான நாடாள்வார்" "அரையரான வேளான்"	ஆட்டர், குறும்பர்
சந்திர குலம் (இந்து குலம்)	"காமான் சந்திரகுல மூவேந்த வேளான்" (கல்வெட்டு)	"இந்துகுல சர்ப்ப கருடன்" (சேதுபதி செப்பேடுகள்) நெக்கோணம் கல்வெட்டு)
சூரிய வமிசம்	"ரவிகுல மூவேந்த வேளான்", "மனுக்குல வேளான்" (கல்வெட்டுகள்)	அரசமரபினரான கோபால வங்கிஷம் (யது குலத்தை) சூரிய குலத்தை ஏவல் கொண்டருளி னோன் என்று பெருமை பேசியவர். (சேதுபதிகள் செப்பேடுகள்) பிற்காலம் வெள்ளை வேளாளன்
வைகை வள நாடன் (பாண்டியர்) "பொன்னி நாடனும் ………………"		வைகை வள நாடன் கொற்றம் அடக்கியவர், பொன்னி நாடனாகிய சோழனைச் சிறையில் பிடித்து அடைத்தவர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
பூபாலர்	பூர்வ அரசர்	"கலியரசர்", காராளர் குல திலகம் "கலிகோபர் திலகம்" (சேதுபதிகள் செப்பேடுகள்)
மனுநீதிக் காவலர்	மனுவின் குலத்தவர்; மனுவின் மானவர்	மனுநீதிக்குப் பகைமையுடைய நாலாம் குலத்தோர்
காசு முத்திரை விடுத்தவர்	"ஆள் மாடை வழங்குவித்தோர்"; "மாடக்காசு வழக்கம் செய்த பெரியோர்"	வெள்ளாளன் பணம், மறவன் சுழி என்று பிற்காலம் காசு முத்திரை விடுத்தவர்
	இராஜ பட்டம், ஏனாதிப் பட்டம் பெற்ற ஏனாதி குலத்தவர்	காவிதிப் பட்டம் பெற்றவர் "காவிதி அரையர்" "கணணிநெற்றி காவிதி மகளிர்" (பெருங்கதை)
தந்தைவழி தாயம்	தந்தைவழி நாடு என்று உரிமை கோரிய வேளிர்	தாய் நாடு என்று தாய்வழி உரிமை பாராட்டியவர்
அமராவதி வேந்தர்	அமராவதி காத்தவர்	அமராவதி சேய்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
"இறந்த காலம் எடுத்த பெருமாள்" (பாண்டியர் பட்டம்)		"இறந்தகாலமெடுத் தான்" (வாண அரசர்பட்டம்)
சுரர் பெருங்குலம்	சுரர் மரபினர்	அசுரர் பெருங்குலம்
அரச குலத்தில் பிறந்தவர். அரசர் குடியிற் பிறந்து ஆட்சி செய்யாது நீங்கியவர் (இலக்கணக் கொத்து)	அரச குலத்தில் பிறந்தும் அத்தொழிலைச் செய்ய முடியாமல் வீழ்ச்சி அடைந்தவர் (இலக்கணக் கொத்து)	அரசகுலம் அல்லாத வேறொரு குலத்தில் பிறந்து அரசன் தொழிலைப் பற்றிக் கண்டவர். அரசனுக்கு தோன்றிய வேறொரு சாதியான் (இலக்கணக் கொத்து)
வேந்தன் மகளை மணந்த செவ்வேள் முருகன்	செவ்வேள், நெடுவேள் என்று அழைக்கப்பட்ட தேவசேனாபதி	"முருகனுக்குக் குலவை அளித்தவர்" (பக். 124 திருவாவடுதுறைச் செப்பேடுகள்)
அரசனுக்குத் "தூங்காத கிழவன்" என்ற சிறப்பு அடை (தென்காசிப் பாண்டியர்)	தூங்காத நாடன்	"உறங்காத வில்லி தாசர்" என்ற சிறப்பு (வாண குல மன்னர்)
அரசர் நாடு, தேசம் இவற்றிற்கு உரியோர், மண்ணின் மைந்தர் என்ற சிறப்பு	மண்டலாதிபதிகள், மகா மண்டலேசுவரர் பட்டம் சூடி நாடு ஆண்டவர்	"வென்று மண் கொண்டோர்" என்று பட்டம் சூடியவர்; மண் கொண்டார் என்று அடையாளம் சொன்னோர்

மூவேந்தர்	வேளிர்	வேளாளர் பிறர்
அரசர் குல முடியைச் சூடி ஆட்சி செய்தவர். பிற அரசனிடம் போரில் தோற்ற போதும் சூடும் முடியை எடுத்துக் கொண்டு நாடு நீங்கியவர்	அரசனின் முடியைக் காத்து நின்ற அவன் குடியினர் "சோழன் முடி காப்போன்" (புதுக்கோட்டைக் கல்வெட்டுத் தொகுதி)	"வெண்ணெய் நல்லூர்ச் சடையன் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மவுலி" (கம்பராமாயணம்) முடியுடைய அரசனுக்கு அவன் முடிசூடும் பொழுது எடுத்துக் கொடுத்தவர் என்ற சிறப்பு அடை; அரசகுலம் வீழ்ச்சியுற்ற பொழுது அரசகுலத்தவர் முடியை எடுத்துத் தந்து முடி சூடினோம் என்று பெருமைப்பட்ட வேளாளர்கள்
	"வெள்ளள நாடார்கள் வேளாளப் பெண்களைக் கெட்ட அருதென்றும் கையாள அருதென்றும்" (திருவிதாங்கூர் கல்லிடைக்குறிச்சி கல்வெட்டுகள்)	அரசமரபினர்க்கு கி.பி. 15ஆம் நூற்றாண்டில் மகட்கொடை மறுத்து, அவர்க்கு விரோதமான நடவடிக்கையில் ஈடுபட்ட வேளாளர் (திருவிதாங்கோடு கல்லிடைக்குறிச்சி கல்வெட்டுகள்)
